வெளியீடு 8-6-2005 Issued 8-6-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை - நவம்பர் 18 2004—தொகுதி 65—எண் 3

Thursday the 18th November, 2004—Volume 65—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

19

D
V211,31'P05
P05.15.5.
226623

18-11-2004

**உள்ளடக்கம்**

பக்கங்கள்


1. **வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 291-350

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 4, 5, 6 மற்றும் 7) 351-524

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவர்கள் அடுக்குமாடிக் குடியிருப்பு பழுதடைந்துள்ளது 525-527

3. **தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 525

4. **கவன ஈர்ப்பு—**

(அ) விருத்தாசலம் நகரில் உள்ள மணிமுக்தா நதி மேம்பாலம் முழுவதும் இடிந்து விழுந்துள்ளது 527-535

(ஆ) அரசுப் பள்ளிகள் தொடங்கும் நேரம் மாற்றம் 536-539

5. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொது நிறுவனங்கள் குழு 540

(ஆ) மனுக்கள் குழு 540

6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 540-541

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 541-542


317
2005

பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**


(அ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 542-565

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 542, 560-563

திரு. சி. ஞானசேகரன் — 543-545

*திரு. ராதாரவி — 545-553

திரு. ஜி.கே. மணி — 553-554

திரு. ஜி. பழனிசாமி — 555-557

திரு. இ. புகழேந்தி — 558

திரு. லா. சந்தானம் — 558-559

திரு. என். நன்மாறன் — 560

(ஆ) தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 565, 583

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 565, 580-583

திரு. சி. ஞானசேகரன் — 566-568, 577

திரு. கே.சி. கருணாகரன் — 569-570

திரு. கு. பிச்சாண்டி — 571, 572

திரு. வை. சிவபுண்ணியம் — 572-573

திரு. ஜி.கே. மணி — 575-576




பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி


(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 584-597

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 595-596, 597

*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 592-594

திரு. சி. ஞானசேகரன் — 585-586

திரு. இ. புகழேந்தி — 595

திரு. ஜி.கே. மணி — 586-587

*திரு. கே. மகேந்திரன் — 591-592

(ஈ) தமிழ்நாடு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004 — 597-613

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 597, 610-611

*திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 598-602, 603, 605

திரு. ஜி.கே. மணி — 603-604

திரு. கு. பிச்சாண்டி — 605-606

திரு. என். நன்மாறன் — 606

திரு. வை. சிவபுண்ணியம் — 606-608

திரு. கே. என். இலட்சுமணன் — 609-610

பக்கங்கள்

7. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**— தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004 — 613-615

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 615

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 616-634

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 615, 616, 617, 619, 626-630

திரு. சி. ஞானசேகரன் — 617-618

திரு. ஜி.கே. மணி — 618-620

திரு. வை. சிவபுண்ணியம் — 620-621

திரு. ஜி. பழனிசாமி — 621-622

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 622-624

திரு. கு. பிச்சாண்டி — 624

8. **அரசினர் தீர்மானம்**—

விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தல் — 615-616, 634-635

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 634-635


226623

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 3, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 நவம்பர் 18, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்."

சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள், அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

### 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. லா. சந்தானம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

21—

### மாணவர் விடுதி

***55376—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் ஊராட்சி, வடக்கம்பட்டியில் கள்ளர் மாணவர் விடுதி புதியதாக அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் ஊராட்சி, வடக்கம்பட்டியில், கள்ளர் மாணவர் விடுதி எதுவும் இயங்கவில்லை. கருமாத்தூர் பகுதியைச் சுற்றி 5 கள்ளர்

[2004 நவம்பர் 18

சீரமைப்பு விடுதிகளும், உசிலம்பட்டியைச் சுற்றி 9 கள்ளர் சீரமைப்பு விடுதிகளும் இயங்கி வருகின்றன. மேலும் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் விடுதிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சொந்தக் கட்டடம் கட்ட பெரும் தொகை செலவு செய்யப்பட்டுவரும் நிலையில், புதிய விடுதிகள் திறக்கும் கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை. எனவே, உசிலம்பட்டி தொகுதி, வடக்கம்பட்டியில் புதிய விடுதிகள் திறக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஒவ்வோர் ஆண்டும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தித் தருகின்ற ஒரு நிலையில், ஒவ்வோர் ஆண்டும் 300-க்கும் மேற்பட்ட பள்ளிகள் இப்படித் தரம் உயர்த்தப்படுகின்றன. அப்படித் தரம் உயர்த்தப்படுகின்றபோது மாணவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு எல்லா விடுதிகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்கவேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தோடு, பெருநோக்கத்தோடு, கடந்த 3 ஆண்டுகளாக, எல்லா விடுதிகளுக்கும் புதிதாக அத்தனை வசதிகளையும் கொண்ட கட்டடங்களை அமைத்துத் தந்து இருக்கிறது. ஆனால், இப்படி வளர்ந்து வருகிற பள்ளிகளுக்குப் புதிதாக விடுதிகள் வேண்டும் என்கின்ற கோரிக்கை இங்கு மட்டும் அல்ல, மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றது. எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையாகத்தான் நான் இதை இங்கே வைத்திருக்கிறேன். எனவே, அரசும், அமைச்சரும் இருக்கிற விடுதிகளுக்குக் கட்டடங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டுவிட்டன; புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டன; புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட இந்தப் பள்ளிகளுக்கு எல்லாம், விடுதிகள் என்பது அவசியத் தேவை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டு ஏதாவது விடுதிகள் புதிதாகத் துவங்குவதற்கு உரிய நிலைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பள்ளி



2004 நவம்பர் 18]

மாணவர்களுடைய விடுதிகள் மட்டும், மொத்தம் 972 விடுதிகள் இருந்தன. அவற்றில் தனியார் விடுதிகள் மட்டும் 770. இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், இன்று அரசினுடைய 314 விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் நிரந்தரமாகக் கட்டுவதற்கான உத்தரவுகள் வழங்கி, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், இப்போது போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகளையும் செய்து கொண்டு இருக்கிறார்கள். மேலும், பள்ளி விடுதி மாணவர் ஒருவருக்கு, ஒரு மாதத்திற்கு உணவுக் கட்டணம் ரூ.225 என்று இருந்ததை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ரூ.300 ஆக உயர்த்தி இருக்கிறது. இதுபோன்ற செலவினத்தைச் செய்து இப்போது வாடகைக் கட்டடங்களில் இருக்கிற 770 விடுதிகளில் 314 விடுதிகளுக்குப் புதிதாக நிரந்தரக் கட்டடத்தைக் கட்டிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. இதுபோன்று செயல்பட்டுகொண்டு இருக்கின்றபோது,, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து குறித்து மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், வருங்காலத்திலே நிதிநிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதை இம் மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி என்பது கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. இங்கே நான் கேட்டு இருக்கின்ற வடக்கம்பட்டி பள்ளி விடுதியில்கூட, தங்களுடைய தொகுதியிலே இருந்து பெரும்பான்மையான மாணவர்கள் வந்து அங்கு படித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இரண்டுக்கும் பொதுவான ஒன்றுதான். அதற்குப் போதிய போக்குவரத்து வசதிகள்கூட இல்லை. எனவே, இதற்கென்று தனியாக சிறப்புக் கவனம் செலுத்தி, அமைச்சர் அவர்கள் இந்த விடுதியைக் கட்டுவதற்கு உரிய நிலையை--விடுதியை உருவாக்குவதற்குரிய நிலையை--உருவாக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 18

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 22, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**22—**

## பதப்படுத்தும் தொழிற்சாலை

*** 10313—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கோழி இறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பதப்படுத்தும் தொழிற்சாலையைத் துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளினுடைய உப தொழிலாக இந்தக் கோழி வளர்ப்புத் தொழில் இருக்கிறது. குறிப்பாக ஐந்து மாவட்டங்களில் இந்தத் தொழிலை முதன்மைத் தொழிலாக எடுத்திருக்கிறார்கள். நாமக்கல், கோவை, தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் இதை உப தொழிலாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2004 நவம்பர் 18]

எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும், இறைச்சிக் கோழி என்பதை ஒரு குறிப்பிட்ட கால அளவில் உடனே விற்றாக வேண்டும். இங்கேகூட அந்த இறைச்சிக் கோழியை வாங்குகின்ற தனியார் நிறுவனங்கள் ஓரிரு நிறுவனங்கள்தான் இருக்கின்றன. அதை அவர்கள் வாங்குகின்றபோது விவசாயிகளிடத்திலே விலை குறைவாக வாங்குகின்ற காரணத்தினால், அந்தக் கோழி வளர்ப்போருக்கு நிறைய நட்டம் ஏற்படுகிறது. எனவே, இந்தப் பதப்படுத்துகின்ற தொழிற்சாலையை அரசே எடுத்து நடத்துவதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோழி இறைச்சியைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக தற்போது வசதிகள் ஏதுமில்லை. மேலும், தனியாரால் மிகக் குறைந்த அளவே இறைச்சி பதப்படுத்தப்பட்டு, வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. அரசின் கூட்டு முயற்சியால், கோழி இறைச்சி தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்புகள் தற்போது ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு கோழி வளர்ப்போர் மூலமாக கிட்டத்தட்ட மூன்றேகால் கோடி கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இப்படி வளர்க்கப்படுகின்ற கோழிகளுக்கு இந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழகத்தில் இதுவரையில் பறவைக் காய்ச்சல் வரவில்லை என்பதை அரசு ஆணித்தரமாகக் கூறியிருக்கிறது. கிழக்காசிய நாடுகளில் இதுபோன்ற பறவைக் காய்ச்சல் வந்த காரணத்தினால் அரபு நாடுகளுக்கு அந்தப் பகுதிகளிலேயிருந்து கோழி இறைச்சி ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்ல அரசு, தனியார் துறைகள் இதைச் செய்ய முன்வந்தால், சிறப்புச் சலுகைகள் அளித்து, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி இறைச்சியைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு தொழிற்சாலைகள் நிறுவிட அரசிற்குக் கூடுதலாக நிதி தேவைப்படும். எனவே, கோழி இறைச்சி பதப்படுத்தும

தொழிற்சாலையைத் தனியார் எவரும் துவக்க முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே வாழ்கின்ற மக்களிலே 90 சதவீதம் பேர் மாட்டிறைச்சியை உணவாகப் பயன்படுத்துகிறார்கள். தென் மாநிலங்களிலேயே கேரள மாநிலம் மட்டும்தான் மாட்டிறைச்சியைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு அனுப்பி, ஒவ்வோர் ஆண்டும் மிகக் குறைந்தபட்சம் 500 கோடி ரூபாய் வரையிலே அன்னியச் செலாவணியைப் பெறுகிற மாநிலமாக இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே இருந்து பல நேரங்களிலே, தமிழ்நாட்டின் எல்லையோரங்களிலே, கேரள எல்லையோரங்களிலே - இங்கேயிருந்து மாடுகள் கேரள மாநிலத்திற்குப் போவதும், அங்கேயிருந்து அவை இறைச்சியாகப் பதப்படுத்தப்பட்டு, வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதும் வழக்கமாக இருந்து வருவதால் மாநில எல்லையோரங்களிலே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, மாட்டிறைச்சியைப் பதப்படுத்தி அனுப்புவதற்கு அப்படிப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது அரசு கூட்டு நிறுவனங்களுக்கோ தொழிற்சாலை தொடங்க அனுமதி கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? பொள்ளாச்சியிலே ஒரு தனியார் நிறுவனம் இந்தத் தொழிற்சாலையைத் தொடங்க முன்வந்தது. அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்குத் தகுந்த பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோழியோடு நில்லுங்கள். மாட்டுக்குப் போகாதீர்கள்! (சிரிப்பு) திரு. சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனுசாமி அவர்கள் கோழியைப் பற்றிப்



பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் மாட்டைப் பற்றிப் பேசினார்கள். நான் ஆட்டைப் பற்றிப் பேசுகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைக் காலை நேரத்திலேயே ஆரம்பித்து வைத்துவிட்டீர்கள்! (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தற்போது ஆட்டு இறைச்சியைப் பொறுத்தவரையில் பதப்படுத்தப்பட்ட ஆட்டு இறைச்சிக்கு வெளிநாடுகளிலே நல்ல வரவேற்பு இருக்கின்றது. தமிழரசன் அவர்கள் கூறியதுபோல, பொள்ளாச்சியிலே அமைக்கப்படுவதாகக் கூறியிருந்த —தனியார்மூலம் அமைக்கப்படுவதாக இருந்தது மாட்டு இறைச்சிக்காக அல்ல, ஆட்டு இறைச்சிக்கு என்று நினைக்கின்றேன்—ஆட்டு இறைச்சியைத் தனியார்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல இலாபம் கிடைக்கிறது. நிறைய அந்நிய முதலீடுகளும் வருகின்றன. ஆகவே, அதை மனதிலே வைத்துக்கொண்டு, ஆட்டு இறைச்சியை நமது தமிழக அரசு பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்விப் போடவும். வினா எண் 23, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**23—**

## மருத்துவர் நியமனம்

*** 19517—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை அரசு கால்நடை மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடத்தை நிரப்பும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும்?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை அரசு கால்நடை மருத்துவமனையில் காலியாக இருந்த கால்நடை மருத்துவர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை 2002 ஆம் ஆண்டு கேட்டிருந்தேன். அந்தப் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. மயிலாடுதுறை தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நியமனம் எப்போது செய்யப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-6-2002 முதல் நிரப்பப்படாமல் இருந்துவந்த கால்நடை உதவி மருத்துவர் பதவி 1-9-2003 முதல் நிரப்பப்பட்டு, கால்நடை பெரு மருத்துவமனையில் சிகிச்சைப் பணிகள் எவ்வித இடையூறும் இல்லாமல் நடைபெற்று வருகின்றன. மயிலாடுதுறை கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர், மயிலாடுதுறை கால்நடை பெரு மருத்துவமனையின் பிரதம மருத்துவர் பதவியையும் கூடுதல் பொறுப்பில் கவனித்து வருகிறார். தற்போது இம் மருத்துவமனையில் பிரதம மருத்துவரோடு, கால்நடை உதவி மருத்துவர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை கால்நடை மருத்துவமனைக்கு முறையாக பிரதம மருத்துவர் பதவி எப்போது நிரப்பப்படும்? அதுமட்டுமல்லாமல், இரண்டு கால்நடை உதவியாளர் பணியிடங்களும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு தினசரி நிறைய கால்நடைகள் வருகின்றன. அந்தக் கால்நடை மருத்துவமனையில் உறைவிந்துக் குச்சிகள் இல்லையென்று சொல்கிறார்கள். அதையும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அந்த மருத்துவமனையைச் சுற்றி அருகிலுள்ள மக்கள் வளர்த்து வரும் பன்றிகள் ஆஸ்பத்திரி வளாகத்திற்குள்ளேயே வந்து பெரிய சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்துகின்றன. ஆகவே, அந்த மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் உள்ளது அரசு கால்நடை பெரு மருத்துவமனை ஆகும். அங்கு தோராயமாக 80-க்கும் மேற்பட்ட கால்நடைகள் தினசரி சிகிச்சை பெறுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இவ்வாண்டு 5005 சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம்கள் நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அவை நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறைவிந்துக் குச்சிகள் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். அத்தகைய முகாம்களில் கால்நடைகளுக்கான அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதுடன், செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் நோய்த் தடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்துக் கால்நடை மருத்துவமனைகளுக்கும் உறைவிந்துக் குச்சிகள் போதிய அளவில் விரைந்து வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுச் சுவர் பற்றிக் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வார்களேயானால் அரசு முன்வந்து நிச்சயம் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**24—**

## ஆசிரியர் தேர்வில் முன்னுரிமை

*** 34866—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

*தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களாக குறைந்த ஊதியத்தில் பணியாற்றுவோருக்கு அரசு ஆசிரியர் பணிக்கான தேர்வில் முன்னுரிமை வழங்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர்களைத் தேர்வு செய்வது ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகும். கல்லூரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு, தகுதி மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கௌரவ விரிவுரையாளர்களாகப் பணியாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்க தற்போதைய விதிகளில் இடமில்லை.*

**திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 67 கல்லூரிகள் உள்ளன. முக்கியமான இந்தப் பணியிலே பொறுப்பு வகிக்கக்கூடியவர்கள் கௌரவ விரிவுரையாளர்களாக இருந்து பணியாற்றக்கூடியவர்கள். இவர்கள் தொடர்ந்து 12 மாதங்களிலே, 8 மாதங்கள், 7 மாதங்கள் மட்டுமே தற்காலிகப் பணியிடங்களில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதோ அநேகமாக 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் ரூபாய் மட்டுமே ஊதியம் வழங்கப்படுகிறது. ஆகவே, கல்வித் துறையிலே பேராசிரியர்களாக இருந்து பணியாற்றக்கூடியவர்களுக்கு இப்படி ஒரு மோசமான நிலைமை அவர்களுடைய வாழ்க்கையிலே இருக்கிறது. அவர்கள் அந்த நிலையிலேயிருந்து மாற அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள 67 அரசுக் கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 1,408 விரிவுரையாளர்கள் காலிப் பணியிடங்கள் உள்ளன. 2004-2005 ஆம் கல்வி ஆண்டிற்கு 1,250 விரிவுரையாளர்கள் பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்புவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 1,250 கௌரவ விரிவுரையாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதற்காக இதுவரையில் ரூபாய் 4.14 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மணிக்கு*



2004 நவம்பர் 18]

*100 ரூபாய் வீதம் ஒரு மாதத்திற்கு 4 ஆயிரம் ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. அரசுக் கலைக் கல்லூரிகளை அரசாங்கம் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக மாற்றி ஆணையிட்டுள்ளது. அதன்படி அந்த விரிவுரையாளர்களைப் பல்கலைக்கழகங்கள்தான் நியமிக்க வேண்டும். ஆனால், அரசுக் கல்லூரிக்ளில் பணிபுரிகின்ற பேராசிரியர்கள் தங்களை அரசுக் கல்லூரிகளிலேயே நியமிக்க வேண்டும், தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருப்பதால், அங்கு கல்வி பயில்கின்ற மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத்தான் தற்போது அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்கின்றவரை இந்த கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜி. பழனிசாமி.*

**திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 200 விரிவுரையாளர்கள்தான் இருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால், ஒரு கல்லூரியிலே 3 பேர் அல்லது 4 பேருக்கு மேலே பணியில் அமர்த்துவதில்லை. பாக்கி இடங்கள் எல்லாம் காலியாக இருக்கின்றன. ஆகையால் இந்தக் கல்லூரிகளிலே பல்கலைக்கழகங்கள்தான் இதுபோன்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று சொன்னால் அரசு அதற்கு சிபாரிசு செய்யுமா? இல்லையென்றால் அதற்கான ஒரு திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து இந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்கின்ற வாரியத்தின் மூலமாக இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து செய்வதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி பல்கலைக்கழகங்கள்தான் அந்த விரிவுரையாளர்களைத் தேர்வு செய்ய வேண்டும். ஆனால், அந்தப் பணியிடங்களில், ஆசிரியர்கள் தாங்கள் அரசுக் கல்லூரிகளிலேயே நியமிக்கப்பட வேண்டும், தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற அவர்களுடைய ஒரு கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருப்பதால் தற்போது அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை அம்மாவின் அனுமதி பெற்று*

வரப்பட்டிருக்கிறது. அதை அம்மாவின் அனுமதி பெற்று நிறைவேற்றுகின்றவரை தற்போது உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த கௌரவ விரிவுரையாளர்களை நியமித்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, தமிழகத்திலே மொத்தம் 4,966 விரிவுரையாளர் பணியிடங்கள் இருக்கின்றன. அவற்றில் தற்போது உள்ள காலி இடங்கள் 1,559 இடங்கள். இந்த ஆண்டு அந்தப் பணியிடங்களில் 1,250 இடங்கள் கௌரவ விரிவுரையாளர்களை வைத்து நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கௌரவ விரிவுரையாளர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? நான் நினைக்கின்றேன் அரசு அவர்களை நியமிக்கின்றபோது தகுதியின் அடிப்படையிலேதான் நியமித்து இருப்பார்கள் என்பது என்னுடைய கருத்து. எனவே, அப்படி தகுதியின் அடிப்படையிலே நியமிக்கப்பட்டவர்கள் ஏன் திரும்பவும் நிரந்தர விரிவுரையாளர்களாக ஆக்கப்படக் கூடாது என்பதுதான் இன்றைக்கு எழுந்திருக்கின்ற கேள்வி. அவர்கள் பல ஆண்டுகளாக இப்படி தங்களுடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறிகூட அவர்களுக்கு வாழ்வளிக்கின்ற முறையிலே ஒரு சட்டத் திருத்தத்தையாவது ஏற்படுத்தி, அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்து தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் நியமிக்கப்படுகின்ற விரிவுரையாளர்கள், தேர்வு வாரியத்தின் மூலம்தான் தேர்வு செய்யப்பட வேண்டும். தகுதி அடிப்படையிலும், இடஒதுக்கீட்டின் அடிப்படையிலும்தான் தேர்வு செய்யப்பட வேண்டும். ஆனால், தற்போது அரசுப் பேராசிரியர்கள் அரசுக் கல்லூரிகளிலேயே தாங்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்து அது அரசின் பரிசீலனையில் இருப்பதால் தற்போது அந்த இடங்கள் காலியாக இருக்கக் கூடாது என்பதற்காகவும், மாணவர்கள் நலன் கருதியும்தான் இந்தக் கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் கூறியது போன்று, அம்மாவிடம் கூறி அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இங்கே Teachers Recruitment Board-தான் இந்த Guest Lecturers--அதாவது ஆசிரியர்களைப் பொதுவாகத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அடுத்தபடியாக நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகங்கள் அந்த அரசுக் கல்லூரிகளை உறுப்புக் கல்லூரிகளாக ஏற்றுக்கொண்டு பல்கலைக்கழகங்கள்தான் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற கருத்தையும் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இரு வேறுபட்ட கருத்துகள் வருகிற இந்தச் சூழலில், இந்த Guest Lecturers இரண்டும்கெட்டான் நிலையிலே இருக்கிறார்கள். Teachers Recruitment Board-ம் இதுவரை அவர்களைத் தேர்வு செய்யவில்லை. இவர்கள் தொடர்ந்து 4,000 ரூபாய்க்கு வேலை செய்துகொண்டிருக்கும் நிலையை மாற்றி அமைத்தால்தான் தரமான ஒரு கல்வி நம்முடைய கல்லூரிகளிலே அமையும். 1,250 பேர் Guest Lecturers-ஆக இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நிலை; அதுவும் அவர்கள் பொதுவாக மே, ஜூன் போன்ற மாதங்களிலே வேலைநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை நிரந்தரம் என்பது இல்லை. Teachers' Recruitment Board-தான் நியமனம் செய்யவேண்டும் என்று அரசு கருதுமேயானால், இதுவரை பல ஆண்டுகளாக ஏன் நாம் இந்தப் பேராசிரியர்களை நியமிக்காமல் இருந்து கொண்டிருக்கிறோம்? அல்லது கல்லூரியானது அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்பாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று சொன்னால் அதிலாவது நீங்கள் உடனடியாகத் தீர்மானம் எடுத்து அல்லது ஆசிரியர்களை அழைத்துப் பேசியாவது நீங்கள் இதற்கு ஒரு தீர்வு கண்டு - உடனடியாக நீங்கள் Teachers' Recruitment Board மூலமாக நியமிக்கிறீர்களோ அல்லது பல்கலைக்கழகத்தின் மூலமாக நியமிக்கிறீர்களோ--நிரந்தரமாக அந்தக் கல்லூரிகளிலே அவர்கள் மற்ற பேராசிரியர்கள்போல அதிகமான சம்பளத்தைப் பெற்று நிரந்தரமாகப் பணியாற்றக்கூடிய ஒரு நிலையை உருவாக்கி, தரமான கல்வியை வழங்குவதற்கு அரசு இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளே நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 18

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஏற்கெனவே கூறியதைப்போன்று அரசுக் கல்லூரிகளிலே பணிபுரிகின்ற பேராசிரியர்களைத் தேர்வு வாரியம் மூலம்தான் தேர்வு செய்யவேண்டும். ஆனால், தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கௌரவ விரிவுரையாளர்கள் அந்தந்தக் கல்லூரியில் இருக்கின்ற காலி இடங்களைப் பொறுத்து, அந்தக் கல்லூரியில் இருக்கின்ற முதல்வரே பத்திரிகைகள் மூலமாக விளம்பரம் செய்து தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றார்கள். ஆனால், தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, இங்கே பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றி அமைக்கப்பட்டதால் அந்தப் பேராசிரியர்கள் தாங்கள் அரசு ஊழியர்களாகவே இருக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்ததன் காரணத்தினால், அந்தப் பேராசிரியர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையிலே, அம்மாவினுடைய பரிசீலனையில் இருப்பதால், இந்தக் கௌரவப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல மாண்புமிகு அம்மா அவர்களிடம் இதைக் கூறி விரைவில் இதற்கு ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசுக் கல்லூரிகளிலே தற்காலிகமாகப் பணியாற்றக்கூடிய —கௌரவ விரிவுரையாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டு பணியாற்றக்கூடிய—அவர்கள் நிரந்தரமாக்கப்படுவது கட்டாயமானது. அப்படி அவர்கள் நிரந்தரமாக்கப்படக்கூடிய அதேவேளையிலே, இவர்களைத் தவிர இன்னும் அரசுக் கல்லூரிகளிலே காலிப் பணியிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, இவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அதேநேரத்திலே, மாணவர்களுடைய கல்வி நலன் கருதி காலியாக இருக்கின்ற பேராசிரியர் பணியிடங்களையெல்லாம் அரசு நிரப்புமா? எப்போது நிரப்ப முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அரசுக் கலைக் கல்லூரிகளில் இருக்கின்ற மொத்தப் பணியிடங்கள் 4,066. இன்றைய தேதியில் காலியாக இருக்கின்ற பணியிடங்கள் 1,559. இந்த ஆண்டு அந்தப் பணியிடங்களில் 1,250 இடங்கள் கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**25—**

## ஆவின் பால் விற்பனை நிலையம்

***13333—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் ஆவின் பால் விற்பனை நிலையம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) பெண்ணாகரம் பேருந்து நிலையத்தில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்கத் தேவையான உரிமம் பெறுவதற்காக பெண்ணாகரம் சிறப்புச் சிற்றூராட்சிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் அறுசுவை உணவு. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பருகக்கூடிய ஒரு சத்தான உணவு. பெண்ணாகரம் பகுதியிலே பால் விற்பனை நிலையம் துவக்க முன்வரக்கூடிய அரசு . . .

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பால் சுவையானது என்று சொல்லுங்கள். அறுசுவை அல்ல.

**திரு. ஜி.கே. மணி:** அறுசுவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறுசுவை என்றால் ஆறு சுவை இருக்க வேண்டும்! (சிரிப்பு).

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. எல்லாச் சத்துக்களையும் உள்ளடக்கிய இந்தப் பால் சத்தான உணவு. ஆகவே, ஆவின் பால் விற்பனை நிலையம் துவங்கக்கூடிய நம்முடைய அரசு - அந்தப் பகுதி விவசாயிகள் முழுக்க முழுக்க நிரம்பி இருக்கின்ற பகுதி; வானம் பார்த்த பூமியைக் கொண்ட விவசாயிகள்; விவசாயிகள், சார்புத் தொழிலாக கறவை மாடுகளை அதிகமாக வளர்த்து வருகிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய அந்தப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பாலை விற்பனை செய்வதற்கு, மேலும் பதப்படுத்துவதற்கு அங்கே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிலையம் ஒன்று துவங்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் விற்பனை நிலையம் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர், பால் கூட்டுறவுச் சங்கம் கேட்கிறாரா? இல்லை, வேறு என்ன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டால், அதற்கு உரிய பதிலைத் தருகிறேன்.

முற்பகல் 10-25

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பிலே அமைச்சர் அவர்கள், பால் விற்பனை நிலையம் தொடங்கப்பட உள்ளது என்று சொல்லியிருக்கிறார். இதனைத் தொடங்கக்கூடிய அரசு, பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வெறும் 4,800 லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தேவையானால் ஒரு பால் குளிர்வு இயந்திரம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எவ்வளவு எண்ணிக்கையில் ஆவின் பால் விற்பனை நிலையங்கள் உள்ளன? அதிலே குறிப்பாக தனியார் பால் விற்பனை நிலையங்களைப் போட்டியாக எடுத்துக்கொண்டு, நமது அரசு பால் விற்பனை நிலையங்களை அதிகப்படுத்தியும், கொஞ்சம் விலை குறைப்பு ஏற்பாடு செய்தும், அதிக அளவிலே பால் விநியோகம் செய்ய அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும். வினா எண் 26, திரு. எஸ்.ஏ.எம். உசேன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**26—**

### உலமா ஓய்வூதியம்

*** 36048—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலமா ஓய்வூதியத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உலமா ஓய்வூதியத்தை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்கள் ஓய்வூதியம் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் 400 ரூபாயாக இருந்தது, தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் அது 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாயிரம் உலமாக்களுக்கு

[2004 நவம்பர் 18

ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு, தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் அது ரூ.2,200 ஆக உயர்த்தப்பட்டது. அந்த அடிப்படையில், 19-7-2000 அன்று, உலமாக்கள் மட்டுமல்லாமல் தர்காக்களில் பணியாற்றக்கூடிய முஅத்தினார்களுக்கும் அந்த உதவி நீட்டிக்கப்பட்டது. இன்றைக்கு உலமாக்கள் மொத்தம் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களாக இருப்பதாக உலமாக்கள் சபை தெரிவித்திருக்கின்றது. குறைந்த அளவுதான் இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால், பல கோடி மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் உலமாக்கள் என்று இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு மரியாதை அளிக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு மேலும் ஊதியத்தை உயர்த்தித் தர வேண்டும். அதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயது நிரம்பிய, 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்ற வறிய நிலையிலுள்ள உலமாக்கள் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்கள். மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வழங்கப்படுகிறது. 250 ரூபாயாக இருந்த ஓய்வூதியத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 400 ரூபாயாக உயர்த்தித் தந்துள்ளார்கள். உலமா ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 2004-2005 ஆம் ஆண்டுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ரூபாய் 120 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஜூலை 2004 வரை 1,545 உலமாக்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் இருப்பதே 10 ஆயிரம் பேர்தான். அவர்களுக்கு—அதை மேலும் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதன்மூலமாக வறிய நிலையில் இருக்கக்கூடிய உலமாக்கள் பயன்பெறுவார்கள். ஆகவே, மீண்டும் நான் வலியுறுத்தி வேண்டுகிறேன். அவர்களை—அதிக அளவில் நீங்கள் எண்ணிக்கையை--சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2004 நவம்பர் 18]

10 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். குறைந்தது 5 ஆயிரம் பேரையாவது சேர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது ஆண்டுக்கு ஆயிரம் பேர் என்ற அளவிற்கு நீங்கள் அதிகப்படுத்தித் தந்தால் குறுகிய காலத்திலே அவர்கள் மொத்த பேருக்கும் ஊதியம் கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும். எனவே, அன்புகூர்ந்து நீங்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற அரசு அனுமதித்துள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 2,200. இந்த 2,200-ல் ஜூலை மாதம் வரை 1,545 உலமாக்கள்தான் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், உலமா ஓய்வூதியம் வழங்க அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ள மனுக்களின் எண்ணிக்கை 178. இவ்வளவு விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. இதை ஆய்வு செய்து அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியமிக்க நலிவுற்ற உலமா பெருமக்களுக்கு ஓய்வூதியம் என்பது மறைந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மாதம் 250 ரூபாய் ஓய்வூதியமாகத் தந்து அவர்களுக்குப் பேருதவியைச் செய்தார்கள். அதன்பிறகு, அனைத்துத் தரப்பினரின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை 400 ஆகவும், 500 ஆகவும் உயர்த்தி கிட்டத்தட்ட 1,825 நலிவுற்ற உலமா பெருமக்களுக்கு, அவர்கள் மனதார நன்றி செலுத்தும்வண்ணம் பேருதவி புரிந்து வருகிறார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சிறுபான்மை இஸ்லாமிய மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 20 ஆண்டு காலம் உழைத்து ஓய்வுபெறும் நலிவுற்ற உலமா பெருமக்கள், இன்றைய மத்திய அரசால் சமையல் எரிவாயு முதற்கொண்டு செய்யப்பட்ட விலையேற்றத்தால் மிகவும் சிரமப்படும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நலிவுற்ற உலமா பெருமக்களின் ஓய்வூதியத்தை உயர்த்தித் தர முன்வருமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 18

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் ஏற்கெனவே பரிசீலிக்கிறேன் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் 500 ரூபாயாக உயர்த்தி இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ..... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா நேரத்தில் இதெல்லாம் கிடையாது. உட்காருங்கள். வினா எண் 27, திரு. கோவை தங்கம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**27—**

## இ.எஸ்.ஐ. மருத்துவமனை

*** 52314—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை கிளை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோவை மாவட்டம், வால்பாறையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை கிளை ஒன்றை ஏற்படுத்த கருத்துரு எதுவும் தற்சமயம் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் ஒரு இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வால்பாறையில் இருக்கின்ற அரசு மருத்துவமனையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சௌகரியமும்



2004 நவம்பர் 18]

இல்லை. அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதியும் வால்பாறை அரசு மருத்துவமனையில் கிடையாது. வால்பாறையில் விபத்து என்று சொன்னாலும், உயிருக்குப் போராடுகின்ற நிலை ஏற்பட்டாலும், வால்பாறையிலிருந்து கோவைக்கு வரவேண்டியதாக இருக்கிறது. கோவைக்கு வருகின்றபோது 4 மணி நேரம் ஆகிறது. ஆகவே, வால்பாறையில் தொழிலாளர்களுக்கு என்று ஒரு தனி மருத்துவமனை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக இஎஸ்ஐ. மருத்துவமனை தொடங்க வேண்டுமெனில், அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக சென்னை மண்டல இயக்குநர் அவர்கள் முதலில் ஆய்வு மேற்கொள்வார். அவரது பரிந்துரையுடன் அந்த அறிக்கை மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அவர் அதனைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொண்டு முழுமையான கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைப்பார். புது டில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்தபடி தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 3 ஆயிரம் இருப்பின் அக்கழகத்தின் ஒப்புதலுடன் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அப்பகுதியிலுள்ள காப்பீட்டாளர்களும், அவர்கள் குடும்பத்தினரும் மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இ.எஸ்.ஐ. மருத்துவமனை துவக்க ஏற்பாடு செய்யும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் இருக்கக்கூடிய ஒரு இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களில் 99 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள். அவர்கள் சாதாரணமான கூலித் தொழிலாளர்கள். அவர்கள் பெறுகின்ற சம்பளம் 76 ரூபாய் 85 பைசா. இந்தக் கூலியை வைத்துக்கொண்டு குடும்பம் நடத்த முடியாமல் கஷ்டப்படும் அவர்களுக்கு வால்பாறையில் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலையில் அவர்கள் அங்கிருந்து 4 மணி நேரம் கோவை அரசு மருத்துவமனைக்கு வருகின்ற நிலை உள்ளது. அவர்கள் இருக்கும் இடத்தில் எந்தவிதமான வசதியும் கிடையாது என்பதால்தான்

வால்பாறையில் ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவமனையைக் கேட்கின்றேன். வால்பாறையில் இருக்கின்ற அரசு மருத்துவமனையில் 6 டாக்டர்கள் இருக்க வேண்டும். ஆனால், அங்கே இருப்பது 2 டாக்டர்கள். கடந்த 15 ஆண்டு காலமாக பெண் மருத்துவரே அங்கே கிடையாது. வால்பாறை அரசு மருத்துவமனையில் மகப்பேறு அல்லது இருதய வலி ஏற்படுகின்றபோது சிகிச்சை பெறவோ அல்லது நீரிழிவு சிகிச்சை பெறவோ எந்தவிதமான மருத்துவ வசதியும் அங்கு இல்லாமல் இருக்கிறது. வால்பாறை அரசு மருத்துவமனையில் Technician போன்றவர்கள்கூட கிடையாது. ஆகவே, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கஷ்டங்களை இந்த அரசு உணர்ந்து, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக தனிக் கவனம் செலுத்தி, இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் கிளை ஒன்றை அங்கே ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அரசு இதனைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வால்பாறை தோட்டத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக, முக்கியமாக இ.எஸ்.ஐ. மருத்துவமனையை அங்கே அமைக்க முடியுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். இருந்தபோதிலும், மருத்துவமனை சம்பந்தமாக சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். உங்களுடைய தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே labourers அதாவது, தொழிலாளர்கள், இ.எஸ்.ஐ. சட்டப்படி Organised Sector and Unorganised Sector என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். 2003-லே மத்திய அரசால் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இப்போது Organised Sector and Unorganised Sector-லே தோட்டத் தொழிலாளர்களுக்கு, இ.எஸ்.ஐ. நிறுவனத்தின் மூலமாக எந்தவிதமான benefit-ம் அடைய முடியாத சூழ்நிலையை மாற்றி, இப்போது தோட்டத் தொழிலாளர்களாக இருந்தாலும், ரிக்ஷா ஓட்டுநர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்கள் மாதம் — 18 வயதிலிருந்து 30 வயதுக்குள்ளாக — 50 ரூபாயும், அதேபோல் அவர்களுடைய Employer — Government 50 ரூபாயும், அதற்கும் மேலாக அரசு 1.16 per cent கொடுக்கும் ஒரு நல்ல திட்டத்தை இப்போது தமிழ்நாட்டிலே தொடங்குவதற்கான ஒரு ஆய்வு





எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கூடிய விரைவிலே அந்தத் திட்டமும் தொடங்கப்படும். மேலும், வால்பாறை அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே நானே நேரடியாக வந்து பார்த்தேன். அன்றையதினம் உங்களுக்குக்கூட தெரிவித்திருந்தேன். நீங்கள் அன்றையதினம் ஊரிலே இல்லை என்று நினைக்கிறேன். அந்த அரசு மருத்துவமனையை ஆய்வு செய்து அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனையினுடைய கட்டடங்களை எல்லாம் பழுதுபார்ப்பதற்கு கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதியையும் ஒதுக்கி, 24 ஆம் தேதி அதற்கான டெண்டரும் வரவிருக்கிறது. அதற்கும் மேலாக அங்கே மருத்துவர்களை நியமிப்பதற்காக, குறிப்பாக, மலையும் மலை சார்ந்த இடங்களில் மருத்துவர்களை நியமிக்கின்றபோது அந்தந்தப் பகுதியில் உள்ள மருத்துவர்களை நியமிக்கலாம் என்ற உத்தரவையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். கூடிய விரைவிலே ஒப்பந்த அடிப்படையிலே வால்பாறை அரசு மருத்துவமனையிலுள்ள அத்தனை பதவிகளும் நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் இ.எஸ்.ஐ. benefit அடைய முடியாது என்று மாண்புமிகு Health Minister அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். தேயிலைத் தொழிலில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியைத் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு நிர்வாகங்கள் வழங்கவேண்டிய மருத்துவ வசதி பெரிய அளவுக்குக் குறைக்கப்பட்டது என்பது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். இப்போது தேயிலைக்கு 10 ரூபாய் விலை உயர்ந்திருக்கிற பின்னணியில் அந்த நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே சட்டப்படி கொடுக்க வேண்டிய மருத்துவ வசதியை சரியான முறையிலே கொடுப்பதற்கு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த நிர்வாகங்களை அழைத்துப் பேசி, தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய மருத்துவ வசதியை சரியாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி செய்து தருவது குறித்து 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் பிரிவு 10 மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகள் 20 முதல் 28 வரை உரிய விதிகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. மேற்படி சட்ட விதிகளின் அடிப்படையில் தோட்ட நிர்வாகங்களால் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், வால்பாறையில் இருக்கக்கூடிய இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் அபிவிருத்தி திட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அவர்கள் நேரடியாகச் சென்று பார்த்ததுபோல் நானும் பல தடவை அந்த மருத்துவமனைக்குச் சென்று பார்த்திருக்கிறேன். படிப்படியாக அந்த இடத்திலே போதுமான கட்டடங்கள் கட்டுவதற்கு இடம் போதாது. அந்த இடத்திற்குப் பக்கத்தில் உள்ள இடத்தை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அந்த மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அந்த இடத்தைப் பெற்றுக் கொடுத்து அதற்கான அபிவிருத்தி திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் மருத்துவ வசதிக்காக மத்திய அரசு கொடுக்கின்ற நிதி எவ்வளவு, அரசு அதை முறையாகச் செலவிடுகின்றதா என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போடவும்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**28—**

## மீன் அங்காடியை இடமாற்றுதல்

**•23650—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் ஆபீசர்ஸ் லைனில் உள்ள மீன் அங்காடியை ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான மீன் மற்றும் இறைச்சி அங்காடியை நகராட்சிக்குச் சொந்தமான, உபயோகத்தில் இல்லாமல் இருக்கும் பயணியர் விடுதி அமைந்துள்ள இடத்தில் மாற்றியமைக்க வேலூர் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்தில் மையமான ஒரு பகுதியில் ஆபீசர்ஸ் லைனில் இந்த மீன் மார்க்கெட் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அந்த மீன் மார்க்கெட்டிலிருந்து வரக்கூடிய துர்நாற்றம் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து வியாபார ஸ்தலங்களையும் பாதிக்கிறது. எதிரில் இருக்கக்கூடிய கோட்டை மைதானத்தில் பொதுக் கூட்டம் நடக்கிறபோதும் சரி, மற்ற நேரங்களிலும் சரி, அங்கே வீசக்கூடிய துர்நாற்றம் மற்றவை எல்லாம் அங்கே சுகாதாரக்கேட்டை விளைவித்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலே மக்களுடைய கோரிக்கை, அதை ஒதுக்குப்புறமான ஒரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று பல காலமாக வற்புறுத்தி வருகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள். அதை நகராட்சி Travellor's Bungalow இருந்த இடத்திற்கு மாற்றுவதாகக் கூறுகிறார்கள். அந்த இடத்திலே ஒரு வணிக வளாகம் கட்டுவதற்கான proposal-ஐயும் அதே நகராட்சி இப்போது C.M.A. என்று

சொல்லப்படுகிற Commissioner of Municipal Administration-க்கு அனுப்பி வைத்திருக்கிறது. இறைச்சிக் கடையையும் அங்கே மாற்றுவதாகச் சொல்கிறீர்கள். அதேபோல, வணிக வளாகத்தையும் மாற்றுவதாக இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஊருக்கு ஒதுக்குப்புறமான ஏதாவதொரு இடத்திற்கு இந்த மீன் மார்க்கெட்டை எடுத்துச் செல்வதற்கு உடனடியாக போர்க்கால அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏற்கெனவே, Travellors Bungalow இடிந்து விழுந்த இடத்தில் வணிக வளாகம் கட்டப்படுகிற proposal எந்த நிலையில் இருக்கிறது? அந்த இடத்திற்கு இதைக் கொண்டுபோக முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான மீன் இறைச்சி அங்காடி நகரின் பிரதான சாலையான Barracks மைதானம் ரோடு - Officers' Line-ஐ ஒட்டியுள்ள இடத்தில் இயங்கி வருகிறது. மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியில் மீன் மார்க்கெட் இயங்குவது பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதாகக் கருதப்பட்டாலும், வணிக செயல்பாடுகள் நிறைந்த அந்தப் பகுதியில் வணிக வளாகம் கட்டுவதால் நகராட்சி வருமானம் பெருக இயலும் என்பதாலும், மீன் மார்க்கெட் இடத்தில் வணிக வளாகம் கட்ட வடிவமைப்பு வரைபடம் நகர ஊரமைப்புத் துறை இயக்குநர், வேலூர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது Officers Line-ல் இயங்கிவரும் மீன் மற்றும் இறைச்சி அங்காடியை Infantry சாலையை ஒட்டி வார்டு எண் 5, பிளாக் 11, நகர் அளவு எண் 512/1, 2-ல் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான, உபயோகத்தில் இல்லாமலிருக்கும் பயணியர் விடுதி இடத்தில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி இடம் முழுமைத் திட்டத்தில் கலப்புக் குடியிருப்பு உபயோகத்தில் இருந்து வருகிறது. எனவே, அந்த நிலப் பயன் கலப்புக் குடியிருப்புப் பகுதியிலிருந்து வணிக உபயோகத்திற்காக மாற்றம் செய்யக் கோரி வேலூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு வேலூர் நகராட்சியால் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர்த் திட்டக் குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி கருத்துருவின்மீது நிலப் பயன்மாற்ற உத்தரவு பெறப்பட்ட பின்பு மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த வேலூர் நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்திற்கு இந்த மீன் மார்க்கெட்டைக் கொண்டுபோக வேண்டும் என்பது. இப்போது அமைச்சர் அவர்கள் கூறுகிற இடமும்கூட, பயணியர் விடுதி இருந்த இடமும்கூட, நகரத்தினுடைய ஒரு மையப் பகுதி. அதைச் சுற்றிலும்கூட குடியிருப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே நீங்கள் அதை மாற்றுகிறபோது நிச்சயமாக அங்கே இருக்கக்கூடிய மக்கள் போராட்டத்தையோ அல்லது எதிர்ப்பையோ தெரிவித்து, என்னையும் நாளைக்குத் திட்டுவார்கள்; இந்த இடத்திற்கு ஏன் கொண்டு வந்தாய் என்று ஒரு நிலையை உருவாக்குவார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த டிராவலர்ஸ் பங்களா இருந்த இடம், இடிக்கப்பட்ட, இப்போது உபயோகத்தில் இல்லாத இடமாக இருந்தாலும்கூட, வணிக வளாகம் கட்டுவதற்காக அதற்கும் முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிற காரணத்தினாலே, நீங்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள்கூட—பைபாஸ் ரோடுக்கு அடுத்தபடியாக செல்லியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் எல்லாம் இருக்கின்றன. கழிவுநீர்ப் பண்ணை என்று தனியாக இடம் இருக்கிறது. இப்படி ஊருக்கு ஒதுக்குப்புறமாக அங்கே மீன் மார்க்கெட்டை கொண்டு வந்தால்தான் அங்கே இருக்கக்கூடிய மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பார்கள். ஆகவே, நீங்கள் Travellors Bungalow இடிந்து விழுந்த இடத்தில் இருக்கக்கூடிய இடத்திற்குக் கொண்டுபோவதைவிட ஊருக்கு ஒதுக்குப்புறமாக எடுத்துச் செல்வதற்கு, தாங்களே நேரில் வந்து ஆய்வு செய்துகூட, ஒரு முடிவை கூடிய விரைவிலே எடுத்து அறிவிப்பீர்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தை ஆய்வு செய்து சாத்தியக்கூறு இருப்பின் அந்த இடம் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2004 நவம்பர் 18

29—

## ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

***50311—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அரியூர்-செங்கரையூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அரியூர்-செங்கரையூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. எஸ்.எம், பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி ஒன்றியத்தில் அரியூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரித்தால் செங்கரையூர், வடக்குச் செங்கரையூர், மீனவர் காலனி போன்ற பகுதிகள் மேம்பாடு அடையும். இது நீண்ட நாள் கோரிக்கை ஆகும். இது மறுபரிசீலனை செய்யப்படுமா என்று கேட்டுக்கொண்டு, லால்குடியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கி அனுமதி வழங்கியதற்கு, பொற்பாதம் தொட்டு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் புதிய பேருந்து நிலையத்தின் பணி எப்போது முடிவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி ஊராட்சி ஒன்றியம், அரியூர் ஊராட்சியில், அரியூர் மற்றும் செங்கரையூர் ஆகிய இரண்டு குக்கிராமங்கள் அடங்கும். அரியூர் குக்கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 1,600. செங்கரையூர் கிராம மக்கள் தொகை சுமார் 1,400 ஆக



2004 நவம்பர் 18]

மொத்தம் அரியூர் ஊராட்சியின் மக்கள் தொகை சுமார் 3,000 மட்டுமே ஆகும். எனவே, அரியூர் ஊராட்சியிலிருந்து செங்கரையூர் ஊராட்சியைப் பிரிப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலே லால்குடியில் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணி செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் துவக்கப்பட்டு கட்டடம் கட்டுவது பாதி அளவிற்கு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. மேலும், பணிகள் மீண்டும் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் விரைவாக செயல்படுத்தப்படும். 31-1-2005-க்குள் இப்பணிகள் முழுமையாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

30—

## விளையாட்டுத் திடல்

*** 35857—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் விளையாட்டுத் திடல் அமைத்து, விளையாட்டுச் சாதனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் விளையாட்டுத் திடல் அமைத்து, விளையாட்டுச் சாதனங்கள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரம் கிராமத்தைச் சுற்றி, தென்பாதி, வடபாதி, காளஹஸ்தினாபுரம், அபிஷேகக்கட்டளை, உமையாள்புரம், சீர்காழி கோவில்பட்டு, முடிகண்டபுரம், அண்ணா நகர் ஆகிய

[2004 நவம்பர் 18

சிற்றூர்கள் உள்ளன. இவ்வூராட்சியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட படித்த, படிக்கின்ற இளைஞர்கள் உள்ளனர். இவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காகவும், இவர்களுடைய பொழுதுபோக்கிற்காகவும் விளையாட்டுத் திடல் ஒன்று அமைத்துத்தர வேண்டுமாயும், அவர்களுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்கிட வேண்டுமாயும் கேட்டுக்கொள்வதுடன், இவ்வாண்டு முடியாவிட்டாலும்கூட விளையாட்டுத் துறையை ஊக்குவித்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அடுத்த ஆண்டாவது செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையைப் பொறுத்த அளவிற்கு இந்த அரசு ஊக்குவிக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். Youth Affairs என்று மத்திய அரசாங்கத்திலே இருக்கின்ற அமைச்சகத் துறை நம்முடைய தமிழ்நாட்டிலே கட்டப்படுகின்ற அதுவும் குறிப்பாக அறக்கட்டளைகள் மூலமாகக் கட்டப்படுகின்ற உள் விளையாட்டு அரங்கத்திற்கு பாதி அளவிற்கு, அதாவது 50 சதவிகிதம் மானியம் வழங்குகிறார்கள். எனவே, இந்த அரசு இதுபோன்ற உள் கட்டமைப்புக்கு, அதாவது Indoor Stadium கட்டுவதற்கு அரசு மானியம் வழங்குவதற்கு முன் வருமா? அப்படி வழங்கும் என்று சொன்னால், மத்திய அரசாங்கம் 50 சதவீதம் அளவிலே, 1 கோடி ரூபாய் என்று சொன்னால், 50 இலட்சம் ரூபாய் அவர்கள் வழங்குகிறார்கள். எனவே, மாநில அரசு அதிலே தன்னுடைய பங்கை வழங்குமா அல்லது முழுமையாக அந்த நிதியை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பங்களிப்புத் தொகையாக 25 சதவிகிதமும், தமிழக அரசு சார்பாக 25 சதவிகிதமும், இவை இரண்டும் செலவு செய்யப்பட்ட பின்னரே, மத்திய அரசிடமிருந்து 50 சதவிகிதம் வழங்கப்படுகிறது.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் Sports University ஆரம்பிப்பதாக அங்கிருக்கின்ற அதிகாரிகள் பேசிக்கொள்கிறார்கள். அப்படி அரசுக்கு ஏதேனும் எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அப்படி ஏதும் எண்ணம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே மாவட்ட விளையாட்டுத் திடல் அமைப்பதாக அறிவித்து ஓராண்டு காலம் ஆகிறது. ஆனால், அதற்கான எந்த ஒரு பூர்வாங்கப் பணியும் துவங்கப்படாமல் இருக்கிறது. அந்த மாவட்ட விளையாட்டுத் திடலை விரைவில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான முயற்சியில் அரசு ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**31—**

## மேம்பாலம்

*** 6593—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தானிலிருந்து ஆண்டிப்பட்டி பங்களாவிற்குச் செல்லும் பாதையின் குறுக்கே இரயில் இருப்புப் பாதையின் மீது மேம்பாலம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

முற்பகல் 10-50

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சென்று தங்களது தொகுதியான திருமங்கலம் வழியாக, திருநெல்வேலி, தூத்துக்குடி செல்லும் வாகனங்கள் வாடிப்பட்டி, ஆண்டிப்பட்டி, சோழவந்தான் வழியாகச் செல்லும்போது குறைந்தது 40 கிலோ மீட்டர் மிச்சப்படுகிறது. இப்போது மத்திய அரசு வாரா வாரம் ஏற்றுகின்ற டீசல் விலையிலிருந்து தப்பிப்பதற்கு சோழவந்தான் அருகில் ஒரு மேம்பாலம், இரயில்வே மேம்பாலம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து கட்டினால் மக்களுக்கும், வாகன ஓட்டுநர்களுக்கும், அந்தப் பகுதி மக்களுக்கும் மிக உதவியாக இருக்கும் என்பதைக் கூறி, அரசு விரைவில் மறுபரிசீலனை செய்து இரயில்வே மேம்பாலம் கட்டித் தருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு கோரப்பட்டுள்ள இடம் சோழவந்தான்-ஆண்டிப்பட்டி சாலையில் கிலோ மீட்டர் 0/2 ஆகும். இச்சாலை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் தற்போதுள்ள போக்குவரத்துச் செறிவு எண்ணிக்கை 1,028 ஆகும். இந்த இரயில்வே தடத்தில் செல்லும் இரயில்களுக்காக ஒரு நாளைக்கு 22 தடவை இரயில்வே கடவு மூடப்படுகிறது. ஆக, இரயில்வே போக்குவரத்துச் செறிவு 22,616 ஆகும். விதிகளின்படி இரயில்வே கடவு இருக்கின்ற சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட வேண்டுமானால் இரயில்வே போக்குவரத்துச் செறிவு ஒரு இலட்சமாக இருக்க வேண்டும். இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள இரயில்வே கடவினுடைய இரயில்வே போக்குவரத்துச் செறிவு விதிமுறைகளின்படி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இந்த இடத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராய நகர் தொகுதியிலே கடுமையான போக்குவரத்து நெருக்கடி இருக்கிற காரணத்தினால் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ரங்கராஜபுரம் இரயில்வே பாதையில் மேம்பாலம் கட்டப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டம் தற்போது எந்த அளவில் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், என்ன?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது செறிவு என்று சொன்னார்கள். செறிவு என்று சொன்னால் அதற்கான தகுந்த விளக்கத்தை நான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கத்தை என்னிடம் கேளுங்கள். நான் சொல்கிறேன். அடர்த்தி என்று பொருள். அவ்வளவுதான். மக்கள் நெருக்கடியாக இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துச் செறிவு என்றால் அந்த இரயில்வே தடத்தினை எத்தனை தடவை போக்குவரத்து வாகனங்கள் கடக்கின்றன என்பதைக் கணக்கிடுவது. அதைக் கணக்கிட்டு, ஒரு நாளைக்கு அந்த இரயில் தடத்தில் இரயில் செல்லும்போது எத்தனை தடவை அந்தக் கடவு மூடப்படுகிறது என்பதைப் பெருக்கினால் ஒரு இலட்சம் வர வேண்டும். மூடப்படுகின்ற எண்ணிக்கையையும் போக்குவரத்துச் செறிவினையும் பெருக்கினால் ஒரு இலட்சம் வர வேண்டும். ஒரு இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் விதிமுறைகளின்படி அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், தமிழ் tuition வைத்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

வினா எண் 32, திரு. ச. ராமராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

32—

## இருவழிப் பாதை

*** 24603—திரு. ச. ராமராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடி தொகுதியில் உத்தமப்பாளையம் — தேவாரம் வரை ஒருவழிப் பாதையாக உள்ளதை இருவழிப் பாதையாக மாற்றிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேனி மாவட்டம், போடி தொகுதி, கம்பம் தொகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கை. மேற்குத் தொடர்ச்சி மலையில் உலகத் தரம் வாய்ந்த ஏலக்காய், அப்பகுதியின் வர்த்தக சபை மக்களால் பயிரிடப்படுகிறது. அதிகப் போக்குவரத்து உள்ள, நீண்ட அதிக கிலோ மீட்டர் உள்ள, 50 கிலோ மீட்டர் உள்ள பாதையை இரு வழிப் பாதையாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு மிக்கப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை உத்தமப்பாளையம்—போடி சாலை கிலோ மீட்டர் 0/0-விருந்து 31/8 நீளம் கொண்ட மாநிலச் சாலையாகும். இதில் உத்தமப்பாளையம் முதல் தேவாரம் வரை கிலோ மீட்டர் 0/0 முதல் 12/2 பகுதியாகும். இதில் 2 கிலோ மீட்டர் நீளம் இரு வழித் தடமாகவும், 1 கிலோ மீட்டர் நீளம் இடைவெளித் தடமாகவும், 9.2 கிலோ மீட்டர் நீளம் ஒரு வழித்



தடமாகவும் உள்ளது. 2003-2004-ல் மையச் சாலை நிதி திட்டத்தின்கீழ் உத்தமப்பாளையம்–தேவாரம்–போடி சாலையில் 28.8 கிலோ மீட்டர் நீளம் ஒரு வழித் தடச் சாலை ரூ.190 இலட்சம் மதிப்பீட்டில் இடைவெளித் தடச் சாலையாக மாற்றப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மேலும், 2004-2005 மையச் சாலை நிதித் திட்டத்தின்கீழ் ரூ.209 இலட்சம் மதிப்பீட்டில் உத்தமப்பாளையம் முதல் போடி வரையிலான இரு வழித் தடம் இல்லாத 29.8 கிலோ மீட்டர் நீளச் சாலையினை அகலப்படுத்தி, இரு வழித் தடமாக்க ஒப்புதல் பெறப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் இதற்கான ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு உத்தமப்பாளையம் முதல் போடி வரை இந்நிதியாண்டுக்குள் இச்சாலை இரு வழிப் பாதையாக மேம்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. ராமராஜ்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

33—

## ஆரம்பச் சுகாதார நிலையம்

*** 35254—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், கடத்தூர் ஊராட்சியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், கடத்தூர் கிராமத்தில் புதிய அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட நம்பியூர் அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி, 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அமைத்து எனது பவானிசாகர் தொகுதிக்குப் பெருமை சேர்த்துத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், கடத்தூர் ஊராட்சியை மையமாகக் கொண்டு சுற்றிலும் 6 ஊராட்சிகள் உள்ளன. அதில் சுமார் 40,000 மக்கள் வசித்து வருகிறார்கள். இங்கு சுமார் 30,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். மேலும், இங்கு 10 கிலோ மீட்டர் தொலைவில் அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏதுமில்லை. கடத்தூர் ஊராட்சியில், கடத்தூர் முக்கியமான ஊராகும். இங்கு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதை மறுபரிசீலனை செய்து, அடுத்த ஆண்டாவது இங்கு அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அமைச்சர் முன் வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கிட்டத்தட்ட 1,415 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மத்திய அரசின் இலக்குப்படி பார்த்தால் 1,173-தான் இருக்க வேண்டும். இருந்தபோதிலும் 242 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கிராமத்தின் மக்கள் தொகையை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 965 மக்கள் தொகை இருக்கிறது. அதுவும், ஒரு அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமானால் 4 கிலோ மீட்டர் தொலைவிலே ஈச்சட்டிபாளையம் என்ற கிராமத்திலே ஒரு அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 15 கிலோ மீட்டர் தொலைவிலே கோபிசெட்டிப்பாளையம் மற்றும் சத்தியமங்கலத்திலே அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே பதிலுக்கான சில குறிப்புகளும் வந்திருக்கின்றன. அங்கே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களும், அதேபோல மலைவாழ் மக்களும் வந்து செல்வதால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, வருகின்ற ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. சிதம்பரம்.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடத்தூர் ஊராட்சி, கடத்தூர் ஆரம்ப துணை சுகாதார நிலையம் முதலில் செயல்பட்டு வந்தது. ஆனால், தற்போது செயல்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அரசு துணை சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றித் தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடத்தூர் துணை சுகாதார நிலையத்தைத்தான் ஆரம்பச் சுகாதார நிலையமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 30,000 பேர் இருந்தால் அந்த இடத்திலே ஆரம்பச் சுகாதார நிலையம் வர வேண்டுமென்பதுதான் டெல்லி வற்புறுத்துகிற ஒரு நியதி. அந்த

[2004 நவம்பர் 18

அடிப்படையிலே ஆரம்பிக்க முடியாது என்று சொன்னார்கள். ஒரு இலட்சம் மக்கள் தொகை இருக்கக்கூடிய இடங்களிலேகூட இன்னும் சில இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் வராமல் இருக்கின்றன. வேலூர் ஒன்றியத்திலே ஊசூர் என்ற இடத்திலே அந்த நிலை இருக்கின்றது. அது 21 கி.மீ.-ல் அலமேலுமங்காபுரத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்காக, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாலேகூட இதே அவையிலே ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு கொடுப்பதாகச் சொன்னது இன்னமும் வரவேயில்லை. அங்கு, 1 இலட்சம் மக்கள் தொகைக்குமேல் இருக்கிறது. ஆகவே, வேலூர் ஒன்றியத்தில் ஊசூர் என்ற இடம் 21 கி.மீ. தொலைவில் இருக்கிற காரணத்தினாலே அலமேலுமங்காபுரத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 30,000 மக்கள் தொகை கொண்ட இடத்திலேதான் அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் மத்திய அரசுமூலம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கூறினார்கள். இருந்தபோதிலும் அவர் இப்போது கூறும்போது, அங்கே ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட கிராமமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அதையும் ஆய்வு செய்து அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 34, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

34—

## இரத்த வங்கி

*** 37834—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

தேனியில் என்.ஆர். தியாகராஜன் நினைவு அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி 12-1-2001 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த இரத்த வங்கியின் உரிமம் 1-2-2003 முதல் 31-12-2007 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்குப் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வினா 2001-ல் கொடுக்கப்பட்ட வினா. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தேனி என்.ஆர்.டி. அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி தொடர்ந்து செயல்பட உதவிய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தேனி மாவட்ட மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

35—

## பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*** 10247—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை கல்லூரியாகத் தரம் உயர்த்திட அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) கோரிக்கை வந்திருப்பின் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா?

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) இல்லை.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில், சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி 1914 ஆம் ஆண்டு சுவாமி சகஜாநந்தா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, ஆண்கள் பள்ளியில் சுமார் 3,000 மாணவர்களும், பெண்கள் பள்ளியில் சுமார் 2,000 மாணவிகளும் படித்து வருகின்றார்கள். 25 ஏக்கர் பரப்பளவு உள்ள அந்த இடத்தில் இந்தப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், அதையொட்டி இருக்கின்ற நாகை மாவட்டம், சீர்காழி வட்டங்களிலே சுமார் 60-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளிலே படிக்கின்ற, குறிப்பாக ஆதிதிராவிடர் மாணவர்கள் அனைவரும் கல்லூரியில் சேருவதற்கு வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. காரணம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியிலே நடைபெற்று வருகின்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே Under Graduate Course எடுக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள், தலித் மாணவர்கள் கல்லூரியிலே சேருவதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கின்றது. அதை தமிழக அரசு பரிசீலனை செய்து புதிதாக ஒரு கல்லூரியை, குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்காக ஒரு கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளை உயர்த்திட அரசு வசம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி 1948-ல் தொடங்கப்பட்டு, 1978 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. அதேபோல், அரசு நந்தனார் பெண்கள் உயர்நிலைப் பள்ளி 1958 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1978 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் வகுப்பறைகள், ஆய்வகம், கணிப்பொறி அறை உட்பட 11 கட்டடங்களும், இரண்டு விடுதிக்



2004 நவம்பர் 18]

கட்டடங்களும் பயன்பாட்டில் உள்ளன. இப்பள்ளியில் 6 முதல் 12 ஆம் வகுப்புகள் வரையில் சுமார் 2,440 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். விடுதியில் 758 மாணவிகள் தங்கியுள்ளனர். இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகச் செயல்பட மட்டுமே போதுமான இடவசதி உள்ளது. கல்லூரியாகச் செயல்பட வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், விளையாட்டு மைதானம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான இடம் இல்லை.

ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2,318 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி வளாகத்தில் சுவாமி சகஜாநந்தா நூற்றாண்டு விழா மண்டபம் உட்பட 17 கட்டடங்கள் உள்ளன. மேலும், இப்பள்ளி வளாகத்தில் தொழில் பயிற்சி நிலையம் மற்றும் விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. எனவே, கல்லூரி தொடங்கப்படத் தேவையான இடவசதி இல்லை. மேலும், சிதம்பரத்தில் அண்ணாமலை பல்கலைக்கழகமும், சிதம்பரம் அருகே சி. முட்லூரில் அரசு கலைக் கல்லூரி ஒன்றும் இயங்கி வருகின்றன. இந்நிலையில் அரசு நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளின் வளாகத்தில் புதிதாகக் கல்லூரிகள் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை. அதற்கான கோரிக்கைகள் எதுவும் வரப்பெறவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

முற்பகல் 11-05

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்லூரி ஆரம்பிப்பதற்குப் போதிய இடவசதி இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பள்ளியையொட்டி, சுமார் 8 ஏக்கர் அளவிற்கு அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அதற்கும் மேலாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் Under Graduate பட்டப் படிப்புகள் எல்லாம் எடுக்கப்பட்டு, மேல் பட்டப் படிப்புதான் அங்கே இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழகத்திலே தனியாக ஆதிதிராவிடர்களுக்கென்று ஒரு கல்லூரிகூட இல்லை. ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், கல்லூரி இல்லை. ஆகவே, இதை அரசு பரிசீலித்து கல்லூரி ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி அமைப்பதற்குத் தேவையான, தகுதியான இடம் குறித்த பிரேரணைகள் முறையாக வரப்பெறுமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொழிற்பயிற்சி மையம் ஒன்று நடைபெற்று வருகிறது. அது கடந்த 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்போது தொடங்கப்பட்டபோது, 13 பிரிவுகளுக்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இடவசதியின்மை காரணமாக, 3 பிரிவுகள் மட்டும் அப்போது தொடங்கப்பட்டது. தற்போது அதற்குப் போதிய கட்டட வசதிகளும், போதிய விடுதிகளும் இருப்பதால், மேலும் 4 பிரிவுகள் இதிலே தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பயிற்சி நிலையத்திற்குப் போதுமான இடம் மற்றும் தகுதியான கட்டடங்கள் இருந்து வருகின்றன. தேவைப்பட்டால் அதுகுறித்து அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலே அமைக்கப்பட்டிருக்கிற அந்தப் பள்ளி சுமார் 80 ஆண்டுகளுக்கும் முன்னாலே, இந்த மாமன்றத்திலே நீண்ட காலம் உறுப்பினராக விளங்கிய, தலித் மக்களின் முதுபெரும் தலைவர் சுவாமி சகஜானந்தா அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு அறக்கட்டளையிலே தொடங்கப்பட்ட பள்ளி. நம்முடைய தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் சார்பிலே கல்வி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கிறது; இந்து சமய அறநிலையத் துறைகூட ஒரு கல்லூரியை நடத்துகிறது. அடித்தளத்து மக்களின், ஆதிதிராவிட மக்களின் பேரன்பைப் பெற்ற நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய





இந்த ஆட்சியிலே, ஆதிதிராவிட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக இந்தத் துறையின் மூலமாக ஏன் இதுவரையிலே ஒரு கல்லூரி தொடங்கப்படவில்லை? தொடங்குவதற்கான உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். இந்த நந்தனார் அறக்கட்டளை — புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அன்றைக்கு எங்களுடைய கோரிக்கையை ஏற்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த அறக்கட்டளையை அன்றைக்குக் கலைத்தார்கள். கலைத்த பின்னாலே, அந்த அறக்கட்டளைக்கு இதுவரையிலே ஒரு பராமரிப்புக் குழு என்று ஒரு குழு இல்லை. 80 ஆண்டுகளுக்கு முன்னாலே 25 ஏக்கர் நிலப்பரப்பிலே தொடங்கப்பட்ட அந்தப் பள்ளி நிறுவனம், சுவாமி சகஜாநந்தா அவர்கள் எப்படித் தொடங்கினாரோ, அதே நிலைமையிலேயே அது இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு பராமரிப்புக் குழுவை இன்றைக்கு நம்முடைய ஆதிதிராவிட நலத் துறை உருவாக்குமா? அதிலே அனுபவம் பெற்றவர்கள், ஆதிதிராவிட மக்களின் நலனிலே அக்கறை உள்ளவர்கள் இடம் பெறுவதற்கான வழிவகைகளை இந்த அரசு உருவாக்குமா என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நந்தனார் மேல்நிலைப் பள்ளி ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக அது இயங்குகின்ற இந்த இனிய வேளையில், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்புதான், அந்தக் கட்டடங்களைப் பழுதுபார்க்கின்ற பணிகள் எல்லாம், மிகவும் தரமாகப் பழுதுபார்க்க வேண்டுமென்று, அதற்காக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகளைப் பழுதுபார்ப்பதற்கு 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அது பழுதுபார்க்கப்பட்டுள்ளது. அதேபோல, அந்தப் பள்ளியினுடைய சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது, முறையாக அது நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

[2004 நவம்பர் 18

36—

## மாணவியர் விடுதி

*** 49083—திரு. எஸ். நடராஜன்:**

*மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் ஆதிதிராவிடர் மாணவியர்களுக்கு விடுதி கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் தோற்றுவிக்கும் செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் 10 மேல்நிலைப் பள்ளிகள், 10 உயர்நிலைப் பள்ளிகள், 3 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் ஆதிதிராவிட மாணவியர்களுக்கென்று தனி விடுதி எதுவும் இல்லாத காரணத்தினால், கூலி விவசாயிகளுடைய பிள்ளைகள், பீடித் தொழிலாளர்களுடைய பிள்ளைகள், வசதி இல்லாத பிள்ளைகள் எல்லாம் படிப்பதற்குச் சிரமப்படுகின்றார்கள். இந்தக் கோரிக்கையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிலாவது ஒரு விடுதி கட்ட ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதிக்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டாண்டுகளாக ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு கட்டடம் கட்டாமல் தாமதித்து வருகின்றார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இந்த நிதி ஆண்டில் கட்டித் தருவார்களா என்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.



2004 நவம்பர் 18]

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த ஆதிதிராவிடர் நலத் துறையின் 574 விடுதிகளுக்கும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அரசால் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். நடப்பு ஆண்டோடு 574 விடுதிகளுக்கும் அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட உள்ளன. இத்துறையின் ஆதிதிராவிட மாணவர் மாணவியர்கள் விடுதிகள் 1,076; பழங்குடியினர் மாணவ மாணவியர்கள் விடுதிகள் 26; ஆக மொத்தம் 1,102 விடுதிகளையும் அரசு சொந்தக் கட்டடங்களாக மாற்றிய பெருமை இந்தியாவிலேயே தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இதுபோன்ற சாதனை கிடையாது. இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை சுமார் 1.30 இலட்சம் ஆகும். இவர்களுக்கு உணவுக் கட்டணமாக ஆண்டுக்கு சுமார் 40 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்குச் சிறப்பான திட்டங்களின்மூலம் கோடிகோடியாக ரூபாய் ஒதுக்கீடு செய்து கொடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைக் கொண்டு சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் கந்திலியில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு இட ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால் இரண்டு வருடங்களாக தாமதம் ஆகி வருகின்றது. உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த நிதியாண்டில் அதை கட்டித் தருவார்களா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைப்படி, வேலூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 43 விடுதிகளில் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வந்த விடுதிகள் 24. அதிலே 21 விடுதிகளுக்கு அரசு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3 விடுதிகளுக்கும் இடத் தேர்வு முடிந்துவிட்டது. நடப்பாண்டில் விடுதிகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

37—

## சொகுசுப் பேருந்து

*** 18201—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணியிலிருந்து அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் சென்னை சென்று வந்த சொகுசுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் இயக்குவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் பேராவூரணியிலிருந்து சென்னைக்கு 2 சொகுசுப் பேருந்துகள் 2 நடைகள்வீதம் நாள்தோறும் நிறுத்தப்படாமல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு



2004 நவம்பர் 18]

விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இரண்டு பேருந்துகளும், அதைப்போல, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், குடந்தை கோட்டத்தின் மூலமாக இரண்டு பேருந்துகளும் இயக்கப்பட்டன. கடந்த ஓராண்டு காலமாக மூன்று பேருந்துகள் நிறுத்தப்பட்டு ஒரு பேருந்து மட்டுமே இயக்கப்படுகிறது. இதனால் பேராவூரணியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நலன் கருதி நிறுத்தப்பட்ட அந்த மூன்று வழித்தடங்களை மீண்டும் இயக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் இரண்டு பேருந்துகளை இயக்கி வருகின்றது. அதைப்போல, தமிழ்நாடு அரசு (கும்பகோணம்) போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அங்கு மூன்று பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. ஆனால், இந்த நிலை சகோதரப் போக்குவரத்துக் கழகங்களுக்குள் தேவையில்லாமல் போட்டி மனப்பான்மையோடு வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வகையிலே செயல்பட்டு, அப்படி இயக்கப்பட்டு வந்த அந்த வழித்தடங்களில் பெரும் இழப்பு ஏற்படுவது கண்டறியப்பட்டது. அதைச் சீரமைப்பதற்காகப் பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்து, அதன்மூலமாக அந்தப் பகுதி மக்களுடைய போக்குவரத்து வசதி எந்தவிதத்திலும் பாதிக்காத வகையில், போதுமான அளவிற்கு அந்தப் பகுதிகளுடைய அடர்வுகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக இரண்டு பேருந்துகளை இயக்குவது என்று முடிவு செய்யப்பட்டு, அதன்மூலமாக தொடர்ந்து, அந்தப் பகுதி மக்களின் தேவைக்கேற்ப இரண்டு அரசு விரைவுப் பேருந்துகள் தினந்தோறும் நிறுத்தப்படாமல் சிறப்பாக இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. இஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்

[2004 நவம்பர் 18

38—

## பணிமனை

*** 28333—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு அரசின் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான அரவக்குறிச்சியில், அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு மறைந்த பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது நிலம் வாங்கப்பட்டுள்ளது. அரவக்குறிச்சி, தாலுகா தலைநகரானதாலும், அங்கு வட்டாட்சியர் அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்கள் இருப்பதாலும், பவித்திரம், புன்னம், அத்திப்பாளையம் போன்ற கிராமப் பகுதிகளிலிருந்து கிராமத்து மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் வந்து செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அங்கு பணிமனை கட்டி, 10 பேருந்துகள் ஒதுக்கினால், அனைத்துக் கிராமப் பகுதி மக்களும் வந்து செல்வதற்கு பேருந்து வசதி ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இதை மறுபரிசீலனை செய்து அடுத்த நிதியாண்டில் கட்டித் தர முன்வருமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 29-8-1983 ஆம் ஆண்டு நமது புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே, அரவக்குறிச்சியிலே 2.5 ஏக்கர் நிலம், போக்குவரத்துக் கழகத்தின் தேவைக்காக, பணிமனை அமைப்பதற்காகக் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், அதற்குப் பின்பு, அந்தச் சூழ்நிலைகளை ஆய்வு செய்தபோது,



2004 நவம்பர் 18]

அரசாணை ஒன்று 9-9-1992 அன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசாணையின்படி, ஒரு பணிமனையிலிருந்து அடுத்த பணிமனை அமைக்க வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி வேண்டும் என்ற அரசாணை இருப்பதன் காரணமாக, இப்போது அரவக்குறிச்சிக்கும், கரூருக்கும் இடையே 26 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. ஏற்கெனவே கரூரிலே ஒரு பணிமனை இயங்கி வருகிறது. ஆகவே, 40 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதியாக அரவக்குறிச்சி இருப்பதன் காரணமாக, அரசாணையின்படி அங்கே புதிய பணிமனை அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலும், அந்த அரவக்குறிச்சிப் பகுதியில் ஐந்து நகரப் பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. ஆகவே, ஐந்து நகரப் பேருந்துகளுக்காக ஒரு பணிமனை அமைப்பது என்பது தேவையில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, அரவக்குறிச்சியிலே புதிதாகப் பணிமனை அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

39—

## "கிட்" வழங்குதல்

***23050—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறையில் 1991-1996 ஆம் ஆண்டில் விவசாய இடுபொருள்களுக்கு வழங்கப்பட்ட "கிட்" கடந்த காலத்தில் நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய சாகுபடிக்கு விதைகள் மட்டும் "மினி கிட்" பயிர் உற்பத்தித் திட்டங்களில் ஒரு இனமாகக் கருதி தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. மற்ற இடுபொருட்களுக்கு கள "கிட்" வழங்க தனியாகத் திட்டம் ஏதுமில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 நவம்பர் 18

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய, கடந்த 1991-1996 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் கூலி விவசாயிகளுக்கு — வழங்கப்பட்டு வந்த "கிட்" அதாவது — விவசாயிகள் பயன்படுத்தும் மண்வெட்டி, கடப்பாரை, களைவெட்டி, அரிவாள், இரும்புச் சட்டி இன்னும் பல்வேறு உபகரணங்களை இலவசமாக வழங்கி, ஊக்குவித்து வந்தார்கள். அவை கடந்த ஐந்து வருடங்களாக நிறுத்தப்பட்டு, ஏழையெளிய விவசாயிகள் மத்தியில் ஒரு சிறு குறையாக இருந்து வருகிறது. எனவே, தற்போது வளர்ந்துவரும் புதிய பயிர்ச் சாகுபடிகள் பற்றியும், நவீன முறை விவசாயம் பற்றியும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியால், வேளாண்மைத் துறையையும், விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகின்ற நோக்கத்திலே, விவசாயிகளுக்குப் பல்வேறு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, இன்றைக்குச் சிறப்பான முறையிலே இயங்கி வருகின்றன. எனவே, சிறு மற்றும் குறு விவசாயிகள், ஏழையெளிய விவசாயிகள் பயன்படுத்துகின்ற அந்த விவசாயிகளுடைய கருவி - "கிட்" - அது மீண்டும் ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நவீன விவசாய முறைகளுக்கு இன்றைக்கு நல்ல முறையிலே, ஊக்கம் அளிக்கின்ற வகையிலே அமையும். விவசாயிகள் பயனடைகின்ற வகையில் வழங்கப்பட்டு வந்த அந்த - "கிட்" - மீண்டும் விவசாயிகளுக்கு வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மினி கிட்" என்பது, விதையும் உரமும் சேர்ந்து வழங்கப்படுவது ஆகும். விதைகள் மட்டும் வழங்கப்படுவது கள "கிட்" எனப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்திருக்கின்ற வினாவிலே "மினி கிட்" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். வேளாண் கருவிகள் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். தமிழகம் முழுவதும், தற்போது விவசாயத் தொழிலாளர்கள் மத்தியிலேயும், சிறு மற்றும் குறு விவசாயிகள் மத்தியிலேயும் வேளாண் கருவிகள் இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்று பெருமக்கள் மத்தியிலிருந்து கோரிக்கைகள் வருகின்றன.



2004 நவம்பர் 18]

அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய வேண்டுகோளையும் விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளுடைய வேண்டுகோளையும் தாய் உள்ளத்தோடு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அடுத்த ஆண்டிலே அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப இலவசமாக வழங்குவதற்குண்டான வாய்ப்பை சிந்திக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலே வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதற்கு அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**40—**

## உழவர் பயிற்சி நிலையம்

**• 40863—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய உழவர் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கெனவே குடுமியான்மலையில் உழவர் பயிற்சி நிலையம் ஒன்று 1982-83 முதல் செயல்பட்டு வருகின்றது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய உழவர் பயிற்சி நிலையம் அமைக்க செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 நவம்பர் 18

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறையிலே பல வியத்தகு சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலே, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை பகுதிகள் வயலும், வயல் சார்ந்த பகுதிகளாக இருக்கின்றன. குறிப்பாக, அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் நெல், வாழை, கரும்பு மற்றும் மஞ்சள் போன்ற பணப் பயிர்களையும், காய்கறிகளையும், பழங்களையும் பயிர் செய்கிறார்கள். நல்ல புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டு, அந்தத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்தக்கூடிய ஆர்வத்தோடு அவர்கள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அத்தகைய விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே குடுமியான்மலையிலே ஒரு பயிற்சி நிலையம் செயல்பட்டால்கூட, F.T.C. என்று சொல்லக்கூடிய Farmers Training Centre என்ற உழவர் பயிற்சி நிலையத்தை கந்தர்வக்கோட்டை பகுதியிலும் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டும். நடப்பு நிதி ஆண்டிலே ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் தற்போது 12 வேளாண் - உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக, ஒரு வேளாண் - உழவர் பயிற்சி நிலையம் புதிதாகத் தொடங்க வேண்டுமென்றால் அரசுக்குத் தொடரும் செலவினமாக ரூ.15 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூ.25 இலட்சமும் தேவைப்படுகின்றது. ஆக, அந்த அடிப்படையிலே வேளாண் பெருமக்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை கனிவுடன் பரிசீலித்து அடுத்த நிதியாண்டிலே அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தாயுள்ளத்தோடு பரிசீலிக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொல்வதற்கிணங்க இன்றைக்குக் கோரிக்கைகள் அத்தனையையுமே நிறைவேற்றிக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர்



2004 நவம்பர் 18]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குத் தொகுதி மக்கள் சார்பிலே என்னுடைய மிகப் பணிவான வணக்கங்களை, நன்றிகளைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பயிரிடச் சொல்லப்பட்ட காட்டாமணக்கு போன்றவற்றையெல்லாம் அரசுப் பண்ணைகளிலே முதன்முதலாக பயிர் செய்து, உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற திட்டத்தை அரசு தொடங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டாமணக்கு என்று சொல்லப்படுகின்ற Jatropha-வைப் பொறுத்தமட்டிலே, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து வேளாண் இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை அலுவலகப் பெருமக்கள் அனைவரும், அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற வேளாண் பெருமக்களுக்குக் காட்டாமணக்கு பயிரிடுவதனுடைய செயல்விளக்க முறைகளை விவசாயப் பெருமக்களுக்கு சொல்லி வருகிறார்கள். பல்வேறு வயல் விளக்க நிகழ்ச்சிகள் மூலமாக, வேளாண் பெருமக்களுக்கு விளக்கமாகச் சொல்லி, அதனைச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கிணங்க, மேலும் அதிக அளவிலே, வயல் விளக்க நிகழ்ச்சிகளை நடத்தி, வேளாண் பெருமக்களுக்குக் காட்டாமணக்கைப் பயிரிடுவதனுடைய முக்கியத்துவத்தைத் தெரிவிக்கலாம். அதோடு மட்டுமல்லாமல், சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு ஆகிய மாற்றுப் பயிர்த் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய நன்மைகளையும் தெரிவித்து, விவசாயப் பெருமக்களுக்கு விழிப்புணர்வை உருவாக்குவதற்கு, வயல் விளக்க நிகழ்ச்சிகளைப் பெருமளவு நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்.

[2004 நவம்பர் 18

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டாமணக்குப் பயிரிடுவதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நபார்டு மூலமாக, காட்டாமணக்கு Jatropha என்ற அந்தப் பயிரை விளைவிக்கின்றவர்களுக்கு, தனி நபர் விளைவித்தால், ஆறரை இலட்சம் ரூபாய் மானியம் என்றும், ஒரு கூட்டுறவு நிறுவனத்தின் மூலம், நான்கு இடங்களிலே பயிர் வைத்தால், 25 இலட்சம் ரூபாய் மானியம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கின்ற அந்தத் திட்டத்தைப்போல, 50 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் கொடுக்கக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா? அப்படி என்றால், அதுபற்றி அரசு எப்போது பரிசீலித்து வெளியிடும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, காட்டாமணக்குப் பயிரிடுவதற்காகத் தனியாக மானியம் வழங்குகின்ற ஒரு திட்டம், நபார்டு வங்கியிடத்திலே இருந்து அரசுக்கு இன்னும் முழுமையாக அந்தத் தகவல் கிடைக்கப் பெறவில்லை. அப்படி நபார்டு வங்கியிலே இருந்து மானியம் அல்லது உதவிகள் வழங்குவதற்குண்டான வாய்ப்புகளை, நபார்டு வங்கி தருவதாக இருந்தால், நிச்சயமாக அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Jatropha-விலேயிருந்து, bio-diesel தயாரிப்பதற்கான சிறு தொழிற்சாலைகளையும், Agro-based Industries ஆகியவற்றையும் ஆரம்பிப்பதற்கான ஏதேனும் முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறதா? அதற்கான மானியங்கள் ஏதேனும் வழங்குகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டாமணக்கையும், சர்க்கரைச் சோளத்தையும் மற்றும் சர்க்கரைக் கிழங்கு ஆகிய பயிர்களைப் பயிரிடுவதற்காக, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கூட்டுப் பண்ணைத் திட்டத்தின் மூலமாக, ஒரு சில நிறுவனங்களைத் தேர்வு



2004 நவம்பர் 18]

செய்து உரிமம் வழங்கியிருக்கிறது. தமிழகம் முழுவதும் இது சம்பந்தமாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அனைத்துப் பத்திரிகைகளிலும், காட்டாமணக்கு மற்றும் சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு பயிரிடுவதற்குண்டான வாய்ப்புகளையும், அப்படிப் பயிரிடுகின்ற காட்டாமணக்கையும், சர்க்கரைச் சோளத்தையும், சர்க்கரைக் கிழங்கையும் முழுமையாகக் கொள்முதல் செய்துகொள்வதற்குண்டான கூட்டுப் பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே, ஒரு சில நிறுவனங்களுக்கு — வேண்டுகோள் விடுத்த நிறுவனங்களுக்கு — தகுதியினுடைய அடிப்படையிலே, ஒரு சில மாவட்டங்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் உரிமம் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காட்டாமணக்குச் செடியை வளர்த்து, அதிலே வருகின்ற— yield—விதைகளை வைத்துக் கொண்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்டாமணக்கு மேலே இவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்களே!

**திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. இன்றைக்கு உள்ள தலையாயப் பிரச்சினை இது. அதிலேயிருந்து bio-diesel, glycerine, மாட்டுத் தீவனம், இவை மூன்றும் தயாரிக்க முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Jatropha-விலேயிருந்து, மாட்டுத் தீவனமோ, வேறெந்தத் தீவனமோ தயாரிக்க முடியாது. It is non-edible (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதற்குப் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) Jatropha-விலேயிருந்து, bio-diesel, மாட்டுத் தீவனம், glycerine போன்றவை தயாரிக்க முடியும் என்று..... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Jatropha-விலேயிருந்து bio-diesel தயாரிக்க முடியும். கிளிசரின் தயாரிக்க முடியும். ஆனால், மாட்டுத் தீவனமோ, வேறு எந்தத் தீவனமோ தயாரிக்க இயலாது.

[2004 நவம்பர் 18

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு அவர்கள் கேள்வி கேட்கட்டும். (குறுக்கீடு) திரு. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐதராபாத்திலுள்ள ஒரு Research Centre-லே தயார் செய்த Report இருக்கிறது. அதை அரசுக்கு நான் கொடுக்கிறேன். மூன்றும் தயாரிக்கப்படுகிறது என்று அந்த Research Centre-லேயிருந்து ஒரு Report வந்திருக்கிறது, அந்த Report-ஐ . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே கோயம்புத்தூரிலே இருக்கிற Agricultural University இதைப்பற்றி தீர ஆராய்ச்சி செய்து, இன்னும் வெளிநாட்டு நிறுவனங்கள்கூட ஆராய்ச்சி செய்தன. Jatropha என்பது ஒரு toxic substance, it is totally non-edible, மனிதர்களோ, மிருகங்களோ யாரும் அதை உண்ண முடியாது என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, உங்கள் கேள்வி என்ன?

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தளவிலே, தமிழ்நாட்டிலே உபரி நிலங்கள் அதிகமாக இருப்பதாக தொடர்ந்து நாம் இதே மாமன்றத்திலே பேசிக்கொண்டிருக்கிறோம். அதைப்போல, இந்த Waste land-லே அரசாங்கமே முன்வந்து இந்தக் காட்டாமணக்கு விதையை வைத்து கிளிசரின்-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு வேலு அவர்கள் ஏதோ புதிதாக ஒரு யோசனையை இந்த அரசுக்குச் சொல்வதுபோல சொல்லிக்கொண்டிருக்கிறார். ஏற்கெனவே Jatropha, Sugar beet, சர்க்கரைக் கிழங்கு இவற்றைப் பயிரிட்டு அவற்றின்மூலம் Bio-diesel மற்றும் இதர by-products தயாரிப்பதற்கு மிக விரிவான ஒரு திட்டத்தை இந்த அரசு அறிவித்து, என் பெயரிலேயே பல அறிக்கைகள் இதுசம்பந்தமாக வெளியிட்டு அப்புறம் Agriculture Department-லிருந்து Expressions of Interest, யாருக்கெல்லாம் இத்தகைய தொழில் தொடங்குவதற்கு ஆர்வம் இருக்கிறதோ அவர்கள் எல்லாம் விண்ணப்பிக்கலாம் என்று invite செய்து, அழைப்பு விடுத்து பல அறிக்கைகள் Agriculture Secretary பெயரிலும், Commissioner of Agriculture பெயரிலும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. திரும்பத்



2004 நவம்பர் 18]

திரும்ப இத்தகைய அறிக்கைகள் என் பெயரிலும், அதிகாரிகள் பெயரிலும் வெளிவந்திருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் வேலு அவர்களும், பொன்முடி அவர்களும் இந்த அறிக்கைகளை எல்லாம் படிக்கவில்லையா? பத்திரிகைகளை உற்று கவனிப்பது இல்லையா? அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகளை மட்டும் படிப்பார்களா என்பது தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இப்போது என்ன திட்டம் வகுத்திருக்கிறோம் என்றால், நீங்கள் இப்போது புதிதாக சொன்னீர்களே ஒரு யோசனை, தமிழகத்தில் Waste land-ஆக இருக்கிற அந்த நிலங்களையெல்லாம் சாகுபடியின்கீழ் கொண்டு வரலாம் என்று, இதற்காகத்தான் 3 ஆண்டுகளுக்கு முன்பே, Comprehensive Waste Land Development Programme என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, மிக அண்மையில் நாம் Contract Farming என்ற திட்டத்தையும் அறிவித்திருக்கிறோம்.

சில பெரிய தொழில் நிறுவனங்கள், தொழில் அதிபர்கள், இத்தகைய தொழிலை எடுத்துக்கொண்டால் அதைச் செயல்படுத்துகின்ற திறனும், சக்தியும் அவர்களுக்கு இருக்க வேண்டும். அவர்களிடமிருந்து வந்த Expressions of Interest-ஐப் பரிசீலித்து, அவர்களுக்கு அரசு உரிமம் வழங்க இருக்கிறது. அதாவது, ஒரு மாவட்டத்தில் எத்தனையோ விவசாயிகள் இருப்பார்கள், ஒரு குறிப்பிட்ட அளவு நிலம்தான் சாகுபடியின்கீழ் இருக்கும். எத்தனையோ நிலங்கள் Waste-ஆக, fallow lands-ஆகக் கிடக்கும். ஏனென்றால் அங்கே போதுமான அளவு தண்ணீர் இருக்காது. இல்லையென்றால் அதற்குத் தேவையான உரம் இடுவதற்கு இவர்களிடம் வசதி இருக்காது. அந்த Land-ஐ, productive-ஆக, விளைகின்ற நிலமாக மாற்ற வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன இடுபொருள்கள் அங்கே செலுத்தவேண்டுமோ அதையெல்லாம் வாங்கிச் செலுத்துகின்ற, இடுகின்ற சக்தி அவர்களுக்கு இருக்காது. இதையெல்லாம் யோசித்துத்தான் இந்த Contract Farming திட்டத்தை அறிவித்திருக்கிறோம்.

ஒரு மிகப் பெரிய தொழில் நிறுவனம், ஒரு மாவட்டத்தைப் பொறுப்பில் எடுத்துக்கொள்கிறது என்றால், அங்கே என்னென்ன நிலங்கள் இருக்கின்றன, Private patta lands, Government poramboke land என்னென்ன இருக்கிறது என்பதைப் பார்த்து துறை அவர்களுக்குப் பட்டியல் கொடுக்கிறது. அதன் பின்னர், இந்தத் தொழில் அதிபர்களே அங்கே இருக்கின்ற விவசாயிகளை எல்லாம் அணுகி, அவர்களிடம் ஒப்பந்தங்கள் செய்துகொள்கிறார்கள். பெரிய தொழில் அதிபர்கள்,

[2004 நவம்பர் 18

அதாவது பெரிய Industrial House-ம், தனித்தனி விவசாயிகளும் ஒப்பந்தம் போட்டுக்கொள்கிறார்கள். அதன்படி அவர்களுடைய நிலத்தில், ஒருவரிடம் இரண்டு ஏக்கர் நிலம் இருக்கலாம், ஒருவரிடம் 3 ஏக்கர் நிலம் இருக்கலாம், எல்லாவற்றையும் பயன்படுத்திக்கொள்ள ஒப்பந்தம் போட்டுக்கொண்டு இவர்கள் - இந்தத் தொழில் அதிபர்கள், அதில் ஜெட்ரோபா அல்லது சர்க்கரைச் சோளம் அல்லது சர்க்கரைக் கிழங்கு இவற்றைப் பயிரிடுவதற்குத் தேவையான இடுபொருள்களை அவர்களுக்கு வழங்குகிறார்கள். இதை எப்படிச் சாகுபடி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்த Agricultural University-யும், அரசாங்கத்தின் வேளாண்மைத் துறையும் இணைந்து அதிகாரிகளை அனுப்பி அவர்களுக்கு Training classes நடத்துகிறார்கள். செலவு முழுவதையும், அந்தத் தொழிலதிபரே ஏற்றுக்கொள்கிறார்.

முற்பகல் 11-35

அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் அந்தச் சாகுபடியைச் செய்து முடித்தால் - இப்போது ஜெட்ரோபா 10 மாதங்களில் yield அளிக்கக்கூடிய புதிய விதைகள் வந்து இருக்கின்றன. அவற்றை எல்லாம் Agricultural University வரவழைத்துக் கொடுக்கிறது.

அதன் பின்னர் இந்தத் தொழில் அதிபர்கள் ஒரு நல்ல விலையை நிர்ணயித்து அவர்களே buy back செய்கிறார்கள். அந்த விவசாயிகள் என்ன அங்கே பயிரிடுகிறார்களோ அதை இந்தத் தொழில் அதிபர்கள் மீண்டும் வாங்கிக்கொள்கிறார்கள். ஏற்கெனவே இந்த அரசு "Comprehensive Waste Land Development Scheme" என்பதைக் கொண்டு வந்தபோது விவசாயிகள் எல்லாம் ஜெட்ரோபா பயிரிட வேண்டும், காட்டாமணக்கு பயிரிட வேண்டும், sugar beet பயிரிட வேண்டும், சர்க்கரைச் சோளம் பயிரிட வேண்டும் என்று அரசு கேட்டுக்கொண்டபோது, இவற்றையெல்லாம் பயிரிட்டால் யார் வாங்குவார்கள் என்ற கேள்வியை எழுப்பினார்கள். அப்போது அரசிடம் சரியான ஒரு பதில் இருக்கவில்லை. ஆனால், இப்போது அதற்கும் வழி கண்டுபிடித்து இருக்கிறோம். ஆகவே, இந்தக் காட்டாமணக்கைப் பயிரிட்டாலோ, சர்க்கரைச் சோளம் அல்லது சர்க்கரைக் கிழங்கைப் பயிரிட்டாலோ அதை வாங்குவதற்குத் தயாராய் அந்தத் தொழிலதிபர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வரும் காலத்தில், நமது தமிழ்நாட்டின் கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடைய,



2004 நவம்பர் 18]

மறுமலர்ச்சி அடைய, இமய உச்சியைத் தொடும் அளவிற்கு மேன்மை அடைய, ஒரு நல்ல திட்டத்தை வகுத்து இருக்கிறோம். இது ஏற்கெனவே செயல்பாட்டில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே distillery வைத்திருப்பவர்களுக்கு, இன்னும் கூடுதலாக distil செய்வதற்கு capacity-க்கு அவர்கள் License கேட்டால் அதையும் கொடுக்கிறோம். ஜெட்ரோபாவை மட்டும் வைத்து பயோ டீசல் தயாரிப்பதற்கு ஒரு சிறிய plant போட வேண்டும் அல்லது பெரிய plant-ஐப் போடவேண்டும் என்று யாராவது உரிமம் கேட்டால் அதற்கும் உரிமம் வழங்கப்படுகிறது. ஆகவே, வருங்காலங்களில், பெட்ரோல், டீசல் இவற்றையே நம்பியில்லாமல், பயோ-டீசலை பெரிய அளவில் நாம் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காகவும் இது பயன்படும். அதேசமயம் இப்போது Waste land-ஆக எதற்கும் பயன்படாமல் கிடக்கின்ற நிலங்களை எல்லாம் நல்ல இலாபம் தரக்கூடிய நிலங்களாக மாற்றுவதற்கும், கிராமப்புறப் பொருளாதாரத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், அரசு ஏற்கெனவே இந்த மகத்தான திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) இல்லை. இல்லை. விவாதம் இல்லை இது. (குறுக்கீடு) கேட்டதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக, விளக்கமாகப் பதில் அளித்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) கேளுங்கள். கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஏதோ பத்திரிகையைப் படிக்காதது பற்றிச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் மேலும் விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கேள்வியை இங்கே வைக்கிறேன். குறிப்பாக, இதுபோன்ற சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால், ஜெட்ரோபாவில் இருந்து 3 கிலோ விதை கிடைத்தால், அதிலிருந்து 1 லிட்டர்தான் பயோ-டீசல் கிடைக்கும். இதுகுறித்து ஓரளவிற்கு விவரங்களைத்

[2004 நவம்பர் 18

தெரிந்துகொண்டுதான் நாங்களும் இங்கே பேசிக்கொண்டு இருக்கிறோம். நீங்கள் அறிக்கைகளை விடுகிறீர்கள். அங்கே இருக்கிற நடைமுறை சிக்கல்கள், Large scale-ஆக production பண்ண வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு industry form பண்ண வேண்டும் என்று சொன்னால், 10 மாதங்களில் உருவாக்கக்கூடிய விதைகளைத் தயாரித்திருக்கிறோம் என்று நீங்கள் சொன்னீர்கள். குறைந்தபட்சம் 2 வருடங்களில்தான் yield கிடைக்கும். 3 வருடங்களில்தான் முழு yield கிடைக்கும். இதுதான் உண்மையாக இன்று நடைமுறையிலே இருக்கிற அந்த விவசாயத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற ஆந்திரா போன்ற மாநிலங்களில் உருவாக்கி இருக்கிறார்கள். நீங்கள் தயவு செய்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய நடைமுறைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறார். முன்பெல்லாம் பழைய ரக விதைகளுக்கு விளைச்சல் தருவதற்கு இத்தனை காலம் ஆகும். ஆனால், இப்போது Agricultural University-யிலேயே புதிய ரக விதைகளைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். 10 மாதங்களிலேயே அவை விளைச்சல் கொடுக்கிறது. அதுதான் உண்மை. ஆகவே, ஏற்கெனவே வெளியிட்ட அறிக்கைகளின் நகல்களை நான் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். அவற்றை நீங்கள் படித்துப் பார்த்துக்கொள்ளலாம். உங்களுக்கு என்னென்ன சந்தேகங்கள் வரக்கூடுமோ, அத்தனை சந்தேகங்களுக்கும் அந்த அறிக்கையிலேயே விடைகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, தெளிவாகச் சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இப்போதுதான் உங்களுடைய கவனம் காட்டாமணக்கு பக்கம் திரும்பி இருக்கிறது. முழுமையாகக் கவனம் திரும்பட்டும்.



2004 நவம்பர் 18]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## நான்காம் பட்டியல்*

1—

### நியாயவிலைக் குடிமைப் பொருள் கட்டடம்

**வினா எண் 19628—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், வகுரணி பஞ்சாயத்து நாவார்பட்டிக்கு நியாயவிலைக் குடிமைப் பொருள் கட்டடம் (PDS Building) கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், வகுரணி பஞ்சாயத்து, நாவார்பட்டி நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்ட தற்சமயம் அரசு திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

2—

### பகுதிநேர பொது விநியோகக் கடை

**வினா எண் 25823—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, மோட்டுப்பட்டிக்கு பொது விநியோகக் கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, மோட்டுப்பட்டியில் செயல்படும் பகுதி நேரக்கடை 490 குடும்ப அட்டைகளுடன் பெண்ணாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடைகளுக்கு அப்பகுதி வாழ் மக்களால் இலவசக் கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும். அவ்வாறே மோட்டுப்பட்டி நியாயவிலைக் கடை இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில் பகுதிநேரக் கடைக்கு அரசு கட்டடம் கட்டித் தர வழிவகை இல்லை. மேலும், மோட்டுப்பட்டியில் பகுதிநேரக் கடை செயல்பட்டு வருவதால், புதிய கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

3—

## அங்காடிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 42594—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி, பூதகுடி ஊராட்சி, பூதகுடி கிராமத்திலுள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி, பூதகுடி நியாயவிலைக் கடை கருப்பையாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 350 அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்சமயம்,*



2004 நவம்பர் 18]

*நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு அரசு திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.*

4—

## சித்த மூலிகை ஆராய்ச்சி மையம்

**வினா எண் 24949—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்த மூலிகை ஆராய்ச்சி மையம் மேட்டூரில் எப்பொழுது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையைப் பொறுத்த வரையில் மேட்டூரில் சித்த மூலிகை ஆராய்ச்சி மையம் தோற்றுவிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

5—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 28209—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, காரைமேட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமே ஊராட்சியில் தற்போது துணை சுகாதார நிலையம் உள்ளது.*

[2004 நவம்பர் 18

தமிழ்நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1,413 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளதால், காரைமேடு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

6—

## புதிய மருத்துவர் நியமனம்

**வினா எண் 54240—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நல்லூரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய மருத்துவரை நியமனம் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இரண்டு மருத்துவர் பணியிடங்களிலும் 2 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, புதிய மருத்துவர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

7—

## தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை

**வினா எண் 14073—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியப் பகுதிகளான ஆடையூர், ஜலகண்டபுரம், பக்கநாடு ஆகிய பகுதிகளில் தேங்காய் அதிகம் விளைவதால், தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க இந்நிதியாண்டில் அரசு முன்வருமா?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் எடப்பாடி ஒன்றியப் பகுதிகளான ஆடையூர், ஜலகண்டபுரம், பக்கநாடு ஆகிய பகுதிகளில் தேங்காய் அதிகம் விளைகின்றன. இருப்பினும் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை. எனினும், தகுதியுள்ள தனியார் தொழில் முனைவோர்கள், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழிற்சாலை அமைக்க தேவையான திட்ட அறிக்கை தயாரித்துக் கொடுப்பதுடன் நிதி வசதியை வங்கிகள் மூலமாகவோ அல்லது தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாகவோ பெற்றுத் தர மாவட்டத் தொழில் மையம் தயாராக உள்ளது. இத்திட்டத்தின்கீழ் தொடங்கப்படும் தொழில்களுக்கு கீழ்க்கண்டவாறு மானியம் அரசு வழங்கும்:

(1) இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டில் 15 விழுக்காடு அதிகபட்சம் ரூ.15 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

(2) குறைந்த அழுத்த மின் மானியம் முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30 விழுக்காடு, 20 விழுக்காடு மற்றும் 10 விழுக்காடு தொழில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள், இதில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து செலுத்தப்பட்ட மின் கட்டணத்தில் வழங்கப்படும்.

(3) மின்னாக்கியின் முதலீட்டில் 15 விழுக்காடு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

(4) 50 விழுக்காட்டுக்கு மேல் பெண்களைப் பணியில் அமர்த்தும் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு முதலீட்டு மானியம் 5 விழுக்காடு உயர்ந்தபட்சம் ரூ.5 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

மேலும், மேற்படி திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு, மற்றும் சிப்காட், சிட்கோ மற்றும் அரசு/கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் ஒதுக்கப்படும் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் அரசு வழங்கும்.

சேலம் மாவட்டம், எடப்பாடித் தொகுதியில் கீழ்க்கண்ட 3 வட்டாரங்கள் உள்ளடங்கியுள்ளன:-

*(1) எடப்பாடி (2) கொங்கணாபுரம் (3) மகுடஞ்சாவடி*

மேற்படி மூன்று வட்டாரங்களில் கீழ்க்கண்ட தொழில்கள் தொடங்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | வட்டாரம் | தொழில் |
|---|---|---|
| 1 | எடப்பாடி | நவீன அரிசி ஆலை |
| 2 | கொங்கணாபுரம் | மரவள்ளிக்கிழங்கிலிருந்து மாவுப் பொருள் தயாரித்தல் |
| 3 | மகுடஞ்சாவடி | ஜவ்வரிசி பொருட்கள் |

இதுவரை எடப்பாடித் தொகுதியில் உள்ள 3 வட்டாரங்களில் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிலுக்கான விண்ணப்பம் ஏதும் மாவட்ட அளவிலான குழுவிற்கு வரப்பெறவில்லை. மேலும், எடப்பாடி வட்டாரத்திலுள்ள ஆடையூர், ஜலகண்டபுரம் மற்றும் பக்கநாடு பகுதிகளிலிருந்தும் தேங்காய் எண்ணெய் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்க தகுதியுள்ள விண்ணப்பங்கள் ஏதும் இதுவரை புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்படவில்லை.

**8—**

## மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை

**வினா எண் 24406—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சோலைகள் நிறைந்த பகுதிகளில் மூலிகைகள் நிறைந்து இருப்பதால் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் தற்போதுள்ள மூலிகைப் பயிர்கள் சாகுபடி குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. வைத்தியர்கள் மட்டும் அவரவர் தேவைக்கு பயிர் செய்து வருகின்றனர். இது கணக்கில் எடுக்கும் அளவான பரப்பு இல்லை. தொழிற்சாலை அமைக்கப்படும் அளவுக்கு அதற்குத் தேவையான மூலப்பொருள் இங்கு தற்போது இல்லை. எனவே, மூலிகைப் பயிர் தொழிற்சாலை அரசு ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், வால்பாறை பகுதியில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மூலிகையை மூலப்பொருளாகக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க இன்றுவரை விண்ணப்பங்கள் எதுவும் தனியாரிடமிருந்து பெறப்படவில்லை.

எனினும், ஒப்பந்த அடிப்படையில் மூலிகைப் பயிர் செய்து, அந்த மூலிகையைக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க இப்பகுதியைச் சார்ந்த தொழில் முனைவோர் எவரேனும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க முன்வரும் பட்சத்தில் அவர்களுக்குத் தகுந்த வழிமுறைகளை எடுத்துரைத்து தொழில் தொடங்க மாவட்டத் தொழில் மையம், கோயமுத்தூர் மூலம் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும்.

**9—**

## ஊரகத் தொழில் தொடங்குதல்

**வினா எண் 25048—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி, அ.புதூர், மகுடஞ்சாவடி, வைகுந்தம் ஆகிய ஊர்களிலும், இடங்கணசாலை பேரூராட்சியிலும் ஊரகத் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி, அ.புதூர், மகுடஞ்சாவடி, வைகுந்தம் ஆகிய பகுதியில் அரசு சார்பில் ஊரகத் தொழில் தொடங்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட மகுடஞ்சாவடி ஒன்றிய பகுதியில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுவரை, சேலம் மாவட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 29 திட்டங்கள் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு வங்கிகள்/நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று தொழில் தொடங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ஜவ்வரிசி மற்றும் சத்து மாவு தயாரிக்கும் தொழில்கள் கீழ்க்கண்ட நான்கு வட்டாரங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் வங்கியின்மூலம் கடன் பெற்று தொழில் தொடங்க மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விண்ணப்பதாரர் பெயர் | தயாரிக்கும் பொருள்/ நடவடிக்கை | வட்டாரம் | கடன் வழங்கும் வங்கி/நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர். தனசேகரன் | ஜவ்வரிசி மற்றும் சத்து மாவு தயாரித்தல் | அயோத்தியா பட்டினம் | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். |
| 2 | திரு.பி. கோவிந்தராஜ் | ஜவ்வரிசி மற்றும் சத்துமாவு தயாரித்தல் | பனைமரத்துப் பட்டி | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். |
| 3 | திருமதி எம். அமுதா | ஜவ்வரிசி பொருள் தயாரித்தல் | மகுடஞ்சாவடி | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். |
| 4 | திரு.பி. தேவராஜன் | கிழங்குமாவு தயாரித்தல் | கொங்கணாபுரம் | இந்தியன் வங்கி |



2004 நவம்பர் 18]

எனினும், மேற்படி நான்கு திட்டங்களுக்குக் கடன் வேண்டி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் வங்கியில் கடன் விண்ணப்ப மனு தொழில் முனைவோர்களால் தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளது.

**10—**

## முந்திரித் தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 27634—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, பெரும்கொண்டான் பகுதி, ஊராட்சிப் பகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, பெரும்கொண்டான் பகுதி, ஊராட்சிப் பகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் முந்திரித் தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு மாவட்டத் தொழில் மையம், புதுக்கோட்டைமூலம் தொழில் தொடங்க அனைத்து உதவிகளும் செய்து தரப்படும்.

ஏற்கெனவே, புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட ஆதனக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய இரு இடங்களில் இரண்டு முந்திரித் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

| வ. எண் | பெயர் | முதலீடு | வேலைவாய்ப்பு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் விஜயலட்சுமி முந்திரித் தொழிற்சாலை | ரூ.58,25,540.00 | 670 நபர்கள் |
| 2 | திருவாளர்கள் பிரகாஷ் எக்ஸ்போர்ட்ஸ் | ரூ.83,00,000.00 | 130 நபர்கள் |

11—

## சிறுதொழில் பிரிவுக்கு மானியம் வழங்குதல்

**வினா எண் 36112—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மோட்டார் வாகன துணைப் பாகங்கள் தயாரிப்புப் பணிகளில் ஈடுபடும் சிறு தொழில் பிரிவுக்கு அரசு மானியம் வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 28-6-2002 அன்று வெளியிடப்பட்ட சிறு தொழில் துறை அரசு ஆணை எண் 32-ல் ஆணையிட்டுள்ளவாறு மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு மட்டும் தமிழக அரசால் புதிய மானிய சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்குறிப்பிட்டுள்ள அரசு ஆணையில், மானியங்கள் சம்பந்தமாக முன்பு இருந்த ஆணைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

எனவே, சென்னையில் மோட்டார் வாகன துணைப் பாகங்கள் தயாரிப்புப் பணிகளில் 28-6-2002-க்குப் பிறகு புதிதாக ஈடுபடும் சிறு தொழில் பிரிவு மற்றும் விரிவாக்கம் செய்யப்படும் தொழில்களுக்கு அரசு மானியம் இனிமேல் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.



12—

## சுயதொழில் தொடங்க வங்கிக் கடன்

**வினா எண் 41700—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கீழ்மாத்தூரில் இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மூலம் தொழில் தொடங்க கடன் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் மாவட்டங்களிலுள்ள படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்க இத்துறையின்மூலம் வங்கிக் கடன் பெற உதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2000-2001 முதல் 2003-2004 வரை அரூர், ஊத்தங்கரை வட்டங்களில் கடன் வழங்கப்பட்ட விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

| (ரூபாய் இலட்சங்களில்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வட்டம் | 2000-01 | | 2001-02 | | 2002-03 | | 2003-04 | |
| | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை |
| அரூர் | 31 | 11.43 | 39 | 14.52 | 42 | 12.55 | 6 | 1.50 |
| ஊத்தங்கரை | 26 | 12.16 | 30 | 7.82 | 30 | 9.26 | | |

[2004 நவம்பர் 18

ஆனால் அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கீழ்மாத்தூர் என்ற கிராமத்திலிருந்து சுய தொழில் தொடங்க பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டு முதல் 2003-2004 ஆண்டு வரை எவரும் கடன் பெறவில்லை.

13—

## சிறுதொழில் தொடங்க பயிற்சி

**வினா எண் 46713—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் இளைஞர்கள் சிறு தொழில்கள் தொடங்க பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் இளைஞர்கள் சிறு தொழில் தொடங்க பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் வால்பாறை வட்டத்திலிருந்து மட்டும் 41 நபர்களுக்கு வங்கிக் கடன் ஒப்பளிப்பு பெற்று, அவர்கள் அனைவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களுள் 27 நபர்களுக்கு சுய தொழில் தொடங்க வங்கிக் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதால் பயன்பெறும் இளைஞர்கள் எண்ணிக்கை மேலும் உயரும்.

வால்பாறை வட்டத்தில் பயிற்சி பெற போதிய நபர்கள் இல்லாத காரணத்தால் வால்பாறை, பொள்ளாச்சி, உடுமலை வட்டங்களில் இருந்து தேர்வு பெறும் பயனாளிகளுக்கு உடுமலை சாலையில் உள்ள நாச்சிமுத்து பாலிடெக்னிக்கில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.



2004 நவம்பர் 18]

14—

## மாணவர் விடுதி கட்டுதல்

**வினா எண் 8871—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக விடுதிக் கட்டடம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு துறையிடம் 24-1-2004 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

15—

## கட்டுமானப் பணிகள்

**வினா எண் 16391—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?

(ஆ) அவற்றின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2002-03 ஆம் நிதியாண்டில் 3 விடுதிகள் மற்றும் 2003-04 ஆம் ஆண்டில் 10 விடுதிகள் மற்றும் ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) 4 விடுதிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 8 விடுதிகள் மற்றும் ஒரு பள்ளிக்கான வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மீதியுள்ள ஒரு விடுதிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**16—**

## பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 32011—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி ஒன்றியம், திருத்தலையூரில் அரசினர் ஆதிதிராவிடர் மேனிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி ஒன்றியம், திருத்தலையூர் அரசினர் ஆதிதிராவிடர் நல மேனிலைப் பள்ளிக்கு இரண்டு கூடுதல் வகுப்பறைகள் ரூ.6.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அரசாணை (3-ப) எண் 20, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 18-8-04-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**17—**

## மாணவர் விடுதிக்குச் சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 41289—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிச்செட்டிப்பாளையத்திலுள்ள அரசினர் மாணவியர் விடுதிக்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு 2004-05 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்ட அரசாணை (3-ப) எண் 14, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 6-8-2004-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**18—**

## மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டம்

**வினா எண் 61953—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக மாநில அரசு மத்திய அரசிடமிருந்து மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் (Special central assistance) 9-வது மற்றும் 10-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முதல் 2 ஆண்டுகளிலும் பெறப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மத்திய அரசின் மைய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் (Special central assistance) 9-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் மற்றும் 10-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முதல் 2 ஆண்டுகளிலும் பெறப்பட்ட நிதி மற்றும் செலவு செய்யப்பட்ட தொகை விவரம் கீழ்வருமாறு:

[2004 நவம்பர் 18

| வ. எண் | ஆண்டு | மத்திய அரசிடமிருந்து மத்திய சிறப்பு உதவியாக பெறப்பட்ட தொகை | செலவு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| **9-வது ஐந்தாண்டு திட்டம்** | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | 1997-1998 | 1756.90 | 2393.46 |
| 2 | 1998-1999 | 3236.93 | 2173.16 |
| 3 | 1999-2000 | 4036.92 | 2841.39 |
| 4 | 2000-2001 | 3558.00 | 2656.93 |
| 5 | 2001-2002 | 5020.32 | 4598.24 |
| **10-வது ஐந்தாண்டுத் திட்டம்** | | | |
| 1 | 2002-2003 | 4500.71 | 4182.03 |
| 2 | 2003-2004 | 3800.74 | 5123.08 |

ஓர் ஆண்டில் செலவு செய்யப்படாத மீதித் தொகை அடுத்த ஆண்டில் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் தொகையுடன் சேர்த்து செலவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19—

## போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 32206—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரணாம்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாக கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தற்போது குடியாத்தம் பகுதி அலுவலகப் பகுதியினைச் சார்ந்தது ஆகும். தற்போது குடியாத்தம் பகுதி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அதற்கான இடத்தினைத் தேர்வு செய்ய வேண்டி வருவாய்த் துறையினரிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

20—

## போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 34016—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பிரதான சாலையில் மாரியம்மன் கோவில் அருகிலுள்ள அரசு பெண்கள் பள்ளி மாணவிகள், வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் சாலையைக் கடந்து செல்ல முடியாத நிலையில் விபத்துகள் ஏற்படும் நிலையுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், வாகனப் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தி மாணவிகள் சாலையைக் கடந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) நாமக்கல் பிரதான சாலையில் மாரியம்மன் கோயிலுக்குத் தெற்கே 100 அடி தள்ளி சாலையின் மேற்கே அரசு பெண்கள் பள்ளி அமைந்துள்ளது. பள்ளி மாணவிகள் பாதையைக் கடப்பதற்கு உதவியாகப்

[2004 நவம்பர் 18

போக்குவரத்தை ஒழுங்கு செய்யப் போக்குவரத்துக் காவல் நிலையத்திலிருந்து காலை 8-00 மணி முதல் 10-00 மணி வரையிலும், மாலை 3-00 மணி முதல் 6-00 மணி வரையிலும் ஒரு காவலர் நியமிக்கப்பட்டு, அக்காவலருக்கு உதவியாக ஊர்க்காவல் படையினர் மற்றும் காவல் நண்பர்களையும் நியமித்து விபத்து நடக்காவண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஒரு வருட காலமாக இந்தப் பள்ளியின் முன் உள்ள சாலையில் விபத்துகள் எதுவும் ஏற்படவில்லை.

21—

## போக்குவரத்துக் கழக அலுவலகம்

**வினா எண் 37895—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தெற்கு வட்டாரப் போக்குவரத்துக் கழகத்தின் அலுவலகம் கோவை மாநகராட்சியில் செயல்படுவதை தெற்குப் பகுதியாக உள்ள குறிச்சி பேரூராட்சியில் அமைத்து செயல்பட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது சிட்கோ தொழிற்பேட்டை வளாகத்தில் கோவை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அனைத்து வசதிகளுடன் கூடிய அரசு கட்டடத்தில் இயங்கி வருவதால் இதனை குறிச்சி பேரூராட்சிக்கு மாற்றி அமைக்கத் தேவையில்லை.

22—

## முன்னுரிமை இட ஒதுக்கீடு

**வினா எண் 40679—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

(அ) தனியார் பேருந்துகளில் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை சீட் (V.I.P. seat) ஒதுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இந்தச் செயற்குறிப்பினை தற்போது பரிசீலிக்க வாய்ப்பில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

23—

## ஓட்டுநர் உரிமத்தின் தாள்களின் தரம்

**வினா எண் 44280—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்து அலுவலகங்களில் வழங்கப்படும் ஓட்டுநர் உரிமத்தின் தாள்களின் தரத்தை உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் மென்மெழுகு பூச்சுடன் (Laminated) கூடிய அட்டைகளில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது.

24—

## போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 44615—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. போக்குவரத்துத் துறைக்கு நிலம் மாற்றம் செய்யப்பட்டு, அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்ற பின்னர் சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

25—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 44616—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தாலுகாவில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டி அதற்கான நிலத்தினைத் தேர்வு செய்ய மயிலாடுதுறை வட்டாட்சியரைத் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. அவர் நிலத்தினை இத்துறைக்கு மாற்றம் செய்து கொடுத்த பின்னர் அதற்கான திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடம் பொதுப் பணித் துறையினரிடமிருந்து பெறப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2004 நவம்பர் 18]

26—

## போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 48092—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஈரோட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நஞ்சை ஊத்துக்குளி கிராமம் புல எண் 151/1 மற்றும் 151/2ல் மொத்தம் 10.0 ஹெக்டேர் நிலம் தெரிவு செய்யப்பட்டு போக்குவரத்துத் துறைக்கு நிலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடு செய்ய பெற்றபின் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

## ஓட்டுநர் உரிமம்

**வினா எண் 50724—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் லெமினேட் செய்யப்பட்ட ஓட்டுநர் உரிமம் தயாரிப்பதற்காக எல்காட் நிறுவனத்திற்குக் கடந்த மூன்றாண்டுகளில் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இப்பொருள் தொடர்பாக ஓட்டுநர்களிடமிருந்து அரசு வசூலிக்கும் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) கடந்த மூன்றாண்டுகளில் (2003-2004 முடிய) எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தொகை - ரூ.10,54,22,000/-.*

*(ஆ) ஓட்டுநர்களிடமிருந்து, ஒரு ஓட்டுநருக்கு ரூ.40/- என்ற வீதத்தில் அரசுக் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது.*

28—

## இலவச இஸ்திரிப் பெட்டி வழங்குதல்

**வினா எண் 12568—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, செம்மேடு ஊராட்சியில் வசிக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச இஸ்திரிப் பெட்டி வழங்கிட இயலுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, செம்மேடு ஊராட்சியில் வசிக்கும் தகுதியுடைய சலவைத் தொழிலாளர்களிடமிருந்து துணிதேய்ப்புப் பெட்டி கோரி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.*

29—

## சலவைப் பெட்டிகள்

**வினா எண் 20321—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டுகளில் சலவைத் தொழிலாளர்களுக்கு அரசு சலவைப் பெட்டிகள் வழங்கியுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் பயனடைந்தார்கள்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 6 சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.*

30—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 29388—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் கோபாலசமுத்திரம் பஞ்சாயத்திலுள்ள மீனவர் தெருவிற்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் கோபாலசமுத்திரம் பஞ்சாயத்திலுள்ள மீனவர் தெருவில் உள்ள புல எண் 13/1 குளம் புறம்போக்கு ஆகும். நீர்நிலைப் புறம்போக்கில் பட்டா வழங்குவதை அரசு நிறுத்தி வைத்துள்ளதால் மேற்படி இடத்தில் இனி பட்டா வழங்க இயலாது.*

[2004 நவம்பர் 18

31—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 30415—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஒன்றியம், கல்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் பூம், பூம் மாட்டுக்காரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஒன்றியம், கல்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் பூம், பூம் மாட்டுக்காரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட ஏற்கெனவே நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

32—

## இலவச விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 31875—திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு பிறபடுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் நகரின் அருகில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இடம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க அரசு முன்வருமா?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சத்தியமங்கலம் நகரின் அருகில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நில ஆர்ஜித நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

33—

## சலவை நிலையம் அமைக்க நிதியுதவி

**வினா எண் 34312—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு நடமாடும் சலவை நிலையம் அமைக்க 2002 ஆம் ஆண்டில் எத்தனைப் பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடமாடும் சலவையகம் அமைக்கும் திட்டத்தின்கீழ் மானியம் கோரி தகுதியான மனு ஏதும் பெறப்படாததால், அவ்வாண்டில் நடமாடும் சலவையகம் அமைத்திட யாருக்கும் மானியம் வழங்கப்படவில்லை.

34—

## இலவசக் கல்வித் திட்டம்

**வினா எண் 48407—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஏற்காடு தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

[2004 நவம்பர் 18

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு இலவச கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*(ஆ) இலவச கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 2003-2004-இல் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 684 பேருக்கு ரூ.32,472/- கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் 1,831 பேருக்கு ரூ.84,556/-ம், ஊரகப் பகுதியில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர் 493 பேருக்கு கல்வி ஊக்கத் தொகையாக ரூ.3,53,000/-ம் வழங்கப்பட்டுள்ளது.*

35—

## சலவைப் பெட்டிகள் வழங்குதல்

**வினா எண் 51555—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டதா?*

*(ஆ) ஆம் எனில், எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2002-2003-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் நான்கு நபர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.*



2004 நவம்பர் 18]

36—

## இலவச குடியிருப்பு மனைப் பட்டா

**வினா எண் 52182—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சியில் மனை இல்லாத ஏழை பிற்படுத்தப்பட்ட சுமார் 220 குடும்பங்களுக்கு இலவச குடியிருப்பு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சியில் மனை இல்லாத ஏழை பிற்படுத்தப்பட்ட நபர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.*

37—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 52184—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2004-2005 ஆம் ஆண்டில் சீர்காழி நகரிலுள்ள 5-வது பகுதி மேலமாரியம்மன் கோயில் தெருவில் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டிற்கு சீர்காழி நகரிலுள்ள 5-வது பகுதி மேலமாரியம்மன் கோயில் தெருவில் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.*

**38—**

## கால்நடை மருத்துவமனைக் கட்டடம் செப்பனிடல்

**வினா எண் 43734—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கபிலர்மலை தொகுதி, வேலூரில் சேதமடைந்துள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூரில் உள்ள கால்நடை மருந்தகக் கட்டடம் பழுதடைந்துள்ளதால் 1-11-1994 முதல் கால்நடை உதவி மருத்துவர் குடியிருப்பில் செயல்பட்டு வருகிறது. கட்டடம் மீண்டும் பழுது நீக்கம் செய்யப்பட வேண்டுமா அல்லது புதிய கட்டடம் கட்டப்பட வேண்டுமா என்று பரமத்தி ஊராட்சி ஒன்றிய பொறியாளரிடம் கலந்தாலோசிக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**39—**

## கால்நடை மருத்துவமனை பழுதுபார்த்தல்

**வினா எண் 49380—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2004 நவம்பர் 18]

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனை பழுது பார்க்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி கால்நடை மருந்தகக் கட்டடத்தில் பழுது ஏற்பட்டுள்ளது. அதைப் பழுது நீக்கம் செய்ய ரூ.5.50 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் மேற்படி பழுது நீக்கம் செய்ய தற்போது வாய்ப்பில்லை.*

**40—**

## கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு

**வினா எண் 50645—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

*(ஆ) எழாது.*

**41—**

## கால்நடை மருந்தக ஊர்தி

**வினா எண் 54689—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 நவம்பர் 18

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கீழப்பகுதிக்கு நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோவை மாவட்டம், வால்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் கீழப்பகுதி என்ற கிராமம் இல்லை. வால்பாறையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் கீழ்ப்பாரளை என்ற கிராமம் உள்ளது. இந்த கீழ்ப்பாரளை கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திமூலம் மாதம் இருமுறை மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

42—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 54691—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி மற்றும் சோலையார் அணைக்கு அருகில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், சோலையார் அணையில் ஒரு கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. தற்போது கால்நடை பராமரிப்புத் துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே தரம் உயர்த்தி, கால்நடை மருந்தகங்களாகச் செயல்படுத்திட அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், தற்போது புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க தடை ஆணை உள்ள நிலையிலும் தற்போது புதிய கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வாய்ப்பில்லை.

*(ஆ)* எழாது.



2004 நவம்பர் 18]

43—

## சாலைகள் அமைத்தல்

**வினா எண் 37560—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு வனத் துறையின் மூலம் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்வராயன் மலைப்பகுதியில் 105 குக்கிராமங்கள் உள்ளன. இவற்றில் 75 குக்கிராமங்களுக்கு சாலை வசதி உள்ளது. எஞ்சியுள்ள 30 குக்கிராமங்களில் புதியதாக 78 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்க, சம்பந்தப்பட்ட துறை முன்வரும் பட்சத்தில், மைய அரசின் முன்அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

## மலைப்பாதையை தார்ச் சாலையாக்குதல்

**வினா எண் 53088—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

*(அ)* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புங்கம்பட்டு நாடு மலைவீரப்பன்கோயில் முதல் சிங்கம்பாளையம் வரையிலான 4 கி.மீ. மலைப்பாதையை தார்ச் சாலையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனக்கோட்டம், ஆண்டியப்பனூர் காப்புக்காட்டில் அமைந்துள்ள புங்கம்பட்டு நாடு மலைவீரப்பன்கோயில் - சிங்கம்பாளையம் மலைப்பாதையில் ஆறடி அகலத்திற்கு பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் சென்று வர வழி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தார்ச் சாலையாக மாற்ற வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி, மைய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். உரிய பயன்பாட்டுத் துறையிடமிருந்து கருத்துரு பெறப்பட்டால் மைய அரசின் முன் அனுமதியை பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

## கழிவுநீரை வெளியேற்றுதல்

**வினா எண் 8915—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவை மாநகராட்சியிலுள்ள 54, 56 ஆம் பகுதி வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளிலுள்ள கழிவுநீர் அகற்றப்படாமல் சாலைகள் ஓரமாக தேங்கி சுகாதாரக்கேடு விளைவிப்பதால் கழிவுநீரை வெளியே எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* கோவை, பேரூரில் 1969 ஆம் ஆண்டில் தென்பகுதியில் 725 குடியிருப்புகளும் 1970 ஆம் ஆண்டில் வடபகுதியில் 1,388 குடியிருப்புகளும் குடிசைப் பகுதி மாற்று வாடகைக் குடியிருப்புகளாகக் கட்டப்பட்டு அவற்றை வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றிலிருந்து மின்சார இணைப்பு இல்லாத வீடுகளுக்கு ரூ.10/- மாத வாடகையாகவும், மின்சார இணைப்பு உள்ள வீடுகளுக்கு ரூ.15/- மாத வாடகையாகவும் வசூலிக்கப்படுகிறது.

*(ஆ)* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் இப்பகுதிக்கு நிலத்தடி வடிகால் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நிறைவடையாமல் உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை இத்திட்டத்தினை விரைந்து முடிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்திட்டம் முடிவடைந்தால் மட்டுமே இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்.

46—

## அச்சகப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்

**வினா எண் 48229—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னையில் அரசு அச்சகப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சென்னையில் அரசு அச்சகப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

47—

## புதிய கிராமப்புற நூலகங்கள் தொடங்குதல்

**வினா எண் 37416—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் 2003-2004 ஆம் ஆண்டில் கிராமப்புற நூலகங்கள் புதிதாகத் தொடங்கப்படும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 50, பள்ளிக் கல்வி, நாள்: 11-4-2003-ல், 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் 867 கிராமங்களில் படிப்படியாக ஊர்ப்புற நூலகம் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையின் அடிப்படையில் சேலம் மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட 76 ஊர்ப்புற நூலகங்களில் ஏற்காடு தொகுதியில் கொட்டவாடி கிராமத்தில் 27-11-2003 தேதி முதலும், பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தில் 8-12-2003 தேதி முதலும் மற்றும் காட்டுக்கோட்டை கிராமத்தில் 18-12-2003 தேதி முதலும் ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

48—

## நூலகத்தைப் பள்ளியுடன் இணைத்தல்

**வினா எண் 47371—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலிலுள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நூலகத்தைப் பள்ளியுடன் இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி மாணவர்களிடையே பொது நூலகங்களில் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகிலுள்ள மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்றினைத் தத்தெடுக்க வேண்டும் என்று அரசாணை (2டி) எண் 38, பள்ளிக் கல்வி, நாள்: 11-6-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, சீர்காழி தொகுதியிலுள்ள திருமுல்லைவாசல் அரசினர் மேல்நிலைப் பள்ளி 22-10-2002 முதல் திருமுல்லைவாசல் கிளை நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பள்ளிக்கு 18-5-2004 முதல் இந்நூலகத்திலிருந்து நூல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

49—

## மேல்நிலைப் பள்ளியுடன் நூலகத்தினை இணைத்தல்

**வினா எண் 47375—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆயங்குடி பள்ளத்திலுள்ள வெங்கடேசா உதவிப் பெறும் மேல்நிலைப் பள்ளியுடன் நூலகத்தினை இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி மாணவர்களிடையே பொது நூலகங்களில் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகிலுள்ள மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்றினைத் தத்தெடுக்க வேண்டும் என்று அரசாணை

[2004 நவம்பர் 18

(2டி) எண் 38, பள்ளிக் கல்வி, நாள்: 11-6-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, சீர்காழி தொகுதி, ஆயங்குடி பள்ளத்திலுள்ள வெங்கடேசா உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, திருமயிலாடி கிளை நூலகத்துடன் 15-3-2004 முதல் இணைக்கப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**50—**

**நூல்களைக் கணினிமயமாக்குதல்**

**வினா எண் 49094—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஆவணக் காப்பக நூல்களைக் கணினி மயமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்கள் அகர வரிசை அட்டை பராமரிப்புமூலம் பராமரிக்கப்படுகிறது. இவ்வரிய நூல்களைக் கணினிமயமாக்க 2004-2005 நிதியாண்டிற்கு ரூ. 6,65,200/-க்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

**51—**

**அடையாள அட்டை**

**வினா எண் 50525—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 323 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 142 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அடையாள அட்டை வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருவதால், கலைஞர்களிடமிருந்து விண்ணப்பம் பெறும் நிலையில் ஆய்வு செய்து வழங்கப்படும்.

**52—**

**அகதிகளின் இல்லங்கள் பழுதுபார்த்தல்**

**வினா எண் 51614—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கரடிகுளம் இலங்கை அகதிகளின் இல்லங்களைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி வட்டம், கரடிகுளம் கிராமத்தில் இலங்கை அகதிகள் முகாம் இல்லை. கரடிகுளம் கிராமத்தில், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்காக 1972-73 ஆம் ஆண்டில் கடனுதவி வழங்கப்பட்டு 217 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

[2004 நவம்பர் 18

(ஆ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள 217 வீடுகளில் 157 வீடுகள் நல்ல நிலையில் உள்ளன. மீதி 60 வீடுகள் பழுதுபார்க்க வேண்டிய நிலையில் உள்ளன. மேலும் இவ்வீடு பெற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்ட நிலையில், பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்க அரசு நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

**53—**

## கறவை மாடு வாங்க கடன்

**வினா எண் 53976—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் 50 பேர்களுக்கு கறவை மாடு வாங்க வங்கி மூலம் சிறுகடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் சிபிடி 366. கெங்கம்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஈடி 1233. பெத்தநாயக்கனூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என இரண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. சிபிடி 366. கெங்கம்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 50 பேர்களுக்கும், ஈடி 1233. பெத்தநாயக்கனூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 30 பேர்களுக்கும் கறவை மாடு வாங்குவதற்கு சிறு கடன் வழங்க கனரா வங்கி, சோமாந்துறை (என்ற சித்தூர்) கிளைக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**54—**

## கூட்டுறவு நூற்பாலைகள்

**வினா எண் 35863—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

அரசால் நடத்தப்படும் கூட்டுறவு நூற்பாலைகளில் எத்தனை ஆலைகள் முழு அளவில் இயங்குகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின்கீழ் 1958 முதல் 1985 வரையிலான இடைப்பட்ட காலத்தில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறைந்த விலையில், தரமான நூல்களை விநியோகிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட 18 கூட்டுறவு நூற்பாலைகளில் தற்போது 13 கூட்டுறவு நூற்பாலைகள் செயலிழந்துள்ளன. மீதமுள்ள 5 கூட்டுறவு நூற்பாலைகளும் போதிய நிதி வசதி இல்லாததால் நட்டத்தில் இயங்கி வருகின்றன. 31-5-2004 ஆம் தேதியில் இந்த 5 கூட்டுறவு நூற்பாலைகளின் குவிந்த நட்டம் தோராயமாக ரூ.9412.35 இலட்சம் ஆகும். இவ்வாலைகளைத் தொடர்ந்து இயக்கவும் தேவையான நிதியுதவி பெறவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**55—**

## தொழிற்பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள்

**வினா எண் 24419—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் தொழிற் பயிற்சி மையங்களில் நிரப்பப்படாத தொழிற் பயிற்சி ஆசிரிய பயிற்றுநர்கள் பணியிடங்களை நிரப்பிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் காலியாகவுள்ள 184 இளநிலை பயிற்சி அலுவலர் மற்றும் 86 பணிமனை உதவியாளர் பதவிகளை மாதமொன்றிற்கு முறையே ரூ. 3,000/- மற்றும் ரூ. 2,000/-

தொகுப்பூதியத்தில், தற்போதுள்ள நியமன விதிகளின்படி, வேலைவாய்ப்பகங்கள் மூலம் நேரடி நியமனத்தில் நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது.

56—

## உலமா ஓய்வூதியம்

**வினா எண் 56935—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் முஸ்லிம் உலமா ஓய்வூதியம் பெற வக்ஃப் வாரியத்தில் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் வரை எத்தனை பேர் விண்ணப்பித்தனர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருடைய விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அரசு ஓய்வூதியம் வழங்கியது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை உலமா ஓய்வூதியம் கோரி ஒருவர் மட்டும் விண்ணப்பித்துள்ளார்.

(ஆ) விண்ணப்பித்த ஒரு நபருக்கு 30-6-2004 ஆம் நாளிட்ட உலமா ஓய்வூதிய ஆணை எண் 29-ன்படி உலமா ஓய்வூதியம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

57—

## விடு கட்டுவதற்கு அனுமதி வழங்குதல்

**வினா எண் 6958—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்க காலதாமதம் ஆவது அரசுக்குத் தெரியுமா?





(ஆ) ஆம் எனில், விண்ணப்பம் பெற்ற எத்தனை நாட்களில் அனுமதி வழங்கப்படும்?

(இ) காலதாமதத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) புதுக்கோட்டை நகராட்சியில் கட்டட விண்ணப்பங்கள் பெறப்பட்டு 30 தினங்களுக்குள் உள்ளூர் திட்டக் குழு ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதில் காலதாமதம் ஏற்படுவது இல்லை.

58—

## மின்சார எரிப்பு சாதனம்

**வினா எண் 14886—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஒசூர் நகரத்திற்குள்ளேயே சுடுகாடு இருப்பதால், இங்கு மின்சார எரிப்புச் சாதனம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஒசூர் நகராட்சி எல்லைக்குள் உள்ள இடுகாட்டில் மின்சார எரிப்புச் சாதனம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

[2004 நவம்பர் 18

59—

## குடிநீர்க் குழாய்களை ஆழத்தில் புதைத்தல்

**வினா எண் 19146—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 6-வது வட்டம், ஆவூர் முத்தையா தெருவில் அமைக்கப்பட்டுள்ள குழாய்களில் குடிநீர் சரிவர வருவதில்லை என்பதால் குழாய்களை சரியான ஆழத்தில் புதைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி, 6-வது வட்டம், ஆவூர் முத்தையா தெருவில் அமைக்கப்பட்டுள்ள குழாய்கள் சரிவர புதைக்கப்பட்டுள்ளன. இத்தெரு மக்கள் குழாய்களின் மூலம் குடிநீர் பெற்று வந்தனர். எனவே, இதனை ஆழப்படுத்தத் தேவையில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

60—

## ஆள்நுழைவாயில்கள்

**வினா எண் 19149—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 6-வது வட்டம், ஆவூர் முத்தையா மேஸ்திரி தெருவில் உள்ள 8-வது ஆள்நுழைவாயில்களின் மூடிகள் உடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் இதனைச் சரிசெய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர். கே. நகர் தொகுதி, 6-வது வட்டம், ஆவூர் முத்தையா மேஸ்திரி தெருவில் உள்ள 8-வது ஆள்நுழைவாயில்களின் உடைந்த மூடிகள் மாற்றியமைக்கப்பட்டுவிட்டன.

61—

## கழிவுநீர் இணைப்பு வழங்கல்

**வினா எண் 19497—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 11-வது வட்டத்தில் உள்ள பாரதி நகரில் உள்ள மிகவும் ஏழ்மையானவர்களுக்கு இலவசமாக கழிவுநீர் இணைப்பைத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை ஆர்.கே. நகர் தொகுதி, 11-வது வட்டத்திலுள்ள பாரதி நகரில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் சலுகைக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.100/-ஐச் செலுத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தில் கழிவுநீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

62—

## சாலை விஸ்தரிப்புப் பணி

**வினா எண் 21114—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலி பேரூராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகரில் சாலை விஸ்தரிப்புப் பணி தொடரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மணலி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் விரிவாக்கப் பகுதி, ஜே.ஜே. நகர் பகுதியில் 360 மீட்டர் நீளத்தில் தார்ச் சாலைப் பணி ரூ.3.35 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். நகர் பகுதியை ஒட்டியுள்ள பலராமன் தெரு 460 மீட்டர் நீளத்தில் தார்ச் சாலைப் பணி ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் 2003-2004 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

63—

## சாலையை மேம்படுத்துதல்

**வினா எண் 23515—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, காந்திபுரம் சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்திபுரம் பகுதி குடிசைப் பகுதியாக உள்ளது. தற்பொழுது அப்பகுதிக்கு எந்தவிதமான அணுகு சாலை வசதியும் இல்லை. தற்போது குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நடைபாதை அமைக்க ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 2004-2005





மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை வசதி செய்து தரக் கோரி திட்ட இயக்குநர், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், உதகமண்டலம் அவர்களுக்குப் பிரேரணை அனுப்பப்பட்டு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் புதிய அணுகுச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

64—

## தேங்கிய நீரை அகற்றுதல்

**வினா எண் 25069—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகப் புதிய கட்டடத்திற்கு அருகில் நீர் தேங்கி சுகாதாரமற்ற நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகப் புதிய கட்டடத்திற்கு அருகில் நீர் தேங்கி இருந்தது. எடப்பாடி நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலம் சீர் செய்யப்பட்டுவிட்டது.

65—

## குப்பைகளை அகற்றுதல்

**வினா எண் 25727—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

சேலம் 1-வது தொகுதி, சேலம் மாநகராட்சி, மண்டலம் 3, வார்டு 36-ஐ சோதனைத் திட்டமாக கழிவுப் பொருட்கள் தரம் பிரித்து அறிவியல் பூர்வமாக அகற்ற நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளில் கண்டுள்ளபடி குப்பைகளைப் பிரித்து அகற்றும் பணி படிப்படியாக வார்டுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி வீடு வீடாகச் சென்று மக்கும் தன்மையுடைய மற்றும் மக்காத தன்மையுடைய கழிவுகளைப் பிரித்து பொதுமக்களிடம் வாங்கும் பணிக்காக தள்ளுவண்டிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கோட்டம் 36-ல் குப்பைகளைத் தரம் பிரித்து அகற்றும் பணியை மேற்கொள்ள இயலும்.

66—

## குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா எண் 26577—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் காமராஜ் சாலையில் குடிநீர்க் குழாய் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி நகரில் காமராஜ் சாலையில் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது.



2004 நவம்பர் 18]

67—

## மழைநீர் வெள்ளப் பாதிப்பினைத் தடுத்தல்

**வினா எண் 33074—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி பூங்கா நகரில் வீடுகளுக்குள் மழை நீர் புகுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சந்திரமதி கால்வாய் கதவுகளைத் திறந்து வைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிப் பூங்கா நகர்ப் பகுதியில் உள்ள சந்திரமதி வாய்க்கால் கடந்த ஆண்டு தூர் வாரப்பட்டு, தேவையான நேரங்களில் நீரைத் திருப்பிவிடும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, வருவாய்த் துறை மூலமும், நகராட்சி மூலமும் வெள்ளப் பாதிப்பு ஏற்படாவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

68—

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 33950—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, 64-வது வட்டம் காந்தி பிரதானச் சாலையில் மிக அண்மையில் போடப்பட்டுள்ள தார்ச் சாலையில் மண்ணும், கற்களும் போட்டு நிரப்பி வைத்துள்ளதால் நியாய விலைக் கடையில் பொருட்கள் வாங்க வருபவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் தொகுதி, மண்டலம்-5, வார்டு 64-ல் உள்ள காந்தி பிரதானச் சாலையில் கட்டட உரிமையாளர்களால் சாலையில் கொட்டப்பட்டுள்ள கட்டட இடிமானங்கள் மற்றும் செங்கல், ஜல்லி போன்றவை அகற்றப்பட்டு, காந்தி பிரதானச் சாலை தற்போது சுத்தமாக உள்ளது.

69—

## கூடுதலாகக் குடிநீர் குழாய்களை அமைத்தல்

**வினா எண் 34183—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை தொகுதி, உடுமலைப்பேட்டை வேலன் நகரில் இரண்டு குடிநீர்க் குழாய்களைக் கூடுதலாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வேலன் நகரில் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வறுமை நிலையில் உள்ள மக்கள் எவரும் அப்பகுதியில் வசிக்கவில்லை என்பதால் பொதுக் குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் அவசியம் எழவில்லை.

70—

## வாய்க்கால்களில் சிமெண்ட் தடுப்புச் சுவர்

**வினா எண் 34359—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், அம்பேத்கர் வாய்க்காலில் அம்பேத்கர் நகர் மக்கள் வாழும் பகுதியின் வழியாகச் செல்லும் வாய்க்காலில் சிமெண்ட் தடுப்புச்சுவர் இருபக்கங்களிலும் அமைத்துக் கழிவு நீர் வெளியேற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், அம்பேத்கர் நகர் மக்கள் வாழும் பகுதியின் வழியாகச் செல்லும் வாய்க்காலில் சிமெண்ட் தடுப்புச் சுவர் இருபக்கங்களிலும் அமைக்கப்பட்டுவிட்டது.

71—

## பகுப்பாய்வுக் கூடத்துடன்கூடிய மருத்துவமனை

**வினா எண் 34371—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் பகுப்பாய்வுக் கூடத்துடன் கூடிய மருத்துவமனைகள் எத்தனை?

(ஆ) அத்தகைய மருத்துவமனையை மண்டலம்-1-ல் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகராட்சியில் பகுப்பாய்வுக் கூடத்துடன் கூடிய மருத்துவமனைகள் ஏதும் இல்லை. பொதுமக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் நோய் கண்டறிய பகுப்பாய்வுக் கூடங்கள் மட்டுமே அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

[2004 நவம்பர் 18

(ஆ) அத்தகைய மருத்துவமனை மண்டலம் I-ல் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

72—

## தானியங்கி ஏணி

**வினா எண் 34748—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் தெரு விளக்குகளைப் பழுது பார்க்க தானியங்கி ஏணி (Hydraulic Ladder) வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சியில் உள்ள தெரு விளக்குகளைப் பராமரிக்க, புதிதாக 5 எண்ணிக்கை ஹைட்ராலிக் ஏணி வண்டிகள் தருவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு வண்டியை மண்டலம் 1 மற்றும் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள தெரு விளக்குகளைப் பழுதுபார்க்க ஒதுக்கீடு செய்யப்படும்.

73—

## சாலை, குடிநீர் மற்றும் மின்விளக்கு வசதி

**வினா எண் 40387—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, மணலி, மாத்தூர், வண்ணமாத்தூர் பகுதியில் சி.எம்.டி.ஏ. மூலம் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்குச் சாலைகள், பாதாளச் சாக்கடை, குடிநீர், மின்விளக்குகள் இன்றி பாதிக்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மணலி பேரூராட்சி பகுதியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (சி.எம்.டி.ஏ.) மூலம் குடியிருப்புக் கட்டடங்கள் ஏதும் கட்டப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

74—

## குளம் தூர் வாருதல்

**வினா எண் 40585—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்திலுள்ள 8-வது வார்டில் உள்ள முதலியார் குளத்தைத் தூர் வாரிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்திலுள்ள 8-வது வார்டில் உள்ள முதலியார் குளம் தனியாருக்குச் சொந்தமானது. மழை நீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ் மேற்படி குளத்தைத் தூர் வார குளத்தின் உரிமையாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

75—

## பள்ளத்தைத் தூர் வாரிச் சீரமைத்தல்

**வினா எண் 41874—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

உடுமலை நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் சாலையிலிருந்து திருப்பூர் சாலை சென்றடையும் கழுத்தறுத்தான் பள்ளத்தைத் தூர் வார அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் சாலையிலிருந்து திருப்பூர் சாலை சென்றடையும் கழுத்தறுத்தான் பள்ளம் தற்போது நகராட்சியின் மூலம் சுமார் 7 கி.மீ. நீளத்திற்குத் தூர் வாரப்பட்டு மழை நீர் தேங்காமல் சென்று கொண்டு உள்ளது.

76—

## கொசு மற்றும் பூச்சித் தொல்லையைத் தடுத்தல்

**வினா எண் 41892—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகரத்தில் அதிகமான கொசு மற்றும் பூச்சித் தொல்லையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு நகராட்சியில் பழுதாகியிருந்த இரண்டு கொசு மருந்து தெளிப்பான்கள் தற்போது பழுது பார்க்கப்பட்டு கொசு மருந்து அடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

77—

## உயர் கோபுர விளக்குகள்

**வினா எண் 43120—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

புதுக்கோட்டை நகரில் முக்கிய சாலைச் சந்திப்புகளில் உயர் கோபுர விளக்குகள் பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதியில் 3,318 குழல் விளக்குகளும், 533 சோடியம் ஆவி விளக்குகளும், 14 மெர்க்குரி விளக்குகளும், ஒரு உயர் கோபுர விளக்கும் உள்ளன. இவையே போதுமானதாக உள்ளன. மேற்கண்ட விளக்குகள்மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.5,00,000/- வரை மின் கட்டணமாக புதுக்கோட்டை நகராட்சியில் செலுத்தப்பட்டு வருவதால் முக்கிய சாலைச் சந்திப்புகளில் உயர் கோபுர விளக்குகள் பொருத்தும் திட்டம் ஏதும் இல்லை.

78—

## நூலகக் கட்டடத்திற்கு மேற்கூரை

**வினா எண் 43170—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் காந்தி பூங்காவிலுள்ள கிளை நூலகக் கட்டடத்திற்கு மேற்கூரை அமைத்துச் செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2003-2004 ஆம் ஆண்டு வருவாய் நிதியின்கீழ் காந்தி பூங்கா கிளை நூலக மராமத்துப் பணி ரூ.0.50 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2004 நவம்பர் 18

79—

## குடிநீர்க் குழாய்களை அமைத்தல்

**வினா எண் 43178—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி நகரில் இலுப்பைத்தோப்பில் மேலும் ஒரு குடிநீர்க் குழாய் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரில் இலுப்பைத்தோப்பில் பகிர்மானக் குழாய்கள் அமைத்து, இரண்டு பொதுக் குழாய்கள் மூலம் இரண்டு இந்தியா மார்க்-II கைப்பம்புகள் அமைத்து குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

80—

## கூடுதலாகக் குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா எண் 43187—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்திலுள்ள தண்டுப்பாளையத்தில் கூடுதலாக ஒரு குடிநீர்க் குழாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரத்திலுள்ள தண்டுப்பாளையம் பகுதியில் சுமார் 30 குடும்பங்கள் உள்ளன. அப்பகுதியில் ஒரு பொதுக் குழாயும், இரண்டு இந்தியா மார்க்-II கைப்பம்பும் அமைக்கப்பட்டு குடிநீர் தினசரி இருவேளைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.*



2004 நவம்பர் 18]

81—

## கழிவுநீர்ச் செல்ல வசதி செய்தல்

**வினா எண் 43624—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலுள்ள வாலாஜா வாய்க்கால் குப்பை, கூளங்களால் நிரம்பியுள்ளதால் கழிவுநீர் தடையின்றி செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் உள்ள வாலாஜா கால்வாயில் உள்ள குப்பைக் கூளங்களை அவ்வப்போது மாஸ் கிளீனிங்மூலம் துப்புரவுப் பணியாட்களைக் கொண்டு தூய்மைப்படுத்தி கழிவுநீர் தடையின்றிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

82—

## சாலைகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 43641—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் 21-வது பகுதியில் உள்ள அனைத்து சாலைகளையும் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் 21-வது வார்டில் உள்ள அனைத்துச் சாலைகளும் திட்டப் பணிகளாக, 11-வது நிதிக் குழு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதி [M.P. (LAD) Fund], சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, [M.L.A., (CAD) Fund] மற்றும் பொது நிதியில், சி.சி. சாலை / தார்ச் சாலை அமைக்கப்பட்டுவிட்டது.*

83—

**திண்காரைச் சாலையை முழுமையாக முடித்தல்**

**வினா எண் 43642—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலுள்ள 7-வது வீதி, ஜவஹர் வீதியில் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ள திண்காரைச் சாலையை முழுமையாக முடித்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பாதியில் நிறுத்தப்பட்டுள்ள திண்காரைச் சாலை 2003-2004 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தளச் சாலையாக அமைக்கப்பட்டுவிட்டது.*

84—

**கோயில் வீதியில் சாலை வசதி**

**வினா எண் 43643—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் விழமங்கலம், திரௌபதியம்மன் கோயில் வீதியில் சாலை வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் பதினோறாவது நிதிக் குழு பரிந்துரை திட்டத்தில், 2002-2003 ஆம் ஆண்டு நிதியின்கீழ் ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில், விழமங்கலம், திரௌபதியம்மன் கோயில் தெருவிற்குத் தார்தளச் சாலை அமைக்கப்பட்டுவிட்டது.*

85—

**பழுதடைந்த சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 45944—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, தம்மபதி சாலை மிகவும் பழுது அடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுபார்க்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, தம்மபதி சாலையானது சுமார் 6.00 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலையாகும். இச்சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு உத்தேசமாக ரூ.30.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.*

[2004 நவம்பர் 18

86—

### மண் சாலையைத் தார்ச் சாலையாக்குதல்

**வினா எண் 46307—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட தல்லபதி ஆத்தா கோயிலுக்குச் செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட தல்லபதி ஆத்தா கோயிலுக்குச் செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.*

87—

### கழிப்பிட வசதி செய்தல்

**வினா எண் 46606—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, கோட்டூர் சாலையில் கழிப்பிட வசதி செய்து தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, கோட்டூர் சாலையில் கீழ்க்காணும் மூன்று*



2004 நவம்பர் 18]

*இடங்களில் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன:*

*(1) காவல் நிலையம் அருகில்*

*(2) மயானப் பாதை அருகில்*

*(3) பேரூராட்சி அலுவலகம் பின்புறம்*

88—

### பழுதடைந்த சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 47607—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடையிலுள்ள காளியம்மன் கோயில் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடையிலுள்ள காளியம்மன் கோயில் வீதி சுமார் 3.00 கி.மீ. நீளம் உள்ள கப்பிச் சாலையாகும். இதனைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு உத்தேசமாக ரூ.16.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.*

89—

### பழுதடைந்த சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 47610—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 நவம்பர் 18

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, மீனாட்சிபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, மீனாட்சிபுரம் சாலை 0.800 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலையாகும். இச்சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு ரூ.6.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**90—**

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 48839—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, ஆதிதிராவிடர் காலனி, மீனாட்சிபுரம் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, ஆதிதிராவிடர் காலனி, மீனாட்சிபுரம் சாலை சுமார் 800 மீட்டராகும். இச்சாலையை தார்ச் சாலையாக மாற்றுவதற்கு



2004 நவம்பர் 18]

ரூ.6.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**91—**

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 48840—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, ஆத்துப்புறம் புதிய ஆதிதிராவிடர் காலனி சாலை சீரமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, ஆத்துப்புறம் புதிய ஆதிதிராவிடர் காலனி சாலைப் பகுதி ஆற்றோரமாக இருப்பதால் சாலை அமைப்பதற்கான இடவசதி இல்லை.

**92—**

## சாலைகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 48843—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சரளைப்பதி ரோடு, அன்னப்பெருக்கி அம்மன் குழாய் காலனிச் சாலைகள் பழுது அடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சரளைப்பதி ரோடு, அன்னப்பெருக்கி அம்மன் கோவில் காலனிச் சாலைகள் சுமார் 6 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலைகளாகும். இதனைத் தார்ச் சாலையாக அபிவிருத்தி செய்ய ரூ.30.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.*

*(ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி, மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி உதவி கிடைக்கப் பெற்றால் இப்பணியைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**93—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 49643—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, முத்துமுடி பகுதிக்குத் தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, முத்துமுடி தோட்ட நிறுவனப் பகுதியில் 22 நான்கு அடி குழல் விளக்குகளும், சோடியம் ஆவி விளக்கு ஒன்றும் அமைக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*



2004 நவம்பர் 18]

**94—**

## கழிப்பிட வசதி செய்தல்

**வினா எண் 49645—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாவட்டம், வால்பாறை, முடிஸ் பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை பேரூராட்சியில் முடிஸ் பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் கட்டுவதற்கான இடவசதி இல்லாததால் கழிப்பிடம் கட்ட இயலாது.*

*(ஆ) வினா எழவில்லை.*

**95—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 49722—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாவட்டம், வால்பாறை, வாட்டர்பால்ஸ் குடியிருப்புப் பகுதி மற்றும் பேருந்து நிற்கும் இடத்திலும் தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை, வாட்டர்பால்ஸ் குடியிருப்புப் பகுதி மற்றும் பேருந்து நிற்கும் இடத்திலும் 38 தெரு*

[2004 நவம்பர் 18

விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

96—

### சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 50806—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் பழுதடைந்துள்ள அமுக்கு சாமியார் கோயில் சாலை சீரமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, அமுக்கு சாமியார் கோயில் சாலை 0.600 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலையாகும். இச்சாலையை அபிவிருத்திச் செய்ய ரூ.3.50 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

97—

### சோடியம் மின்விளக்கு வசதி

**வினா எண் 50808—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பிரதானச் சாலைக்கு சோடியம் மின்விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*



2004 நவம்பர் 18]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) வினாவில் குறிப்பிட்டுள்ள வால்பாறை பிரதானச் சாலை சுமார் 1 கி.மீ. தூரமே உள்ளது. இதில் 40 மின் கம்பங்கள் உள்ளன. இவற்றில் சோடியம் ஆவி விளக்கு 33-ம், 4 அடி குழல் விளக்குகள் 10-ம் பொருத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன.*

*(ஆ) வினா எழவில்லை.*

98—

### உடற்பயிற்சி மையத்திற்குக் கட்டட வசதி

**வினா எண் 55897—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி, சாமி சன்னதித் தெரு, நேரு பூங்காவில் செயல்பட்டுவரும் இளைஞர் உடற்பயிற்சி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி, சாமி சன்னதித் தெரு, நேரு பூங்காவில் செயல்பட்டு வரும் இளைஞர் உடற்பயிற்சி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

[2004 நவம்பர் 18

99—

## உடற்பயிற்சி மையம்

**வினா எண் 56569—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடற்பயிற்சி மையங்களில் மதுபானங்கள், புகை, சிகரெட் போன்றவற்றைக் கொண்டுவரத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) உடற்பயிற்சி மையங்களில் மதுபானங்கள், புகை, சிகரெட் போன்றவற்றைக் கொண்டுவரவோ, உபயோகிக்கவோ தடை ஏற்கெனவே உள்ளது.*

*(ஆ) நிலை எழவில்லை.*

100—

## விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்

**வினா எண் 56572—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஆண்டுக்கு ஒருமுறை (ஆண்டுதோறும்) மாவட்ட அளவில் உடல் ஊனமுற்றோர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

ஆண்டுக்கொரு முறை மாவட்ட அளவில் உடல் ஊனமுற்றோர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.



2004 நவம்பர் 18]

# ஐந்தாம் பட்டியல்

1—

## மலிவு விலையில் அரிசி

**வினா எண் 33475—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள நியாய விலைக் கடைகளில் எவ்வளவு குடும்ப அட்டைதாரர்களுக்கு அரசு மலிவு விலையில் அரிசி வழங்கி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ரூ. 3.50 வீதம் அரிசி வழங்கப்படுகிறது. மேலும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கும் குடும்பங்களில் மிகவும் ஏழ்மைப்பட்ட குடும்பங்களுக்கு மாதந்தோறும் கிலோ ரூ. 3.00 என்ற விலையில் 35 கிலோ அரிசி வழங்கும் மத்திய அரசின் திட்டம் "அந்தியோதயா அன்னயோஜனா" என்ற திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்ட குடும்பங்களின் குடும்ப அட்டைகளில் "அந்தியோதயா அன்னயோஜனா" என முத்திரையிடப்பட்டு, பயனாளி குடும்பம் ஒன்றுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள நியாய விலைக் கடைகளில் 2602 குடும்ப அட்டைதாரர்களுக்கு மலிவு விலை அரிசி வழங்கப்படுகிறது.

2—

## கூட்டுறவுச் சங்க நுகர் கடன்

**வினா எண் 37323—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

(அ) ஏ.டி.சி. பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நுகர்கடன் 1996-2001 வரை எவ்வளவு நபர்களுக்கு, எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(ஆ) நுகர்கடன் வழங்கி தொகை வசூல் செய்யப்படுகிறதா? ஆம் எனில், எவ்வளவு வசூல் செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏ.டி.சி. பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய கடன் சங்கம் 1996 முதல் 2001 வரை 1501 நபர்களுக்கு நுகர்கடனாக ரூ.2,20,54,900/- வழங்கப்பட்டது. கடனாக வழங்கப்பட்ட தொகை சங்க உறுப்பினர்களது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு முறையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதில் தவணை தவறிய மற்றும் வராக்கடன் ஏதுமில்லை. 30-6-2004-ல் 291 உறுப்பினர்களிடமிருந்து ரூ.13,18,442/- மட்டுமே நிலுவை உள்ளது.

3—

## புதிய குடும்ப அட்டை

**வினா எண் 46982—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியிலுள்ள கொட்டாய்மேடு மீனவர் கிராமத்தில் சுமார் 39 குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியிலுள்ள கொட்டாய்மேடு மீனவர் கிராமத்திலுள்ள 39 குடும்பங்கட்கும் புதிய குடும்ப அட்டைக்காக விண்ணப்பங்கள் அங்கன்வாடி மையத்தின்மூலம் பெறப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சென்னை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அவர்களுக்கு புதிய குடும்ப அட்டை அச்சிட்டு வழங்க பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டு வரப்பெற்றதும், மேற்கண்ட 39 குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

4—

## கடன் வழங்குதல்

**வினா எண் 47079—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள கூட்டுறவு வங்கியில் முறையாக நிரந்தர பிணையம் மற்றும் சொத்து பிணையம் கொடுத்தால்கூட கடன் வழங்குவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை கூட்டுறவு நகர வங்கிமூலம் உறுப்பினர்களுக்கு நிரந்தர பிணையம் மற்றும் சொத்துப் பிணையம்மூலம் மூப்பின் அடிப்படையில் உரிய தகுதியுடைய உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2004 நவம்பர் 18

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் கடன்கள் வழங்கப்பட்ட விவரம்:—

**நிரந்தரப் பிணையம்மூலம் வழங்கப்பட்ட கடன்கள் விவரம்**

| ஆண்டு | நபர்கள் | வழங்கிய கடன் |
|---|---|---|
| 2001-2002 | 849 | ரூ.49.30 இலட்சம் |
| 2002-2003 | 321 | ரூ.18.62 இலட்சம் |
| 2003-2004 | 854 | ரூ.48.33 இலட்சம் |

**சொத்து பிணையம்மூலம் வழங்கப்பட்ட கடன்கள் விவரம்**

| ஆண்டு | நபர்கள் | வழங்கிய கடன் |
|---|---|---|
| 2001-2002 | 114 | ரூ.124.85 இலட்சம் |
| 2002-2003 | 134 | ரூ.183.50 இலட்சம் |
| 2003-2004 | 111 | ரூ.159.24 இலட்சம் |

5—

## கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 10481—டாக்டர். சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வசிப்பவர்கள் மீது அரசு நடவடிக்கை ஏடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் மனைகளை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு அனுபவித்து வருபவர்களை வெளியேற்ற சிவில் நீதிமன்றங்களில் வழக்கு



2004 நவம்பர் 18]

தொடர்ந்தும், சரக இணை ஆணையர் முன்பு இந்து சமய மற்றும் அறநிலையச் சட்டப் பிரிவு 78, 79-ன்கீழ் வழக்கு தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1-4-2004 அன்றுள்ளபடி, 1091.52 ஏக்கர் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ள 1336 ஆக்கிரமிப்பாளர்கள்மீதும், 66.52 ஏக்கர் மனைகளை ஆக்கிரமித்துள்ள 1423 ஆக்கிரமிப்பாளர்கள்மீதும் சிவில் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும், 1782.50 ஏக்கர் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ள 2,829 ஆக்கிரமிப்பாளர்கள்மீதும், 143.76 ஏக்கர் மனைகளை ஆக்கிரமித்துள்ள 1,780 ஆக்கிரமிப்பாளர்கள் மீதும் இந்து சமய மற்றும் அறநிலைய சட்டப் பிரிவு 78, 79-ன்கீழ் சரக இணை ஆணையர்கள் முன்பு வழக்குகள் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சட்டரீதியான முறையில் ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6—

## சென்றாய சுவாமி கோயில்

**வினா எண் 20541—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட பச்சூரில் தனியார் வசமுள்ள சென்றாய சுவாமி கோயில் பொது மக்களுக்கும், அரசுக்கும் பயன்படும்படி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட பச்சூரில் உள்ள அருள்மிகு சென்றாய சுவாமி திருக்கோயில், இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் ஆகும். பொது மக்கள் யாவரும் தடையின்றி வழிபடும் திருக்கோயில். இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் சட்ட விதிகளுக்குட்பட்டு துறையின் ஆணைக்கேற்ப பரம்பரை அறங்காவலர்களால் இத்திருக்கோயில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

7—

## குளக்கரை சீரமைத்தல்

**வினா எண் 31917—திரு. ராதாரவி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மேற்கு மாம்பலம் (வார்டு 133) ஏரிக்கரை குளத்தின் கரைகள் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீரமைக்கும் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, மேற்கு மாம்பலம், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் குளத்தின் மதிற்சுவர் பெருமழையின் காரணமாக இடிந்து விழுந்து விட்டது. இம்மதிற்சுவரை திரும்பக் கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ரூ.5,25,300/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிக்கான நிதியாதாரம் அரசு நிதியாக (பொது நலநிதி) அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், நிதியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிதி விடுவிக்கப்பட்டவுடன் டெண்டர் அங்கீகாரம் செய்து பணிகள் துவங்கப்படவுள்ளன.

8—

## உதவி ஆணையர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 37683—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்து எத்தனை உதவி ஆணையர் பணியிடங்கள் இந்து அறநிலையத் துறையில் நிரப்பப்பட்டன?



(ஆ) இன்னும் உள்ள காலியிடங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டுக்கு 8 உதவி ஆணையர் பணியிடங்களை நிரப்புவதற்கு காலியிட மதிப்பீடு நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இக்காலியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக் குழுவுடன் (Departmental Promotion Committee) கலந்து நிரப்பப்பட உள்ளது.

9—

## கோயில் வருமானம்

**வினா எண் 38592—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரம், செட்டு மாரியம்மன் கோயிலின் வருமானத்தைப் பெருக்க கடைகள் கட்டி வாடகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகரம், அருள்மிகு செட்டு மாரியம்மன் திருக்கோயிலுக்குப் புதிதாக கடைகள் கட்ட வேறு இடங்களில் திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி மனைகள் எதுவும் இல்லை. மேலும், கோயிலின் முன்புறம் ஏற்கெனவே 13 கட்டடங்கள் இருப்பதாலும், தினசரி சந்தை நடைபெற்று வருவதாலும், திருப்பணி வேலைகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், திருக்கோயில் நிதியிலிருந்து கடைகள் கட்ட இயலாத நிலை உள்ளது.

10—

### கோயிலுக்குத் தரை தளம் அமைத்தல்

**வினா எண் 41602—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் மாரியம்மன் கோயிலுக்குத் தரைதளம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர் அருள்மிகு மாரியம்மன் கோயிலைச் சுற்றி சேவார்த்திகள் வலம் வர ஏற்கெனவே தரைதளம் உள்ளதாலும், குண்டத்தைச் சுற்றி தரைதளம் அமைப்பது நடைமுறையில் இல்லாததாலும், மேற்படி ஆலயத்திற்கு தற்போதைக்கு தரைதளம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

11—

### கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 55952—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், தில்லைநத்தம் கீழத்தெருவில் உள்ள புதிதாக கட்டப்படவுள்ள செல்லியம்மன் கோயிலுக்கு நிதியுதவி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், தில்லைநத்தம் கீழத்தெருவில் உள்ள அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் 100 ஆண்டுகளாக இருந்து வருவதாகவும், மேற்படி திருக்கோயில் விரிசல் ஏற்பட்டு கீழே விழும் நிலையில் உள்ளதால், இதனைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. நடப்பு நிதியாண்டில் "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதி திருக்கோயில் திருப்பணி" திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு முடிந்து விட்ட நிலையில், வரும் நிதியாண்டில் மேற்படி திட்டத்தினை விரிவுபடுத்தும்போது மேற்படி திருக்கோயிலின் பெயரையும் சேர்த்து பரிசீலிக்கப்படும்.



12—

### கோயில் கடைகள் வாடகை உயர்த்துதல்

**வினா எண் 56542—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலையிலுள்ள அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் நீண்ட நாட்களாக கடைகள் வைத்து நடத்துபவர்கள் குறைந்த வாடகை செலுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வாடகையை உயர்த்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலையிலுள்ள அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் நீண்ட நாட்களாக கடைகள் வைத்து நடத்துபவர்கள் ஒருவரும் இல்லை.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் தொகைக்கு பொது ஏலத்தில் விடப்படுவதால் வாடகை உயர்த்த வேண்டிய பிரச்சினை எழவில்லை.

[2004 நவம்பர் 18

13—

## கோயில் கடைகள் வாடகை உயர்த்துதல்

**வினா எண் 56543—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குறைந்த வாடகையை நீண்ட நாட்களாக செலுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வாடகையை உயர்த்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கோயில் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு 1-7-1997 முதல் நியாய வாடகை அமல்படுத்தப்பட்டு தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது. நியாய வாடகை நிர்ணயத்திற்கும் முன் 17 கடைகளுக்கு மொத்த வாடகை ரூ.7250/- ஆகும். உயர்விற்குப் பின் வாடகை ரூ.8040/- ஆகும். எனவே நீண்ட காலமாக குறைந்த வாடகை செலுத்தி வருகிறார்கள் என்ற புகார் எழவில்லை. திருக்கோயில் கட்டடங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 33.3% உயர்வு செய்து வாடகை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

14—

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 56648—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஊராட்சியிலுள்ள பாலமுருகன் ஆலயத்தை செப்பனிட அரசு முன் வருமா?



2004 நவம்பர் 18]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பெருந்தோட்டம் ஊராட்சியிலுள்ள அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் சுமார் 4 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. எனவே தற்போது மேற்படி திருக்கோயிலை செப்பனிட வேண்டிய அவசியமில்லை.

15—

## கோயில் திருப்பணி

**வினா எண் 56657—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சி, காப்பியக்குடி கன்னியம்மன் கோயிலை புதிதாக கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், அரசூர் அருள்மிகு கன்னியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இதன் நிர்வாகத்தை கிராம பொதுமக்கள் சார்பில் நாட்டாண்மை பார்த்து வருகிறார். இத்திருக்கோயில் சுமார்

[2004 நவம்பர் 18

4 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திருக்கோயில் தற்போது நல்ல நிலையில் உள்ளதால் தற்போதைக்கு திருப்பணி செய்யவேண்டிய அவசியமில்லை.

**16—**

## கோயில் அர்ச்சகர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி

**வினா எண் 56664—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள சட்டநாத சுவாமி திருக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு புத்தொளிப் பயிற்சி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள சட்டநாத சுவாமி திருக்கோயிலில் பணிபுரியும் 5 அர்ச்சகர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருவதுடன் வேத ஆகம பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், திறமை வாய்ந்தவர்களாகவும் உள்ளார்கள். மேலும் இப்பகுதியில் வேத ஆகம பயிற்சியில் பயிலும் மாணவர்களுக்கும், தருமபுரம் ஆதினத்தில் உள்ள பயிற்சி பள்ளியிலும் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களாகவும் இவர்கள் இருந்து வருகிறார்கள். எனவே, சட்டநாத சுவாமி திருக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**17—**

## பட்டாச்சாரியார்களுக்குப் புத்தொளிப் பயிற்சி

**வினா எண் 56665—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்று அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 நவம்பர் 18]

*(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி, அண்ணம்பெருமாள் கோயில், திருநகரி ஊராட்சி, அருள்மிகு கல்யாணரங்கநாதர் திருக்கோயில் மற்றும் நாங்கூர் ஊராட்சி அருள்மிகு ஸ்ரீநாராயண பெருமாள் திருக்கோயில் ஆகியவற்றில் பணிபுரியும் பட்டாச்சாரியார்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தரங்கம்பாடி வட்டம், அனந்தமங்கலம் அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில் சார்பில், சீர்காழி வட்டம், நாங்கூர் அருள்மிகு புருஷோத்தமப் பெருமாள் திருக்கோயில் வளாகத்தில், சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி, அண்ணம்பெருமாள் கோயில், திருநகரி ஊராட்சி, அருள்மிகு கல்யாணரங்கநாதர் திருக்கோயில் மற்றும் நாங்கூர் ஊராட்சி அருள்மிகு நாராயணப் பெருமாள் திருக்கோயில் ஆகியவற்றில் பணிபுரியும் பட்டாச்சாரியார்களுக்கு 16-12-2002 முதல் 14-3-2003 முடிய உள்ள நாட்களில் புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது.*

**18—**

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 56672—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, செம்மங்குடி ஊராட்சி, திருத்தோணிபுரத்திலுள்ள கன்னிகாபரமேஸ்வரி ஆலயத்தை புதிதாக கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, செம்மங்குடி ஊராட்சி, திருத்தோணிபுரத்திலுள்ள அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் கிராம பொதுமக்கள் நிதியைக் கொண்டு திருப்பணி செய்து, 23-5-2003-ல் திருக்குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. எனவே, இத்திருக்கோயிலை புதிதாக கட்டித்தர வேண்டிய அவசியம் தற்போதைக்கு எழவில்லை.*

**19—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 56687—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, திட்டை ஊராட்சி, குளக்கரையிலுள்ள அய்யனார் கோயிலை புதிதாக கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, குளக்கரை திட்டை அருள்மிகு அய்யனார் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதயுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.*



2004 நவம்பர் 18]

**20—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 56688—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, ஓலையாம்புத்தூரிலுள்ள கன்னியம்மன் கோயிலை புதிதாக கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, ஓலையாம்புத்தூரிலுள்ள அருள்மிகு கன்னியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இதன் நிர்வாகம் கிராம நாட்டாண்மையால் பார்த்து வரப்படுகிறது. இத்திருக்கோயில் திருப்பணிக்கு "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதி திருக்கோயில் திருப்பணி" நிதியுதவி திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு இன்மையால், வரும் நிதியாண்டில் மேற்படி திட்டத்தில் பட்டியல் தயாரிக்கும்போது மேற்படி திருக்கோயிலையும் சேர்த்து பரிசீலிக்கப்படும்.*

[2004 நவம்பர் 18

21—

## கோயில் திருப்பணி

**வினா எண் 56751—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சி, கொண்டல் தெற்கு தெருவிலுள்ள அருள்மிகு காளியம்மன் கோயிலை புதியதாக கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொண்டல் ஊராட்சி, கொண்டல் தெற்கு தெருவில் உள்ள, அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கீண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.



2004 நவம்பர் 18]

22—

## கோயில் திருப்பணி

**வினா எண் 56753—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஒன்றியம், பச்சைபெருமாள்நல்லூர் ஊராட்சி, மத்தலமடையான் தெருவில் உள்ள காளியம்மன் கோயிலை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சைபெருமாள்நல்லூர் ஊராட்சி, மத்தலமடையான் தெருவில் உள்ள காளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டு மொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

[2004 நவம்பர் 18

**23—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 56754—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆணைக்காரன்சத்திரம் ஊராட்சி, அனுமந்தபுரம், அம்பேத்கர் தெருவில் உள்ள ஸ்ரீகாளியம்மன் கோயிலை கட்டி முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, ஆணைக்காரன்சத்திரம் ஊராட்சி அனுமந்தபுரம், அம்பேத்கர் தெருவில் உள்ள ஸ்ரீகாளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.



2004 நவம்பர் 18]

**24—**

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 56766—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சியில் ரெட்டிக்கோடாங்குடியிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி ஆலயத்தை புதிதாக கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சியில், ரெட்டிக்கோடாங்குடியிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால் மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

[2004 நவம்பர் 18

25—

## கோயில் திருப்பணி

**வினா எண் 56768—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையபாளையம் ஊராட்சி, கொடக்காரமூலை ரெங்கசமுத்திரத்திலுள்ள பரமேஸ்வரி கோயிலை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பழையபாளையம் ஊராட்சி, கொடக்காரமூலை ரெங்கசமுத்திரத்தில் உள்ள அருள்மிகு பரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டு மொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.



2004 நவம்பர் 18]

26—

## கோயில்கள் கட்டுதல்

**வினா எண் 57031—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஊராட்சி, அல்லிமேடு மற்றும் மெய்யன் தெருவில் ஸ்ரீபாலமுருகன் கோயிலைக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஊராட்சி, அல்லிமேடு கிராமத்தில் அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். கடந்த ஆண்டு கிராம பொதுமக்களால் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இத்திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளது. எனவே இக்கோயிலை கட்டவேண்டிய அவசியமில்லை.

சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஊராட்சி, மெய்யன் தெருவில் உள்ள அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இதன் நிர்வாகம் கிராம பொதுமக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திருக்கோயில் 4 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் [illegible] நல்ல நிலையில் உள்ளது. எனவே, இத்திருக்கோயிலைக் [illegible] அவசியமில்லை.

[2004 நவம்பர் 18

27—

## ஆலயத்திற்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 57049—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பச்சைப்பெருமாள்நல்லூர் ஊராட்சி, அரசாலமங்கலம் தெருவிலுள்ள மாரியம்மன் கோயில் மற்றும் கன்னிகாபரமேஸ்வரி ஆலயத்திற்கு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பச்சைப்பெருமாள்நல்லூர் ஊராட்சி, அரசாலமங்கலம் தெருவிலுள்ள மாரியம்மன் ஆலயம் மற்றும் கன்னிகாபரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் 4 ஆண்டுகளுக்குமுன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால், இதனை புதுப்பிக்கத் தேவையில்லை. அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவியில், சீர்காழி தொகுதிக்கு உரிய ஒதுக்கீடு செய்யப்படும். ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரியம்மன் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.



2004 நவம்பர் 18]

28—

## கோயில்கள் கட்டுதல்

**வினா எண் 57055—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையபாளையம் ஊராட்சி, பழையபாளையம் சன்னதி தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி கோயில் மற்றும் பாலக்காட்டுத் தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி கோயில்களை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பழையபாளையம் ஊராட்சி, பழையபாளையம் சன்னதி தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி கோயில் மற்றும் பாலக்காட்டுத் தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரியம்மன் திருக்கோயில்கள் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இத்திருக்கோயில்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயில்களாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும்

திருக்கோயில்களுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**29—**

## கன்னியம்மன் கோயிலைக் கட்டுதல்

**வினா எண் 57058—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு, பள்ளிக்கூடத் தெருவிலுள்ள கன்னியம்மன் கோயிலை கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம் மற்றும் ஒன்றியம், காரைமேடு பள்ளிக்கூடத் தெருவிலுள்ள கன்னியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதிவசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால் மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.





**30—**

## படித் துறை, தடுப்புச் சுவர் அமைத்தல்

**வினா எண் 57062—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல் ஊராட்சி, அக்ரகார தெருவிலுள்ள பெருமாள் கோயில் குளத்திற்கு படித் துறை, தடுப்புச் சுவர் அமைத்து மழைநீர் சேகரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல் ஊராட்சி, அக்ரகார தெருவிலுள்ள அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில் பட்டியலில் சேராத கும்பகோணம் உதவி ஆணையர் பிரிவிற்கு உட்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் உதவித் தொகை வரிவிதிப்பிற்கு உட்படாத கோயிலாகும். இத்திருக்கோயில் அருகில் உள்ள திருக்குளம் ஊராட்சி நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் திருக்குளம் நாற்புறமும் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது. தற்போது குளத்தில் மழைநீர் உள்ளது. மேலும் சென்ற ஆண்டு ஊராட்சி நிர்வாகத்தால் தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. படித் துறை மற்றும் தடுப்புச் சுவரும் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

[2004 நவம்பர் 18

**31—**

## அனாதை இல்லங்கள்

**வினா எண் 37843—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அனாதை இல்லங்கள் எந்தெந்த இடங்களில் உள்ளன?

(ஆ) இதில் அரசு உதவி பெறுவன எந்தெந்த இடங்களில் செயல்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் அனாதை இல்லங்கள் உள்ளன:

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1. | குவாஞ்சலின் அனாதை இல்லம், அரசன் இல்லம் |
| 2. | ஜோசப் கருணை இல்லம், வேம்பார் வடக்கு |
| 3. | அன்பு உள்ளங்கள்/அன்னை தெரசா நகர், கூட்டார்புளி |
| 4. | பெத்தேல் மாணவர் இல்லம், கே.ஆர்.நகர், கோவில்பட்டி |
| 5. | பெத்தேல் மாணவிகள் இல்லம், புதுரோடு நகராட்சி அலுவலகம் எதிர்புறம், கோவில்பட்டி |
| 6. | இமானுவேல் சிறுவர், சிறுமியர் மறுவாழ்வு இல்லம், ராஜீவ் நகர், 6 வது தெரு, கோவில்பட்டி |
| 7. | டான்ஜோன் சிறுமியர் இல்லம், டிம்ஸ் நகர், பன்னீர்குளம், கயத்தார் |
| 8. | மெமோரிய குழந்தைகள் இல்லம், வடக்கு சுப்பிரமணியபுரம் |
| 9. | சர்வசமயதர்ம இல்லம், ஒட்டப்பிடாரம் |
| 10. | தூய இம்மானுவேல் சிறுவர் இல்லம், நெய்விளை |
| 11. | கம்பாஸன் ஹோம், திருமறையூர், நாசரேத் |
| 12. | ரீச் ஹோம், சாலை புதூர் |
| 13. | காடியன் ஏஞ்சல் ஹோம், நாசரேத் |
| 14. | தூய கிருத்துவ மாணவர் இல்லம், ஒய்யான்குடி |
| 15. | ஏசு இரட்சகர் சபை கருணை இல்லம், மூக்குப்பீறி |
| 16. | தூய மாத்யூ சிறுவர் இல்லம், மூக்குப்பீறி |
| 17. | தூய இம்மானுவேல் சிறுவர் இல்ல, பாட்டக்கரை |
| 18. | தூய கிருத்து மாணவர் இல்லம், பிரகாசபுரம் |
| 19. | தாமஸ்ஹோம், மெய்ஞானபுரம், உடன்குடி |
| 20. | வழிகாட்டும் ஒளி சிறுவர் இல்லம், உடன்குடி ஊராட்சி ஒன்றியம் |
| 21. | தோமா கருணை இல்லம், வேப்பங்காடு |
| 22. | அருள் கோயில்ராஜ் சிறுவர் இல்லம், மெய்ஞானபுரம் |
| 23. | பேராயர் அசரியா நினைவு சிறுவர் இல்லம், சிரம்பராபுரம் |
| 24. | மேரி அன்னிபெசன்ட் பண்டாராஞ்செட்டிவிளை |
| 25. | சாதுசதானந்தா சிறுவர் இல்லம், திருச்செந்தூர் |
| 26. | பிரயர்மன்ட் குழந்தைகள் இல்லம், திருச்செந்தூர் |
| 27. | பெத்தேல் மாணவர் இல்லம், புதுக்குடி |
| 28. | செயின்ட் டொமினிக் ஹோம் ஃபார் சில்ரன், நடுவக்குறிச்சி |
| 29. | பெத்தேல் மாணவர் இல்லம், தாதன்குளம் |
| 30. | புனித சூசை அறநிலையம், அடைக்கலாபுரம் |
| 31. | பி.எம்.ஓர்னலாஸ் உயர்நிலைப் பள்ளி, 50, பெரிய கோயில் தெரு, தூத்துக்குடி, ஜார்ஜ் ரோடு |

[2004 நவம்பர் 18

32. ஹோலி ஏஞ்சல்ஸ் போர்டிங் ஹோம், போன் செகர்ஸ் கான்வென்ட், பீச் ரோடு, தூத்துக்குடி.

33. ஆறுமுகச்சாமி அன்பு ஆசிரமம், 51 தேவர்புரம் ரோடு, தூத்துக்குடி.

34. தூய மரியன்னை ஆதரவற்றோர் இல்லம், மில்லர்புரம்.

35. செயின்ட் ஜோசப் ஆதரவற்றோர் இல்லம், சர்வீஸ் கான்வென்ட், கழுகுமலை, தூத்துக்குடி.

36. செயின்ட் டொமினிக் ஆதரவற்றோர் இல்லம், சாயர்புரம், சுப்பிரமணியபுரம், தூத்துக்குடி.

37. சாதுசதானந்தா சேவா குருகுலம், ஆதரவற்றோர் இல்லம், 128, சன்னதி தெரு, திருச்செந்தூர்.

38. கிருபை இல்லம், நாரைக்கிணறு, ஒட்டப்பிடாரம்.

39. புனித அந்தோணியார் கருணை இல்லம், புளியம்பட்டி, ஒட்டப்பிடாரம்.

40. கல்யாண சுந்தரய்யா நாடார் சிறுவர் இல்லம், கச்சினாவிளை.

41. கல்யாண சுந்தரய்யா நாடார் மாணவியர் இல்லம், கச்சினாவிளை, ஆழ்வார்திருநகரி.

42. டாலாஸ் குழந்தைகள் இல்லம், பிரகாசபுரம், ஆழ்வார்திருநகரி.

(ஆ) இவற்றில் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன.

சமூக நலத் துறை மூலம் மானியம் பெற்று செயல்பெற்று வரும் நிறுவனங்கள்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1. | புனித சூசை அறநிலையம், அடைக்கலாபுரம், தூத்துக்குடி மாவட்டம், சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 2. | பி.எம். ஓர்னலாஸ் உயர்நிலைப் பள்ளி, 50 பெரிய கோயில் தெரு, தூத்துக்குடி, ஜார்ஜ் ரோடு, சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 3. | ஹோலி ஏஞ்சல்ஸ் போர்டிங் ஹோம் போன் செகர்ஸ் கான்வென்ட், பீச் ரோடு, தூத்துக்குடி, சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 4. | ஆறுமுகச்சாமி அன்பு ஆசிரமம், 51 தேவர்புரம் ரோடு, தூத்துக்குடி, சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 5. | தூய மரியன்னை ஆதரவற்றோர் இல்லம், மில்லர்புரம், தூத்துக்குடி சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 6. | செயின்ட் ஜோசப் ஆதரவற்றோர் இல்லம் சர்வீஸ் கான்வென்ட், கழுகுமலை, தூத்துக்குடி சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 7. | செயின்ட் டொமினிக் ஆதரவற்றோர் இல்லம், சாயர்புரம், சுப்பிரமணியபுரம், தூத்துக்குடி, சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 8. | சாது சதானந்தா சேவா குருகுலம், ஆதரவற்றோர் இல்லம், 128 சன்னதி தெரு, திருச்செந்தூர் சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |
| 9. | கிருபை இல்லம், நாரைக்கிணறு, ஒட்டப்பிடாரம், சமூக நலத் துறை மூலம் நிதி உதவி பெறப்படுகிறது. |



2004 நவம்பர் 18]

கல்வித் துறை மூலம் நிதி உதவிப் பெற்று செயல்பட்டுவரும் நிறுவனங்கள்.

10. புனித அந்தோணியார் கருணை இல்லம், புளியம்பட்டி, ஒட்டப்பிடாரம்.

11. கல்யாண சுந்தரய்யா நாடார் சிறுவர் இல்லம், கச்சினாவிளை, ஆழ்வார்திருநகரி.

12. கல்யாண சுந்தரய்யா நாடார் மாணவியர் இல்லம், கச்சினாவிளை, ஆழ்வார்திருநகரி.

13. டாலாஸ் குழந்தைகள் இல்லம், பிரகாசபுரம், ஆழ்வார்திருநகரி.

[2004 நவம்பர் 18

**32—**

## குழந்தைகள் நலக் காப்பகம்

**வினா எண் 46415—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மிலி கிராமத்தில் குழந்தைகள் நலக் காப்பகம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் தமிழக அரசின் மான்யம் மூலம் 'பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்' திட்டத்தின்கீழ் தொண்டு நிறுவனங்களின்மூலம் தமிழகம் முழுவதும் குழந்தைகள் காப்பகங்கள் நடத்த அரசு மானியம் அளித்து வருகிறது. சீர்காழி தொகுதி கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி நெம்மிலி கிராமத்தில் இதுபோன்ற குழந்தைகள் காப்பகம் ஏதும் தொண்டு நிறுவனங்களால் துவங்கி நடத்தப்படவில்லை. இக்கிராமத்தில் தேவையின் அடிப்படையில் குழந்தைகள் காப்பகத்தை நடத்த தொண்டு நிறுவனங்கள் முன்வருமானால் அந்நிறுவனங்களின் கோரிக்கை தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**33—**

## சீர்திருத்தப் பள்ளிகளுக்கு நிதி

**வினா எண் 50723—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002, 2002-2003-ம் ஆண்டுகளில் வட்டார சீர்திருத்த பள்ளிகளுக்கு மாநில அரசின் பங்கு தொகையாக வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் வட்டார சீர்திருத்தப் பள்ளிகள் ஏதும் இல்லை. 2001-2002, 2002-2003-ம் ஆண்டுகளில் மாவட்டங்களில் இயங்கி வரும் சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் கூர்நோக்கு இல்லங்களுக்கு மாநில அரசின் பங்கு தொகையாக 2001-2002-ம் ஆண்டுக்கு ரூ.670.55 இலட்சம் மற்றும் 2002-2003-ம் ஆண்டுக்கு ரூ.680.52 இலட்சமும் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**34—**

## தாய்ப்பாலின் முக்கியத்துவம் உணர்த்துதல்

**வினா எண் 20023—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்க "தாய்ப்பால்" எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆம். தமிழ்நாட்டில் ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்க "தாய்ப்பால்" எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்த அரசு ஏற்கெனவே கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுத்துள்ளது.

1) குழந்தை ஆரோக்கியமாகவும், அறிவுள்ளதாகவும் வளர பிறந்தவுடன் சீம்பாலும், பின் ஆறு மாதத்திற்கு "தாய்ப்பால்" மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதை 2002-2003 ஆம் ஆண்டில் சுவரொட்டிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

2) "தாய்ப்பால்" பெருமைகள் பற்றிய ஒன்பது முக்கிய செய்திகள் துண்டு பிரசுரங்கள்மூலம் மக்களிடையே பரப்பப்பட்டது.

[2004 நவம்பர் 18

3) சீம்பாலின் சிறப்பு தன்மைகள் என்ற தலைப்பில் நான்கு செய்திகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் மகளிர் மன்றங்கள், அரசுசாரா மருத்துவ நிறுவனங்கள், மாநில அளவு கண்காட்சிகள் மூலம் செய்தி மக்களிடையே விநியோகிக்கப்பட்டது.

4) துண்டு பிரசுரங்கள் பின்னர் லேமினேஷன் செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

35—

## ஆரம்ப துணை சுகாதார நிலையம்

**வினா எண் 31584—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ரமணமுதலிபுதூர் ஊராட்சியில் மாரியப்பன் நகரில் 20 சென்ட் இடம் ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்க அரசுக்கு நன்கொடையாக கொடுத்தும் இடம் வாங்கிக் கொண்டு அரசு இன்னும் கட்டவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள ரமணமுதலிபுதூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த துணை சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்காக தானமாக 15 சென்ட் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு நபார்டு வங்கியின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்தவுடன் துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டப்படும்.

36—

## மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 35944—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

(அ) அவிநாசி தொகுதி, அன்னூர் அரசு மருத்துவமனையில் நடப்பாண்டில் படுக்கை வசதியுடன் கூடிய கூடுதல் கட்டடம் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னூர் அரசு மருத்துவமனை தற்பொழுது 30 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. சராசரியாக தினமும் 25 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதால் கூடுதலாக படுக்கை வசதியுடன் கூடிய கட்டிடம் கட்ட தற்பொழுது அவசியம் எழவில்லை.

37—

## துணை சுகாதார நிலையமாக மாற்றுதல்

**வினா எண் 40151—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், ஒலப்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கட்டமராபாளையத்திலுள்ள தாய்சேய் நல விடுதியை துணை சுகாதார நிலையமாக மாற்ற அரசுக்குத் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், ஒலப்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கட்டமராபாளையத்தில் இயங்குவது துணை சுகாதார நிலையம் தான். முன்பு தாய்சேய் நலவிடுதிகள் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. பின்பு 1982 ஆம் ஆண்டு முதல் பலநோக்கு சுகாதார திட்டத்தின்கீழ் அனைத்து தாய்சேய் நல விடுதிகளும் துணை சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு பொது சுகாதார

[2004 நவம்பர் 18

துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, தாய்சேய் நல விடுதி என்பதும் துணை சுகாதார நிலையம் என்பதும் ஒன்றே ஆகும்.

**38—**

## மல்பரி ரகங்களை சாகுபடி செய்தல்

**வினா எண் 51330—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் தொடர் பசுமைப் புரட்சி திட்டத்தின்கீழ் பட்டுப்புழு வளர்ச்சிக்கு உயர் விளைச்சல் மல்பரி ரகங்களை சாகுபடி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2004-05 நிதியாண்டில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**39—**

## நிதியுதவி

**வினா எண் 51335—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவினருக்கு பொருளாதாரம் மேம்படுத்தப்படுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், 2001-2004 ஆம் ஆண்டு வரையில் (ஆண்டு வாரியாக) நிதியுதவி வழங்கப்பட்ட விவரம் என்ன?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம், அதிக பட்டுக்கூடு அறுவடை பெற உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களை சாகுபடி செய்ய ஊக்க உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 2001-02 மற்றும் 2002-03 ஆம் ஆண்டுகளில் நிதியுதவி வழங்கப்படவில்லை. 2003-04 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மூன்று விவசாயிகளுக்கும், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 15 விவசாயிகளுக்கும் ரூ.4,850/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**40—**

## இலவசமாக உபகரணம் வழங்குதல்

**வினா எண் 58998—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் மற்றும் சேத்துமடை ஊராட்சிகளில் இருக்கும் பனை மரம், தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு இலவசமாக உபகரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2004 நவம்பர் 18

41—

## சுடுகாட்டுக்குப் பாதை அமைத்தல்

**வினா எண் 31073—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், ஓங்கூர் காலனி மக்களுக்கு சுடுகாட்டுப்பாதை ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓங்கூர் கிராமம் ஆதிதிராவிடர்களுக்கு மயானப்பாதை மற்றும் இணைப்புச் சாலைக்காக 1983-84 ஆம் ஆண்டில் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலங்கள் கையகம் செய்யப்பட்டு இழப்பீட்டுத் தொகையினையும் நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆர்ஜித புலன்களை அளந்து கல் நடப்பட்டு ஊராட்சியின் கட்டுப்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

42—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 31572—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் உள்ள தென்சித்தூர் ஊராட்சியில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள தென்சித்தூர் ஊராட்சியில் அடங்கியுள்ள நத்தம் புறம்போக்கில் ஒரு ஆதிதிராவிடர் குடும்பம் கூட வசிக்கவில்லை. தோட்டச்சாலைகளில் 15 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் வீட்டுமனைப் பட்டா கோரிய விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை. எனவே தென்சித்தூர் ஊராட்சியில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலஎடுப்பு நடவடிக்கைகள் ஏதும் இல்லை.*

43—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 35193—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலை சின்னகுமாரபாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா கிடைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், சின்னகுமாரபாளையம் கிராமம், குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமமாகும். மேற்படி கிராமத்திலிருந்து வீட்டுமனைப் பட்டா கோரிய விண்ணப்பங்கள் ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.*

44—

## முன்னாள் படைவீரர் நலன்

**வினா எண் 40899—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2004 நவம்பர் 18

இந்தியப் படைவீரர்கள் ஓய்வு பெற்ற பின்னர் 2001-2002ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு தமிழக அரசு வேலைவாய்ப்பு அளித்தது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

2001 ஆம் ஆண்டில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மற்றும் அரசு அலுவலகங்களில் 886 முன்னாள் படைவீரர்களுக்கும், 2002 ஆம் ஆண்டில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மற்றும் அரசு அலுவலகங்களில் 1,476 முன்னாள் படைவீரர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

45—

## சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 41587—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்கள் பயன்பெற சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், தாட்கோ மூலம் கடனுதவி வழங்கப்பட்டதா? எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஏற்காடு சட்டமன்ற தொகுதியில் பழங்குடி இனத்தவருக்கு 12 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 168 பயனாளிகளுக்கு கறவைமாடுகள் வாங்க 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.3,00,000 கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் ரூ.10,000 சுழற்சி நிதியாகவும் ரூ.15,000 வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் 48 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தாட்கோ மூலம் ரூ.7,70,000/- மானியமாகவும் ரூ.9,80,000/- வங்கிக் கடனாகவும் மொத்தம் ரூ.17,50,000/- வழங்கப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 18]

46—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 41848—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் பேரூராட்சியில் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், மடத்துக்குளம் பேரூராட்சிக்கு அருகில் அக்ரஹார கண்ணாடிபுதூர், பாப்பான்குளம், மேற்கு குமரலிங்கம் ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிடர் வீட்டுமனைக்காக ஏற்கெனவே நிலம் கையகப்படுத்தப்பட்ட இடத்தில் காலியாகவுள்ள மனையிடங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதி படைத்த வீடற்ற ஆதிதிராவிட மக்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

47—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 43264—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

(அ) வால்பாறை தொகுதி, அங்களக்குறிச்சி ஊராட்சி வேடசெந்தூர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட அங்களக்குறிச்சி மற்றும் வேடசெந்தூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அங்களக்குறிச்சி கிராமம் க.ச.104/3 சாலையில் 1.85.0 எக்டேர் நிலம், மற்றும் க.ச.99/1பி க.ச.99/3ஏ மற்றும் க.ச.100 முதலிய சாலைகளில் 1.56.0 எக்டேர் நிலம், ஆகிய நிலங்கள் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலஎடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

48—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 48101—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், இலங்கியேந்தல்பட்டி, பேராக்கூர் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், இலங்கியேந்தல்பட்டி பேராக்கூர் கிராமத்தில் வசித்து வரும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நில



2004 நவம்பர் 18]

ஆர்ஜித நடவடிக்கை துவக்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் செய்தவுடன் பட்டாக்கள் வழங்கப்படும்.

49—

## மலைவாழ் மக்களுக்குப் பட்டா

**வினா எண் 48659—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் கிராமம், இந்திரா குடியிருப்பு பகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

உடுமலை வட்டம், கல்லாபுரம் கிராமம், இந்திரா குடியிருப்பு கிராம க.ச.495/சி மற்றும் 495/டி ஆகிய சாலைகளில் அமைந்துள்ளது. இதில் க.ச.495/டி எண் சாலையில் 0.41.0 எக்டேர் கரடு புறம்போக்கு நிலத்தை நத்தமாக மாற்றி ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், க.ச.495/சி-ல் 0.76.0 எக்டேர் கரடு புறம்போக்கு நிலத்தினை நத்தமாக மாற்றி மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

50—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண்—48973 திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், பூலாம்பட்டி கிராமத்தில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

[2004 நவம்பர் 18

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய பூலாம்பட்டி கிராமத்தில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட பூலாம்பட்டி கிராமத்தில் நில ஆர்ஜிதம் செய்ய நிலம் தேர்வு செய்யப்பட்டு, ஆர்ஜித சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவுற்ற பின் பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2004 நவம்பர் 18]

## ஆறாம் பட்டியல்

1—

### விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 51059—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் தெற்கு மேட்டுத் தெரு ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். வால்பாறை தொகுதி, பொள்ளாச்சி வட்டம், வேட்டைக்காரன்புதூர் தெற்கு மேட்டுத் தெரு ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு மேற்படி கிராமம் க.ச எண் 108/1பி முதலான சாலைகளில் 3.74.0 எக்டேர் நிலம் கையகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

### மயான சாலை, கொட்டகை அமைத்தல்

**வினா எண் 55994— திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சியில் வடக்கு வெளி ஆதிதிராவிடர்களுக்கு மயான சாலையும், மயான கொட்டகையும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சியில் வடக்கு வெளி ஆதிதிராவிடர்களுக்கு மயான சாலையும், மயானக் கொட்டகையும் அமைக்க மதிப்பீடு ரூ.75,000 ஆகும். இப்பணியினை வரும் நிதியாண்டில் 11-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மயானக் கொட்டகை கட்டுவதற்கு மொத்த மதிப்பீடு ரூ.30,000/- ஆகும். பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.*

3—

## இலவச பயணச் சலுகை அட்டை

**வினா எண் 4681—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் 2001-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை எத்தனை உடல் ஊனமுற்றோருக்கு அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பயணச் சலுகை அட்டை வழங்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் 2001-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மொத்தம் 11,244 உடல் ஊனமுற்ற நபர்களுக்கு அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பயணச் சலுகை அட்டை வழங்கப்பட்டுள்ளது.*

4—

## புறநகர் பேருந்து நிறுத்தம்

**வினா எண் 26428—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிபபாரா—*



2004 நவம்பர் 18]

*(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர்-இராசிபுரம் வழித்தடத்திலுள்ள காட்டூர் பிரிவு ரோட்டில் புறநகர் பேருந்து நிறுத்தம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் வசமுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆத்தூர்-இராசிபுரம் வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் காட்டூர் பிரிவு சாலையில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல ஓட்டுநர், நடத்துனர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு அவ்விடத்தில் தற்போது பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

5—

## பேருந்து கட்டணம் வசூல் செய்தல்

**வினா எண் 28624—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூர் தொகுதி, வரக்கால்பட்டு-கடலூர் வரையில் அரசுப் பேருந்தில் பேருந்து கட்டணம் ஒரே சீராக வசூலிக்கப்படவில்லையாதலால், இதற்கு அரசு தீர்வு காண இயலுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) கடலூர்-வரக்கால்பட்டு இடையே உள்ள தூரம் 8.3 கி.மீ. ஆகும். 5-12-2001 நாளிட்ட அரசாணை எண் 1204, உள் (போக்குவரத்து) துறையில்*

[2004 நவம்பர் 18

குறிப்பிட்டுள்ளவாறு கடலூரிலிருந்து வரக்கால்பட்டு வழியாக இயங்கும் அனைத்து நகரப் பேருந்துகளிலும் பயணம் மேற்கொள்ளும் பயணிகளிடம் பயணக் கட்டணமாக ரூ.3/- (ரூபாய் மூன்று மட்டும்) மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

6—

## மானிய விலையில் மருந்து விற்பனை

**வினா எண் 55071—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்து தெளிப்பான் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்து தெளிப்பான் வழங்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

## மாணவியர் விடுதி

**வினா எண் 22905—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி தொகுதி, செந்நீர்குப்பம் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் தங்கும் விடுதியில் குறைந்த எண்ணிக்கை மாணவியர்கள் உணவருந்துவதும், இரவில் மாணவியர்கள் யாரும் தங்காத நிலையில் இருப்பதும் அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூவிருந்தவல்லி தொகுதி, செந்நீர்குப்பம் விடுதியில் மாணவியர்கள் தற்போது விடுதியிலேயே தங்குகின்றனர். மேலும், 2004-05ஆம் ஆண்டில் விடுதியில் மாணவியர் சேர்க்கையின்போது, இரவில் வீட்டிற்கு செல்லமாட்டோம் என்று உறுதிமொழி பெற்று சேர்க்கப்படுகிறது.

8—

## மாணவ, மாணவியர் விடுதி அமைத்தல்

**வினா எண் 38779—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் பஞ்சாயத்து வடக்கம்பட்டி அரசு கள்ளர் மேல்நிலை பள்ளிக்கு மாணவர்கள் / மாணவியர்கள் விடுதி அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

9—

## மாணவர் விடுதி அமைத்தல்

**வினா எண் 47012—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு மற்றும் மாதனூர் ஒன்றியத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

[2004 நவம்பர் 18

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில், பேரணாம்பட்டு மற்றும் மாதனூர் ஒன்றியத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. தகுதியான நிலம் கிடைப்பது மற்றும் அரசின் நிதிநிலையைப் பொறுத்து இவ்விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

## மாணவர் இல்லங்கள்

**வினா எண் 48406—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு மாணவர் இல்லங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

11—

## கால்நடைக்கு வயது வரம்பு

**வினா எண் 20238—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

இறைச்சிக்காகப் பயன்படுத்தும் ஆடு, மாடு, பன்றி போன்றவைகளை ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகுதான் பயன்படுத்த வேண்டும் என கால்நடைக்கும் வயது வரம்பை அரசு நிர்ணயிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இறைச்சிக்காக பயன்படுத்தும் ஆடு, மாடு, பன்றி போன்றவைகளுக்கு கீழ்க்கண்டவாறு வயது வரம்பு பின்பற்றப்படுகிறது :—

மாட்டினம்: 2-1/2 வயதிலிருந்து அதற்கு மேல்.

ஆட்டினம்: 10 மாதங்களிலிருந்து அதற்கு மேல் அல்லது உயிருள்ள 15 கிலோ எடைக்கு மேற்பட்டு.

பன்றியினம்: 9 மாதங்களுக்கு மேல் அல்லது உயிருள்ள 35 முதல் 40 கிலோ எடைக்கு மேற்பட்டு.

பிராய்லர் கோழிகள்: 8 வாரத்திற்கு மேற்பட்டு.

12—

## கால்நடை மருத்துவமனைக்குத் தொலைபேசி வசதி

**வினா எண் 50623—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு தொலைபேசி வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) 2004-2005 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 50 கால்நடை மருத்துவமனைகளுக்குத் தொலைபேசி வசதி ஏற்படுத்தி அரசாணை

[2004 நவம்பர் 18

(நிலை) எண் 103, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 4-8-2004-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் சீர்காழி கால்நடை மருத்துவமனையும் இடம் பெற்றுள்ளது.

(ஆ) எழாது.

13—

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 50628—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனையில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனையில் தற்போது சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, குழாய்க் கிணறு மூலம் இயங்கி வருகிறது. இங்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு அரசின் நிதி நெருக்கடி காரணமாக தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

14—

### கால்நடை மருந்தகத்திற்குக் கட்டட வசதி

**வினா எண் 53302—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு பேரூராட்சியில் சிவராஜ் நகரிலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு பேரூராட்சியைச் சார்ந்த சிவராஜ் நகரில் இத்துறையைச் சார்ந்த எவ்விதமான கால்நடை நிலையமும் செயல்படவில்லை.

(ஆ) எழாது.

15—

### கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 54690—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள கால்நடை மருத்துவமனையினை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை ஊராட்சி ஒன்றியத்தில், வால்பாறை நகரியத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், சோலையாறு டேம், கருமலை மற்றும் நீர்வீழ்ச்சி ஆகிய 3 இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும் உள்ளன. சுற்றுப்புற கிராமங்களிலுள்ள கால்நடைகளுக்கும் மருத்துவ சிகிச்சை பெற அங்குள்ள கால்நடை மருந்தகத்தில் உள்ள மருத்துவ வசதிகளே போதுமானதாக உள்ளதால், அக்கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த தற்போது அவசியமில்லை.

(ஆ) எழாது.

**16—**

**உயிர்காக்கும் மருந்துகள்**

**வினா எண் 54738—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி அரசு கால்நடை மருத்துவமனைக்குத் தேவையான அளவு உயிர்காக்கும் மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*எடப்பாடி அரசு கால்நடை மருத்துவமனைக்கு மருந்துக்கான நிதி ஒதுக்கீடு 2000-2001 ஆம் ஆண்டு முதல் ரூ.97,000/-க்கு நிர்ணயம் செய்யப்பட்டு வருடந்தோறும் தேவைக்கேற்ப உயிர் காக்கும் மருந்துகள் சேலம் மண்டல இணை இயக்குநரால் வழங்கப்பட்டு வருகிறது.*

**17—**

**தடுப்புச் சுவர் அமைத்தல்**

**வினா எண் 58184—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குத் தடுப்புச் சுவர் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம், நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ளது. இக்கால்நடை மருந்தகத்தைச் சுற்றி முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது. அரசின் தற்போதைய நிதிநிலை நெருக்கடி காரணமாக இம்மருத்துவமனைக்குத் தடுப்புச் சுவர் கட்ட தற்போது வாய்ப்பில்லை.*

*(ஆ) எழாது.*

**18—**

**மரங்கள் நடுதல்**

**வினா எண் 33110—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகரில் நிழல் தரும் மரங்கள் நட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை நகரில் நிழல் தரும் மரங்கள் நட திட்டங்கள் வனத் துறையில் ஏதும் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**19—**

**தேக்கு மரக்கன்றுகள் பராமரித்தல்**

**வினா எண் 48856—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2004 நவம்பர் 18

*சீர்காழி தொகுதியில் வனத் துறையின்மூலம் புதியதாக நடப்பட்டுள்ள தேக்குக் கன்றுகள் சரியான முறையில் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*சீர்காழி சரகத்தில் 2003-2004 ஆம் ஆண்டு படுகைத் தேக்குத் தோட்ட வளர்ப்பு திட்டத்தின் மூலம் 360 ஹெக்டேர் நிலப் பரப்பில் 72,000 தேக்குக் கன்றுகள் புதிதாக நடப்பட்டு அனைத்தும் நல்ல முறையில் பராமரித்து வரப்படுகின்றன.*

**20—**

## மரம் நடும் திட்டம்

**வினா எண் 50072—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மழைநீர் சேகரிப்பு சிறப்புத் திட்டத்தின் பலனாக நிலத்தடி நீரின் மட்டம் உயர்ந்துள்ளதால் மாநிலம் முழுவதும் மரம் நடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*1997-1998 முதல் 2003-2004 ஆம் ஆண்டு வரை 1,257 திட்ட கிராமங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் உள்ளூர் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் மரம் நடும் பணிகள் வெற்றிகரமாக செயல்படுத்தியதன்பொருட்டு நிலத்தடி நீரின் மட்டம் சுமாராக உயர்ந்தது. மேலும் சுமார் 750 எக்டேர் பரப்பளவில் ரூ.111.20 இலட்சம் செலவில் மூங்கில் தோட்டம், மருத்துவ செடிகள் தோட்டம், கடற்கரையோர காற்று தடுப்புத் தோட்டம் மற்றும ஆக்கிரமிப்பு அகற்றிய பகுதிகளில் தோட்டம் எழுப்புதல் போன்ற பணிகளுக்காக 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் அரசாணைகள் வழங்கப்பட்டு மரம் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.*



**21—**

## மூலிகைப் பண்ணைகள் அமைத்தல்

**வினா எண் 50676—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதியில் புதியதாக மூலிகைப் பண்ணைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் உள்ள 19 வன விரிவாக்க மையங்களில் மூலிகை நாற்றங்கால்கள் அமைப்பதற்கு தேசிய மருத்துவ மூலிகை வாரியத்தினால் மூன்று வருடங்களுக்கு ரூ.25.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 2003-2004 ஆம் ஆண்டிற்கான தொகை ரூ.10.00 இலட்சம் மே மாதம் 2004-ல் கிடைக்கப்பெற்றது. 19 வன விரிவாக்க மையங்களில் செங்கற்பட்டு வன விரிவாக்க மையமும் ஒன்று. செங்கற்பட்டு வன விரிவாக்க மையத்தில் ஏற்கெனவே சிறிய மருத்துவ மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மையத்தில் மூலிகை நாற்றங்கால் அமைப்பதற்கான முன் ஆயத்த வேலைகளுக்கான (விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், சுய உதவிக் குழுக்கள் பயிரிடுவதற்கான செய்முறை பயிற்சி, விளம்பரம்) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவ மூலிகைச் செடிகள் செங்கற்பட்டு பகுதியில் உள்ள ஒவ்வொரு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டக் கிராமத்திலும் மற்றும் தேசிய வன முகமை திட்ட கிராமங்களிலும் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.*

**22—**

## மரம் வளர்க்கும் திட்டம்

**வினா எண் 53421—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 நவம்பர் 18

(அ) சேலம் மாவட்டத்தில் வனத் துறை தனியார் நிறுவனங்களுடன் இணைந்து மரம் வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**23—**

## சந்தன மர வளர்ப்பு

**வினா எண் 53619—திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தன மரங்கள் அதற்கு இணையான மரங்களை தனியார் பயிரிட அனுமதி வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அம்மரங்களை வளர்க்க அரசு மானியம் வழங்குகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சந்தன மரங்கள், அதற்கு இணையான மரங்கள் தனியார் பயிரிட எந்த முன் அனுமதியும் அரசிடமிருந்து பெற வேண்டியதில்லை. மேலும், சந்தன மரங்களைத் தனியார் வளர்ப்பதற்கு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்திற்கு திருத்தம் வழங்கப்பட்டு அரசிதழ் அறிவிக்கை 3-9-2002-ல் வெளியிடப்பட்டுள்ளது. விதிகள் வகுப்பது தொடர்பாக கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மேற்படி மரங்களை வளர்க்க அரசு மானியம் ஏதும் வழங்கப்படுவதில்லை.



2004 நவம்பர் 18]

**24—**

## சந்தன மரத்திற்கு இணையான மரங்கள் பயிரிடுதல்

**வினா எண் 53620—திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சைமலைப் பகுதியில் சந்தன மரத்திற்கு இணையான மரங்கள் பயிரிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அம்மரங்களின் வகைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) பச்சைமலைப் பகுதியில் சந்தன மரத்திற்கு இணையான மரங்கள் ஏதும் பயிரிடப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**25—**

## காட்டு வளத்தைப் பெருக்குதல்

**வினா எண் 56597—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள காடுகளில் செயற்கை முறையில் விதைகளைத் தூவி காட்டு வளத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வன வளத்தைப் பெருக்கும்பொருட்டு செயற்கை முறையில் வான்வழி விதை தூவும் திட்டம் மத்திய அரசு நிதியுதவியுடன்

ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டதில் தரை நிலைமைகள் இத்திட்டத்தின் வெற்றிக்கு துணை புரியாததால், எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப் பெறவில்லை. அதன்பிறகு, மத்திய அரசின் இத்திட்டம் கைவிடப்பட்டது. எனவே, வால்பாறை தொகுதியில் உள்ள காடுகளில் செயற்கை முறையில் விதைகளைத் தூவி காட்டு வளத்தைப் பெருக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**26—**

**மரக்கன்றுகளை வளர்த்தல்**

**வினா எண் 56598—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை டாப்சிலிப் வனப்பகுதியிலும், வால்பாறை மேல்பகுதியில் உள்ள வனப்பகுதியிலும், தேக்கு, ஈட்டி போன்ற மரக்கன்றுகளை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை டாப்சிலிப் வனப்பகுதியிலும், வால்பாறை மேல்பகுதியிலும் தேக்கு அல்லது ஈட்டி போன்ற மர வகைகள் வன உயிரின மேலாண்மை நலனை உத்தேசித்து புதியதாக நடப்படுவது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**27—**

**திருமலை நாயக்கர் அரண்மனை**

**வினா எண் 55311—திரு. என் நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மதுரை மன்னர் திருமலை நாயக்கர் மகால் முன்பு மகாலைப் பற்றி மின் விளக்கு வசதியுடன் விளம்பரம் வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை புனரமைப்புப் பணிகள் 11-வது நிதிக் குழு மானியத்தில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில், பொதுப் பணித் துறை மூலம் அரசாணை (நிலை) எண் 73, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 16-5-2003-இல் அரசு வழங்கிய ஆணையின்படி, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 40% பணிகள் முடிவடைந்துள்ளன. இப்பணிகள் நிறைவு பெற்றவுடன், மேற்படி பதினோராவது நிதிக் குழு மானிய சேமிப்புத் தொகையிலிருந்து மதுரை மன்னர் திருமலை நாயக்கர் மகால் முன்பு மகாலைப் பற்றி மின்விளக்கு வசதியுடன் கூடிய விளம்பரம் வைக்கப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**28—**

**வரிவிலக்கு அளித்தல்**

**வினா எண் 61308—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் விற்கப்படும் விளையாட்டு சாதனங்கள், வீடுகட்டும் மூலப் பொருட்கள், பள்ளி மாணவர், மாணவிகளுக்கு புத்தகம் நோட்டு, அத்தியாவசியப் பொருட்கள், உரங்கள், பூச்சி மருந்து வகைகள் ஆகியவற்றிற்கு முழு வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*வால்பாறை போன்ற ஊர்களை இனம் பிரித்து பொருட்களுக்கு முழு வரி விலக்களிக்க 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் சாத்தியக்கூறு இல்லை.*

**29—**

### கைத்தறி நெசவாளர் ஓய்வூதியத் திட்டம்

**வினா எண் 24326—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின்மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.*

*(ஆ) தற்போது சேலம் மாவட்டத்தில் 885 பயனாளிகளுக்கு மார்ச் 2004 வரையில் முதியோர் ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.*

**30—**

### கைத்தறி நெசவாளர் சங்கங்கள்

**வினா எண் 42053—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 நவம்பர் 18]

*(அ) செங்கற்பட்டு தொகுதியில் எத்தனை கைத்தறி நெசவாளர் சங்கங்கள் உள்ளன?*

*(ஆ) இச்சங்கங்களின் உற்பத்தித் துணிகள் அனைத்தும் விற்பனையாகி விட்டனவா?*

*(இ) 2001-2002 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) செங்கற்பட்டு தொகுதியில் மொத்தம் 9 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.*

*(ஆ) மற்றும் (இ) செங்கற்பட்டு தொகுதியில் உள்ள 9 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூ.247.96 இலட்சம் மதிப்புள்ள ஜவுளிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.351.40 இலட்சம் மதிப்புள்ள ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு மட்டும் ரூ.69.29 இலட்சம் ஆகும்.*

**31—**

### மீன்பண்ணை கண்காட்சி

**வினா எண் 45671—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியாறு மீன்பண்ணை கண்காட்சியை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆழியாறு மீன்பண்ணை கண்காட்சியை விரிவுபடுத்த தற்போது திட்டம் எதுமில்லை.*

32—

## மீனவர் அங்காடி

**வினா எண் 61579—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கட்டுமாவடி, மணமேல்குடி, மீமிசல் மற்றும் ஜெகதாபட்டினத்தில் மீனவர் அங்காடி கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் மீனவர் அங்காடி கட்டி முடிக்கப்பட்டு, சுய உதவிக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகிறது.

அறந்தாங்கி தொகுதி, கட்டுமாவடி, மணமேல்குடி, மீமிசல் மற்றும் ஜெகதாபட்டினத்தில் மீனவர் அங்காடி கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

## தார்ச்சாலை சீரமைத்தல்

**வினா எண் 15818—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மகராஜநகர் தமிழ்நாடு மின்சார வாரிய தலைமைப் பொறியாளர் அலுவலகம் அருகிலிருந்து திருச்செந்தூர் - திருநெல்வேலி இரயில்வே பாதைக்கு இணையாக தேசிய நெடுஞ்சாலை எண் 7-க்கு வரும் தார்ச்சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மகராஜநகர் தமிழ்நாடு மின்சார வாரிய தலைமைப் பொறியாளர் அலுவலகம் அருகிலிருந்து திருச்செந்தூர் - திருநெல்வேலி இரயில்வே பாதைக்கு இணையாக தேசிய நெடுஞ்சாலை எண் 7-க்கு வரும் தார்ச்சாலை அமைக்க ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் (IDSMT) ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்ற அனுமதியும் பெறப்பட்டுள்ளது. சென்னை, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதும் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

## சுகாதார சீர்கேடுகளைக் களைதல்

**வினா எண் 1889—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது வட்டம், வ.உ.சி. நகர், நாகூரார் தோட்டம் ஆகிய இடங்களில் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் அடைப்பு எடுக்காததால் கழிவுநீர் தேங்கி தெருக்களில் வழிந்தோடி சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்துகிறது. இதனைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது வட்டம். வ.உ.சி. நகர், நாகூரார் தோட்டம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிரதானக் கழிவுநீர்க் குழாய்களின் ஆள் நுழைவாயில்கள் தூர் வாரப்பட்டு அடைப்புகள் நீக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்விடங்களில் தற்சமயம் கழிவுநீர் தெருக்களில் வழிந்தோடவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

[2004 நவம்பர் 18

35—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 1914—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆர்.கே. நகர் தொகுதி, 6-வது வட்டம், இருசப்பன் மெயின் தெரு மற்றும் 1-வது, 2-வது ஆகிய தெருக்களில் குழாய்மூலம் குடிநீர் கிடைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*குழாய்களின்மூலம் குடிநீர் வழங்கிய காலக் கட்டங்களில் ஆர்.கே. நகர் தொகுதி, 6-வது வட்டம், இருசப்பன் மெயின் தெரு மற்றும் 1-வது, 2-வது ஆகிய தெருக்களில் உள்ளவர்களும் குழாய்மூலம் குடிநீர் பெற்றனர். வறட்சியின் காரணமாக தற்போது லாரிகளின்மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது.*

36—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 19481—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆர்.கே. நகர் தொகுதி, 11-வது வட்டம், ஹரிநாராயணபுரம், அம்பேத்கர் காமராஜ் நகர், பாரதி நகர் ஆகிய இடங்களில் உள்ள தியாகப்ப செட்டி தெரு வீடுகளில் குடிநீர் சரியாக வருவதில்லை என்பதால் இதனை களைய அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*ஆர்.கே. நகர் தொகுதி, 11-வது வட்டத்தில் அடங்கியுள்ள ஹரிநாராயணபுரம், அம்பேத்கர் நகர், காமராஜ் நகர், பாரதி நகர் ஆகிய*



2004 நவம்பர் 18]

*இடங்களில் உள்ள தியாகப்ப செட்டி தெரு வீடுகளுக்கு 17-1-2004 வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் குழாய் மூலம் விநியோகம் செய்யப்பட்டது. தற்பொழுது நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக்குறையால் குடிநீர் விநியோகம் குழாயில் நிறுத்தப்பட்டு குடிநீர் ஊர்திகள் மூலம் இருக்கும் மக்களின் தேவைக்கேற்ப குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.*

37—

## கழிவுநீர் அகற்றுதல்

**வினா எண் 19499—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 10-வது வட்டத்திற்குட்பட்ட தெருக்களில் உள்ள கழிவுநீர்க் கால்வாய்களில் பக்கெட் கிளீனிங் இயந்திரம் மற்றும் பால்பாசிங் முறையில் அடைப்பை எடுப்பதன்மூலம் கழிவுநீர் தெருக்களில் தேங்குகின்ற சூழ்நிலையைக் களைய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆர்.கே. நகர் தொகுதி, 10-வது வட்டத்திற்குட்பட்ட தெருக்கள் கழிவுநீர் பிரதான குழாய்கள் பராமரிப்பின்கீழ் பிரதான குழாய்களில் உள்ள மணற்கசடுகள் பந்து கயிறு மூலம் அகற்றப்பட்டும், ஆள்நுழைவாயில்களில் சேரும் கசடுகள் அவ்வப்போது தூர்வாரப்பட்டும் கழிவுநீர் அகற்றுதல் சரிவர இயங்கும்படி பராமரிக்கப்படுகிறது.*

38—

## கழிவுநீர் இணைப்பு

**வினா எண் 19501—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2004 நவம்பர் 18

ஆர்.கே. நகர் தொகுதி, 8-வது வட்டம், சிவாஜி நகர், அஜிஸ் நகர், கார்நேசன் நகர், குமரன் நகர் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் இணைப்பு பெற தவணை முறையில் பணம் செலுத்த மக்கள் விரும்புவதை அரசு ஏற்றுக்கொள்ள முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி, 8-வது வட்டம், சிவாஜி நகர், அஜிஸ் நகர், கார்நேசன் நகர், குமரன் நகர் ஆகிய இடங்களில் வறுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ள வீட்டு உரிமையாளர்கள் பெயரளவில் ரூ.100/- மட்டும் செலுத்தி புதிய கழிவுநீர் இணைப்பு பெற்று பயன் அடைந்து வருகின்றனர். ஆகையால், கழிவுநீர் இணைப்புப் பெற தவணை முறையில் பணம் செலுத்தும் திட்டம் தேவையில்லை.

**39—**

### கழிவுநீர்க் கால்வாய் மற்றும் கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 26516—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் காமராஜ் சாலையில் கழிவுநீர்க் கால்வாய் மற்றும் கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி நகரில் காமராஜ் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கழிவுநீர் கால்வாய் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 18]

**40—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 27080—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட தானார்குளம் கிராமத்தில் மேல் பகுதி மற்றும் தெற்கு ரத வீதி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, தானார்குளம் குடியிருப்பில் 2002-2003 நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மக்கள் பயனுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

**41—**

### குடிநீர் வசதி

**வினா எண் 3088—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி, கூழையார் கிராமத்திலுள்ள வேலுநகர் வடக்குத் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்குக் குடிநீர் வசதி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியைச் சார்ந்த வேலுநகர் வடக்கு அரிசனத் தெரு, கூழையார் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். கூழையார் குடியிருப்பு கொள்ளிடம் ஒன்றியத்தைச் சார்ந்த 108 கடலோர கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் முழு அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய திட்டம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.*

**42—**

## பார்சன் நகர் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 31130— திரு. ராதாரவி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சைதாப்பேட்டை தொகுதி, பார்சன் நகர் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். சைதாப்பேட்டை தொகுதி, பார்சன் நகர் குடிநீர்த் திட்டம் ரூ.4.316 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது. சைதாப்பேட்டை வட்டம் 135/, விஜிபி சாலையில் அமைந்துள்ள பார்சன் நகர் பகுதியில் சுமார் 250 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதிக்கு வள்ளுவர் கோட்டம் தெற்கு நீரேற்று நிலையத்திலிருந்து குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் சரிவர கிடைக்கப்பெறாத கடைமடை பகுதியானதால், இப்பகுதியின் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள, ஈக்காட்டுத்தாங்கல் நீர் பகிர்மான அமைப்பிலிருந்து வழங்க கருத்துரைக்கப்பட்டது. அதன்படி சுமார் ரூ.4.316 இலட்சம் செலவில் ஈக்காட்டுத்தாங்கல் நீர் பகிர்மான அமைப்பை இப்பகுதியிலுள்ள குழாய்களுடன் இணைக்கத் தேவையான தடுக்கிதழ்கள் (வால்வுகள்) அமைத்து இப்பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்பட்டது. இப்பணிகள் அக்டோபர் 2002 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. இதனால் இப்பகுதியைச் சார்ந்த பார்சன் நகர், கஸ்டம்ஸ் காலனி, சென்ட்ரல் எக்சைஸ் காலனி, அபீத் காலனி, ஆலந்தூர் சாலை, நெருப்புமேடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 6,000 பொதுமக்கள் பயனடைந்துள்ளார்கள். ஏரிகளில் தற்போது உள்ள நீர் இருப்பு குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டு இப்பகுதிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*



2004 நவம்பர் 18]

**43—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 35579— திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, மாதிரவேளூர் ஊராட்சி, வாடி, கீழவாடி பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், மாதிரவேளூர் ஊராட்சியைச் சார்ந்த கீழவாடி என்ற வாடி குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

[2004 நவம்பர் 18

44—

## சமுதாயக்கூடம் அமைத்தல்

**வினா எண் 40584—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் 3-வது வார்டில் உள்ள சருக்கான் தெரு ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக்கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் 3-வது வார்டில் உள்ள சருக்கான் தெரு ஆதிதிராவிடர் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமாகவோ அரசுக்குச் சொந்தமாகவோ இடமில்லை என்பதால் அப்பகுதியில் சமுதாயக்கூடம் கட்ட இயலவில்லை.

45—

## இலவச வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 43598—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, மலைப் பகுதியில் குடியிருக்கும் ஏழைஎளிய தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் 2003-2004 ஆம் நிதியாண்டு முடிய 1,136 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மலைப் பகுதியில் குடியிருப்போருக்கு தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை.



2004 நவம்பர் 18]

46—

## குழாய் இணைப்பு வசதி செய்தல்

**வினா எண் 46853—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சி, பாரதியார் தெரு பிரதான சாலையிலிருந்து 60 மீட்டர் தூரம் குழாய் இணைப்பு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஊராட்சி, குன்னம் அக்ரஹாரம் குடியிருப்பின் ஒரு பகுதிதான் பாரதியார் தெரு. குன்னம் அக்ரஹாரம் குடியிருப்பில் மின்விசைத் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பாரதியார் தெரு, குன்னம் அக்ரஹாரம் குடியிருப்பின் ஒரு பகுதியாக இருப்பதால், இந்தக் குடிநீர்த் திட்டத்திலிருந்து இப்பகுதிக்கு பகிர்மானக் குழாய் அமைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

47—

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 47496—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, 40-வது கோட்டம், ஆறுமுகம் நகர் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 நவம்பர் 18

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி, 40-வது கோட்டம், ஆறுமுகம் நகர் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. எனினும், இப்பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் கழிவுநீர் சாக்கடை மற்றும் சிறுபாலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி சாலையினைச் சீரமைக்க, வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து உரிய நிதி ஒதுக்கீடு கோரி பணிகளைச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

48—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 49489—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, கன்னிகோயில் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சியைச் சேர்ந்த காரைமேடு குடியிருப்பின் ஒரு பகுதியான கன்னிகோயில் தெருவிற்கு போதுமான குடிநீர் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் வழங்கப்பட்டு வருவதால் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

49—

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 4963—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 18]

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வெள்ளமலை வட்டம், வெள்ளமலை சோலைப்பாடி, வெள்ளமலை டாப் பகுதிகளில் தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* கோவை மாவட்டம், வெள்ளமலை வட்டம், வெள்ளமலை சோலைப்பாடி பகுதியில் 20 எண்ணிக்கை குழல் விளக்குகளும், வெள்ளமலை டாப் பகுதியில 4 எண்ணிக்கை குழல் விளக்குகளும், சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவே போதுமானதாக உள்ளது.

*(ஆ)* வினா எழவில்லை.

50—

## சாலை செப்பனிடல்

**வினா எண் 51066—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, 8-வது வார்டு சோமநாதபுரம் கிழக்கு மேட்டுத் தெரு 2வது வீதியில் கீழ்புரம் சாலை செப்பனிடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, 8வது வார்டு, சோமநாதபுரம் கிழக்கு தெரு, 2வது வீதி, கீழ்புரம் 0.250 கி.மீ. நீளமுள்ள மெட்டல் சாலையாகும். இச்சாலையைத் தார்ச் சாலையாக அபிவிருத்தி செய்ய ரூ.2.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

[2004 நவம்பர் 18

## ஏழாம் பட்டியல்

1—

### விவசாயிகளுக்குப் பயிற்சி நிலையம்

**வினா எண் 21216—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை இடங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டது?

(ஆ) அதில் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் தற்போது இயங்கிவரும் சேலம் உழவர் பயிற்சி நிலையத்தைத் தவிர வேறெந்த பயிற்சி நிலையமும் தொடங்கப் பெறவில்லை.

(ஆ) சேலம் உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் ஏறக்குறைய 4,300 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

2—

### நாள் கடந்த மருந்துகளை விற்பனை செய்வதைத் தடுத்தல்

**வினா எண் 2875—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டம், வல்லம் ஒன்றிய அலுவலக கட்டடத்தில் செயல்படும் வேளாண்மை விதை, மருந்து விற்பனை செய்யும் டிப்போவில் நாள் கடந்த மருந்துகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் பூச்சிக்கொல்லி மருந்துகள் கடந்த 9 ஆண்டுகளாகவே



2004 நவம்பர் 18]

விற்பனை செய்யப்படுவதில்லை. மத்திய அரசு நிதி பெறும் திட்டங்களுக்கு மட்டுமே மானிய விலையில் உயிரியல் பூச்சிக்கொல்லி காரணிகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இவை வேளாண்மை டிப்போ மூலமாகத்தான் விநியோகம் செய்யப்படுகின்றன. வேளாண்மை விரிவாக்க மையங்களில் அந்தந்த பருவத்திற்கேற்ற விதைகள் இருப்பு வைத்து விநியோகம் செய்யப்படுகின்றன. செஞ்சி வட்டம், வல்லம் ஒன்றிய விரிவாக்க மையத்தின் மூலமாக நாள் கடந்த மருந்துகள் ஏதும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படவில்லை.

3—

### பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகம்

**வினா எண் 33943—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் இயங்கும் பூச்சிகொல்லி சோதனை ஆய்வகத்தில் கடந்த 2000-2001, 2001-2002 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுகள் எத்தனை?

(ஆ) தனியாரிடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ஆய்வுகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தொகைகள் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரத்தில் இயங்கும், பூச்சிக்கொல்லி பரிசோதனை நிலையத்தில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டு 1,598 மாதிரிகளும் (இலக்கு:1584) 2001-2002 ஆம் ஆண்டு 1,676 மாதிரிகளும் (இலக்கு:1624) ஆய்வு செய்யப்பட்டன.

(ஆ) காஞ்சிபுரத்தில் இயங்கும் பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகத்தில் கீழ்க்கண்டவாறு கடந்த ஆண்டுகளில் தனியாரிடமிருந்து (சென்னை மாநகராட்சி) ஆய்வுகள் பெறப்பட்டன:

| வருடம் | எண்ணிக்கை | வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ. |
|---|---|---|
| 2000-2001 | 1 | 300 |
| 2001-2002 | 1 | 300 |

[2004 நவம்பர் 18

வேளாண்மைத் துறையின்கீழ் செயல்படும் பூச்சிக்கொல்லி பரிசோதனை நிலையங்கள், விவசாயிகளுக்கு தரமான பூச்சிக்கொல்லி மருந்து கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், பூச்சி மருந்து சட்டம் 1968-ன்படி பூச்சி மருந்து ஆய்வாளர்களால் பல்வேறு விற்பனை நிலையங்களிலிருந்து எடுக்கப்படும் பூச்சி மருந்து மாதிரிகளை ஆய்வு செய்து முடிவுகளை அனுப்புகின்றனர். எனவே பூச்சி மருந்து சட்டத்தின்படி எடுக்கப்படும் மாதிரிகளுக்குத்தான் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தனியாரிடமிருந்து பெறப்படும் மாதிரிகளுக்கு இலக்கு இல்லை என்பதால் பெரும் தொகைகள் ஏதும் வசூலிக்கப்படவில்லை.

4—

## காய்கறிகள் அபிவிருத்தித் திட்டம்

**வினா எண் 41545—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் காய்கறிகள் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2003-2004 நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் காய்கறி அபிவிருத்தித் திட்டம் முழுமையாக செயல்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண். | இனம் | பொருள் | நிதி | (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | ஒருங்கிணைந்த பூச்சி நோய்க் கட்டுப்பாடு | 300 எக்டர் | 300 எக்டர் | 4.50 | 4.50 |
| 2. | வயல்விளக்க பாத்திகள் அமைத்தல் | 41.6 எக்டர் | 41.6 எக்டர் | 4.160 | 4.160 |
| 3. | விவசாயிகள் பயிற்சி | 150 எண்கள் | 150 எண்கள் | 2.250 | 2.250 |



2004 நவம்பர் 18]

காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 150 விவசாயிகளுக்கு ரூ.2.250 இலட்சம் செலவில் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் முதல் இரு நாட்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளைக் கொண்டு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், விவசாயிகள் உயர் தொழில்நுட்பத்தை நேரடியாக அறிந்துகொள்ளும் வகையில் பெரியகுளம், மதுரை, அருப்புக்கோட்டை, திருநெல்வேலி, திருவனந்தபுரம், திருச்சூர், கோவை, குப்பம், அனந்தபூர், ஹைதராபாத் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று நேரில் பார்த்து அறிந்துகொள்ளும் வகையில் சுற்றுலாப் பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

5—

## பவர் ஸ்பிரேயர் போன்ற விவசாயக் கருவிகள்

**வினா எண் 42120—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவர் ஸ்பிரேயர் போன்ற விவசாயக் கருவிகள் விவசாயிகளுக்கு யார் மூலமாக வழங்கப்படுகின்றன?

(ஆ) 2001-2003 வரை பயனடைந்தோர் விவரம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பவர் ஸ்பிரேயர் போன்ற விவசாயக் கருவிகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

(ஆ) மாவட்ட வாரியாக பயனடைந்தோர் விவரம் கீழ்வருமாறு:—

| வ. எண் | மாவட்டம் | 2001-2002 | | 2002-2003 | |
|---|---|---|---|---|---|
| | | கைத் தெளிப் பான்கள் | விசைத் தெளிப் பான்கள் | கைத் தெளிப் பான்கள் | விசைத் தெளிப் பான்கள் |
| 1 | காஞ்சிபுரம் | 40 | 59 | 20 | 78 |
| 2 | திருவள்ளூர் | 15 | 19 | 17 | 13 |
| 3 | கடலூர் | 82 | 38 | 38 | 42 |
| 4 | விழுப்புரம் | 33 | 58 | 51 | 59 |
| 5 | வேலூர் | 43 | 62 | 40 | 83 |
| 6 | திருவண்ணாமலை | 36 | 61 | 70 | 59 |
| 7 | சேலம் | 82 | 89 | 32 | 83 |
| 8 | நாமக்கல் | 36 | 52 | 33 | 69 |
| 9 | தருமபுரி | 69 | 57 | 33 | 50 |
| 10 | கோயம்புத்தூர் | 42 | 49 | 76 | 116 |
| 11 | ஈரோடு | 102 | 89 | 73 | 70 |
| 12 | திருச்சிராப்பள்ளி | 127 | 12 | 66 | 31 |
| 13 | பெரம்பலூர் | 148 | 27 | 96 | — |
| 14 | கரூர் | 52 | 6 | 40 | 24 |
| 15 | புதுக்கோட்டை | 59 | 4 | 91 | 2 |
| 16 | தஞ்சாவூர் | 158 | 15 | 130 | 25 |
| 17 | நாகப்பட்டினம் | 139 | — | 65 | 2 |
| 18 | திருவாரூர் | 134 | 7 | 119 | — |
| 19 | மதுரை | 88 | 25 | 27 | 17 |
| 20 | தேனி | 42 | 35 | 42 | 34 |
| 21 | திண்டுக்கல் | 39 | 32 | 33 | 34 |
| 22 | இராமநாதபுரம் | 9 | 9 | 15 | 12 |
| 23 | சிவகங்கை | 8 | 11 | 19 | 14 |
| 24 | விருதுநகர் | 44 | 30 | 106 | 12 |
| 25 | திருநெல்வேலி | 61 | 42 | 56 | 36 |
| 26 | தூத்துக்குடி | 45 | 40 | 141 | 31 |
| 27 | கன்னியாகுமரி | 1 | 5 | 2 | 2 |
| 28 | நீலகிரி | — | — | — | — |
| | மொத்தம் | **1734** | **933** | **1531** | **1008** |



6—

## காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 51294—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இச்சங்கத்தின் மூலம் 2001-2004 ஆம் ஆண்டில் எவ்வளவு பேர் பயனடைந்து உள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில் காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

7—

## மலை மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 51332—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடுத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்திட தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு பகுதியில் மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடுத்து இயற்கைச்

சூழலைப் பாதுகாத்திட தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிடுவதற்கென தனியாக திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் மண் அரிமானத்தைத் தடுத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்திட, பல்லாண்டு பழவகைப் பயிர்கள், வாசனை திரவியப் பயிர்கள், தோட்டப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள் ஆகியவற்றை பயிரிட தோட்டக்கலைத் துறை பரிந்துரை செய்கிறது. இத்துறையில் செயல்படுத்தப்படுகின்ற தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மத்திய சார்பு திட்டங்கள் ஆகிய திட்டங்கள் மூலம் மேற்கண்ட பயிர்களுக்கு உயர் இரக செடிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**8—**

## மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

**வினா எண் 51336—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ஏற்காடு தொகுதியில் மகளிருக்கு தோட்டக்கலையில் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் பயிற்சி ஏதும் தனியாக தோட்டக்கலைத் துறையின் மூலமாக அளிக்கப்படவில்லை. இருப்பினும் தோட்டக்கலைத் துறையின் மூலமாக 2003-2004 ஆம் ஆண்டு ஏற்காடு பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை சார்ந்த 40 மகளிருக்கு காளான் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் காளான் உற்பத்தி செய்யும் முறைகளைப் பற்றி பயிற்சி அளித்ததோடல்லாமல் கோவை, ஊட்டி போன்ற காளான் மிகுதியாக உற்பத்தி செய்யும் இடங்களுக்கு சுற்றுலா*



*அழைத்துச் செல்லப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.0.20 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.*

**9—**

## மரக்கன்றுகளை நடுதல்

**வினா எண் 52125—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2004-2005 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நவப்ரா திட்டம் மற்றும் தரிசு நில மேம்பாடுத் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகளை நடுவதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) நாகை மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதி 30 சதவிகிதத்திற்கும் மேல் உள்ளதால் மைய அரசின் வழிமுறைகளின் அடிப்படையில் நாகை மாவட்டத்தில் நவப்ரா திட்டம் செயல்படுத்தப்படவில்லை. விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் கடலோர மாவட்டங்கள் நீங்கலாக இதர 23 மாவட்டங்களில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் 2004-2005-ல் செயல்படுத்தப்படவில்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**10—**

## மூலிகைச் செடிகள் பயிரிடுதல்

**வினா எண் 52136—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் மூலிகைச் செடிகளை அதிக அளவில் பயிரிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் மூலிகைச் செடிகளை அதிக அளவில் பயிரிட தோட்டக்கலைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம், கீழையூர், கொள்ளிடம், சீர்காழி, செம்பனார்கோவில் ஆகிய வட்டாரங்களில் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்ய ஏதுவாக மண்வகை உள்ளது. வேதாரண்யம், கீழையூர் ஆகிய பகுதிகளில் கண்வலிக் கிழங்கு என்னும் மூலிகைப் பயிரினை சாகுபடி செய்து வருகின்றனர். 2004-2005 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில், 12 எக்டர் பரப்பில் கோலியஸ், சென்னா, ஸ்டீவியா ஆகிய மூலிகைப் பயிர்களை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

**11—**

## உழவர் வயல்வெளிப் பள்ளி அமைத்தல்

**வினா எண் 52191—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலும், சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியங்களிலும் உழவர் வயல்வெளிப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டத்தில், ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்ட வட்டாரமாக கொள்ளிடம் வட்டாரம் தேர்வு செய்யப்பட்டு, மத்திய, மாநில அரசுகளின் தனி திட்ட உதவித் தொகைகளின் அடிப்படையில், இத்திட்டம் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2003-2004 ஆம் நிதியாண்டில், உழவர் வயல்வெளிப் பள்ளிகளானது, கொள்ளிடம் வட்டாரத்தில் கீழ்க்கண்ட கிராமங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.





| | | |
|---|---|---|
| 1. சாமியம் | 2. தில்லை மங்களம் | 3. சென்னியநல்லூர் |
| 4. எருக்கூர் | 5. அகரவட்டாரம் | 6. அரசூர் |
| 7. பில்படுகை | 8. அரசாலமங்கலம் | 9. காடுவெட்டி |
| 10. விநாயகக்குடி | 11. ஆலங்காடு | 12. இராதாநல்லூர் |

**12—**

## நிதியுதவி

**வினா எண் 52951—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் தோட்டக்கலைத் துறை மூலம் கிராமங்களில் கொய்யா, எலுமிச்சை, திராட்சை, நெல்லி, சப்போட்டா, வாழை, பலா போன்ற பழவகைகளை உற்பத்தி செய்ய நிதியுதவி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கொய்யா, எலுமிச்சை, திராட்சை, வாழை, பலா போன்ற பழவகைகளை உற்பத்தி செய்ய தோட்டக்கலைத் துறையால் நிதியுதவி வழங்கப்படுவதில்லை. எனினும், பரப்பு விரிவாக்கத்திற்கென இந்நிதியாண்டில் (2004-2005) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 50 சதவிகித மானியத்தில் நடவுச் செடிகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நடவுச் செடிகள் நடப்பு ஆண்டில் (2004-2005) பருவமழை தொடங்கியபின் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**13—**

## விதைகள், கன்றுகள் இலவசமாக வழங்குதல்

**வினா எண் 55059—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூலிகை மருந்துச்செடி விதைகள், கன்றுகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மூலிகை மருந்துச்செடி விதைகள், கன்றுகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், மூலிகை மருந்துச்செடி வளர்ச்சியின் பொருட்டு பின்வரும் திட்டங்கள் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படுகிறது:–

தோட்டக்கலைத் துறை மூலம் மூலிகைப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம், செயல் விளக்கத் திடல் அமைத்தல், மூலிகைப் பயிர்களில் எண்ணெய் பிரித்தெடுக்கும் அலகு அமைத்தல் மற்றும் மூலிகைப் பயிர்கள் சிறுகளை விநியோகம் ஆகிய இனங்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டு ரூ.48.00 இலட்சம் செலவிடப்பட்டு, விவசாயிகள் பயனடைய வகை செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் (2004-2005) ரூ.52.50 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மூலிகை சாகுபடி குறித்த கையேடுகள் மற்றும் பயிற்சியும் இத்துறை மூலம் வழங்கப்படுகின்றது. இதைத் தவிர தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியத்தின் நிதியுதவியின் மூலமும் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு விவசாயிகளிடமிருந்து வரப்பெறும் கருத்துரு தோட்டக்கலைத் துறை மூலம் ஆய்வு செய்து நிதி உதவி பெற தேசிய மூலிகைச் செடிகள் வாரியத்திற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

14—

## மரக்கன்றுகள்

**வினா எண் 57330—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையினரால் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறைமூலம், மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் மூலம் பல்வேறு வகை பலன் தரும் சுமார் 1.00 இலட்சம் பழ மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு 2003-2004 ஆம் ஆண்டில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், நடப்பு 2004-2005 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் மூலம் சுமார் 1.50 இலட்சம் பலன் தரும் பழ மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



15—

## ஊர்ப்புற நூலகங்கள் திறத்தல்

**வினா எண் 12384—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டில் கிராமப்புறங்களில் புதிதாக ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அரசு எண்ணியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டில் கிராமப்புறங்களில் புதிதாக ஊர்ப்புற நூலகங்கள் ஏதும் திறக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

## மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 21691—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரியில் மாவட்டக் கல்வி அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

226623
சென்னை 600 009

[2004 நவம்பர் 18

(ஆ) ஆம் எனில், அதை அரசுக் கட்டடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி மாவட்டக் கல்வி அலுவலகம் எண் 4/22 எம். முதல் மாடி, சண்முக காம்ப்ளெக்ஸ், புதிய எடப்பாடி ரோடு, சங்ககிரி என்ற முகவரியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் 1-5-1993 முதல் தொடர்ந்து வாடகையில் இயங்கி வருகிறது. அக்கட்டடத்திற்கு தற்போது ரூ.10,000/- வீதம் மாத வாடகை வழங்கப்பட்டு வருகிறது. பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் அரசுக் கட்டடம் ஏதும் காலியில்லை எனச் சான்றளித்துள்ளதன் அடிப்படையிலேயே, சங்ககிரி மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு வாடகை ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசுக் கட்டடம் காலியேற்படின் இவ்வலுவலகத்தை தனியார் கட்டடத்திலிருந்து மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

## உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 21692—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அரசுக் கட்டடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம் எண் 67, காந்தி நகர், வெல்லாண்டிவலசு, எடப்பாடி என்ற முகவரியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.



2004 நவம்பர் 18]

(ஆ) அரசு மற்றும் பொதுக் கட்டடங்கள் எதுவும் காலியாக இல்லாததால், எடப்பாடி, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொதுக் கட்டடங்களில் காலி ஏற்படுமாயின் இவ்வலுவலகம் அரசு கட்டடத்தில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எடப்பாடி, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடத்திற்கு, மாத வாடகை ரூ.2,100/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

18—

## நூல் நிலையம் ஆரம்பித்தல்

**வினா எண் 37494—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, மங்கைநல்லூர் ஊராட்சியில் நூல் நிலையம் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மங்கைநல்லூர் ஊராட்சியில் நூலகம் திறக்கும்பொருட்டு, நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு, 1-3-2004 முதல் ஊர்ப்புற நூலகம் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

19—

## புத்தகக் கண்காட்சி அமைக்கும் திட்டம்

**வினா எண் 38293—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மைய நூலகத்தில் புத்தகக் கண்காட்சி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்ட மைய நூலகங்களில் அதிகபட்சம் 15 நாட்கள் வரை தொடர்ந்து புத்தகக் கண்காட்சி நடத்த மாவட்ட நூலக அலுவலர் அனுமதி வழங்கலாம் என அரசாணை (2டி) எண் 35, பள்ளிக் கல்வி, நாள்: 12-6-2003-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சேலம் மாவட்ட மைய நூலக வளாகத்தில் 4-4-2004 அன்று முதல் 45 நாட்களுக்கு தொடர்ந்து புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டது. புத்தகக் கண்காட்சி அதிகபட்சம் 15 நாட்களுக்கு தொடர்ந்து நடத்த அரசாணை வழங்கப்பட்டு இருந்தாலும், வாசகர்களிடையே நல்ல வரவேற்பு இருந்ததால் 45 நாட்கள் வரை தொடர்ந்து புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டது.

20—

## கேபிள் தொலைக்காட்சி இணைப்பு கட்டண வரி

**வினா எண் 38316—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு கட்டண வரி ஆண்டுக்கு எவ்வளவு தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது?

(ஆ) வசூலிக்க முடியாத நிலுவைத் தொகை எவ்வளவு?

(இ) வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) 33.28 இலட்சம்.



(ஆ) 13.56 இலட்சம்.

(இ) கேபிள் டி.வி. நடத்துபவர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

21—

## கட்டுரைப் போட்டிகள் நடத்துதல்

**வினா எண் 39290—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர் திறனை ஊக்குவிக்கும் வகையில் கட்டுரைப் போட்டிகள் நடத்த அரசு உத்தரவிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினம், சுதந்திர தினம், குழந்தைகள் தின விழாக்கள் பள்ளிகளில் கொண்டாடும்போது பல்வேறு போட்டிகள் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அரசாணை எண் 8, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 14-1-2003-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மாணவர்களுக்குத் திறனை ஊக்குவிக்கும் வகையில் 6 முதல் 8 வகுப்பு படிக்கும் மாணவர்களைத் தனிப் பிரிவாகவும், 9 மற்றும் 10 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களைத் தனிப் பிரிவாகவும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களைத் தனிப் பிரிவாகவும் அமைத்து மாணவர்களிடையே கவிதை, ஓவியம், கலை, நடனம், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நாட்டியம் போன்ற பல்வேறு போட்டிகள் பள்ளிகள் அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2003-2004 ஆம் கல்வி ஆண்டிற்கான மாநில அளவிலான தனித்திறன் போட்டிகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 24-1-2004 அன்று நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

22—

## திருக்குறள் போட்டி

**வினா எண் 39291—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் ஆண்டின் இறுதியில் திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டிக்கு ஏற்பாடு செய்ய கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

பள்ளிகளில் நடைபெறும் அரசு விழாக்களில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு (திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டி உட்பட) வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

23—

## உருது பள்ளி ஆரம்பிக்கும் திட்டம்

**வினா எண் 42311—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகரில் இவ்வாண்டு உருது பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.



24—

## கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 43094—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், புதுநகருக்கு கிளை நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிளை நூலகம் திறக்க புதிதாக ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். தற்போது புதிதாக பணியிடம் தோற்றுவிக்க தடையாணையுள்ளதால் மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்க இயலாது. எனவே புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை, புதுநகருக்கு கிளை நூலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. இருப்பினும் அக்கிராமத்தில் நூலகம் அமைக்க பொது மக்களால் உரிய நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டு 9-12-2003 முதல் ஒரு ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகின்றது.

25—

## மேல்நிலைப் பள்ளியுடன் நூலகத்தினை இணைக்கும் திட்டம்

**வினா எண் 47373—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சேனதண்டாபுரத்திலுள்ள இராமகிருஷ்ணா உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியுடன் நூலகத்தினை இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

[2004 நவம்பர் 18

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி மாணவர்களிடையே பொது நூலகங்களில் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகில் உள்ள மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்றினை தத்து எடுக்க வேண்டும் என்று அரசாணை (2டி) எண் 38, பள்ளிக் கல்வி, நாள்: 11-6-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சேனதண்டாபுரத்திலுள்ள இராமகிருஷ்ணா உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி அதன் அருகில் உள்ள ஆணைக்காரன்சத்திரம் கிளை நூலகத்துடன் 19-8-2004 முதல் இணைக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**26—**

## உயர்நிலைப் பள்ளியுடன் நூலகம் இணைத்தல்

**வினா எண் 47377—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலிலுள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியுடன் நூலகத்தினை இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி மாணவர்களிடையே பொது நூலகங்களில் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகிலுள்ள மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப்



2004 நவம்பர் 18]

பள்ளிகளில் ஒன்றினை தத்தெடுக்க வேண்டும் என்று அரசாணை (2டி) எண் 38, பள்ளிக் கல்வி, நாள்: 11-6-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணையின் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள, வைத்தீஸ்வரன் கோயில் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, வைத்தீஸ்வரன் கோயில் கிளை நூலகத்துடன் இணைக்கப்பட்டு, 2-8-2004 முதல் அப்பள்ளிக்கு நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**27—**

## நூலகம் விரிவுபடுத்துதல்

**வினா எண் 50383—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள நூலகம் விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை கிளை நூலகக் கட்டடம் கட்ட வருவாய்த் துறை மூலம் 2,462 சதுர அடி நிலம் இலவசமாக பெறப்பட்டு, அதில் 2,000 சதுர அடியில் ரூ.11/- இலட்சம் மதிப்பில் கட்டடம் கட்டப்பட்டு, 1-11-1999 முதல் வால்பாறை கிளை நூலகம் செயல்பட்டு வருகின்றது. தற்போதுள்ள கட்டடம் நூலக செயல்பாட்டிற்குப் போதுமானதாக உள்ளது. எனவே, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**28—**

## ஞானபீட விருது

**வினா எண் 50500—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 18

தமிழுக்கு இதுவரை யார் யாருக்கு, எந்தெந்த நூல்களுக்கு ஞானபீட விருது கிடைத்துள்ளது? இன்னும் அதிகமான நூல்களுக்கு அந்தப் பரிசு கிடைக்காமல் போனதற்கான காரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழுக்கு இதுவரை ஒரே ஒரு முறை எழுத்தாளர் திரு. அகிலன் அவர்களது 'சித்திரப்பாவை' நூலுக்கு ஞானபீட விருது அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளிலும் உள்ள சிறந்த இலக்கியங்கள் கருதிப் பார்க்கப்பட்டு ஒரே ஒரு படைப்பு மட்டுமே ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்படுகிறது. இதனால் ஆண்டுக்கு ஒரே ஒரு மொழிக்கு மட்டுமே விருது அளிக்கப்படுவதால் அதிகமுறை பெறும் வாய்ப்புகள் குறைவு. இதற்கென ஒவ்வொரு மொழிக்கும் ஒரு குழு அமைக்கப்பட்டு, குழு பரிந்துரைக்கும் நூல்களை மத்தியக் குழு ஆய்வு செய்து அதில் ஒரு நூலைத் தேர்ந்தெடுத்து வருகிறது. மேலும் சாகித்ய அகாதமி போன்று இதனைக் கண்காணிக்க இதற்கென அலுவலகம் ஏதும் தனியே தமிழ்நாட்டில் இல்லை.

**29—**

## ஞானபீட விருது

**வினா எண் 50501—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழில் சிறந்த இலக்கிய கர்த்தாக்களுக்கு ஞானபீட விருது கிடைக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

விருதுகள் முற்றிலும் தகுதியின் அடிப்படையில் அதற்கென உரிய விதிமுறைகளின்படி வல்லுநர் உயர்நிலைக் குழுவால் மதிப்பீடு



2004 நவம்பர் 18]

செய்யப்பட்டு வழங்கப்படுபவை என்பதால், அரசு நிலையில் முயற்சி மேற்கொள்ளும் நிலை இல்லை. மேலும், ஞானபீட விருது மைய அரசால் வழங்கப்படுகிறது. இத்துறையில், திருவள்ளுவர் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது, கி.ஆ.பெ. விசுவநாதன் விருது ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், ஞானபீட விருது, இதுவரை தமிழுக்கு ஒரே ஒரு முறை அமரர் திரு. அகிலன் அவர்களின் சித்திரப்பாவை நூலுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதில், அரசு முயற்சி மேற்கொள்ளும் நிலை ஏதும் இல்லை.

**30—**

## மாணவர்களுக்கு நூல்கள் வழங்கும் திட்டம்

**வினா எண் 59896—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் கல்லூரி மாணவர்களுக்கு நூல்கள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

**31—**

## விடியோ நூலகங்கள் தொடங்குதல்

**வினா எண் 60749—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் விடியோ நூலகங்கள் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2004 நவம்பர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் வீடியோ நூலகங்கள் தொடங்க அரசால் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை. மேலும், இத்தகைய கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

32—

## குடிநீர் வசதி

**வினா எண் 2734—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியிலுள்ள புதுக்குப்பம், பூம்புகார், வானகிரி, சின்னமேடு, சின்னங்குடி, தாழம்பேட்டை, புதுப்பேட்டை, பெருமாள்பேட்டை, வெள்ளக்கோவில், குட்டியாண்டியூர், தரங்கம்பாடி, சந்திரப்பாடி, சின்னூர்பேட்டை ஆகிய மீனவ கிராமங்களுக்கு போதுமான குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், கோணையாம்பட்டினம் குடியிருப்பு, சீர்காழி மற்றும் செம்பனார்கோவில் ஒன்றியங்களிலுள்ள 133 கடலோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயனுக்கு வரும்பொழுது 133 குடியிருப்புகளும் போதிய குடிநீர் வசதி பெறும்.



2004 நவம்பர் 18]

33—

## பள்ளிக் கட்டடம் சீர்செய்தல்

**வினா எண் 8362—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், பிரதாபராமபுரம் ஊராட்சி, பள்ளிக் கட்டடம் சீர்செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டு 11-வது நிதிக் குழு மானியத்தில் இப்பள்ளி பழுது பார்க்கப்பட்டுள்ளது.

34—

## பள்ளிக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 8861—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், திருவணப்பட்டி கிராமத்திற்கு பள்ளிக் கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், திருவணப்பட்டி தொடக்கப் பள்ளிக்கு, 1993-1994, 1995-1996, 2001-2002 ஆகிய ஆண்டுகளில் முறையே ஜே.வி.வி.டி. மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின் மூலம், தலா 2 அறைகள் கொண்ட 3 கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மொத்தம் 6 வகுப்பறைகள்

[2004 நவம்பர் 18

உள்ளன. பள்ளியில் 205 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். தற்சமயம் பயிலும் மாணவ, மாணவியருக்கு இப்போதுள்ள கட்டடமே போதுமானதாக உள்ளது.

35—

## தொடக்கப் பள்ளிக்குக் கட்டட வசதி

**வினா எண் 10818—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி, நரசிபுரம் ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குக் கரும்பலகை திட்டத்தின்கீழ் ரூ.3,20,000 (ரூபாய் மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

36—

## பள்ளிக் கட்டடம் அமைத்தல்

**வினா எண் 11133—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, மணியக்காரன் கொட்டாய் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு நடப்பாண்டில் பள்ளிக் கட்டடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, மணியக்காரன் கொட்டாய் என்னுமிடத்தில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஏதுமில்லை. ஆனால், அதே ஊராட்சியில் மணியக்காரன் கொட்டாய் என்னுமிடத்திலிருந்து, அருகில் உள்ள காட்டூர் என்னுமிடத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி உள்ளது. மணியக்காரன் கொட்டாய் கிராமத்தில் உள்ள மாணவர்கள் காட்டூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு, ஏற்கெனவே 1999-2000 ஆம் ஆண்டில் கரும்பலகை திட்டத்தின்கீழ் ஒரு பள்ளிக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

37—

## தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 13860—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, பண்ணவாடியான்காடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குப் புதிதாகக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, பண்ணவாடியான்காடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குத் தார்சு கட்டடம் ஒன்று நல்ல நிலையில் உள்ளது. இப்பள்ளியில் உள்ள கட்டடம் தற்போது பயின்றுவரும் 72 மாணவர்களுக்கு (ஆண் 42; பெண் 30) போதுமானதாக உள்ளது. ஆகையால், கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

[2004 நவம்பர் 18

38—

## தொடக்கப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண் 15053—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய்அள்ளி அடுத்த சிறுகனூரில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய்அள்ளி அடுத்த சிறுகனூரில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டடம், 1999-2000 ஆம் நிதியாண்டில், ஒன்றியப் பொது நிதித் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டது.

39—

## கழிவுநீர்க் கால்வாய் சீரமைத்தல்

**வினா எண் 18901—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர். கே. நகர் தொகுதி, 7-வது வட்டம், டி.எச். ரோடு, செல்வ விநாயகர் சந்து, சேனியம்மன் கோயில் தெரு, கார்ப்பரேஷன் காலனி, முருகேசன் காலனி, கன்னியப்பன் காலனி ஆகிய இடங்களில் இருக்கும் கழிவுநீர்க் கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டு, சுகாதாரச் சீர்கேடுகள் மிகுந்து இருக்கின்றன. இதனைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 நவம்பர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர். கே. நகர் தொகுதி, 7-வது வட்டம், டி.எச் ரோடு, செல்வ விநாயகர் சந்து, சேனியம்மன் கோயில் தெரு, கார்ப்பரேஷன் காலனி, முருகேசன் காலனி, கன்னியப்பன் காலனி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆள்நுழைவாயில்கள், 31-3-2004 முடிய தூர் வாரப்பட்டு, இருந்த கழிவுநீர் மற்றும் கால்வாய்களின் அடைப்புகள் நீக்கப்பட்டு, சரிசெய்யப்பட்டு விட்டன. ஆகவே, கழிவுநீர் எங்கும் வழிந்தோடவில்லை.

40—

## நிலத்தடி நீர் கைப்பம்புகள் அமைத்தல்

**வினா எண் 19150—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 8-வது வட்டம், கே.ஜி. கார்டன், மேயர் பாசுதேவ் தெரு, எம்.சி.எம். கார்டன், திருநாவுக்கரசு தோட்டம், ஆரணி கங்கையன் தெரு ஆகிய இடங்களில் நிலத்தடி நீர் கைப்பம்புகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை ஆர்.கே. நகர் தொகுதி, 8-வது வட்டம், கே.ஜி. கார்டன், மேயர் பாசுதேவ் தெரு, எம்.சி.எம். கார்டன், திருநாவுக்கரசு தோட்டம், ஆரணி கங்கையன் தெரு ஆகிய இடங்களில் 36 நிலத்தடி நீர்க் கைம்பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 3 புதிய பம்புகள் இப்பகுதியில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

[2004 நவம்பர் 18

41—

## ஆள்நுழைவாயில்கள் சீரமைத்தல்

**வினா எண் 19473—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 8-வது வட்டம், தியாகப்ப தெரு, ஆர்.கே. நகர் 1 முதல் 3-வது தெரு வரை உள்ள இடங்களில் இருக்கும் ஆள்நுழைவாயில்களைச் சீரமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி, 8-வது வட்டம், தியாகப்ப தெரு, ஆர்.கே. நகர் 1 முதல் 3-வது தெரு வரை உள்ள இடங்களில் இருக்கும் ஆள்நுழைவாயில்கள் அனைத்தும் சாலை மட்டத்திற்கு உயர்த்தி சரி செய்யப்பட்டுவிட்டன.

42—

## சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 21802—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, எச்சூர் ஊராட்சி, நடுநிலைப் பள்ளிக்கு, பள்ளியைச் சுற்றிச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த எச்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்



2004 நவம்பர் 18]

பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டும் பணி மேற்கொள்ள, 2003-2004 ஆம் நிதியாண்டில் எந்தத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, மேற்கூறிய பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க இயலாது.

43—

## தொடக்கப் பள்ளி பழுது சீர்செய்தல்

**வினா எண் 29017—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி பழுதடைந்துள்ளதால், அரசு சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, 2002-2003 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு ஊக்க நிதித் திட்டத்தின்கீழ் ரூ.20,000 மதிப்பீட்டில் பழுது சரிசெய்யும் பணி மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளது.

44—

## தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர்

**வினா எண் 30450—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சி, அரசூரிலுள்ள ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தருவதற்கு திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சி, அரசூரிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு பொது நிதி மற்றும் ஏனைய திட்ட நிதிகளில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, மேற்கூறிய பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க இயலாது.

45—

## கூடுதல் வகுப்பறை கட்டுதல்

**வினா எண் 30798—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் ஊராட்சியில் ஆர்.சி. மிடில் பள்ளியில் கூடுதல் வகுப்பறை ஒன்று கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பணிக்குப்பம் ஊராட்சியில் ஆர்.சி. மிடில் பள்ளி தனியார் நடத்தும் பள்ளி. எனவே, இப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டித்தர விதிமுறைகளின்படி வழிவகை ஏதும் இல்லை.

46—

## கழிவுநீரை அகற்றுதல்

**வினா எண் 37340—திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) பெரம்பூர் தொகுதி, சிவகாமி அம்மையார் காலனி, காந்தி நகர் பகுதிகளின் கழிவுநீரை அகற்றிடும் பணி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகாமி அம்மையார் காலனி, காந்தி நகர் பகுதிகளில் கழிவுநீரகற்று அமைப்பு பணி முடிவடைந்துவிட்டது.

47—

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 41333—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.2,334.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு குறித்த விவரம் கீழ்வருமாறு:—

[2004 நவம்பர் 18

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சங்களில்) 2003–2004 |
|---|---|---|
| 1. | நாங்குநேரி, திசையன்விளை மற்றும் 342 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம் | 161.00 |
| 2. | பண்குடி, வடக்கு வள்ளியூர், ஏர்வாடி, திருக்குறுங்குடி நகரப் பேரூராட்சிகள், களக்காடு ஊரகப் பேரூராட்சி மற்றும் 142 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 645.00 |
| 3. | கடையநல்லூர், புளியங்குடி நகராட்சிகள், சுரண்டை, சாமபவர் வடகரை நகர பேரூராட்சிகள், 84 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 520.00 |
| 4. | செங்கோட்டை நகராட்சி, குற்றாலம், இலஞ்சி நகரப் பேரூராட்சிகள், மேலகரம், எஸ். புதூர் ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 46 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 643.00 |
| 5. | மானூர் மற்றும் 400 ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கவும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில் நகராட்சி, திருவேங்கடம் ஊரகப் பேரூராட்சி மற்றும் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், விருதுநகர் மாவட்டத்திலுள்ள சிவகாசி நகராட்சி மற்றும் திருத்தங்கல் நகரப் பேரூராட்சிக்கான குடிநீர் ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 105.00 |
| 6. | கீழப்பாவூர் பேரூராட்சி மற்றும் ஐந்தாங்கட்டளை மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 260.00 |
| | மொத்தம் | 2,334.00 |



2004 நவம்பர் 18]

48—

## தொடக்கப் பள்ளியை மராமத்து செய்தல்

**வினா எண் 43590—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கந்தம்பட்டி ஊராட்சி, ராசாம்பட்டி தொடக்கப் பள்ளியை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், ராசாம்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியினைச் சீர்செய்ய ரூ.50,000/-க்கு பொறியியல் பிரிவினரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 2001-2002 ஆம் ஆண்டு சிறுசேமிப்பு ஊக்க நிதியில் பழுது நீக்க வேலைகள் முடிவடைந்துள்ளன.

49—

## பாலர் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண் 45767—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொட்டாயமேடு பாலர் பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கொட்டாயமேடு பாலர் பள்ளிக்குக் கட்டடம் கட்டிக்கொடுக்க நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லாததால் கட்டடம் கட்டிக் கொடுக்க இயலாது.*

**50—**

### தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 52986—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள கு. வல்லம், இலையூர் தெரு, தாவடநல்லூர், புக்குழி ஆகிய இடங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கு. வல்லம் கிராமத்தில் இதுவரை 40 தொகுப்பு வீடுகளும், இலையூர் கிராமத்தில் இதுவரை 32 தொகுப்பு வீடுகளும், தாவடநல்லூர் கிராமத்தில் இதுவரை 30 தொகுப்பு வீடுகளும், புக்குழி கிராமத்தில் இதுவரை 52 தொகுப்பு வீடுகளும், ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 2003-2004 ஆம் நிதியாண்டில் கு. வல்லம் கிராமத்தில் 10 தொகுப்பு வீடுகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவர்கள் அடுக்குமாடிக் குடியிருப்பு பழுதடைந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சிறப்புக் கவன ஈர்ப்பு. திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவர்கள் குடியிருந்து வரும் அடுக்குமாடி குடியிருப்பு முற்றிலுமாகப் பழுதடைந்து உள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. த. ஆறுமுகம் அவர்கள், சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள். அது குறித்து சுருக்கமாகப் பேச அவர்களை அழைக்கிறேன். திரு. த. ஆறுமுகம். (குறுக்கீடு)*

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்பு....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடு) திரு. த. ஆறுமுகம். (குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** *ஒரு சட்டமன்ற உறுப்பினர் பற்றிய பிரச்சினை. (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே,*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. மணி அவர்களே, அவையெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள். (குறுக்கீடு) தாங்கள் கொடுத்திருக்கிற எல்லாத் தீர்மானங்களும் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. அவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.*

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

### திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவர்கள் அடுக்குமாடிக் குடியிருப்பு பழுதடைந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஆறுமுகம், பேசுங்கள்.*

*முற்பகல் 11-10*

**திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு*

என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவ கிராமத்திற்கு 492 அடுக்குமாடி குடியிருப்புகள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டன. அக்கட்டடங்கள் முற்றிலுமாக பழுதடைந்து, மீனவர்கள் பயன்படுத்த முடியாத நிலைமையில் உள்ளன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேயும் அவர்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள காரணத்தினாலே சொத்து வரியில் விலக்களிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது என்ற ஒரே காரணத்தினாலே கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தக் கட்டடங்களைப் பராமரிக்கும் பணியை அவர்கள் மேற்கொள்ளவில்லை. மேலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகளை மீனவர்களுக்கு அளித்து வருகின்ற நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் இதனைப் பரிசீலனை செய்து, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, உடனடியாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, எண்ணூர் நெடுஞ்சாலை போடப்பட்டபோது திருச்சினாங்குப்பத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 492 அடுக்குமாடி வீடுகளைக் கட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையின் 18-12-1992 ஆம் நாளிட்ட அரசாணை எண் 417-ல் ரூ.2.37 கோடிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 1991-96 ஆட்சியில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப்பணி ஜனவரி 1993 இல் தொடங்கப்பட்டு, செப்டம்பர் 1994 இல் முடிக்கப்பட்டது. 210 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடுகள் 1994 இல் கட்டி முடிக்கப்பட்டு, மீனவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. பெரும்பாலான மீனவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளதால் வீடுகளுக்கான சொத்து வரிக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலக்களிப்பு செய்தார்கள். சாலை, தெரு விளக்குகள் மற்றும் கழிவுநீர்க் குழாய்களின் பராமரிப்பு, திருவொற்றியூர் நகராட்சியிடம் 11-11-1997 ஆம் நாளிட்ட மீன்வளத் துறை இயக்குநரின் கடித எண் 65855/சி1/1996 வழியாக ஒப்படைக்கப்பட்டது.





மீனவர் கூட்டுறவுச் சங்கம் கடந்த 2000 ஆம் ஆண்டு இவ்வீடுகளில் ஏற்பட்ட சில பழுதுகளை மீன்வளத் துறையின் நிதியிலிருந்து சரிசெய்து கொடுக்குமாறு மீன்வளத் துறையைக் கேட்டுக்கொண்டது. ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சியில் இவ்வீடுகளின் பழுதுபார்ப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வீடுகள் கடலுக்கு மிக அருகில், அதாவது 30 மீட்டருக்குள் உள்ளதால் உப்புக் காற்று பாதிப்பு காரணமாகவும் மற்றும் வீடுகளைப் பயனாளிகள் சரிவர பராமரிக்காததாலும் வீடுகளில் வெளிப்புற பூச்சு, சூரிய ஒளி தடுப்புச் சுவர் மற்றும் படிக்கட்டுகளின் நிலை ஆகியவற்றில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. சில வீடுகளில் கடைக்கால் சேதம் அடைந்துள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மீனவர்களின் கோரிக்கையை ஏற்று தற்போது மீண்டும் வீடுகளின் பழுதுபார்ப்புப் பணி சிறப்பு நிகழ்வாக மேற்கொள்ளப்படவுள்ளது. மேற்படி மீனவர்களுக்கான இலவச வீடுகள் 1991-96, அதாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் மீனவர்களின் நலன் கருதி அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் மீனவர் சங்கங்கள் கோரிக்கை வைத்தும் இந்த வீடுகளில் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் தற்போது பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் சொல்லப்போனால், மீனவர்களுடைய நலன் காக்கும் அரசு என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மீனவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 90.50 இலட்சத்திற்கு நிதியை ஒதுக்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. கவன ஈர்ப்பு

### (அ) விருத்தாசலம் நகரில் உள்ள மணிமுக்தா நதி மேம்பாலம் முழுவதும் இடிந்து விழுந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்கள், ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த்

துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

*முற்பகல் 11-45*

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் நகரில் உள்ள மணிமுக்தா நதியின் குறுக்கே உள்ள மேம்பாலம் முழுவதும் இடிந்து தரைமட்டமாக விழுந்துள்ளதைக் குறித்து அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து" விவாதிக்க, அரசின்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவ்வளவுதான்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்து, அரசின்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கோவிந்தசாமி, கவன ஈர்ப்பு அறிவிப்பை வாசிப்பதோடு உட்கார்ந்துவிட வேண்டும். (சிரிப்பு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

## அறிக்கை

கடலூர் நெடுஞ்சாலை கோட்டத்தில், விருத்தாசலம் உட்கோட்ட எல்லையில் உள்ள முக்கிய மாநிலச் சாலையான கடலூர்- விருத்தாசலம்-சேலம் சாலை கி.மீ. 53/10-54/2 இல் (விருத்தாசலம் நகர் பகுதி) மணிமுக்தா நதியின் குறுக்கே அமைந்துள்ள செங்கல் வளைவுப் பாலம் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக 13-11-2004 அன்று அதிகாலையில் சேதமடைந்தது. இப்பாலத்தில் உடனடியாக வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு மாற்று வழியில் போக்குவரத்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2. இந்தப் பாலமானது 1878 ஆம் ஆண்டில் செங்கற்களால் கட்டப்பட்ட வளைவுப் பாலமாகும் (Brick arch bridge).

| | |
|---|---|
| இதில் உள்ள மொத்த கண்கள் | - 10 எண்ணிக்கை |
| கண் அளவு | - 15.30 மீட்டர் |
| கண் உயரம் | - 5.70 மீட்டர் |



3. இப்பாலத்தின் மேல்தளம் பழுதடைந்ததனால், சுமார் முப்பத்து எட்டு ஆண்டுகளுக்கு (1966) முன்பு பாலத்தின் மேல் தளத்தில் மட்டும் கான்கிரீட் சிமெண்ட் பலகைகள் (R.C.C. Slab redecking) போடப்பட்டது. தற்போது மாவட்டத்தில் பரவலாகப் பெய்துவரும் பெருமழையாலும், கல்ராயன் மலைப் பகுதியில் பெய்து வரும் பெருமழையாலும் கோமுகி, மணிமுக்தா ஆகிய அணைக்கட்டுகளில் திறந்து விடப்பட்ட உபரி நீரால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தாலும், இப்பாலத்தின் கீழே நீர்மட்டம் உயர்ந்து வெள்ள நீர் அதிவேகத்துடன் பாய்ந்து சென்றது. இப்பாலம் கட்டப்பட்டு சுமார் 126 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அருகில் உள்ள சிமெண்ட் ஆலைகள் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத்திற்குச் செல்லும் அதிக பளு ஏற்றிய சுமையுந்துகள் இப்பாலத்தின் வழியே செல்கின்றன. இப்பாலத்தில் உள்ள 7-வது எண் கொண்ட தூணின் (PIER No.7) (தொழுதூர் பக்கமிருந்து 3-வது தூண்) அடித்தளத்தில் ஏற்பட்ட மண் அரிப்பால், அடித்தளம் (Foundation), தாங்கு தூண் (Brick Pier) மற்றும் மேல்தளம் (Super Structure) சுமார் 90 செ.மீ. கீழே இறங்கிவிட்டது. இதனால் கண் 7 மற்றும் 8-ல் உள்ள செங்கற்களால் ஆன வளைவுப் பகுதிகள் சேதமடைந்து, விரிசல்கள் ஏற்பட்டு, இரண்டு கண்கள் அபாயகரமான நிலையில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பாலத்தின்மீது உடனடியாகப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

4. மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு மற்றும் ஆய்வு) மற்றும் மாவட்ட ஆட்சியர், கடலூர் ஆகியோர் அடங்கிய குழு தள ஆய்வு செய்தது. இத்தள ஆய்வின்பொழுது ஏற்கெனவே சேதமடைந்த இரு கண்களில் இரு பக்கங்களிலுமுள்ள மேலும் இரு கண்களும் வலுவிழந்துள்ளன என்பது கண்டறியப்பட்டது.

5. உடனடி நடவடிக்கையாக விருத்தாசலம் இரயில் நிலையம், எருமனூர் சாலை-மங்களம்பேட்டை-மணலூர் சாலை ஆகிய அரசுச் சாலைகள் மற்றும் சுமார் 300 மீ. நீளமுள்ள துறை சாரா சாலைகள் சரிசெய்யப்பட்டு அதன் வழியே வாகனப் போக்குவரத்து செல்ல மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

6. இப்பாலம், நகர்ப் பகுதியின் மத்தியில் அமைந்துள்ளதால், பாலம் சேதமடைந்திருப்பினும் அதனை உபயோகித்திட பொதுவாக பாதசாரிகள் முனைவார்கள். பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி இப்பாலத்தின் இரு கண்களில் சேதமடைந்த மேல் தளத்தினை உடனே உடைத்திட

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 நவம்பர் 18

குழு முடிவு செய்தது. இதன் அடிப்படையில் அந்த இரு கண்களில் சேதமடைந்து, எந்நேரத்திலும் கீழே விழுந்து விடும் நிலையில் இருந்த மேல் தளம் உடைத்தெடுக்கப்பட்டது.

7. சுமார் 126 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட பாலம் என்பதால், அதிகச் சுமை கொண்ட வாகனங்களைத் தாங்கும் திறனை இழந்துவிட்டது எனக் கண்டறியப்பட்டது. வாகனப் போக்குவரத்து தடையின்றி நடைபெற, விருத்தாசலம் நகருக்கருகில் மணிமுக்தா நதியின் குறுக்கே முக்கிய மாநில சாலையில் அமைந்துள்ள இப்பாலத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு இதனைத் திரும்பக் கட்டுவதற்கு மதிப்பீடு தோராயமாக ரூ.5.00 கோடியாகும். இதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இரு சக்கர வாகனப் போக்குவரத்திற்கும் பொதுமக்கள் உபயோகத்திற்கும் பாலத்தின் அருகில் தற்காலிக மாற்று வழிப்பாதை உடன் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 18-11-2004 அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கோவிந்தசாமி, முதலிலே ஒரு கேள்வி கேளுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை முழுவதும் படித்துப் பார்த்தேன். ** உதாரணமாக, அவர் கொடுத்துள்ள விவர அறிக்கையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவிந்தசாமி, விவர அறிக்கையை நீங்கள் படித்துப் பார்த்து அதிலே இருப்பது சம்பந்தமாக ஒரு கேள்வி கேளுங்கள். ** என்று சொல்வது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு மற்றும் ஆய்வு) மற்றும் மாவட்ட ஆட்சியர், கடலூர் ஆகியோர் அடங்கிய குழு கள ஆய்வு செய்தது என்று அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆய்வைப் பற்றி நான் 2-5-2002 அன்று உடுக்குறியிட்ட வினா எண் 18874 மூலம் இதே அவையிலே கேட்டிருக்கின்றேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6-5-2003 அன்று அதிகாரிகள் கொடுத்த அறிக்கையை எனக்குப் பதிலாக அளித்திருக்கிறார்கள். அதில் கேட்கப்பட்ட விவரம், விருத்தாசலம் நகரின் கடை வீதியையும், பேருந்து நிலையம் மற்றும் பல பகுதிகளையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2004 நவம்பர் 18] [டாக்டர் ஆர். கோவிந்தசாமி]

இணைக்கக்கூடிய மணிமுக்தா நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் உள்ளதா என்ற வினா ஒன்று. இரண்டு (ஆ) ஆம் எனில், இந்தப் பகுதியில் ஒரு புதிய பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் ஆய்வில் உள்ளதா? இதுதான் கேள்வி. 2-5-2002-ல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் (அ)-க்கு ஆம். அதாவது, பழுதடைந்த நிலையில் உள்ளதை அறியும் என்று கொடுத்திருக்கிறார். (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலத்தில் பழுதடைந்துள்ள ஏப்ரான் மட்டும் சென்ற நிதியாண்டில் சீர் செய்யப்பட்டுவிட்டது. தற்போது இந்தப் பாலம் நல்ல நிலையில் உள்ளதால் உடனடியாகத் திரும்பக் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. 2003-ல் கொடுக்கப்பட்ட பதில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவிந்தசாமி, இப்போது ஒரு கேள்வி கேளுங்கள். கொடுத்திருக்கிற விவர அறிக்கையிலே இப்போது ஒரு கேள்வி கேளுங்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்படும், என்ன செய்ய வேண்டும் என்று இப்போது ஒரு கேள்வி கேளுங்கள். பழைய கேள்விகளை எல்லாம் ஞாபகப்படுத்தாதீர்கள். (சிரிப்பு)

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 51 ஆயிரம் மக்கள் கொண்ட விருத்தாசலம் நகரிலே ஏறக்குறைய இந்த மணிமுக்தா நதியின் பாலம் 128 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டது. 57 ஆயிரம் ரூபாயில் கட்டப்பட்ட இந்தப் பாலம் விருத்தாசலம் நகரத்தை 2 பகுதிகளாகப் பிரித்து, மேற்குப் பகுதியிலே மருத்துவமனை, கடைகள் மற்றும் அலுவலகங்கள் இருக்கின்றன. கிழக்குப் பகுதியிலே அரசு அலுவலகங்கள், கடை வீதிகள் இருக்கின்றன. அதற்கு வேறு வழியே கிடையாது. அந்தப் பாலத்தினுடைய நீளம் 192 மீட்டர். அகலம் 10 மீட்டர். இதுகுறித்து நானும் பாராளுமன்ற உறுப்பினர் பொன்னுசாமி அவர்களும் நேரில் பார்வையிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவிந்தசாமி, என்ன செய்ய வேண்டும் என்று ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** பல முறை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு மனுக்கள் கொடுத்தும் சட்டமன்றத்திலே வினாக்கள் எழுப்பியும் இதற்குண்டான உரிய நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்? அதிகாரிகள் தவறை அவர் கண்டுகொள்ளவில்லை. அதிகாரிகள் ஒழுங்காகச் செய்தால்...

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2002-ல் கேள்வி கேட்கப்பட்டு 2003-ல் நான் பதிலளித்த விவரங்களை இங்கே சொன்னார்கள். அப்போது ஏற்பட்ட அந்தச் சிறிய பழுது சரிசெய்யப்பட்டு போக்குவரத்திற்கு இலாயக்கான பாலமாக இருந்ததனால் அதில் தொடர்ந்து போக்குவரத்து நடந்து வருவதற்கு அனுமதிக்கப்பட்டது என்ற விவரத்தினை அன்றைக்கு நான் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், இன்றைக்கு நிலைமை வேறு. கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கிட்டத்தட்ட 126 ஆண்டுகளுக்கு முன்னால் செங்கற்கள் வளைவுப் பாலமானது மிகப் பெரிய மண் அரிப்பு கீழ்பகுதியில் ஏற்பட்ட காரணத்தினால் 38 ஆண்டுகளுக்கு முன்பாக அதன் மேல்பகுதி சேதமடைந்து, கான்கிரீட் தளம் ஒன்றை விரிவுபடுத்தி போடப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த 7-வது மற்றும் 8-வது கண்களில் அதனுடைய அடித்தளப் பகுதி வெள்ளப் பெருக்கினால் தற்போது வலுவிழந்த காரணத்தினால் அது சற்று 90 செ.மீ. அளவிற்கு கீழிறங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2003-ல் கேள்வி கேட்கும்போது இந்தமாதிரியான ஒரு அபாயகரமான சூழ்நிலை, போக்குவரத்து தடைபடுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை அந்தப் பாலத்தில் எழவில்லை. தொடர்ந்து 2003-லிருந்து நாம் இப்போது 2004 இறுதியில் நவம்பர் மாதத்தில் இருக்கிறோம். இதுவரை எந்த ஒரு தங்குதடை இல்லாமலும் அந்தப் பாலம் உறுதியான பாலமாகத்தான் இருந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல தமிழகம் முழுவதும் அல்ல, இந்தியா முழுவதும வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விருத்தாசலத்திற்கு வாருங்கள், இந்தியா முழுவதும் ஏன் சுற்றுகிறீர்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இந்தியாவிலே தமிழ்நாட்டிற்கு வந்தால்தான் விருத்தாசலம் வருகிறது இல்லையா? விருத்தாசலத்திலே



2004 நவம்பர் 18] [டாக்டர் ஆர். கோவிந்தசாமி]

1996-ல் இதே பாலத்தின் அடியில் 18 அடி தண்ணீர் சென்றது. இந்த முறை தண்ணீர் சென்றது 14.5 அடி. தண்ணீர் வேகம் அதிகமாகவெல்லாம் இல்லை. கடலூர் மாவட்டத்தில் மழை அளவு அதிகமாக இருந்ததேயொழிய, இந்தப் பாலத்தில் சென்ற தண்ணீரின் அளவு 14.5 அடி. 1996-ல் 18 அடி. அதற்கு உண்டான குறிப்புகளை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவிந்தசாமி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர அறிக்கையிலேயே இருக்கிறது 5 கோடி ரூபாய் செலவிலே இதைக் கட்டுவதற்கான கருத்துரு, அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று. ஆகவே, உங்களுடைய கோரிக்கை நிறைவேறிவிட்டது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கடலூர் மாவட்டம், கடலூர் நெடுஞ்சாலைக் கோட்டத்தில் விருத்தாசலம் உட்கோட்ட எல்லையில் உள்ள முக்கிய மாநிலச் சாலையான கடலூர் -விருத்தாசலம்-சேலம் சாலை கி.மீ. 53/10 முதல் 54/2 வரையிலான விருத்தாசலம் நகர மையப் பகுதியில் மணிமுக்தா நதியின் குறுக்கே அமைந்துள்ள செங்கல் வளைவுப் பாலமாகும். இப்பாலம் சுமார் 126 ஆண்டுகளுக்கு முன் 1878 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட செங்கல் வளைவுப் பாலமாகும். கடந்த சில நாட்களாக பெய்த பெருமழையின் காரணமாக 13-11-2004 அன்று மேற்படி செங்கற்களால் கட்டப்பட்ட வளைவுப் பாலம் அதிகாலையில் சேதமடைந்தது. உடனடியாக இப்பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு மாற்று வழியில் போக்குவரத்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்பாலத்தினுடைய.........

**திரு. துரைமுருகன்:** On a point of order, please.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** No, No, Point of order.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்ன? விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, பெரியதாக ஒன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, கவன ஈர்ப்பு அறிவிப்பு என்று ஒரு உறுப்பினர் கொடுத்தால் அது குறித்து விவர அறிக்கை இருக்கிறது என்று சொல்வார்கள். அதைச் சொல்லிவிட்டார் அமைச்சர். இரண்டு கேள்விகள் கேட்கலாம். முடிந்தது. நீங்களும் முடித்துவிட்டீர்கள். கேள்வி முடிந்து அடுத்த சப்ஜெக்ட்டிற்கும் போய்விட்டீர்கள். மறுபடியும் அந்த அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படிக்கிறார்கள். படிப்பதிலே எனக்கு ஒன்றும் இல்லை. இன்றைக்கு அதிகமான பிஸினஸ் ஒன்றும் இல்லை என்றால் படித்ததையே படித்துக் கொண்டிருங்கள் என்று நீங்கள் சொல்லிக்கொண்டு இருக்கலாம். அதற்காக அல்ல. இது மரபு அல்ல. ஏனென்றால், அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டது. நாங்கள் படித்தாகிவிட்டது. அவர் கேள்வி கேட்டாகிவிட்டது. பதில் சொல்லியாகிவிட்டது. என்ன விஷயம்? பாவம், அவர் புது உறுப்பினர், அவராலே கேட்க முடியவில்லை. என்ன கேட்டிருக்க வேண்டும் என்றால், போன முறை ஒரு ஆண்டிற்கு முன்னால் கேட்ட கேள்விக்குப் பாலம் பலமாக இருக்கிறது என்று சொன்னீர்கள். ஓராண்டில் இடிந்துவிட்டது. அப்போது சொன்னது உண்மையா? இப்போது இடிந்தது உண்மையா? ஆனால், இடிந்ததுதான் உண்மை என்று சொல்லி இருக்க வேண்டும். ஆனால், அன்றைக்கு நீங்கள் கொடுத்தது சரியான விவரம் அல்ல. எனவே, அவை இதைக் கவனிக்க வேண்டும்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்குக் கால அவகாசம் இருக்குமானால் சட்டசபையில் எப்படி கேள்விகள் கேட்க வேண்டும். எப்படிப் பதில்களைப் பெற வேண்டும் என்று ஒரு வகுப்பு நடத்தினால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்வத்தோடு கலந்துகொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு இன்னும் ஒன்று, மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு இன்னும் முன் துறை அமைச்சர் வாசனை போகவில்லை என்று கருதுகிறேன்! (சிரிப்பு)



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைமுன் சில விளக்கங்களைத் திரித்துக் கூறிய காரணத்தினால் நானும் சில விளக்கங்களைக் கூற வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. 2003-ல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பியபொழுது, அந்தப் பாலத்தில் சிறிது சேதம் ஏற்பட்டிருந்தது. அது சரி செய்யப்பட்டு விட்டது. தொடர்ந்து போக்குவரத்திற்கு இலாயக்கான பாலமாக அது இருந்த காரணத்தினால் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது. தொடர்ந்து ஒன்றரை ஆண்டு காலம் அந்தப் பாலத்தில் வாகனப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால், இன்றைய சூழ்நிலை வேறு. இன்றைய சூழ்நிலை, கடும் மழையின் காரணமாக மிக அதிகமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட காரணத்தினால், மேல் தளம் முழுவதுமாக கீழே இறங்குகிற சூழ்நிலை ஏற்பட்டு அந்தப் பாலம் போக்குவரத்திற்கு இலாயக்கற்ற பாலமாக இருந்ததினால் இன்றைக்கு சூழ்நிலை மாறியிருக்கின்றது. அதை அவர் திரித்து 2003-லே போக்குவரத்திற்கு இலாயக்கற்ற பாலமாகக் கூறுவதற்கு முற்படுகின்றார். அது சரியான தகவல் அல்ல என்பதனை நான் இங்கு தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடு இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், நெடுஞ்சாலைத் துறையினுடைய தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களையும், நெடுஞ்சாலைத் துறையினுடைய தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு) அவர்களையும் உடனே அந்த இடத்திற்குச் சென்று தள ஆய்வு செய்ய ஆணையிட்டார்கள். அவர்களும் உடனே தள ஆய்வு செய்து அந்தப் பாலத்தை உடனே அப்புறப்படுத்திவிட்டு, புதிய பாலம் கட்டப்பட வேண்டுமென்று துறையின் சார்பாக அரசிற்கு 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பிரேரணை ஒன்று அனுப்பியிருக்கின்றார்கள். கூடிய விரைவில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அந்த இடத்தில் உறுதியான, தரமான புதிய பாலம், உயர்மட்டப் பாலம் ஒன்று கட்டி முடிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[2004 நவம்பர் 18

## (ஆ) தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகள் தொடங்கும் நேரம் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஞானசேகரன் அவர்கள் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளின் தொடங்கும் நேரத்தை மாற்ற வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

## 3. தகவல் கோரல்-தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சாயப்பட்டறைகளிலிருந்து கழிவு நீர் நொய்யல் ஆற்றில் கலப்பது குறித்து நான் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் கேட்டுவிட்டார். இதெல்லாம் முடியட்டும், உட்காருங்கள்.*

## 4. கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

### (அ) அரசுப் பள்ளிகள் தொடங்கும் நேரம் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

### அறிக்கை

*2001-02 ஆம் கல்வி ஆண்டு வரை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் துவங்கும் நேரம் கீழ்க்கண்டுள்ள வெவ்வேறு நேரங்களில் கடைபிடிக்கப்பட்டன:*



2004 நவம்பர் 18] [திரு. சி.வி. சண்முகம்]

*காலை 8-00 மணி, 9-00 மணி, 9-30 மணி, 10-00 மணி.*

*மாநிலத்தில் பள்ளிகள் துவங்கும் நேரம் ஒரே சீராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் ஆகிய இரண்டு இடங்களிலும் பள்ளிகள் துவங்கும் நேரம் 2002-03 ஆம் கல்வியாண்டு முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் கீழ்க்கண்ட நேரங்களில் துவங்கப்பட பள்ளிக் கல்வி இயக்குநரின் அளவில் நிர்ணயம் செய்யப்பட்டது:-*

*(1) நகர்ப்புறம் — காலை 8-30 மணி*

*(2) கிராமப்புறம் — காலை 9-00 மணி*

*இந்த இரண்டு பள்ளி துவங்கும் நேரங்களும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 2002-2003 ஆம் கல்வி ஆண்டிலிருந்து அதாவது 1-6-2002-லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.*

*2. தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் துவங்கும் நேரத்தில் எந்த மாறுதலும் செய்யப்படவில்லை. அப்பள்ளிகள் பொதுவாக காலை 9-30 மணிக்கு துவங்கப்பட்டு வருகிறது.*

*3. மேற்கண்டவாறு பள்ளிகள் துவங்கும் நேரம் மாற்றப்பட்டதால் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதியின்மை, பள்ளிக்கு புறப்படும்முன் உணவு உட்கொள்ள முடியாத சூழ்நிலை, பள்ளிகள் சீக்கிரமே துவங்கிவிடுவதால் மாணவர்களின் பெற்றோர்கள் அனுபவிக்கும் சிரமங்கள் குறித்து பொதுமக்கள் மற்றும் கிராமப்புற மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. மேலும், 20-10-2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பத்திரிகை செய்திக் குறிப்பில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி நேரங்களில் தகுந்த மாற்றங்கள் செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து தரப்பினர்களின் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவுடன் பரிசீலனை செய்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் பள்ளி துவங்கும் நேரங்களைக் கீழ்க்கண்டுள்ளவாறு மாற்றலாம் என்று ஆணையிட்டுள்ளார்கள்.*

*(அ) சென்னை தவிர, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளின் வகுப்புகள் காலை 9-30 மணிக்குத் துவங்கும்.*

*(ஆ) சென்னை நகரில், பள்ளிகளின் அமைவிடம், போக்குவரத்து வசதிகள், போக்குவரத்து நெரிசல்கள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு கீழ்க்கண்ட ஏதாவது ஒரு நேரத்தில் பள்ளிகள் துவங்க அனுமதிக்கப்படுகிறது.*

*காலை 8-30 மணி அல்லது 9-00 மணி அல்லது 9-30 மணி.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே 8-30 மணி என்று இருந்ததை இப்பொழுது 9-30 மணி என்று மாற்றி அமைப்பதற்கு ஏற்கெனவே கோப்புகள் முதலமைச்சருடைய கவனத்திற்கு அனுப்பப்பட்டு அதற்கான ஆணையும் பெறப்பட்டிருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும்கூட 20-10-2004 அன்று கொடுத்த பத்திரிகைச் செய்தி அறிக்கையிலேகூட இதை மாற்றியமைப்பதற்கான கருத்துரு பரிசீலிக்கப்படும் என்று சொல்லி, இந்தக் கருத்துருவை ஆணையாக வெளியிடுவதற்கான அறிவிப்பை இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். இதிலே, நம்முடைய பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோருமே காலை 8-30 மணி என்று சொன்னால் கிராமப்புறப் பகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்கு பஸ் கிடைப்பதில்லை. சில நேரங்களிலே அவர்கள் உணவு தயாரித்துவிட்டு, ஆசிரியர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டியதிலே காலதாமதம், மாணவர்களேகூட பசியும் பட்டினியுமாக செல்ல வேண்டிய ஒரு நிலை. ஆகவே, அதை 9-30 மணி என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தவுடன் இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். சென்னையைப் பொறுத்தளவிலே அதற்கு ஒரு விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். அந்த விதிவிலக்கு, 8-30 மணி, 9-00 மணி அல்லது 9-30 மணி என்று மூன்று விதமான நேரம். அதில் எது அவர்களுக்கு உகந்ததாக இருக்கிறதோ அதை சென்னை மாநகராட்சியிலே இருக்கக்கூடிய பள்ளிகள் வைத்துகொள்ளலாம் என்ற ஒரு நிலையையும் உருவாக்கியிருக்கிறீர்கள். மாநகரத்திற்கும்கூட ஏதாவது ஒரு குறிப்பிட்ட நேரம், நீங்கள் அதை 8-30 என்று வைப்பதைவிட அதை 9-00 மணி என்று வைத்து கிராமப் பகுதிகளிலே நீங்கள் 9-30 மணி என்று வைத்து ஆணை உடனடியாக வெளியிடப்பட்டு நாளை முதலே அது அமலுக்கு வருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று கேட்டு அமைகிறேன்.





*நண்பகல் 12-00*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்ட பிறகு கிராமப்புற மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் அந்தப் பள்ளிக்கூட நேரங்களை மாற்றி அமைத்ததால் ஏற்படுகின்ற சிரமங்களை விளக்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவிடம் பெற்றோர்களும், மாணவர்களும், ஆசிரியர் அமைப்புகளும் கோரிக்கை வைத்ததன் பேரிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மாணவர்களுடைய, குறிப்பாக கிராமப்புற மாணவர்களுடைய சிரமங்களைப் போக்குவதற்காகவும், ஆசிரியர்களுடைய சிரமங்களைப் போக்குவதற்காகவும், பெற்றோர்களுடைய சிரமங்களைப் போக்குவதற்காகவும் அந்தக் கோரிக்கையினை ஏற்று அந்தப் பள்ளிகளுடைய நேரங்களை கிராமப்புறங்களிலும், சென்னையைத் தவிர்த்து மற்ற பள்ளிகளுடைய நேரங்களை காலை 9-30 மணியிலிருந்து அந்தப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும் என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

சென்னையைப் பொறுத்தவரை அந்தப் பள்ளிகள் அமைந்திருக்கின்ற இடத்தைப் பொறுத்து, போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தும், போக்குவரத்து நெரிசல்களைப் பொறுத்தும் அந்தப் பள்ளி நேரங்களை மாற்றி அமைப்பதற்கு காலை 8-30 மணி, 9-00 மணி, 9-30 மணி அளவிலே, கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த மூன்று மணி நேரங்களிலே மாற்றி அமைத்துக்கொள்ளலாம் என்று ஒரு option கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள், பெற்றோர்களின் நலன் கருதி இவ்வாறு பள்ளி நேரங்களை மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, இந்த ஆணை என்றிலிருந்து அமலுக்கு வரும் என்று கேட்டார்கள். இதய தெய்வம் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆணை உடனடியாக வருகின்ற திங்கட்கிழமையிலிருந்து அமலுக்கு வர ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இனிக் கேள்வியே வேண்டாமே!

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். டாக்டர் மு. தம்பித்துரை.

**டாக்டர் மு. தம்பித்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 159-வது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 78 முதல் 83 வரையிலான ஆறு அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2004 நவம்பர் 18

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

**(அ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2004), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு,



2004 நவம்பர் 18]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2004)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு Act 14/82 என்று இயற்றப்பட்ட இந்த கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் என்ற இந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து இப்போது சினிமா துறைக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமையைச் சீரமைப்பதற்காக, இப்போது திருட்டு வி.சி.டி. வைத்திருப்பவர்களையும் குண்டர் சட்டத்திலே போடுவதற்கான ஒரு அவசரச் சட்டம் ஏற்கெனவே அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வந்து, அதையே இப்போது சட்டமாக்குகிற இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

ஏற்கெனவே கள்ளச் சாராயம், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர் சட்டம், விபச்சாரத் தொழில் குற்றம், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் என்று இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை இயற்றியும்கூட பல இடங்களிலே அதுபோன்ற தொழில்கள் இன்னமும் நடந்து, இன்னமும்கூட குண்டர் சட்டத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்தாத காரணத்தினாலே-ஒரு சில இடங்களில் மட்டும்தான் பயன்படுத்துகிறார்கள்- சில நேரங்களிலே காவல் துறைக்கே கூட இந்த குண்டர் சட்டம் போடுவது என்று சொன்னால் Goondas Act போடுவதற்கு அந்த papers-ஐ ready செய்வதற்கே பணம் நிறைய செலவாகிறது. அந்தப் பணத்தை அரசு சரியாக உடனுக்குடன் கொடுக்காத காரணத்தினாலே சில Inspector-கள் அந்த paper-க்கு செலவாகிற பணத்தைக்கூட நாங்கள் முதலீடு செய்வதற்கு சிரமமாக இருக்கிறது, குண்டர் சட்டம் என்று வைத்துவிட்டால் அதற்கு ground case create செய்து, பிறகு நாங்கள் இதை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்குள் படாதபாடு படவேண்டும் என்று இருக்கக்கூடிய ஒரு

@ 17-11-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நிலையை ஆய்வாளர்கள் ஒரு குறையாக சொல்லி அதில் கொஞ்சம் அமுக்கமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம் Goondas Act-ஐ prepare செய்வதற்கு அந்த papers மற்ற வகையிலெல்லாம் எந்த அளவிற்குச் செலவினங்கள் தேவைப்படுகிறதோ அதைக் கணக்கீடு செய்து அவர்களுக்கு முழுமையான பணத்தை உடனுக்குடன் வழங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்தால், இந்தக் காவல் துறை ஆய்வாளர்கள் இதிலே கொஞ்சம் சுணக்கம் காட்டாமல் குண்டர் சட்டத்தை அவர்கள் உடனடியாக கையில் எடுப்பதற்குத் தயார் ஆவார்கள் என்கிற கருத்தை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வழக்கறிஞர் தொழிலில் இப்பொழுது நான் இருக்கிற காரணத்தினாலே பொதுவாக குண்டர் சட்டத்தை அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னாலே அவர்கள் மூக்கால் அழுதுகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இத்தனை சட்டத்தை நாம் கொண்டுவந்தாலும்கூட, இன்னும் சில துறைகளிலே பல நிகழ்வுகள் இருந்துகொண்டிருக்கின்றன. நம்மால் முழுமையாக அடக்க முடியவில்லை. ஆனால், இப்பொழுது திருட்டு வி.சி.டி.. என்று சொன்னவுடன் அக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து பார்த்தால், குண்டர் சட்டம் பாய்ந்துவிடுமோ என்று சிலபேர் இப்பொழுது இந்த சி.டி.-யே கிடைக்காமல் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை தமிழகத்திற்கு வந்திருக்கிறது என்று சொன்னால் அது ஒரு வெற்றிதான். பொதுவாக, நீங்கள் திருட்டு வி.சி.டி. கடை, அதேபோல் கேபிள் டி.வி. மூலம் காட்டப்படுவதை வேண்டுமானால் தடுத்து நிறுத்திவிடலாம். ஆனால், சில நேரங்களிலே இதே திருட்டு வி.சி.டி. பொதுவாக வெளிநாட்டிற்குச் சென்று, அங்கே போட்டு, பிறகு download செய்து, இங்கே இந்த obscene காட்சிகள் எல்லாம் வரக்கூடிய படங்களையெல்லாம்கூட, நம்முடைய தமிழகத்திலே சில இளைய சமுதாயங்கள் Browsing Centres போன்றவற்றிற்கெல்லாம் சென்று இதையே கண்டுகளித்து இன்று சீரழிந்து கொண்டிருப்பதை நாம் இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்தத் துறையும் பொதுவாக, இது போன்ற obscene காட்சிகளை, Browsing Centre-லோ அல்லது வெளிநாடுகளிலேயிருந்து download செய்து, இங்கே பார்க்கக்கூடிய ஒரு சூழல் இருப்பதை அறிந்து எப்படி நாம் அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்துகூட, அப்படிச் சீரழியக்கூடிய நிலையை உருவாக்கிக்கொண்டிருப்பவர்களையும் தண்டிப்பதற்கு இந்தச்



சட்டத்திலே ஏதாவது இடம் இல்லாமல் இருந்தால், புதிதாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்தத் திருட்டு வி.சி.டி. போன்றவை எல்லாம் நகரப் பகுதிகளில்தான் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில் இல்லை. ஆனால், நகரப் பகுதிகளிலே சில அதிகாரிகளேகூட திருட்டு வி.சி.டி.-களை வாங்கிப் பார்க்கக்கூடிய சூழல் வருகிறபோது அவர்களால் அந்தக் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, அதிகாரிகள் யாராக இருந்தாலும்கூட இப்படிப்பட்ட திருட்டு வி.சி.டி.-கள் ஓ.சி.-யிலே கிடைக்கின்றன என்பதற்காக, அதை வாங்கி பார்க்காத ஒரு நிலையை அவர்கள் எடுத்தால்தான் இவர்களை முழுமையாக அடக்க முடியும். இல்லையென்று சொன்னால், அங்கொன்றும், இங்கொன்றுமாகக்கூட இங்கே திருட்டு வி.சி.டி.கள் கிடைத்து மீண்டும் சினிமா பழைய பாணிக்கே சென்றுவிடக்கூடிய ஒரு சூழல் உருவாகும். ஆகவே, நீங்கள் இதைக் கொஞ்சம் கடுமையாக்க வேண்டும்.

இப்பொழுது குண்டர் சட்டம் என்று சொன்னவுடன் ஓரளவிற்கு வெற்றி கிட்டியிருக்கிறது. இருந்தாலும் பழைய குருடி, கதவைத் திறடி என்ற கதையாக கொஞ்சம் நாள் ஆனவுடன் இது அப்படியே மறைந்துபோய் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக தலைகாட்ட ஆரம்பிக்கும். அக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து ஏதாவது இதிலே வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவா? எந்தெந்த மாவட்டங்களில் அதிகமான வழக்குகள் இதில் வந்திருக்கின்றன? இதிலே இந்த 1 1/2, 2 மாத காலகட்டத்திற்குள் ஏதாவது குண்டர் சட்டத்திற்குரிய ground case உருவாக்கப்பட்டிருக்கிறதா? யார் மீதாவது குண்டர் சட்டம் போடப்பட்டிருக்கிறதா என்பதையும் அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி.

•**திரு. ராதாரவி:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பணிவான வணக்கங்கள்

"உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்

உயர்ந்தாலும், தாழ்ந்தாலும், தலை வணங்காமல் நீ வாழலாம்"

என்ற புரட்சித் தலைவரின் பாடலுக்கேற்ப இன்று உங்களையும் அறிந்துகொண்டு, உங்களை அறியாமல் இருந்த பலரை உங்களை அறியச்

[திரு. ராதாரவி] [2004 நவம்பர் 18

செய்து தலைநிமிர்ந்து ஆட்சி செய்யும் எங்கள் தாயே! அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் அறிவு, அம்மா என்றால் கல்வி, அம்மா என்றால் நீர், அம்மா என்றால் நெருப்பு, அம்மா என்றால் காற்று, அம்மா என்றால் ஆகாயம், அம்மாவே ஐந்து சக்தி, அவரே எங்கள் தெய்வம். அந்தத் தெய்வத்தின் பாதம் பணிந்து என் உரையைத் தொடங்குகிறேன்.

*பிற்பகல் 12-10*

அம்மா, நான் ஏற்கெனவே பேசும்போது, எங்கள் குடும்பம் ரத்தக் கண்ணீர் வடித்த குடும்பம் என்று சொன்னேன். அது நான் மட்டுமல்ல. எங்கள் கலைத் துறைக் குடும்பமே ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருந்தது, ஒரு காலகட்டத்தில். ஆனால், இப்போது இந்தத் திருட்டு வி.சி.டி.யை ஒழித்ததால் இன்றைக்குத் திரை உலக மக்களே ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு நீங்கள்தான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கண்ணில் இருந்து வந்தது உண்மையான கண்ணீர். ஒற்றுமையாக இருக்கும் அந்தக் காக்காய்க் கூட்டம் வடித்தது உண்மையான கண்ணீர். அதைத்தான் 8 ஆம் தேதி நாம் அனைவரும் பார்த்தோம். Visual Compact Disc, திருட்டு வி.சி.டி. கும்பலை நீங்கள் ஒழித்தீர்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளீர்கள். 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல், இது தமிழ்நாடு சட்டம் 14/1982. ஆனால், இந்தத் திருட்டு வி.சி.டி-காரர்களை நீங்கள் இதிலே சேர்த்தீர்கள் பாருங்கள்—அவர்கள் யாருக்கு equal என்றால், விபச்சாரம் செய்பவர்களுக்கும், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இவர்கள்தான் equal என்று சேர்த்தீர்கள் பாருங்கள், அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

மேலும் இந்தச் சட்டத்தில் சொல்லப்படுவது என்னவென்றால் "Video Pirate means a person, who commits or attempts to commit or abets the commission of offences of infringement of copyright in relation to a cinematograph film or a record embodying any part of sound track associated with the film, punishable under the Copyright Act, 1957." அதாவது, அந்த abetment கொண்டுவந்தீர்கள் பாருங்கள், அதுதான் பெருமைக்குரிய விஷயம். ஏனென்றால், அதில் ஈடுபட்டாலே அல்லது attempt செய்தாலே என்று இல்லாமல் abetment-உடந்தையாக இருந்தால்



2004 நவம்பர் 18] [திரு. ராதாரவி]

என்றால்தான் முதலாளிகள் எல்லாம் இதிலே கைதாவார்கள் என்று ஒரு அற்புதமான சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல அம்மா, இதுவரையில் டி.வி.யிலே எல்லாம் பெரிய பெரிய படங்கள், Trailer-ஆக 100 நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது நீங்கள் திருட்டு வி.சி.டி. சட்டத்தைக் கொண்டுவந்ததால், இனிமேல் தியேட்டரிலே 100 நாட்கள் ஓடப்போவது என்பது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, 1996 வரை, தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல; தமிழ்த் திரை உலகுக்கே பொற்காலம். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல அம்மா, ஒட்டுமொத்த திரை உலகத்தின் கருத்து. ஏனென்றால் அப்போது இருந்த மொத்தத் திரை அரங்குகள் எவ்வளவு என்றால் Permanent, Semi-permanent, அதாவது நிரந்தர, தற்காலிக—இவற்றின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 2,850. ஆனால், இப்போது எவ்வளவு என்றால் 1,931. ஏறக்குறைய 920 திரை அரங்குகள் எல்லாம், கல்யாண மண்டபங்களாக ஆகிவிட்டன. பாதி, அரிசி Godown களாக ஆகிவிட்டன.

அதுமட்டுமல்லாமல், 1996 ஆம் ஆண்டு வரை ரிலீஸ் ஆன படங்கள் வருடம் ஒன்றுக்கு சுமார் 110 முதல் 150 வரை. ஆனால், இப்போது பெரிய படங்கள் 50, சிறிய படங்கள் 60-70. ஆனால், 1996-க்குப் பிறகு 50 முதல் 60 வரை படங்கள்தான் ரிலீஸ் ஆயின. 1996-க்குப் பிறகுதான் வீடியோ கேசட், கேபிள் டி.வி. ஆதிக்கம் வளர்ந்தது. சினிமா உலகின் அழிவும் ஆரம்பித்தது. அது எந்த அளவுக்கு வளர்ந்தது என்றால், திருட்டு வி.சி.டி. என்றால்—பஸ்ஸிலே நிம்மதியாகப் போய் தூங்கலாம் என்று பார்த்தால் அப்போது போட்டுவிடுகிறார்கள். என்ன என்று பார்த்தால், வீடியோ கோச் என்று போட்டு, பாடல் அல்லது படத்தைப் போட்டுவிடுகிறார்கள். பார்த்தால் நாம் நடித்த படத்தையே போட்டுவிடுகிறார்கள். அது முழுமையாக இருந்தாலும் பரவாயில்லை interval வரை திருடி விற்றிருக்கிறார்கள். இதிலே என்னவென்றால், வீட்டுக்கு வீடு வி.சி.டி., விறகுத் தொட்டியில் வி.சி.டி., மளிகைக் கடையில் வி.சி.டி. இன்னும் கொஞ்சம் விட்டால், திருட்டு வி.சி.டி. நடைபாதை வியாபாரிகள் சங்கம், சிறு முதலீட்டு திருட்டு வி.சி.டி. வியாபாரிகள் சங்கம், பெருமுதலீட்டு திருட்டு வி.சி.டி. வியாபாரிகள் சங்கம் என்று இப்படியெல்லாம் வந்திருக்க வேண்டிய கால கட்டங்களில் நல்லவேளை நீங்கள் வந்தீர்கள், இதையெல்லாம் ஒழித்துக் கட்டினீர்கள். ஆனால், அந்தக் காலத்திலேயே, அப்போதே நடிகர் கே. ராஜன் 1997-லே பல

[திரு. ராதாரவி] [2004 நவம்பர் 18

போராட்டங்களைச் செய்தார்கள். கேஸ் போட்டார்கள். அதிலே அண்ணா நகரைச் சேர்ந்த ஒரு நபரும், கே.கே. நகரைச் சேர்ந்த ஒரு நபரும் கேஸ் போட்டு, சாட்சியாகவும் இருந்தார் இந்த நடிகர் கே. ராஜன் அவர்கள்.

*பிற்பகல் 12-15*

அப்போது என்னவென்றால் திருட்டு வி.சி.டி. சட்டம் வந்துவிட்டது என்று சொன்னார்கள். அந்த ஆசையிலே இவரும் கேஸ் எல்லாம் போட்டு இவரே சாட்சியாகவும் இருந்தார். அப்போதுதான் நீதிபதி ஐயா திரு. பத்மனாபன் அவர்கள் இந்த வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கும்போது சொன்னார்கள், இந்தச் சட்டமே இன்னும் வரவில்லையே அப்பா; அப்புறம் இவர்களை நான் எந்தச் சட்டத்திலே பிடிப்பது என்று விட்டுவிட்டார்கள் அம்மா. அப்புறம்தான் தெரிந்தது ஓகோ இது கண் துடைப்புபோல இருக்கிறது; அது உண்மையாக எங்களைச் சாந்தப்படுத்துவதற்காக அல்ல. ஆனால், அந்தச் சட்டம் உண்மையிலேயே வருவது உங்களுடைய ஆட்சியிலே மட்டும்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலேதான் அம்மா நான் இதைச் சொல்கிறேன்.

இதற்கப்புறமாக இந்தக் கலைத் துறையைச் சார்ந்தவர்கள் எல்லோரும் 1996-க்குப் பிறகு சத்தம் போட்டார்கள், போராடினார்கள், எல்லாம் செய்தார்கள். ஆனால், 2001-லேயிருந்து அம்மா இதே நடிகர் திரு. கே. ராஜன் அவர்கள்கூட வெறுமனே உங்களுக்கு வேண்டுகோள் கொடுத்தார்கள், அம்மா, இப்படி இருக்கிறது, எங்களைக் காப்பாற்றுங்கள் என்று. அப்புறம் நடிகர் பார்த்திபன் அவர்கள்கூட அவர்களுடைய சொந்தப் படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில், யாரும் திருட்டு வி.சி.டி. பார்த்துவிடாதீர்கள் என்று சொல்லி ஒரு Public awareness-க்காக Film Chamber-லே உண்ணாவிரதம் இருந்தார்கள். அதற்கப்புறம் எல்லா சினிமா கலைஞர்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள். என்னடா இது; எப்போதுமே போராடுகிறவர்கள், உண்ணாவிரதம் இருந்தும் இவ்வளவு அமைதியாக இருக்கிறார்களே என்று பார்த்தால், அப்போதுதான் எனக்குச் சின்ன கதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

இந்த மாமன்றத்தின் தலைவர், ஐயா சபாநாயகர் அவர்கள் சொன்ன கதைதான் அது. அது என்னவென்றால், எல்லா குழந்தைகளுக்கும் ஸ்வீட் கொடுத்துக்கொண்டே வந்தார்களாம்.



2004 நவம்பர் 18] [திரு. ராதாரவி]

அப்படி அந்த ஸ்வீட் கொடுத்துக்கொண்டே வரும்போது, எல்லா குழந்தைகளும் அந்த ஸ்வீட்டை வாங்கினார்கள். ஒரேயொரு குழந்தை மட்டும் வாங்க மாட்டேன் என்றதுடன் அழுதுகொண்டே இருந்தது. ஏன் வாங்கமாட்டேன் என்று கேட்டால், எங்கள் அம்மா கொடுத்தால்தான் நான் வாங்குவேன் என்று அந்தக் குழந்தை சொல்லியது. சரிதான், உங்கள் அம்மா கொடுக்கட்டும் என்று சொல்லி அம்மா கொடுத்தவுடனேயே அந்தக் குழந்தை அழுகையை நிறுத்திவிட்டது. அது ஏன், உங்கள் அம்மா கொடுத்ததும் நீ அழுகையை நிறுத்திவிட்டாய் என்று கேட்டபோது, எங்கள் அம்மா கொடுத்தார்கள்; அதனாலேதான் நிறுத்தினேன் என்று நினைக்காதீர்கள்; எங்கள் அம்மா அவர்கள் கொடுத்தால் நிறைய கொடுப்பார்கள்; ஏன் என்றால் அவர்கள் கை அகலமானது.; நான் எடுத்துக்கொண்டால் ஒன்றே ஒன்றைத்தான் எடுத்துக்கொள்வேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லியது. அதேமாதிரி எல்லா சினிமா கலைஞர்களும் இவ்வளவு காலமும் அமைதியாக இருந்ததற்குக் காரணம் என்னவென்றால் அம்மா வரட்டும், அம்மா அவர்கள் கொடுத்தால் அள்ளிக் கொடுப்பார்கள் என்ற எண்ணம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராதாரவி, திருட்டு வி.சி.டி. மாதிரி, கதையையே என்னிடமிருந்து எடுத்துவிட்டீர்களே? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ராதாரவி:** நான் இந்தக் கதையையே, உங்களிடமிருந்து உரிமையை வாங்கிக் கொண்டுதான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் என்றால், நேற்றே உங்களிடம் சொல்லிவிட்டேன் இந்தக் கதையைத் திருடப் போகிறேன் என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, இந்தக் குழந்தைகள் எல்லாம் கொஞ்சம் கிளுகிளுப்புக் காட்டியவர்கள் பக்கம் இருந்தது என்பது உண்மைதான் அம்மா. நான் இல்லை என்று சொல்லவில்லை. அது ஏன் என்றால் பசி ஆறிய குழந்தை, தாயின் மடியில் தூங்கிக் கொண்டிருக்கும்போது கிளுகிளுப்புக் காட்டியவுடனே அந்தப் பக்கம் உடனே தாவிப் போய்விட்டது. அப்போது கிளுகிளுப்புக் காட்டியவர்கள் சொன்னார்கள், பார்த்தாயா உங்கள் குழந்தை இப்போது என்னிடம் வந்துவிட்டது அம்மா என்று. அதற்குத் தாய் சிரித்துக்கொண்டே இருந்தார். ஏன் அம்மா சிரித்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு, அப்பா, இப்போது

உன்னிடம் வந்திருக்கலாம்; ஆனால், திரும்பவும் அதற்குப் பசி வரும்போது அது என்னிடம்தான் வர முடியும். உன்னிடம் இருக்க முடியாது என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேமாதிரி, இப்போது இந்தத் திரை உலகத்தினைச் சார்ந்தவர்களுக்குப் பசி வந்தவுடனே மீண்டும் அந்தத் தாயிடம்தான் வந்திருக்கிறார்கள். ஏன் என்றால், திரை உலக மக்களின் கண்களில் வழிந்த நீரை உண்மையாகவே உங்கள் தாய்க் கரத்தால் துடைத்து, எல்லோருடைய வயிற்றிலும் பாலை வார்த்தீர்கள். அதனால்தான் 4 ½ வருடங்களாக தண்ணீரே இல்லாத பாலாற்றிலேகூட இப்போது தண்ணீர் ஓடுகிறது, அம்மா. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்) அதை நீங்கள் பார்க்கவில்லை, நான் பார்க்கிறேன். (குறுக்கீடு) பாலாற்றிலே நான் பார்த்திருக்கிறேன். (குறுக்கீடு) நானே பார்த்திருக்கிறேன். அதனாலேதான் சொல்கிறேன். அம்மா, (குறுக்கீடு) நான் சொல்வது ஆற்றுத் தண்ணீர்.

அம்மா, உங்கள் தாயன்போடு நீங்கள் போட்ட சட்டத்தினாலே, உங்கள் தாய் வீடாம் திரை உலகத்திலே பலர் பயனடைந்திருக்கிறார்கள். அதனால் எவ்வளவு பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்றால், தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், அதனுடைய உறுப்பினர்கள் 1200 பேர். South Indian Film Chamber of Commerce, அதனுடைய உறுப்பினர்கள் ஏறத்தாழ 900 பேர். தமிழகம் முழுவதும் உள்ள விநியோகஸ்தர்கள், north -south செங்கல்பட்டு, city, திருச்சி, தஞ்சாவூர், கன்னியாகுமரி, சேலம், கோவை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய அனைத்து இடங்களையும் மொத்தமாகச் சேர்த்தால் ஏறத்தாழ 2,630 பேர். திரையரங்க உரிமையாளர்கள் 1,931 பேர். திரையரங்கப் பணியாளர்கள் ஓர் அரங்குக்கு 30 பேர் என்று வைத்துக்கொண்டால்கூட 5,730 பேர். அப்புறம் FEFSI - Film Employees Federation of South India, அதனுடைய தொழிலாளர் சம்மேளனத்திலே 24 சங்கங்கள், 23,000 பேர். தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினர்கள் 2,700 பேர். ஆக மொத்தம் 38,000 பேருக்குமேலே வருகிறது அம்மா. இவர்களெல்லாம் நேராக சினிமாவிலே சம்பந்தப்பட்டவர்கள். இதுபோக, சினிமாவிலே அவ்வளவாக சம்பந்தப்படாதவர்கள் இருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-20*

அதாவது பின்னாடி இருக்கிறவர்கள். லேப் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். படச்சுருளைத் தியேட்டருக்குத் தியேட்டர் trip அடிக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். போஸ்டர் அடிக்கும் அச்சு





நிறுவனங்கள், போஸ்டர் ஒட்டுகிற தொழிலாளிகள், இவர்கள் எல்லோரையும் சேர்த்தால், இந்த Tea கடை, Bun கடை வைத்திருக்கிறவர்கள் இவர்கள் எல்லோரையும் சேர்த்தால் ஏறத்தாழ 3 இலட்சம் பேருக்கு மேல் வருகிறார்கள் அம்மா. ஏன் என்றால், 72 ஆயிரம் பேருக்கு மேல் வந்தால் ஒரு குடும்பத்திற்கு 4 பேர் என்று கணக்குப் போட்டால்கூட ஏறத்தாழ 3½ இலட்சம் பேருக்கு மேல் இன்றைக்கு நீங்கள் வாழ வைத்திருக்கிறீர்கள் என்றால் அந்தப் பெருமை உங்களைத்தான் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த success எல்லாம், இந்த வெற்றி எல்லாம் உங்களுக்கு எப்படி என்றால் Charles Limburgh என்ற அறிவாளி ஒருவன் சொல்லியிருக்கிறான் "Success is not measured by what a man accomplishes but by the opposition he has encountered and the courage with which he has maintained the struggle against overwhelming odds." அதாவது வெற்றி என்பது நீங்கள் வாங்கின வெற்றியிலே அதனுடைய அளவுகோல் அல்ல. ஆனால், அதற்கு வந்த எதிர்ப்புகள், அதையெல்லாம் நீங்கள் encounter பண்ணி எல்லாவற்றையும் தாண்டி இந்தக் கஷ்டமான காரியத்தை முடித்தீர்கள் பாருங்கள், அதுதான் அம்மா உங்களுக்கு ஒரு பெரிய வெற்றி. ஏன் என்றால் சில பேர் வெற்றியை வரிசைப்படுத்தினார்கள். ஆனால், நீங்கள் மிக அற்புதமாக அமைதியாக இருந்து இன்று வெற்றி பெற்றிருக்கிறீர்கள். ஏன் என்றால் The only way to achieve the real success is to do it one day at a time. ஒரு நாளைக்கு ஒன்று ஒன்றாகச் செய்தீர்கள்.

வீரப்பனைச் சுட்டீர்கள். திருட்டு வி.சி.டியைப் பிடித்தீர்கள். இப்போது வீராணம் தண்ணீரைக் கொண்டு வந்தீர்கள். இது உங்களால் மட்டும்தான் முடியும் அம்மா. அம்மா, உங்களை நோக்கி உண்மையிலேயே சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களிடம் இருக்கிற தைரியம், திறமை, அறிவு எல்லாவற்றையும் பார்த்துதான் அம்மா தோல்வி உங்களை விட்டு ஓடிப் போய்விட்டது. வெற்றி உங்களிடம் வந்து சேர்ந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏன் இந்த வெற்றி உங்களிடம் வந்து சேர்ந்தது என்றால், அந்த வெற்றி இப்போது பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் நல்ல கரெக்டான ஆள்கிட்டே இருக்கிறேன் என்று. நீங்கள் அடைந்தது எல்லாம் வெற்றி, பெரிய வெற்றிதான், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அதிலே முதன்மையான வெற்றி என்ன என்றால், மழை பெய்து வெள்ளம் வந்ததற்குக் காரணம் யார் என்றால் ஆளுங்கட்சி. மழை பெய்யவில்லை

[திரு. ராதாரவி] [2004 நவம்பர் 18

என்றால் அதற்கும் ஆளுங்கட்சிதான் காரணம். அப்புறம் காற்று அடித்தால் அது ஆளுபவர்களுடைய அலட்சியப் போக்கு. காற்று அடிக்கவில்லை என்றால் அது ஆளுபவர்களின் மெத்தனம். குழாய்களிலே தண்ணீர் வரவில்லை என்றால் அது ஆளுபவர்களின் சதி. குழாய்களிலே தண்ணீர் வந்தால் அது நீரல்ல, கானல் நீர். இப்படி எல்லாம் உங்களைக் கிண்டல் பண்ணியவர்கள் எல்லாம் இன்றைக்கு நன்றி சொல்லுகிற அளவிற்கு வந்திருக்கிறார்கள் என்றால் அதுதான் அம்மா உண்மையான வெற்றி உங்களுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, உங்கள் ஆட்சியிலே வீராணம் தண்ணீர் சென்னைக்கு விட்டாச்சு, வீரப்பனைச் சுட்டாச்சு, திருட்டு வி.சி.டி.யை ஒழிச்சாச்சு. உங்கள் தீரச் செயல்களுக்காக உலக மக்களே நெஞ்சார இன்றைக்கு உங்களுக்கு வீரத் திலகம் இட்டாச்சு. அதுதான் தங்கத் தாரகை என்ற பட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் செய்ததற்காக இன்றைக்குத் திரை உலகத்தின் தேசிய கீதமே "நன்றி அம்மா, நன்றி அம்மா, நன்றி அம்மா, பூவுலகம் உள்ளவரை நன்றி அம்மா" என்று பாடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

எல்லாருமே, சினிமா உலகம் மட்டும் அல்ல, நீங்கள் செய்திருக்கிற சாதனைக்காக இன்றைக்கு அத்தனை மக்களும் உங்களை நோக்கி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் நடுவிலே அதைப் பண்ண மாட்டார்களோ, இதைப் பண்ண மாட்டார்களோ என்று நினைத்தது எல்லாம் உண்மைதான். ஏன் என்றால் சந்தைக்குச் சென்ற தாய் ஒரு குழந்தையை அழைத்துக்கொண்டு செல்கிறார்கள். அந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டு செல்லும்போது அந்தக் குழந்தை, அம்மா, எனக்கு ரிப்பன் வேண்டும், அம்மா, எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும், அம்மா, எனக்கு அந்த பம்பரம் வேண்டும். அந்த பொம்மை வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருந்தது. தாய் சொன்னார்கள், சும்மா இரு, சாமியைக் கும்பிட்டுவிட்டு நான் வாங்கித் தருகிறேன் என்று. தப்பேயில்லை.

சாமியைக் கும்பிட்டுவிட்டு வாங்கித் தருகிறேன் என்று சொன்னவுடனே இந்தக் குழந்தைக்குப் பொறுக்கவில்லை அம்மா. தாய் சாமி கும்பிட்டுக்கொண்டே இருக்கும்போது, பார்த்துவிட்டு ஆஹா, அம்மா வாங்கிக் கொடுக்கமாட்டார்கள்போல் இருக்கிறது என்று கூட்டத்திற்குள்ளே ஓடிப்போய் விட்டது. கூட்டத்திற்குள்ளே ஓடினவுடனேதான் அந்த இடிபாடு, அந்தக் கூட்டத்திற்கு நடுவிலே



2004 நவம்பர் 18] [திரு. ராதாரவி]

அதற்குக் கிடைத்த அந்த இடிபாடு தாங்கமுடியவில்லை. ஏன் என்றால் அவ்வளவு நாளும், அவ்வளவு நேரமும் அந்த இடிபாடுகளைத் தாங்கிக் கொண்டு இருந்தது அந்தத் தாய். ஆனால், இப்போது தனியாக வந்தவுடனே அந்த இடிபாடு தாங்காமல் அழ ஆரம்பித்துவிட்டது. அப்போது ஒருவர் வந்து கேட்டார். குழந்தை உனக்கு என்ன வேண்டும்; ரிப்பன் வேண்டுமா? வேண்டாம், வேண்டாம்; எனக்கு ரிப்பன் வேண்டாம்; எனக்கு என் அம்மாதான் வேண்டும். அப்புறம் கேட்டாராம்; ஏம்மா குழந்தை உனக்கு ஐஸ்கிரீம் வேண்டுமா? எனக்கு ஐஸ்கிரீம் வேண்டாம், எனக்கு எங்க அம்மாதான் வேண்டும் என்று.

எந்தக் குழந்தை ஒரு ஐஸ்கிரீமுக்காகவும், ஒரு ரிப்பனுக்காகவும் அலைந்து, தாயின் கையை விட்டுவிட்டு கூட்டத்திற்குள் வந்ததோ, அதுதான் இடிபாடு தாங்காமல் அழுது இன்றைக்கு அம்மா, அம்மாதான் வேண்டும் என்று உங்கள் திசையை நோக்கி அழுதுகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

அதைப்போல, இன்றைக்கு திரை உலக மக்கள் மட்டுமல்ல, அத்தனை பேரும் அம்மாதான் வேண்டும், அம்மாதான் வேண்டுமென்று, உங்கள் திசை நோக்கி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறி, எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மேலும் என்னுடைய அன்புச் சகோதரர்களுக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கிடு) திரு. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருட்டு வி.சி.டி., திரையுலகத்தினுடைய நன்மையைக் கருதி, அவர்களுடைய பாதுகாப்பிற்காக ஒழிக்கப்பட்டது வரவேற்கக்கூடியது, கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டியது. இதில் எந்த மாறுபட்ட கருத்துக்கும் இடமில்லை. இதில் கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் இவர்களையெல்லாம் சுட்டிக்காட்டிச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிற இந்தக் குற்றவாளிகளே தப்பிப்பதற்காகவும்,

[திரு. ஜி.கே. மணி] [2004 நவம்பர் 18

தப்பிக்கிற நடவடிக்கை அல்லது இந்தக் குற்றத்திலே நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடிய நிலைகள் எல்லாம் நம்முடைய நாட்டிலே உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டத்திலும்கூட, மீண்டும் இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடக்கக் கூடாது; கட்டாயம் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கும்; அதையெல்லாம் தவிர்த்து எந்தவகையிலும் இந்தக் குற்றவாளிகள் மீண்டும் ஊடுருவக் கூடாது, ஊடுருவக் கூடாது என்று சொல்லக்கூடிய அதே வேளையில் நிரபராதிகளை வேண்டுமென்றே திட்டமிட்டுக் கைது செய்யக்கூடிய, வழக்குப் பதிவு செய்யக் கூடிய நடவடிக்கைகளெல்லாம் தொடரும். இவையெல்லாம் இல்லாத வகையிலே உரிய கவனத்தோடு இந்தச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று சொல்லி, கட்சியின் சார்பிலே தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் எழுப்பிய கேள்வியிலே ஒரு கேள்வி தகவல் தொழில்நுட்பத்தைச் சார்ந்தது. வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தில் ஒரு challenging - ஆக, இதை நம்முடைய அம்மா அவர்கள், இந்த obscene-ஐ முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்கள். அதற்காக இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் cyber crime என்ற ஒரு பிரிவை ஏற்படுத்தியவர் நம்முடைய அம்மா அவர்கள். அது சென்னையிலே இன்றைக்குச் சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக்கூட பத்திரிகைகளைப் படிக்கின்ற பழக்கம் முழுமையாக இருக்கின்றது. ஒரு 15 நாட்களுக்கு முன்பாக மும்பையில் இருக்கின்ற ஒருவர் இங்கே இருக்கின்ற ஒரு பெண் பெயரிலே ஒரு e-mail create செய்து, அந்த e-mail மூலமாக அவர் வெளிப்படுத்திய ஆபாசங்களையெல்லாம் நம்முடைய புலனாய்வுத் துறை, நம்முடைய அம்மாவின் உத்தரவின்பேரிலே கண்டுபிடித்து, அதற்கு தண்டனை இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழ்நாட்டிலே (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்பட்டது என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எனவே, இது முழுமையாக ஒழிந்துவிடும். அந்தத் தண்டனை வந்தபிறகு internet-லும் சரி, cellular phone-லும் சரி, யாருமே நிச்சயமாக



2004 நவம்பர் 18] [திரு. டி. ஜெயக்குமார்]

இந்தமாதிரி குறும்புகள் செய்ய முடியாது என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இதற்கு நிரந்தரத் தீர்வு என்கிற அடிப்படையிலே SETS—Society for Electronic Transaction and Security இந்த SETS -ஐப் பற்றி நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அகில இந்திய அளவிலே ஒரு போட்டி இருந்தது, எந்த மாநிலத்தில் இது அமைக்கப்பட வேண்டுமென்று. அப்படி ஒரு போட்டி இருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலே இதை அமைக்க வேண்டும், உங்களுக்கு எவ்வளவு நிலம் வேண்டுமென்றாலும் தருகின்றேன், அதைப்போல பணம் தருகிறேன் என்று சொல்லி, 60 இலட்சம் ரூபாயைக் கொடுத்து, கூடவே நிலத்தையும் கொடுத்து, இன்றைக்கு அந்தப் பணிகளை ஆரம்பித்திருக்கின்றார்கள். எனவே, இவர்கள் முழுமையாகச் செய்யும்போது, இதுபோன்ற obscene-கள் எல்லாம் download செய்து இங்கே பார்ப்பவர்களுக்கு நிச்சயமாக கடுமையான தண்டனைகள் காத்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தில் ஒரு திருத்தத்தை அரசு இதிலே இணைத்து, இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோன்று, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் சட்டத்தோடு இன்றைக்கு வி.சி.டி.யையும் சேர்த்து, அதைத் திருட்டுத்தனமாக தயாரித்து, விற்பனை செய்கின்ற ஒரு மோசமான நிலையில், இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. குறிப்பாக, சினிமா தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற திரைப்பட நடிகர்கள், திரைப்படக்காரர்கள், பட விநியோகஸ்தர்கள் எந்த அளவுக்கு அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலை, மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் இங்கே விவரமாகவே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, திருட்டுத்தனமாக தயாரிக்கப்படுகின்ற திருட்டு வி.சி.டி.களைத் தடுப்பதற்காக கொண்டு வந்திருக்கிற இந்தக் குண்டர் சட்டம் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

*பிற்பகல் 12-30*

ஒன்றை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்பது, சமீபத்திலே கர்நாடகாவிலே திரைப்படங்கள் வெளியிடுகிறபோது 2 மாதங்களுக்கு வெளி மாநிலங்களில் இருக்கிற திரைப்படங்கள் கர்நாடகாவிலே திரையிடக்கூடாது என்பதற்கான ஒரு பெரிய கிளர்ச்சி அந்த மாநிலத்தில் நடைபெற்றிருக்கிறது. எந்தவொரு படமும் அந்த மாநிலத்தில் நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசு இதைச் சட்டமாக்கி இருக்கிறது.

தமிழகத்திலே தயாரிக்கக்கூடிய தமிழ்த் திரைப்படங்களைப் பட விநியோகஸ்தர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் தாங்கள் போட்ட முதலைக் காலத்தோடு எடுக்க வேண்டுமென்பதற்காகப் படத்தைச் சிங்கப்பூருக்கும், மலேசியாவிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் விற்பனை செய்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டிலே இந்தச் சட்டம் இன்றைய தினத்திலே பாதுகாக்கப்பட்டிருக்கிறது. திருட்டு வி.சி.டி. தயாரிப்பவர்கள்மீது குண்டர் சட்டத்தைப் பயன்படுத்தலாம். இந்தப் படங்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்கிறபோதும், சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும். சில நாடுகளுக்கும் செல்கிறபோதும், போனவுடனேயே அங்கேயிருந்து வி.சி.டி. தயார் பண்ணி வருகிறது. அங்கேயிருந்து வருகிற வி.சி.டி.-க்கள்தான் தமிழகத்திலே அதிகமாக வினியோகிக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டு வருகிறபோது, தமிழகத்திலே தயாரிக்கப்படக்கூடிய தமிழ்த் திரைப்படங்களைக் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு வெளி மாநிலங்களுக்குகோ, வெளி நாடுகளுக்கோ அனுப்பாமல் இருப்பதற்கு இந்தச் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிக் கொண்டு வந்தால், அந்தப் படத்தினுடைய வினியோகஸ்தர்கள், பட நடிகர்கள், போன்றவர்களுக்கு வருகின்ற நஷ்டத்தைத் தடுப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பாக இருக்கும். ஆக, படம் வந்தவுடனே போட்ட முதலை, பணத்தை எடுக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு நாடுகளுக்கு, பல்வேறு மாநிலங்களுக்கு வினியோகிக்கிறபோது, இந்தத் திருட்டு வி.சி.டி., உடனடியாக வந்து விடுகிறது. இதை நம்முடைய திரு. ராதாரவி போன்ற நடிகர்கள் நடிகர் சங்கத்திலே பேசி, பட வினியோகஸ்தர்களிடத்திலே பேசி, இதுபோன்ற ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவருவது மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்.



அதைவிட, 1982 ஆம் ஆண்டிலே ஒரு சட்டம் வந்திருக்கலாம். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே, குடிசை நில ஆக்கிரமிப்பாளர்களுக்கென்று பொதுப் பணித் துறையிலே பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயிருந்து ஒரு சட்டம் இருக்கிறது. நிலங்கள் ஆக்கிரமிப்பதை எந்தவகையிலே எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால், 1982-லே எப்படி கவனம் செலுத்தினார்கள் என்பது தெரியவில்லை. என்னைப் போன்றவர்களும் மற்றவர்களும் அன்றையதினம் சட்டமன்றத்திலே விவாதித்து இருப்போம் என்று கருதுகிறேன். அதேபோன்று, விபச்சாரத் தொழில், கள்ளச்சாராயம், குண்டர் இப்படிப்பட்டவர்களோடு ஏழையெளிய மக்கள், கிராமப்புறங்களிலே ஆக்கிரமித்து, குடியிருப்பதற்கே நிலம் இல்லாதவர்களை இந்தச் சட்டத்திலே கொண்டுபோய் 1982 ஆம் ஆண்டிலே இணைக்கப்பட்டிருக்கிறர்கள். இந்த ஷரத்துகளை நீக்குவதற்கு அரசு ஒரு தனி சட்டமுன்வடிவு கொண்டு வர வேண்டும். ஏற்கெனவே இருக்கிற பொதுப் பணித் துறை சட்டத்தோடு இதை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை இந்த அரசு உருவாக்குமா என்று கேட்டு, இதை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே சொல்கிறபோது, கர்நாடகாவிலே 2 மாதத்திற்குப் பிற மொழிப் படங்கள் போடக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டதாகச் சொன்னார்கள். அந்தமாதிரி அங்கு சட்டம் எதுவுமில்லை: அங்குள்ள திரையரங்குகளில்கூட அங்குள்ள அரசே, போடுங்கள் என்று தான் சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய மக்கள்தான் சிலபேர், எதிர்ப்பு தெரிவித்து, அந்த மொழி வெறியர்கள் தான் அவ்வாறு இருந்துகொண்டிருக்கிறார்களேயொழிய. சட்டம் அதுபோன்று இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாம் இந்தச் சட்டமுன்வடிவை அவசரமாகக் கொண்டு வந்துவிட்டோம். இப்போதுதான் சட்டமுன்வடிவை நிறைவேற்றுகிறோம். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். அதேபோன்றுதான் கர்நாடகாவிலே அவர்களும் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவது என்பதைப்போல, அதை அமல்படுத்துவதிலும், முறையாகச் செயல்படுத்துவதிலும்தான் ஒரு சட்டத்தினுடைய நோக்கம் வெற்றிபெறுகிற நிலையை அடையமுடியும். திரை உலகைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு பாதுகாப்பு நிலை ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையினை அறிந்துதான் இந்தச் சட்டத்தைப்பற்றிய அறிவிப்பு வந்தவுடன் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் வரவேற்றார்கள். இன்னொன்று, ஏற்கெனவே உரிமையை வழங்கியிருக்கிறவர்கள், ஏற்கெனவே பழைய திரைப்படங்களின் உரிமையை வழங்கி அவற்றை வெளியிடுகிற சூழ்நிலை வருகிறபோதும், அவர்கள் இதன்மூலமாக பாதிக்கப்படாத ஒரு சூழ்நிலையும் இருக்குமேயானால், இது முழுமையாக பாதுகாப்பினை அளிக்கக்கூடிய ஒரு நிலையாக இருக்குமென்று என்னுடைய கருத்தாக இங்கே எடுத்துச்சொல்லி, என்னுடைய கருத்துகளை வெளியிட்டு, அமர்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு திருட்டு வி.சி.டி. ஒழிப்பு சம்பந்தமான இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது. இன்று தமிழகத்திலே இருக்கின்ற கலைத் துறையைச் சேர்ந்த அத்தனை பேரும் பாராட்டுகின்ற அளவிலே இது அமைந்திருக்கின்றது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்று சொல்கின்ற வள்ளுவன் வாக்குப் பிரகாரம் முதலமைச்சர் அவர்கள் இங்கு சொல்லியதோடு நின்றுவிடாது, இந்தச் சட்டத்தை அமல்படுத்துகின்ற நிலையிலும் அதைக் கண்டிப்பாக அமல்படுத்துகின்ற காரணத்தினால் இன்றைக்குப் பெரும்பாலும் அது ஒழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். பல்வேறு திரையரங்குகளிலே இந்த ஒரு மாத காலத்திலே இந்தத் திருட்டு வி.சி.டி. ஒழிக்கப்பட்டதன் காரணமாக,



அதிகப்படியான வசூல்கள் எல்லாம் ஏற்பட்டு அதன்மூலமாக சினிமாத் துறையினர் எல்லோரும் மகிழ்ச்சியடைகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத்திலே வருகின்றபோது கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், விபச்சாரக் குற்றவாளிகள் எல்லாம் தண்டிக்கப்படுகின்ற ஒரு நிலையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் என்று வருகின்றபோது அது எப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் என்பது இந்தச் சட்டத்திலே தெளிவாக இல்லை.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இன்றைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் கிராமப்புறங்களிலே தங்களுக்குரிய வீட்டுவசதி இல்லாத காரணத்தினால், தங்களுக்குரிய நிலங்கள் இல்லாத காரணத்தினால், அவர்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து குடிசைகளை அமைத்து, பல ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஏழை எளிய மக்களையும் இந்தச் சட்டம் பாதித்துவிடாத அளவிற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளித்திருக்கிறது என்பது இதிலே விளக்கப்படவில்லை என்கின்ற காரணத்தினால், ஏதோ பெரிய தாதாக்கள் நகர்ப்புறங்களிலே இருக்கின்ற விலை உயர்ந்த நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தால் அவர்களுக்கு இந்தச் சட்டம் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற நலிவுற்ற மக்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அங்கு பல ஆண்டுகளாக தங்களுக்குரிய வீட்டுமனை இல்லாத காரணத்தினால் புறம்போக்கு நிலங்களிலே தங்களுடைய குடிசைகளை அமைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கின்றவகையில், அப்படி இருக்கின்றவர்களுக்கு எல்லாம் ஒரு சட்டத்தை இயற்றிகூட, கடந்த காலங்களிலேகூட அப்படியெல்லாம் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருந்தது. அப்படி பல ஆண்டுகளாகக் குடியிருந்து கொண்டிருப்பவர்களுக்கு அரசு ஒரு தனிச் சட்டத்தை உருவாக்கி, அவர்களுக்கே பட்டா வழங்குகின்ற ஒரு நிலையைக்கூட ஏற்படுத்த வேண்டும். எனவே, இந்தச் சட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களிலே இருக்கின்ற நலிந்த குடிசைவாசிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதையும் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருட்டு வி.சி.டி. ஒழிப்பிற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில்,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பதற்கேற்ப இதனுடைய மூலத்தையும் கண்டறிந்து போக்குவதற்கான முறைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், விபச்சாரத் தொழில் செய்வோர் என்கிற வரிசையில் குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் என்பதையும் இணைக்க வேண்டாம் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன். குடிசை நிலம் என்பது கருணையோடு பார்த்து ஒழுங்மைக்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும் அதுகுறித்து தனியாக விவாதித்து முடிவு எடுக்கவேண்டும் என்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்து, சட்டத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவு குறித்து எனது கருத்துகளை இப்பேரவைக்குக் கீழ்க்கண்டவாறு தெரிவித்துக்கொள்கிறேன்:

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

*பிற்பகல் 12-40*

தமிழ்த் திரையுலகம் இந்தியாவில் திரைப்படத் தயாரிப்பில் இரண்டாம் இடத்தில் இருந்தது. திருட்டு வீடியோவினால் இந்த நிலை



மாறி நாளுக்கு நாள் நலிவுற்ற நிலையில், நம் கண் முன்னால் காட்சி அரங்குகள் எல்லாம் கல்யாண மண்டபங்களாகவும், வணிக வளாகங்களாகவும் மாறி வந்த நிலையில், இந்தியத் திரைப்படத் துறையையே நம்பி பிழைத்துக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள், பட்டினிக் கொடுமைக்கு ஆளானார்கள். எடுத்த திரைப்படம் ஏற்படுத்திய நஷ்டத்தின் விளைவால், அந்தத் திரைப்படத்தைத் தயாரிக்க இயலாத நிலை உருவானது. திரைப்படத் தயாரிப்பாளர்கள் மட்டுமின்றி, திரைப்படத்திற்குப் பின்னால் உழைக்கும் தொழில்நுட்பக் கலைஞர்கள், சண்டைப் பயிற்சிக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், ஒலி, ஒளியியல் கலைஞர்கள், உப நடிகர், நடிகையர் போன்ற ஏராளமான தொழிலாளர்கள் திரைப்பட வாய்ப்பின்றி, திக்கற்று இருந்த நிலையில், அவர்கள் வாழ்விற்கு ஒரு வெளிச்சமாக இச்சட்டத் திருத்தம் அமையும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருட்டு வீடியோவினால் திரைப்படத் துறையில், திருட்டு வீடியோ தயாரிப்பாளர்களுக்கும், இரசிகர்களுக்குமிடையே பல இடங்களில் மோதல் ஏற்பட்டு, சட்டம்-ஒழுங்கு பாதிக்கும் நிலையும் ஏற்பட்டது. சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்துவதும் இச்சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, திரைப்படத் துறையைச் சார்ந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், விநியோகஸ்தர்கள், நடிகர், நடிகைகள் மற்றும் பல்வேறு தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரும் சந்தித்து, திருட்டு வீடியோவினால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பாதிப்பை எடுத்துரைத்து, பல்லாயிரக்கணக்கான ஏழைகளின் துயர் துடைத்து, அவர்தம் வாழ்வில் ஒளியேற்றிட கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், பல்லாயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் வறிய நிலையில் வேதனைப்படக் கூடாது என்று விரும்பி, அவர்தம் வாழ்வில் ஒளியேற்றிடும் எண்ணத்தில், திருட்டு வீடியோவை முழுமையாக ஒழித்திட வேண்டி, தடுப்புக் காவல் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்து, வீடியோ திருட்டுக் குற்றத்தில் ஈடுபடுவோருக்கும் இத்தடுப்புக் காவல் சட்டம் பொருந்தும் வகையில், இச்சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

நடைமுறையில் இருக்கும் சட்டங்களால் எதிர்பார்க்கும் அளவு, உரிய நேரத்தில், உரிய வகையில் திருட்டு வீடியோ ஒழிப்பினை முழுவதுமாக செயல்படுத்த போதுமானதாக இல்லை. ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும்போதே, அடுத்த திருட்டு வீடியோ குற்றத்தைத் தொடர்ந்து செய்து வந்த நிலையில், திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வியர்வையைத் திருட்டு வீடியோ தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நபர்கள் வியாபாரமாக்கிக் கொழித்து வந்த நிலையில், தாயுள்ளத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்திருட்டு வீடியோ தடுப்புக்காக இச்சட்டத் திருத்தத்தை இயற்ற ஆணையிட்டுள்ளார்கள். திருட்டு வீடியோ தயாரிக்கும் திருடர்களைக் கண்டுபிடித்து, உடனே அவர்களுடைய செயல்பாட்டைத் தடுக்கும்வகையில், அவர்கள் பிணை மனுவில்கூட வெளியே வர முடியாமல் சிறைக்கு அனுப்பப்பட்டு, ஒரு வருடமாகிலும் மீண்டும் அத்தொழிலில் ஈடுபடாதவாறு தடுக்க வகை செய்கிறது இச்சட்டத் திருத்தம். இச்சட்டத் திருத்தத்தின்மூலம், திருட்டு வீடியோ தொழிலில் ஈடுபட்டுள்ள சமூகக் குற்றவாளிகளின் பிடியிலிருந்து திரைப்படத் துறையைக் காப்பாற்ற இயலும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில் கொண்டுவரப்படும் இச்சட்டத் திருத்தத்தால், திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள் வாழ்வில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒளியேற்றி இருக்கின்றார்கள் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தாயுள்ளத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் பல்லாயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்ட இச்சட்டத் திருத்தத்தை ஏகமனதோடு ஏற்குமாறு இப்பேரவையைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தினைப் பற்றி பல்வேறு வகையான கருத்துகளை இங்கே பதிவு செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், இந்தச் சட்டத்தின்மூலமாக யாராவது கைது செய்யப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதா என்று கேட்டார்கள். இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யமுடியாத அளவிற்கு இன்றைக்கு அந்த வீடியோ திருட்டு ஒழிக்கப்பட்டு இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, யாரையும் திட்டமிட்டு கைது செய்யக் கூடாத ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்று சொன்னார்கள். திருட்டு வீடியோவில் சம்பந்தப்பட்ட யாராக இருந்தாலும், அவர்களை இச்சட்டம் விட்டு வைக்காது. அதற்காக அப்பாவிகளை இச்சட்டத்தின்மூலம் கைது செய்து நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதையும் நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்களும் இச்சட்டத்தில் ஏற்கெனவே இருக்கின்ற குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் பற்றிய கருத்தினை இங்கே பதிவு செய்திருக்கின்றார்கள். ஏற்கெனவே இருக்கின்ற சட்டம், குடிசையில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, ஆக்கிரமிப்பு செய்து வாழ்கின்ற மக்களுக்கு இச்சட்டம் பொருந்தாது. அவர்கள் ஏற்கெனவே குடிசைப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து வாழ்கின்ற ஏழை மக்களுக்கு, அவர்கள் வாழ்கின்ற இடம் தடையாணைக்கு உட்படாத இடமாக இருந்தால் அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு, பெறுவதற்குத் தகுதி இருந்தால் அவர்களுக்கு ஏற்கெனவே அரசு அந்தமாதிரியான ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனை இலவசப் பட்டாக்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தச் சட்டத்தில் 14/1982 என்ற இந்தச் சட்டத்தின் அடிப்படையில் குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் என்ற ஷரத்து வருகின்றது. அந்த ஷரத்தின் அடிப்படையில் குடிசை நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்கின்ற சமூகக் குற்றவாளிகளுக்குத்தான் இந்தச் சட்டம் பொருந்தும். அவர்களுக்குத்தான் இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனையும் நான் இந்தப் பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பாவி ஏழை மக்களின்மீது இந்தச் சட்டத்தின்மூலம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெறவேண்டுமென்று கோரி, அமர்கின்றேன்.

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2004) மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 17-11-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை சட்டத்திற்கு மேலும் ஒரு திருத்தம் கொண்டு வருகிற இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். ஒரு அருமையான சட்டத்தை நாம் இங்கே ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை சட்டம் என்று கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், அதை நாம் உண்மையிலேயே மனசாட்சியோடு நினைத்துப் பார்த்தோம் என்று சொன்னால் எல்லாத் துறைகளிலுமே இந்த ஒளிவின்மைச் சட்டம் என்று இருக்கிறதேயொழிய, டெண்டர் வைக்கிறபோதெல்லாம் சில பேர் சிண்டிகேட்டை வைத்துக்கொண்டு, சில பேருக்கு ஷெட்யூலே கொடுக்காத ஒரு நிலைமை. சிலபேர் அவர்களாகவே ஒரு சிண்டிகேட்டை போட்டு வைத்துக்கொண்டு, சில பேரே இதை அனுபவித்துக்கொண்டு இருக்கக்கூடிய நிலைமை. இதனால் பல முறைகேடுகள் இந்த டெண்டர் விடுவதிலே நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எந்தத் துறையாக எடுத்துக்கொண்டாலும், நான் ஒரு குறிப்பிட்ட துறை என்று சொல்ல விரும்பவில்லை. ஆனால், அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் அரசு கொஞ்சம் நடவடிக்கை எடுத்து, அது பொதுப் பணித் துறையாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி, உள்ளாட்சித் துறையாக இருந்தாலும் சரி, அல்லது பல்வேறு துறைகள் சார்பாக விடப்படுகின்ற டெண்டர்களில் வரக்கூடிய இந்த முறைகேடுகளை நீங்கள் முழுமையாக அகற்றினால்தான், நாம் இலஞ்ச இலாவண்யத்தைத் தமிழகத்திலே நிச்சயமாக வேரறுக்க முடியும். ஒரு நியாயமான ஆட்சியைத் தரமுடியும் என்பதிலே ஆழமான கருத்து எனக்கு உண்டு. ஆகவே, அமைச்சர் பெருமக்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த ஒப்பந்தத்தை சட்டப்படி நீங்கள் ஒளிவுமறைவின்றி, Transparency Act என்று வைத்திருக்கிறோமேயொழிய, அது உண்மையிலேயே transparent-ஆக இல்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-50

இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தம் என்னவென்று சொன்னால், பொதுவாக பொதுத் துறை நிறுவனங்களுக்கு அல்லது அரசு நிறுவனங்களுக்கு அல்லது சில வாரியங்களுக்கு, சில பொருட்களை வாங்குகிறபோது, நான்கு ஆண்டு காலத்திற்கு, அந்த வாரியத்திற்கு



வாழ்வளிக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் டெண்டரிலே பங்கேற்காமல் பொதுவாக, அப்படியே நேரடியாக வாங்கிக் கொள்ளலாம் என்ற ஒரு விலக்கை 16 (சி)-படி நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதை இப்போது மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கான ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால், இப்படிக் கொண்டு வருகிறீர்களேயொழிய, இதே அரசுகூட, அரசுத் துறைகள் தயாரிக்கிற சில பொருட்களை வாங்க மறுக்கக்கூடிய நிலையை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். பலமுறை இதைக் கொண்டு வந்தும் இருக்கிறேன்.

நானேகூட, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராக இருந்தபோது, கரூர் மாவட்டத்தில் மாயனூர் என்ற இடத்தில் டான்செம் மூலமாகத் தயாரிக்கப்படுகிற சிமெண்ட் பைப்கள், ஏற்கெனவே தயாரிக்கப்பட்டவை, இன்னும் அப்படியே போர்போல குவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றை அரசு தன்னுடைய துறைக்கு வாங்க மறுக்கிறது. பொதுவாக, குடிநீர் வடிகால் வாரியம், எங்களுக்கு அந்த பைப்பே வேண்டாம்; நாங்கள் வெளியிலே வாங்கிக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். அரசு சார்பாக வைக்கப்பட்டிருக்கிற ஒரு பெரிய தொழிற்சாலை, அங்கே பைப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன, தயாரிக்கப்பட்ட பைப்புகள் வீணாக பல ஆண்டுகளாகக் குவிந்து கிடக்கின்றன. ஆனால், அந்த பைப்பையே நீங்கள் தயவு செய்து வாங்க வேண்டுமென்று நான் அந்த இரண்டு துறைகளுடைய Industries Department Secretary மற்றும் M.A.W.S. Department Secretary ஆகிய இரண்டு பேரையும் அழைத்துக்கூட, அரசு உறுதிமொழிக் குழுவிலே நான் எவ்வளவோ பேசிப் பார்த்தும்கூட, அவர்கள் முடியாது என்று மறுத்துவிட்டார்கள்.

அதற்கு பொதுவாக இவர்கள் சொல்கின்ற காரணம், வெளி மார்க்கெட்டிலே இவற்றை நாங்கள் இன்னும் கொஞ்சம் குறைந்த விலைக்கு வாங்குவோம்; அது தரமாகவும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைத்தான் காரணமாகச் சொல்கிறார்களேயொழிய, ஏன் அரசே தயாரிக்கக்கூடிய ஒரு பைப்பை, நீங்கள் தரமாகத் தயாரிக்கக் கூடாது? நீங்கள் என்ன guideline-ஐ வைக்கிறீர்களோ, அதே guideline-படி ஏன் உங்களாலே தயாரிக்க முடியாதா? ஏன் நீங்கள் அதைப்போய் வெளியிலே வாங்குகிறீர்கள்? ஒளிவு மறைவு இல்லாமல் நீங்கள் ஆட்சி நடத்துவது உண்மையானால், ஏன் private-காரர்களிடம் போய் வாங்குகிறபோது, ஏதோ சில காரணங்களுக்காகத்தான் போய் வாங்குகிறீர்களேயொழிய, அரசு நிறுவனங்கள் தயாரிக்கிற பைப்பையே நீங்கள் வாங்க மறுக்கிறீர்கள்.

ஆகவே, மாயனூரில் உள்ள அந்த டான்செம் சிமெண்ட் தொழிற்சாலை, பல ஏக்கர் நிலத்திலே அமைந்துள்ள அந்த தொழிற்சாலையில், பைப்புகள் பல கோடி ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு, வீணாகக் கிடக்கின்றன. உங்களுடைய நிறுவனத்தை, இந்த மாதிரிச் சட்டத்தைக் கொண்டு வந்து காப்பாற்றுவதாகச் சொல்கிறீர்களேயொழிய, உங்களுடைய அரசு நிறுவனம் தயாரித்த பைப்புகள் இப்போது தூங்கிக் கொண்டிருக்கக்கூடிய நிலையை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்த்து, உண்மையிலேயே இந்தச் சட்டத் திருத்தத்திற்கு நீங்கள் உயிரோட்டம் கொடுக்கக்கூடியவர்களாக இருந்தால், அந்தப் பைப்புகளை வாங்கி, குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக நீங்கள் அந்த பைப்புகளை உபயோகப்படுத்துங்கள் என்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான ஒரு சட்டமுன்வடிவு இங்கே அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட இந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டம், இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டு, 2000 ஆம் ஆண்டுவரை இருந்து, 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, மேலும் நான்கு ஆண்டுகள், 2004 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டு, இப்போது 2004 ஆம் ஆண்டு அக்டோபரிலேயிருந்து மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பதற்கான ஒரு திருத்தச் சட்டமுன்வடிவாக இது முன்வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்ன கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள் மற்றும் அத்தகைய பிற நிறுவனங்களானவை, வாங்குகின்ற நடவடிக்கைகளில் எதிர்கொண்டு நிலைத்திருக்கும் வகையிலும், போட்டியிடும் வகையிலும், ஊக்கப்படுத்தும் நோக்குடனும் அரசு இந்த விலக்களிப்பை 2004 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து மேலும் இரண்டு ஆண்டுகள் கொண்ட ஒரு கால அளவிற்கு நீட்டிக்கச் செய்வதற்கான சட்டமுன்வடிவு இது. ஏற்கெனவே, 1988-லேயிருந்து 2004 ஆம் ஆண்டு வரை இந்தச் சட்டத்தின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு, ஆறு ஆண்டுகால அனுபவங்களைக் கணக்கிலே எடுத்து, பரிசீலனை செய்து, மேலும் இதை நீட்டிப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறதா? அல்லது, காலம் முடிந்து விட்டது என்பதற்காக இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கிறோமா? உண்மையில் நிறுவனங்கள்,



இலஞ்சத்திலும், ஊழலிலும், முறைகேடுக்கும் அடிப்படையாக இவை விளங்குகிறது என்று நான் கருதுகிறேன். திருத்தும் நோக்கம் சரியானது. அரசின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. நான் வரவேற்கிறேன், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். ஆனால், உண்மையில் நடைமுறையில் அவ்வாறு இல்லை. உதாரணமாக, நம்முடைய போக்குவரத்துக் கழகத்திலே, சேரன் போக்குவரத்துக் கழகத்திலே இஞ்சினியரிங் நிறுவனம் இருக்கிறது. அற்புதமாக, உதிரி பாகங்களையும், இதர வேலைகளையும் மற்றும் இன்ஜினியரிங் சம்பந்தமான பணிகளை அவை செய்கின்றன. ஆனால், நம்முடைய இதர போக்குவரத்துக் கழகங்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களைப் போக்குவரத்துக் கழகங்களின் இன்ஜினியரிங் நிறுவனப் பிரிவில் பெறுவதற்குப் பதிலாக, வெளியிலே purchase செய்கின்றன. இது ஏன்? அதேமாதிரி..

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் தங்களுடைய உதிரிப் பாகங்களைக் கொள்முதல் செய்கின்றபோது, இந்த Transparency Act-படி வெளிப்படையான அந்த Tender Act-ன்படி, திறந்த வெளிப்படையான டெண்டர் கேட்கப்பட்டு, அதிலே குறைந்த விலையைக் கொடுக்கின்றவர்களிடமிருந்து அந்தப் பொருட்கள் வாங்கப்படுகின்றன. அந்த டெண்டரில் அவர்களும் கலந்துகொள்ளலாம். ஆகவே, அந்தப் போட்டியிலே கலந்துகொண்டு அவர்களும் அதிலே பங்கேற்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே அவர்களும் குறைந்த விலைப் பட்டியல் கொடுத்தால், அவர்களுடைய பொருட்களும் வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படியான வாரியங்கள் மற்றும் அத்தகைய பிற நிறுவனங்களிடமிருந்து பெறப்படும், அவற்றால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் அல்லது வழங்கப்பெறும் பணிகள் சேவைகளைப் பொறுத்தளவிலான கொள்முதல்களுக்குப் பொருந்துதல் கூடாது என்று இது சொல்கிறது. ஆகவே, ஜெனரலாக கொண்டுபோய் வைக்கின்ற டெண்டரிலே அரசுத் துறை நிறுவனங்கள் எதற்குப் பங்கெடுக்க வேண்டும்? தனியாரோடு நாம் ஏன் போட்டியிட வேண்டும் நம்முடைய சரக்கை நாம் வாங்கவேண்டியதுதானே?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** போக்குவரத்துக் கழகங்களுக்குச் சில நேரங்களில் பொருளாதார இடர்பாடுகள் காரணமாக சிக்கன நடவடிக்கை தேவைப்படுகிறது. ஆகவே, குறைந்த விலையில் எங்கே பொருள் கிடைக்கிறதோ, அங்கேயிருந்து வாங்கிட வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படுகின்றபோது, அப்போது தவிர்க்க முடியாத சூழ்நிலையிலே, குறைந்த விலைப் பட்டியலில், தரமான பொருளாக, குறைந்த விலையிலே கிடைக்கின்ற பொருளைத்தான் வாங்குகின்ற சூழ்நிலை. சில நேரங்களில் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல பைப்புகளைப்பற்றி திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். உண்மையிலே நம்முடைய உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்குத் தேவையான, குடிநீர்ப் பணிகளுக்குப் பயன்படுத்த பைப்புகளை நம்முடைய பொதுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் உற்பத்திச் செய்கின்றபோது, அவற்றை வாங்குவதற்குப் பதிலாக முத்து பைப்ஸ் நிறுவனம் என்ற ஒரு நிறுவனத்திடமிருந்து அனைத்து உள்ளாட்சி மன்ற அமைப்புகளும் பெற வேண்டுமென்று வாய்மொழியாகவோ அல்லது வேறுவகையாகவோ உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இதே சட்டப் பேரவையில் ஏற்கெனவே கடந்த ஒரு முறைகூட நான் இதைப்பற்றி விவாதித்தேன். அவ்வாறான உத்தரவு எதுவுமில்லை; தரமானதாகவும், மலிவானதாகவும் எங்கே கிடைக்கிறதோ அங்கே வாங்கிக்கொள்ளலாம் என்று அப்போதிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சபையிலே விளக்கம் அளித்தார்கள். ஆனால், நடைமுறையில் மாவட்ட ஆட்சி நிர்வாகங்களின் மூலமாக முத்து பைப்ஸ் நிறுவனத்திடமிருந்துதான் பெறவேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுகிறது. இல்லையென்றால், பில்லை சாங்ஷன் செய்ய மாட்டேன் என்கிறார்கள். பல பேரூராட்சிகளிலே இம்மாதிரியான நெருக்கடிகள் இருந்து கொண்டிருக்கின்றன ஆகவே, இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால், இதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய நம்முடைய அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவன அமைப்புகள் இந்தச் சட்டப்படியான முறையிலே செயல்படுத்துவதை அனுமதித்து ஊழலையும், முறைகேடுகளையும் தவிர்த்து நேர்மையான நடைமுறையை உத்தரவாதப்படுத்துவதாக இருக்கவேண்டுமென்பதை மாத்திரம் தெரிவித்து, நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.



**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை சட்டத்தை நான்கு ஆண்டு காலத்திலிருந்து ஆறு ஆண்டுக் காலமாக உயர்த்துவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனாலும் இந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்குவதிலே அந்த ஒளிவின்மை என்பது இல்லாத காரணத்தினால் உயர் நீதிமன்றத்திலே பல்வேறு வழக்குகளை contractors போட்டிருக்கக்கூடிய சூழ்நிலை இந்த மூன்று ஆண்டுக் காலத்திலே உருவாகியிருக்கிறது. ஆகவே, இவையெல்லாம் இல்லாமல் இந்த ஒளிவின்மைச் சட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இருந்தால், tender schedule யார் கேட்டாலும், ஒன்று அல்லது இரண்டு பேர்தான் வாங்குகிற மாதிரிதான் அதிக அளவு tenders இருக்கிறதே தவிர, நான்கைந்து பேர் கலந்துகொள்வதாக இல்லை. ஆகவே, அந்த நிலை எல்லாம் மாற்றப்பட வேண்டும். Internet மூலமாக டெண்டர் form பெறலாம் என்று எங்கள் ஆட்சிக் காலத்திலே இருந்தது. அதைப்போல Internet -லேயே அந்த tender form பெறக்கூடிய அந்த நிலையையும் இப்போது நீங்கள் உருவாக்க வேண்டும். பல பேர், கேட்பவர்களுக்கெல்லாம் அந்த tender forms கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அமைச்சரவர்கள், முன்பு நாங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதன்மூலம், சிறு தொழில் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்கள் அனைத்தையும் கொள்முதல் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கும் போட்டியிலே அரசுத் துறை நிறுவனங்கள் உற்பத்திச் செய்கின்ற அந்தப் பொருட்களைக் கொள்முதல் செய்யாமல் வெளியிலே தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்கின்ற போக்கு உள்ளது என்று இங்கே நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். ஆக, அப்படிப்பட்ட நிலையில்லாமல் அரசுத் துறை நிறுவனங்கள்..

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல சிறுதொழில் நிறுவனங்கள் தயாரிக்கின்ற சில பொருட்களுக்கு, அரசுத் துறை நிறுவனங்கள் அந்த price preference-ஐ இன்றைக்கும் கொடுத்துவருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

**திரு. கு. பிச்சாண்டி:** கடந்த காலங்களிலே பேசும்போது, சிறு தொழில் நிறுவனங்கள் நசிந்ததற்குக் காரணமே, இதுதான் என்று சொன்னார்கள், ஆனால், இப்போது வாய்ப்பு அளிப்பதன்மூலம் மீண்டும் சிறு தொழில்கள் நசுக்கப்படுகிறதா என்பதைத்தான் நாங்கள் கேட்க விரும்புகிறோம். ஆகவே, இந்தச் சட்டத்திலே, கொள்முதலிலே ஒளிவின்மை என்கின்ற நிலையை ஏற்படுத்த, கொள்முதலை, வாரியங்கள், மற்றவையிடமிருந்தெல்லாம் செய்யப்பட வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டம் என்பது, இன்றைக்குத் தெளிவாக மக்களுக்குச் சென்றடையாமல் இருக்கிறது. விளம்பரங்கள் செய்வது என்பதுகூட, யாரும் வாங்காத தினசரி எதுவோ, அதிலேதான் விளம்பரம் வருகிறது. இரண்டு பேருக்குக்கூட தெரியாது. அந்தமாதிரி Tender Forms எல்லாம் வருகின்றன. அந்தமாதிரி இல்லாமல், நிறைய பேர் படிக்கக்கூடிய தினசரிகளிலே இந்த விளம்பரங்களை வெளியிட்டு, ஒளிவின்மையை உறுதியாக்கக்கூடிய அளவிற்கு, இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டு, முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன். குறிப்பாக, ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை சட்டம் என்கின்ற பெயராலே இது அழைக்கப்படுகிறது என்றாலும், இந்த ஒப்பந்தப் புள்ளிகளை எடுக்கிறவர்கள், ஒளிவு மறைவில்லாமல் நடைமுறைப்படுத்துகிறார்களா என்பதையும் கண்காணிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகிறேன். குறிப்பாக, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மூலமாக எடுக்கப்படுகிற ஒப்பந்தங்களில், பல்வேறு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தச் சட்டம் என்பது, பொதுவானதாக இருக்கக் கூடாது. ஆகவே, இதைத் துறை வாரியாகவும், பொதுத் துறை நிறுவனங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகிற பணிகளைக் கண்காணிப்பதாகவும் இது அமைய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தப் பணிகளைச் செய்பவர்கள், தரமானதாகச் செய்கிறார்களா என்பதிலே பிரச்சினை இருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிகளை ஒளிவு மறைவில்லாமல் நாம் வழங்குகிறோம் என்றாலும்கூட,



எடுக்கிறவர்கள் பெரிய அளவிலே ஒளிவு மறைவோடு செயல்படுத்துகிறார்கள் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற யதார்த்தமான உண்மை. எல்லாப் பணிகளிலுமே, அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அந்தப் பணிகள், தரமானதாகவும், சரியானதாகவும் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே பொதுவாக, பொதுப் பணித் துறை அமைச்சருடைய கவனத்திற்குச் சொல்ல வேண்டியது, நெடுஞ்சாலைத் துறை அல்லது பொதுப் பணித் துறையிலே வழங்கப்படுகிற பணிகளில், கடந்த முறைகளிலே இருந்த நிலைமைகள் மாறி, ஓராண்டுக் காலமாக 17 சதவிகிதம், ஒப்பந்தப் புள்ளிகளினுடைய அந்த மதிப்பீட்டுத் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குறைவு ஏற்பட்ட காரணத்தினாலே, நெடுஞ்சாலைத் துறை பணிகளிலே அவர்கள் செய்கிற பணிகள் என்பதும், தரமானதாக இல்லாமல் இருக்கின்றன என்பது என்னுடைய கருத்து. ஆனால், நான் ஏற்கெனவே ஒருமுறை இங்கே அவையிலே குறிப்பிடுகிறபோது, அமைச்சர் அவர்கள், போதுமான அளவு அதற்கான பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன என்ற கருத்தைச் சொன்னார்கள். இப்போதும் அந்தக் கருத்து நிலவுகிறது. இதன் காரணத்தினாலே, தரமானதாக வேலைகள் அமையவில்லை என்பது என்னுடைய பணிவான கருத்து. இந்தக் கருத்தை மீண்டும் நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, இந்த 17 சதவிகிதமான குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும்.

மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. இப்போது எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், திருவாரூர் மாவட்டத்திற்குத் தேவையான ஜல்லி வரவேண்டுமானால், அது கரூரில் இருந்தோ, திருச்சியில் இருந்தோ, வேறு மாவட்டத்தில் இருந்தோ, வரவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இதற்கு ஏற்படுகிற செலவு என்பது அதிகமானதாக இருக்கிறது. அதேபோல, தேவையான கிராவல் வரவேண்டுமானால், வெளி மாவட்டத்திலே இருந்து வரவேண்டி இருக்கிறது. ஆகவே, மாநிலம் முழுமையிலும் ஒரே நிலைமை என்று பார்த்தால், அது போதுமானதாக இல்லாத காரணத்தினாலே, அந்த ஒப்பந்தக்காரர்கள், வேறுவிதமான தொழிலிலே ஈடுபட்டு நட்டம் அடைகிறார்கள் என்ற காரணத்தைச் சொல்லி, வேலைகளைத் தரமில்லாத பணிகளாக் அவர்கள் மாற்றிவிடுகிறார்கள். ஆகவே, இதைச் சரி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், ஒப்பந்தப்புள்ளி முடிவு பெற்றவுடன், அது கிட்டத்தட்ட-ஏறத்தாழ 17, 18 சதவிகிதம் அதனுடைய விலை-குறைவாக இருக்கின்றது என்பதுபற்றிச் சுட்டிக்காட்டினார்கள். ஒவ்வொரு வருடமும் schedule of rate-ஐ நாம் தேசிய அளவிலே, அதனுடைய புள்ளிகளை — விலைப் புள்ளிகளை — முடிவு செய்கிறோம். அதோடு மட்டுமல்லாமல், ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கின்றபோது, ஒரு பகுதியில் நாம் சாலை வசதிகளை ஏற்படுத்துகின்றபோது, அந்தச் சாலை வசதியினுடைய திட்ட மதிப்பீடு தயாரிக்கின்றபோது, அந்தச் சாலை போடப்படுகின்ற இடத்திற்கு எவ்வளவு தூரத்திலேயிருந்து ஜல்லி கொண்டு வரப்படுகின்றதோ, அந்த அளவிற்கு அவர்களுக்கு நாம் விலைப் புள்ளிகள் கொடுக்கிறோம். அதே அளவுக்கு, மணல் எங்கேயிருந்து வருகிறதோ, அந்த கிலோ மீட்டர் அளவுக்கு அந்தத் தூர அளவுக்கு நாம் அதற்குத் தகுந்தாற்போல, பக்கத்திலே இருந்தால், குறைந்த அளவும், வெகுதூரத்திலே இருந்து அவை பெறப்படுகிறபோது, அதற்குத் தகுந்தவாறு நாம் விலைப் புள்ளிகளை அவர்களுக்குக் கூட்டிக் கொடுக்கிறோம். அதில் எந்தவித பாகுபாடும் இல்லாமல் அரசு தன்னுடைய திட்ட மதிப்பீட்டைத் தயாரிப்பதில் குறைந்த அளவு, அங்கே norms fix பண்ணியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதோடு மட்டுமல்லாமல் அதன் காரணமாகத்தான், அந்தப் பணியின் உறுதித் தன்மை, அதனுடைய தரம் குறைகிறது என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொரு சாலையும் போடப்படுகிறபோது அதனை மூன்று பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு சாலையையும் போட்டு முடித்தபிறகு, அதை Quality control check செய்து, உள்ளபடியே திட்ட மதிப்பீட்டில் இருக்கிற அளவுக்கு அவர்கள் அந்தச் சாலையைப் போட்டிருக்கிறார்களா என்பதை உறுதி செய்த பிறகுதான் அடுத்த கட்டப் பணியை செய்ய நாம் அனுமதிக்கிறோம். அதற்குண்டான, அவர்கள் செய்திருக்கிற பணி அளவிற்கு விலைகளும் மதிப்பீடுகளும் தயார் செய்து அவர்களுக்கு நாம் பணத்தைப் பட்டுவாடா செய்கிற வரையறையும் இந்தத் திட்ட மதிப்பீட்டில் இருக்கிறது. ஆகவே, தரம் இல்லாத பணி எங்குமே நடைபெறுவதற்குச் சாத்தியம் இல்லை. மாண்புமிகு இதய



2004 நவம்பர் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, அது பொதுப் பணித் துறையினுடைய பணியாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையினுடைய பணியாக இருந்தாலும் சரி, மற்ற துறைகளினுடைய பணியாக இருந்தாலும் சரி, அவை தரமானதாகவும், உறுதியானதாகவும் இருக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், நாம் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு பணியையும் ஆய்வு செய்து அதனுடைய தரத்தை, துறையில் சரியாகக் கடைபிடிக்கின்றார்களா என்பதையும் அரசு ஆய்வு செய்து, அவ்வப்போது தக்க ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை அவசரச் சட்டம், 2004 அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி அவசரமாகப் பிறப்பிக்கப்பட்டு, இன்று சட்டப் பேரவையிலே இங்கே ஒப்புதலுக்காக, நிறைவேற்றுவதற்காக வைக்கப்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்பது வரவேற்கக்கூடியதாக இருந்தாலும், ஏற்கெனவே நடைமுறையில் இருக்கக்கூடிய நம்முடைய நடைமுறை அமைப்புகள், இந்த ஒளிவின்மை சட்டத்தின் அடிப்படையில் இருக்கிறதா என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கிற நாம் எல்லோரும் மனசாட்சியோடு எண்ணிப் பார்க்கக்கூடிய நிலையில் நாம் இந்தச் சட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும். பொதுவாகச் சொல்வதற்கு இங்கே எல்லா நிலைகளிலும் ஒளிவின்மை ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் நிலை என்று சொன்னாலும்கூட, தமிழக அரசாங்கத்திலே இருக்கக்கூடிய அரசுத் துறைகள் அல்லது பல்வேறு அரசுக்குச் சொந்தமான சார்பு நிறுவனங்களிலே நிறைவேற்றக்கூடிய அந்த ஒப்பந்தப் புள்ளிகள், ஒளிவு மறைவின்மை என்று சொல்லக்கூடிய அந்தக் கருத்துக்கு மாறுபட்ட நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. நமக்கு இவர்கள் எல்லாம் வேண்டியவர்கள், இவர்கள் எல்லாம் வேண்டாதவர்கள், இவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்படவேண்டும் என்ற நிலையிலே இன்று நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொன்னால், அதை எல்லாம் தவிர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில்கூட, திட்ட மதிப்பீடு முழுமையாக அங்கே நிறைவேற்றப்படுவதாகச் சொன்னார்கள். **

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **இங்கு பொத்தாம்பொதுவாகச் சொன்னார்கள். குறிப்பிட்ட பணியில், எந்தப் பணியில் அந்தமாதிரியான வேலைகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதை அந்தத் துறையினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. ஒரு குற்றச்சாட்டு சொல்லும்போது, குற்றச்சாட்டு என்று சொன்னால் அதை உரிய ஆதாரத்தோடு, இந்த அதிகாரி சொன்னார், இந்தப் பணி சம்பந்தமாகச் சொன்னார் என்று சொல்லவேண்டுமே தவிர, ** என்று சொல்வது சரியல்ல. தாங்கள் பேசியது அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்று பார்க்கின்ற நேரத்திலே, பொதுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் என்று வருகின்ற நேரத்திலே, இங்கே நலிவடைந்த நிலை என்று சொல்லியும், இவை நட்டத்திலே இயங்குவதாகச் சொல்லியும், வரக்கூடிய காலக்கட்டங்களிலே இந்த ஒளிவு மறைவின்மை சட்டத்தின் அடிப்படையிலே அவற்றுக்கெல்லாம் சேதம் விளைவித்துவிடக் கூடாது. அரசு அதைப் பாதுகாக்க வேண்டும். ஆகவே, அந்தவகையிலே இந்தச் சட்டம் என்ன நோக்கத்திற்காகக் கொண்டு வரப்படுகிறதோ அது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கருத்து சொல்லி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தில் நிறைய கல்நார் பைப்புகள் தேங்கி இருப்பதாக இங்கே சொன்னார்கள். அதை அரசே வாங்குவதற்கு முன்வரவில்லை என்றுகூடச் சொன்னார்கள். தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மூலமாக அந்த கல்நார் பைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகத் தயாரிக்கப்பட்டு, அதற்காகவே செய்யப்பட்டுக்கொண்டு இருந்தன. அதேநேரத்தில் முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு 1998-ஆம் ஆண்டு, TWAD Board -லே வேலை செய்கிறவர்கள் turn key system என்கின்ற ஒரு சிஸ்டத்தைக் கொண்டு வந்து, அதிலே பணிபுரிகின்ற contractor-களே எங்கு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்கின்ற ஒரு உத்தரவைப் போட்டதன் காரணமாகவும், டான்செமினுடைய பைப்புகளுடைய விலை அதிகமாக இருந்த காரணத்தாலும், அங்கே நிறைய பைப்புகள், contractors டான்செமிலே தயாரிக்கக்கூடிய பைப்புகளை வாங்க முடியாமல், வேறு இடங்களிலே வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு, அதனால் பைப்புகள் தேக்க நிலை ஏற்பட்டன. இப்போது அந்த கல்நார் பைப்புகள் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தில் எதுவும் தயாரிக்கப்படவில்லை. 460 பைப்புகள் இப்போது நிலுவையில் இருக்கின்றன. அவற்றையும் குறைந்த விலையில் விற்பதற்கு இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். ஏற்கெனவே கடந்தகால ஆட்சியிலே நிறுத்தப்பட்ட turnkey system வந்திருந்தாலும்கூட, இப்போது இந்த ஆட்சி வந்த பிறகு, நீங்கள் இப்படி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து விலக்களிக்கிறபோது, அரசுத் துறை தயாரிக்கின்ற பைப்புகளை ஏன் அரசுத் துறை குடிநீர் வடிகால் வாரியமோ அல்லது உள்ளாட்சித் துறையோ அதைப் பயன்படுத்தக்கூடாது என்பது என்னுடைய Number one கேள்வி. அடுத்து, இப்போது நிறைய, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இன்ஜின்கள், இயந்திரங்கள் எல்லாம் அங்கே சும்மா கிடக்கின்றன. இடம் நிறைய இருக்கிறது. வசதிகள் இருக்கின்றன. தொழிலாளர்களுக்குச் சம்பளம் சும்மா கொடுத்து கொண்டு இருக்கிறீர்கள். வேறொரு சிமெண்ட் தொழிற்சாலையினுடைய பணத்தைக் கொண்டுபோய் அவர்களுக்குச் சம்பளமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இப்படி

[திரு. சி. ஞானசேகரன்] [2004 நவம்பர் 18

அரசே அதைப் பயன்படுத்தாமல் இருக்கக்கூடிய நிலையை நீங்கள் தவிர்த்து, மீண்டும் அந்த மாயனூர் தொழிற்சாலையைத் துவங்கி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பைப்புகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .....

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** 1999-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இதனுடைய எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொண்டு இப்போது என்ஜின்கள் இருக்கின்றன என்றால், இப்போது 4, 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. பழுதடைந்த நிலையில் அவை இருக்கின்றன. அதை வைத்துப் புதிதாக எதையும் தயார் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனம் தயாரிக்கிற பைப்பாக இருந்தாலும் தனியார் நிறுவனம் தயாரிக்கிற பைப்பாக இருந்தாலும், தரமான பைப்பாக இருந்தாலொழிய வாங்கக்கூடாது என்றுதான் அப்போது இருந்த அரசு உத்தரவிட்டது. உண்மை. ஆனால், தரம் குறைந்த பைப்பை அவர்கள் உற்பத்தி செய்ததனுடைய நோக்கம் அவர்களுக்குள்ளேயே போட்டி இருந்து, அதைச் செய்து, அது தெரிய வந்து, அதற்குப் பிறகுதான் அந்த உத்தரவு தி.மு.க. ஆட்சியில் போடப்பட்டது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பைப் தயாரிக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** இருக்கலாம். (குறுக்கீடு) இருக்கலாம். இப்போது உங்கள் ஆட்சியிலும் அப்படித்தான் பலதும் நடக்கின்றன ஆனால், இதுசம்பந்தமாக பகிரங்கமாக.....



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் பைப்பே இப்போது தயாரிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி அவர்களே, அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. அவர் ஒரு தகவலைச் சொன்னார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு உத்தரவு இருந்தது என்று சொல்கிறார். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. கோ.சி. மணி:** இதற்காகத்தான் அந்த உத்தரவு போடப்பட்டது என்று விளக்குவது என்னுடைய கடமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை சட்டத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த Amendments-குறித்து, நீட்டிப்பு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்களே தக்க பதிலைக் கூறி விட்டார்கள். அந்த சிமெண்ட் பைப்பைப் பொறுத்தவரைக்கும் அது ஏற்கெனவே ஆய்வப்பட்டிருக்கிறது. A Committee is constituted to go into this issue. The machines are obsolete machines. The technology is old technology என்ற காரணத்தால் (குறுக்கீடு) இல்லை. இதை நான் முடித்து விடுகிறேன். இருங்கள், இருங்கள்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். அவர் சொல்லி முடித்து விடட்டும்.

**திரு. கோ.சி. மணி:** நாங்கள் பேசும்போது அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகிறார்கள். அவர்கள் பேசும்போது எங்களைப் பேசவிடாமல் தடுத்தால் எப்படி? எங்களைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. உங்கள்மேல் குறை சொல்லவில்லை Sir. (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்கள்மேல் குறையே சொல்லவில்லை. நீங்கள் இருங்கள். நான் குறையே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப்படாதீர்கள் அண்ணே, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதாவது, அந்தத் தொழிற்சாலையிலே இருக்கின்ற இயந்திரங்கள், அதன் தொழில்நுட்பம் பழமையானவை. Cost of production, உற்பத்திச் செலவு அதிகமாகி விடுகிறது. பிற தனியார் துறையோடு போட்டியிடக்கூடிய அளவிற்கு அதில் குறைந்த விலையிலே உற்பத்திச் செய்ய முடியாத அளவிற்குத் தொழில்நுட்பமோ அல்லது இயந்திரங்களுடைய மேம்பாடோ, இன்னும் செய்ய வேண்டிய நிலை, இவை போன்றவை எல்லாம் இருந்த காரணத்தினால்தான் அதை நிறுத்தியிருக்கிறார்கள். இதுதான் நடைமுறை உண்மை. ஏற்கெனவே நிறுத்திவிடப்பட்டது. அது மூடப்பட்டுவிட்ட தொழிற்சாலை. இதைக் கருத்தில்கொள்ள வேண்டும் மாண்புமிகு உறுப்பினரவர்கள். (குறுக்கீடு) இல்லை. Even if it is revived (குறுக்கீடு) No. It is not under working condition. (குறுக்கீடு) It is not under working condition. It is not at all under working condition. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தத் தொழிற்சாலை செயல்பாட்டில் இல்லை. It has become a sick unit. அதனால் அதை மீண்டும் புதுப்பிப்பது என்பதுகூட அது ஒரு பொருளற்ற செயலாக ஆகிவிடும். அதற்குப் பதிலாக ஒரு புதிய தொழிற்சாலையைத் துவக்கிவிட்டுப் போய்விடலாம். புதிய தொழிற்சாலையைத் துவக்குவது, அரசுத் துறையில் துவக்குவதா அல்லது தனியார் துறையில் quality products கிடைத்தால் அங்கிருந்து வாங்கிக் கொள்வதா என்பது கொள்கை முடிவு. எனவே, அதை இத்தோடு விட்டுவிடுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பேசுகிறபோது அரசுப் பொருட்களை வாங்குவதற்கு முன்னுரிமை தருவதில்லை என்று சொன்னார்கள். அது தவறான கருத்து. திரு. கருணாகரன் அவர்கள் பேசுகிறபோதும், திரு. பிச்சாண்டி அவர்கள் பேசுகிறபோதும், திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோதும், அதைப்போலவே திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோதும் கூறிய கூற்று சரியான கூற்று அல்ல. அரசுத் துறை உற்பத்திப் பொருள்களாக இருந்தாலும் சரி அல்லது சிறு தொழில்கள்—திரு. பிச்சாண்டி அவர்கள் பேசுகிறபோது கூறினார் என்று கருதுகிறேன். சிறுதொழில்கள் — any purchase from Small Scale Industries or from Government owned undertakings அதற்கு purchase preference and price preference என்று கொடுக்கப்படுகிறது. அந்த purchase preference-ஐ நாம் கொடுத்துவிடுகிறோம். Price





preference-ல் ஒரு 10 சதவீதம் அல்லது 15 சதவீதம் என்று price preference கொடுக்கின்றபோது, அந்த price preference என்ற குறைந்த விலைக்கும் கொடுக்க முடியாத நிலையிலே இருக்கின்ற சில அரசுத் துறை நிறுவனங்கள் அதிலே வாய்ப்பினைப் பெறாத சூழல் உருவாகி விடுகிறது. இதுதான் நடைமுறையில் இருக்கின்ற உண்மை. மற்றபடி அரசுத் துறையிலே இருக்கின்ற நிறுவனங்களுடைய பொருட்கள் எல்லாம் அரசால் வாங்கப்பட்டு வருகின்றன என்பதுதான் யதார்த்தமான உண்மை என்பதனை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

டெண்டரைப் பொறுத்தவரை, quality-யைப் பொறுத்தவரைக்கும் சொன்னார்கள்; மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது 80 சதவீதம் அல்லது 70 சதவீதம் அல்லது 60 சதவீதம் of the estimate would suffice to bring in a quality and end result என்று சொன்னார்கள். அது உண்மையிலே தவறான ஒன்று. நாங்கள் தனியாக இதனை ஒரு ஆய்வு செய்தோம். சாலைப் பணியாக இருந்தாலும் சரி, பொதுப் பணித் துறையாக இருந்தாலும் சரி, Water Board ஆக இருந்தாலும் சரி, மற்ற கட்டடப் பணிகளாக இருந்தாலும் சரி, கிட்டத்தட்ட 30-லிருந்து 32 சதவீதம் அதிலே estimates, schedule of rates அதிகமாக இருந்தது என்பதுதான் உண்மையிலே கண்டறியப்பட்டது. A national standard is being pursued in this regard. அகில இந்திய அளவிலே ஒரு வரையறை இருக்கிறது. அந்த வரையறையினையொட்டி இது ஆயப்பட்டது. ஆயப்பட்டு, பிறகு அதிலே நாம் கிட்டத்தட்ட 20, 22 சதவீதத்திற்கு மேல் schedule of rates-ஐக் குறைத்துவிட்டோம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால். 20, 22 சதவீதம் குறைத்தோம் இருக்கின்ற நிலையில்.

மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதைப்போல, சில பகுதிகளுக்கு —தஞ்சாவூரில் ஜல்லி கிடைக்காது; நீலகிரியில் அதேபோன்ற பிரச்சினை. இப்படி எல்லாம் வந்த பிறகு, எந்தெந்தப் பகுதிக்கு—எங்கெங்கு schedule of rates increase பண்ண வேண்டுமோ அதை அந்த ஆய்வுக்கு உட்பட்டு, அதிகாரிகள் தருகின்ற அந்தக் கணக்கிற்கு உட்பட்டு, அந்தந்தப் பணிக்கு ஏற்ப அதை நிர்ணயம் செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது. எனவே, 80 சதவீதம், 60 சதவீதத்தில் பணிகளை முடித்துவிட முடியும் என்பது நடைமுறை சாத்தியம் அல்ல. சில இடங்களில் ஏதேனும் estimate அதிகமாக இருக்கின்ற தகவல் அரசுக்கு வருமேயானால் கட்டாயம் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட

வேண்டிய ஒன்று என்பதை நான் மறுக்கவில்லை. தரக் கட்டுப்பாட்டில் அரசு மிக எச்சரிக்கையாக இருக்கிறது. அதற்காக நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் துறையைப் பொறுத்தவரைக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே மாதம் ஒரு முறை இந்தத் தரக் கட்டுப்பாட்டிற்காக ஓர் ஆய்வினை நடத்தி, தரக் கட்டுப்பாட்டுக்கு சோதனையிடுகிறார்கள்; துறைமூலமாகவும் சோதனையிடுகிறார்கள்; மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாகவும் surprise visit என்று செய்து, அந்தப் பணிகளைச் சோதனையிட பணிக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே தரக் குறைவு இருக்கிறதோ அங்கே அந்தப் பணம் கூட, அதாவது மீதி தர வேண்டிய பணத்தை, தரக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டு, தரக் கட்டுப்பாட்டை நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதனை நான் எடுத்துச் சொல்கிறேன். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2004 நவம்பர் 18

## (இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2004), மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன். ஆஸ்தான வித்துவான் ஞானசேகரன். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி அவசரச் சட்டம் இப்போது சட்டமுன்வடிவாக கொண்டுவரப்பட்டு இயற்றப்பட இருக்கிறது. இதை காங்கிரஸ் கட்சி சார்பாக நான் வரவேற்கிறேன். அதேநேரத்திலே, இப்போது 25 விழுக்காடு என்று இருந்த கேளிக்கை வரியை நீங்கள் 20 விழுக்காடு என்றும் பிறகு, அதுவே புதிய திரைப்படங்களுக்கு 15 விழுக்காடாகவும், பழைய திரைப்படங்களுக்கு 10 விழுக்காடாகவும் இப்போது குறைத்திருக்கிறீர்கள். இந்தப் பராமரிப்புக் கட்டணம் என்று இருப்பதைக்கூட, இப்போது நீங்கள் Non-A.C.-ஆக இருந்தால் 50 காசு அல்லது A.C.-ஆக இருந்தால் ஒரு ரூபாய் என்றும் இப்போது வசூலித்துக்கொள்ளலாம் என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறீர்கள். ஆனால் இந்த A.C. Theatre-களிலே, உட்காரும்போது மட்டும்தான் A.C. இருக்கிறதேயொழிய, பிறகு அவன்பாட்டுக்கு off பண்ணிவிடுகிறான். சில நேரங்களிலே A.C.Theatre-களிலே A.C.-யே போடுவது இல்லை. Off-time என்றால் பராமரிப்பதே இல்லை. இதையெல்லாம் கண்காணிக்கவேண்டும். ஏனென்றால், வரியை மட்டும்தான் நாம் correct-ஆக வாங்குவதற்கு agency வைத்திருக்கிறோமேயொழிய, சரியாக

@ 17-11-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2004 நவம்பர் 18] [திரு. சி. ஞானசேகரன்]

இவர்கள் திரையரங்குகளை நடத்துகிறார்களா என்பதைப் பார்ப்பதற்கு சரியான ஒரு inspection agency கிடையாது.

R.D.O. போய் check பண்ணலாம் என்று இருக்கிறது. யாருமே போய் பார்ப்பது இல்லை. ஆகவே, நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்வது எல்லாம், இந்தத் திரையரங்குகளுக்கு நாம் இவ்வளவு சலுகைகளை கொடுத்தும்கூட, இவர்கள் அதைச் சரியாகப் பராமரிப்பதில்லை. சில தியேட்டர்களிலே அமரவே முடிவதில்லை. சில தியேட்டர்களிலே நாற்காலிகளுக்குக் காலே கிடையாது. அது எப்போது விழும் என்று தெரியாது. சில நேரங்களிலே சட்டை, வேட்டியை எல்லாம் கிழித்துக்கொண்டு வர வேண்டியதாயிருக்கிறது. ஆகவே, இதையும் முறைப்படுத்துவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது கேளிக்கை வரியை எல்லாம் குறைத்து இருக்கிறோம். இதைக் குறைக்கிற அளவுக்கு, சினிமா கட்டணம், அதைப் பயன்படுத்துகிற, பொதுவாக ஏழையெளிய மக்கள் சினிமாக் கொட்டகைக்குப் போகிறபோது, அவர்களிடம் அதிகமாக வசூலிக்கிற ஒரு நிலை இருக்கிறது. நாம் எவ்வளவு வரியைக் குறைக்கிறோமோ, அந்த அளவுக்குப் பயனடையக்கூடிய வகையில் நுகர்வோர்கள், யாரெல்லாம் சினிமா பார்க்கப் போகிறார்களோ அந்த ஏழை எளிய மக்களுக்கு, இந்த டிக்கெட் விலையைக் குறைப்பதற்கும் நீங்கள் ஆவன செய்ய வேண்டும். அதைக் கண்காணிக்கிற ஒரு நல்ல அமைப்பை உருவாக்கி, பொதுவாக ஏழை எளிய மக்கள் பார்ப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தின்மூலம், புதிய படங்கள், பழைய படங்கள் என்றெல்லாம் பகுக்கப்பட்டு, திரைப்படத் தொழில் துறையை ஊக்கப்படுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். அதைப்போல, மக்கள் அதிகமாக சென்று காணக்கூடிய அளவிற்குத் திரையரங்குகள் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப் போல, திரையரங்கங்களின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற, இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற சீட்டு ஒன்றுக்கு 50 பைசா, அதேபோல ஒரு ரூபாய் என்கின்ற அந்தத் தொகைகள் எவ்விதமாக அங்கே பயன்படுத்தப்படுகின்றன; அமல்படுத்தப்படுகின்றன

என்பதைப் பார்வையிடுவதற்கும் கண்காணிப்பதற்குமான ஒரு நிலை இருக்குமேயானால், அதன்மூலமாக மக்கள் சென்று திரைப்படத் தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதில் இன்னொன்று, ஒரு சட்டம் வருகின்றபோது மிகத் தெளிவாக வார்த்தைகளுக்கு, விளக்கங்கள், வடிவங்கள், பொருள்கள் கொடுப்பது உண்டு.

இதிலே பழைய படங்கள், புதிய படங்கள் என்கிற சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. பழைய படங்கள் என்பதற்கும், புதிய படங்கள் என்பதற்கும் என்ன பகுப்பினை அரசு இந்தச் சட்டத்தின் மூலமாக தெரிவிக்கிறது.? ஐந்து வருடத்திற்கு முன்பு வந்த படம் பழையதா? அல்லது போன மாதம் வந்த படம் பழையதா? புதிய படம் என்பது இன்றைக்கு வருவதா அல்லது போன வாரம் வந்ததா? ஆக, எந்த அளவீட்டைக் கொண்டு பழைய படம், புதிய படம் என்பதை இந்தச் சட்டத்தின் மூலமாக நீங்கள் வகுத்திருக்கிறீர்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதாக என்னுடைய கருத்தினை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு 2004 அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் கொண்டு வரப்பட்டு இப்போது நிறைவேற்றுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் இந்த மாதம் கூடும் என்று தெரிந்தும்கூட இந்தச் சட்டமுன்வடிவு அவசர அவசரமாக அக்டோபர் முதல் தேதியிலேயே இங்கே அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதேநேரத்திலே, இந்தச் சட்டமுன்வடிவிலே சொல்லப்பட்டிருப்பது திரைப்படத்திற்கு ஊக்கம் அளிக்கும் என்பது நோக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நலிந்த திரைப்படத்தை அல்லது திரைப்பட உலகத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், அப்படி இந்தத் திரைப்பட உலகத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நம்முடைய அரசாங்கத்திற்குத் திரைப்படத்திலே இருக்கக்கூடிய சமூகச் சீர்கேடுகளைக் களைய வேண்டும் என்று சொல்லக்கூடிய பொறுப்புணர்வும் அந்தத் தொழிலிலே





ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் இருக்க வேண்டும் என்று இதிலே சொல்லப்பட்டிருந்தால் அது இன்னும் மேலும் மெருகூட்டி வரவேற்கக்கூடியதாக இருந்திருக்கும்.

திரைப்படம் ஒரு மிகப் பெரிய மக்கள் தொடர்பு சாதனம். இதை பொழுதுபோக்கு ஊடகம் என்று சொன்னாலும்கூட, மக்களை எளிதிலே ஈர்க்கக்கூடிய ஊடகமாக இன்று ஒரு மிகப் பெரிய ஊடகமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இன்றைய திரைப்படம் கடந்த காலங்களிலே இருந்த திரைப்படங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே எவ்வளவு வேறுபட்டிருக்கிறது; பெண்மையைக் கொச்சைப்படுத்தக்கூடிய நிலையிலே, பெண்மையை இழிவுபடுத்தி அருவருப்பாக நடத்தக்கூடிய நிலையிலே திரைப்படத்தினுடைய போக்கு போய்க் கொண்டிருக்கிறது.

அதேநேரத்திலே வன்முறையைத் தூண்டக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆபாசகாட்சிகள் அதிகமாக வரக்கூடியதாக இருக்கிறது. இதனாலே படிக்கக்கூடிய மாணவர்கள்கூட கல்லூரி வகுப்புகளுக்கு, பள்ளி வகுப்புகளுக்குச் செல்லாமல் இன்று அதையெல்லாம் விட்டுவிட்டு திரைப்படத்திற்குப் போகக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

குறிப்பாக படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் இப்போதைய திரைப்படங்களைப் பார்த்து தங்களுடைய வாழ்க்கையைச் சீரழித்துக்கொள்ளக்கூடிய நிலை உருவாகின்ற இந்த வேளையில் அதிலும் இன்னும் வலியுறுத்திச் சொல்வோமேயானால், பழைய திரைப்படங்களைவிட இன்றைய திரைப்படங்கள் நம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தை, பண்பாட்டை முழுக்க, முழுக்க சீரழிக்கக்கூடியதாகவே இருக்கின்றன. அதிலும் இப்போது பாடல் என்று சொன்னாலும் சரி, கதையாக இருந்தாலும், வசனமாக இருந்தாலும், உடையலங்காரமாக இருந்தாலும், அபிநயம், எல்லாமே அருவருக்கக்கூடிய நிலையிலே இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு இலாப நோக்கம் என்ற உணர்வு இல்லாமல், சமூகப் பார்வையோடு படங்களைத் தயாரிக்க அரசு வலியுறுத்த வேண்டும். இப்போதுகூட தணிக்கைக் குழு இருக்கிறது. தணிக்கைக் குழுவிலே என்ன இருக்கிறது, ஒன்றுமே இல்லை. ஆகவே, (குறுக்கீடு) அபிநயம் என்றால் என்ன என்று அமைச்சர் கேட்கிறார். இந்த....

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அபிநயத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். அவர் சொல்ல ஆசைப்படுகிறார். "கல்யாணம்தான் பண்ணிக்கிட்டு ஓடிவிடலாமா? இல்லை பிள்ளையைத்தான் பெத்துக்கிட்டு ஓடிவிடலாமா?" இந்த ஒரு பாட்டுதானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஜி.கே. மணி, ஒன்றும் சொல்லவில்லை. அமைச்சர், அமைச்சருக்குப் பிடித்த பாட்டைச் சொன்னார்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரிலிருந்து இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெரியவர்கள், சமூகச் சிந்தனையாளர்கள், பொது நல நோக்கிலே இருக்கக்கூடியவர்கள் எல்லோருக்கும் அந்தச் சிந்தனை இருக்கிறது. நான் மறுக்கவில்லை, குறைவாகச் சொல்லவில்லை. ஆனால், அது நடைமுறையிலே இருக்கிறது, அது மாற்றப்படவில்லை என்ற அந்த ஆதங்கம் எல்லோருக்கும் இருக்கிறது. இங்கே சொன்னார், "கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா?" — நான் குறித்து வைத்திருக்கிறேன்— "ஓடிப் போய் கல்யாணம்தான் கட்டிக்கலாமா?"— எவ்வளவு வேதனையான பாட்டு பாருங்கள். —" தாலியைத்தான் கட்டிக்கிட்டு பெத்துக்கலாமா? புள்ளகுட்டி பெத்துக்கிட்டு கட்டிக்கலாமா?" எவ்வளவு வேதனையான பாட்டு பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இது மிகவும் சிக்கலான சப்ஜெக்ட்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, சிக்கலான சப்ஜெக்ட் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சட்டமுன்வடிவுக்கு வாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் பாருங்கள். "எப்படி, எப்படி? பெண் சமைஞ்சது எப்படி? சக்கரவள்ளிக் கிழங்கு நீ சமைஞ்சது எப்படி?" எவ்வளவு வேதனையாக இருக்கிறது பாருங்கள். சமூகத்திலே இன்றைக்கு—



2004 நவம்பர் 18]

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** அப்புறம் பாருங்கள். "சின்ன வீடா வரட்டுமா, பெரிய வீடா வரட்டுமா, மேஸ்திரிக்கு சின்ன வீடு பிடிக்குமா, பெரிய வீடு பிடிக்குமா?"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது, என்னென்ன பாட்டைக் கேட்க வேண்டும் என்று, தமிழ் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்துகின்ற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், தவறான இடத்தில் அல்லது செல்லாத இடத்தில் இந்தக் கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார். Censor Board நினைத்தால் இதையெல்லாம் தடுத்து விடலாம். நீங்கள் மைய அரசிடம் வற்புறுத்தி Censor Board -னுடைய Regulatory Procedures-ஐ நீங்கள் மாற்றும்படி கூறவேண்டும். அப்படி, தமிழ்ப் படத்திற்கும் மட்டுமல்ல, இந்தி சினிமாவிலும் இருக்கிறது. எல்லாப் படங்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. நமது நாட்டிற்கு, மாநிலத்திற்கு ஒட்டுமொத்தமாக சினிமா எப்படியிருக்கவேண்டும்; எந்த ஒழுக்க ரீதியாய் இருக்க வேண்டும் என்பதற்கு மைய அரசு ஒரு வரையறை கொண்டுவர வேண்டும். Censor Board அத்தகைய regulation-களைக் கொண்டுவர வேண்டும். அதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சொல்லக்கூடிய இதே கருத்தை அந்தத் தணிக்கைக் குழுவிடமும் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். தணிக்கைக் குழு முன்பாக போராட்டம்கூட நடத்த நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம் என்ற செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை அதாவது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கொஞ்சம் சட்டமுன்வடிவைப் பாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. மத்திய அரசு, மாநில அரசு என்ற அந்தக் கோணத்திலே பார்க்காமல் இது சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது என்ற கோணத்திலே பாருங்கள். இங்கேகூட நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இந்தத் திரைப்படத் தொழிலை ஊக்குவிப்பதற்காகக் கொண்டுவரக்கூடிய, அந்த உயர்ந்த நோக்கத்திற்குக் கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவிலே, அதைக்கூடச் சொல்லியிருக்கலாம். ஏன் என்று சொன்னால், இந்தப் பாடல் ஆசிரியர்கள், கதையாசிரியர்கள் இன்னும் வசனகர்த்தாக்கள் இன்னும் உடை அலங்காரம் செய்யக்கூடியவர்கள், இயக்குநர்கள் மற்றவர்கள் எல்லோருக்கும் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும் ஒரு வேண்டுகோளாக வைப்பது நல்ல திரைப்படங்களாக வரவேண்டும்; நாட்டுப்பற்றுள்ள திரைப்படங்களாக, மாணவர்களை, இளைஞர்களை ஒழுக்கத்திற்கு ஆளாக்கக்கூடியவர்களாக, வேலைவாய்ப்பைத் தேடிச் செல்லக்கூடியவர்களாக, பொருளாதாரத்தில் உயர்நிலைக்குத் தன்னை உயர்த்திக்கொள்ளக்கூடிய அந்தச் சமூகச் சிந்தனையோடு நல்ல படங்களை கொண்டுவருவதற்குத் திரைப்பட உலகிலே இருக்கக்கூடிய எல்லோரும் முன்வர வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேநேரத்திலே, நான் படத்தையே குற்றச்சாட்டு சொல்லாமல் - இங்கேகூட நீங்கள் வரி விலக்கைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். ஒரு தியேட்டரிலே குளிர்சாதன அறையிருந்தால் அதற்கு ஒரு ரூபாய் கூடுதலாக வசூலிக்கலாம். இல்லையென்று சொன்னால் 0.50 காசு. உதாரணத்திற்கு, ஒரு தியேட்டரிலே 1000 டிக்கெட் சாதாரணமாக 1000 என்று சொன்னால், ஒரு காட்சிக்கு 1000 ரூபாய். மூன்று காட்சிகள், நான்கு காட்சிகள் நடக்கின்றன. அதுமட்டுமல்லாமல், நீங்கள் வரிவிலக்கு அளிக்கின்ற நேரத்திலே 25 சதவீதத்திலேயிருந்து 15 சதவிகிதம். 20 சதவீதத்திலேயிருந்து 10 சதவிகிதம் குறைத்திருக்கிறீர்கள். அதேநேரத்திலே, 40 ரூபாய் ஒரு டிக்கெட் கட்டணம் என்று சொன்னால் இங்கே நமக்கு வரியாக வரக்கூடியது 10 ரூபாய். அந்த 10 ரூபாய் கேளிக்கை வரியிலே நீங்கள் விலக்களிக்கின்ற நேரத்திலே 6 ரூபாய் அரசாங்கத்திற்கு இழப்பு. அப்பொழுது ஒரு டிக்கெட்டிற்கு அவர்களுக்கு ஆதாயம் 4 ரூபாய். அரசாங்கத்திற்கு இழப்பு 6 ரூபாய். அப்பொழுது இதிலே ஒரு ரூபாய் பராமரிப்புக் கட்டணமாக கூடுதலாக வசூலித்துக் கொள்ளலாம். ஒரு காட்சிக்கு, ஒரு டிக்கெட்டிற்கு 5 ரூபாய். 1000 டிக்கட் என்று சொன்னால், ஒரு காட்சிக்கு 5000 ரூபாய். அப்பொழுது மூன்று காட்சி, நான்கு



காட்சி என்று சொன்னால், ஒரு நாளைக்கு ஒரு திரையரங்கு உரிமையாளருக்கு ரூபாய் 15 ஆயிரத்திலேயிருந்து 20 ஆயிரம் ரூபாய் குறைந்தபட்சம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, திரையரங்கு உரிமையாளர்களுக்கு வரி விலக்கு அளித்து அவர்களை ஊக்குவிக்கக்கூடிய அதேநேரத்திலே, அரசாங்கத்திற்கு எவ்வளவு இழப்பு என்பதை நாம் எண்ணிப்பார்க்கக்கூடிய நிலையிலே இருக்கின்றோம்.

இப்படி இதையெல்லாம் நாம் செய்யக்கூடிய இந்த நேரத்திலே, இங்கே நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன், இதிலே கவனம் செலுத்தக்கூடிய இந்த அரசு, மருத்துவக் கல்லூரியிலே, பொறியியல் கல்லூரியிலே அங்கே சேர்க்கப்படுகின்ற மாணவர்கள் படக்கூடிய அவதி, வேதனை; தினந்தோறும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக நீதி மன்றத்திற்கு அலையக்கூடிய நிலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சட்டமுன்வடிவோடு நில்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்து விடுகிறேன். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், திரைப்படத்தை ஊக்குவிப்பதற்காகக் கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவிலே திரைப்படம் சமூகச் சீர்கேடுகளை களையக்கூடியவையாக, தயாரிப்பாளர்கள் நல்ல படங்களைத் தயாரிக்கக்கூடியவர்களாக வரவேண்டும். அதேநேரத்திலே, பார்வையாளர்களாக வரக்கூடிய பொது மக்களுக்குக் கட்டண விலக்களிக்க வேண்டுமே தவிர, அவர்கள் தலையிலே சுமத்தக்கூடாது. அதையும் இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லி, அமர்கிறேன்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைத் துறையைப் பாதுகாப்பதற்காக கேளிக்கை வரி என்பது புதிய பழைய படங்களுக்குக் குறைக்கப்பட்டிருப்பதை வரவேற்கின்ற அதேநேரத்தில் இன்றைக்குப் பராமரிப்புக் கட்டணம் என்ற பெயரிலே Non-A.C. Theatre-களுக்கு சீட்டுக்கு 0-50 பைசா என்றும், A.C. திரையரங்குகளுக்கு ஒரு இருக்கைக்கு ஒரு ரூபாய் என்றும் பராமரிப்புக் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரம்

[திரு. கே. மகேந்திரன்] [2004 நவம்பர் 18

மற்றும் தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் இன்றைக்கு திரையரங்குகளுடைய பராமரிப்பு என்பது மிகவும் மோசமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய பல்வேறு திரையரங்குகளில், அதில் A.C. திரையரங்குகளை எடுத்துக்கொண்டோம் என்றால், சினிமா போடும்போது A.C. என்பது பயன்படுத்தப்படுகிறது. சினிமா ஓடிக்கொண்டிருக்கும்போதே வந்திருக்கக்கூடிய பார்வையாளர்கள் சினிமாவோடு தங்களை ஒன்றுபடுத்திக்கொள்ளும்போது, அநேகமாக பெரும்பாலான திரையரங்குகளில் இந்த A.C. என்பதை off செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு, கண்காணிப்பதற்கு ஒரு ஏற்பாட்டினை அரசு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குச் சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய பல்வேறு திரையரங்குகளில் குறைந்த கட்டணம் 10 ரூபாய் என்று நிர்ணயிக்கப்படுகிறது. குறைந்த கட்டணத்திற்கு அடுத்தபடியான கட்டணம் என்பது 30 ரூபாயாக, 40 ரூபாயாக, 60 ரூபாயாக, 100 ரூபாய் வரை பல்வேறு திரையரங்குகளில் சென்னை மாநகரத்திலே வசூல் செய்யப்படுகிறது. ஆனால், அப்படிக் கொடுக்கப்படக்கூடிய அந்த டிக்கெட்டுகள் பார்வையாளர்களுக்குப் பல்வேறு தனியார் நிறுவனங்கள்மூலமாக வழங்கப்படக்கூடிய டிக்கெட்டுகள் என்பது 60 ரூபாய் என்று, 70 ரூபாய் என்று, 100 ரூபாய் என்று அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. அந்த டிக்கெட்டுகளை நாம் திரையரங்குகளுக்கு எடுத்துச் செல்லும்போது திரையரங்குகளிலே வேறு டிக்கெட்டுகள் கொடுக்கப்படுகின்றன. அங்கு கொடுக்கப்படக்கூடிய டிக்கெட்டுகளில் 30 ரூபாய், 20 ரூபாய் என்று இருக்கிறது. அதிலே Rubber Stamp என்பது— நாம் கொடுக்கக்கூடிய விலைக்கு Rubber Stamp அடித்து நம்முடைய மாநில அரசுக்கு வர வேண்டிய வருவாயை அவர்களே எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை என்பதும் சென்னை மாநகரத்தினுடைய பல்வேறு திரையரங்குகளிலும் இருக்கிறது; தமிழகத்தினுடைய பல்வேறு திரையரங்குகளிலும் இருக்கிறது. இப்படி வரி ஏய்ப்பு செய்யக்கூடிய திரையரங்குகள்மீது முறையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகவும் இந்தச் சட்டமுன்வடிவிலே நீங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2004 நவம்பர் 18]

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது திரையரங்குகளில் பராமரிப்பு ஒழுங்காக செய்யப்படுகிறதா, அதற்குப் பராமரிப்புக் கட்டணம், A.C. Theatre-க்கு ஒரு ரூபாய், சாதாரண திரையரங்குக்கு 50 காசு வழங்கப்படுகிறது என்று சொன்னார். இது 1994-ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அன்றையதினமே A.C. திரையரங்குகளுக்கு 50 காசு என்றும், சாதாரண திரையரங்குகளுக்கு 25 காசு என்றும் வழங்கப்பட்டது. மீண்டும் 2002-ஆம் ஆண்டு அது நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது புதியதாக அறிவிக்கப்பட்டதில் A.C. திரையரங்குகளுக்கு ஒரு ரூபாய் என்றும் சாதா திரையரங்குகளுக்கு 50 காசும் வழங்கப்படுவதாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கண்காணிப்பதற்காக தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு மூலமாக ஒவ்வொரு திரையரங்கும் சுகாதார முறையில் இருக்கிறதா, மேலும் தீயணைப்புத் துறை, சுகாதாரத் துறை, காவல் துறை மற்றும் அந்தத் திரையரங்குகளுக்கு உரிமம் வழங்கக்கூடிய துறை மூலமாக இப்போது கூட்டாக ஆய்வு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையிலே பராமரிப்பு சீராக இல்லாத திரையரங்குகளில், ஒரு வாரம், 10 நாட்கள் என்று அந்தத் திரையரங்குகளில் திரைப்படக் காட்சிகளை நடத்துவதை நிறுத்தி வைப்பது போன்ற பல்வேறு தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதன் அடிப்படையிலே, திரையரங்குகள் ஒழுங்காகப் பராமரிக்கப்படுவதை மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது, அறிவித்திருக்கின்ற அந்தக் குழுவானது நேரடிக் கண்பார்வையில் ஆய்வு செய்யும்போது, அவற்றைப் பரிசீலனை செய்கிறது என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது, ஆபாசப் படங்களைத் தியேட்டர்களில் திரையிடுவதாகச் சொன்னார்கள். அப்படித் திரையிடுகின்ற திரையரங்குகளைக் கடுமையான தண்டனைக்கு ஆளாக்குகின்ற வகையிலே, தண்டனையானது வழங்கப்பட்டு, அந்தத் திரையரங்குகளுடைய உரிமத்தை இரத்து செய்கின்ற வகையிலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவுரையின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன். மேலும், ஒரு நாளைக்கு 20 ஆயிரம் ரூபாய்,

[திரு. கே.பி. அன்பழகன்] [2004 நவம்பர் 18

25 ஆயிரம் ரூபாய் திரையரங்கு உரிமையாளர்கள் இலாபம் ஈட்டுகின்றார்கள் என்று சொன்னார்கள். அந்த நிலை நீடித்திருந்தால், 2,500 திரையரங்குகள் ஓடிய தமிழகத்திலே ஏன் இன்று 1,400 திரையரங்குகள் மட்டும்தான் ஓடுகின்றன என்பதை இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன். கணக்குப் போடுவதற்கு வேண்டுமென்றால், 20 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் மிச்சப்படுகிறது என்று சொல்லலாம். திரை அரங்குகள் மூடுகின்ற நிலையையும், கல்யாண மண்டபங்களாக மாற்றப்படுவதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அவற்றிற்குப் புத்துணர்வு கொடுக்கின்ற வகையிலேதான் இன்றையதினம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுக்கு ஒரு சலுகையை அறிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-40

புதிதாகத் திரையிடுகின்ற, முதல் கட்டமாக திரையிடுகின்ற திரைப்படத்திற்கு வரிகளில் சலுகை தந்திருக்கிறார்கள். அதேபோன்று, 10 வருடங்களுக்கு மேலான பழைய திரைப்படத்திற்கு மேலும் ஊக்குவிக்கின்றவகையிலே வரிச் சலுகையை அளித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல அங்கே 20 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் இலாபம் ஈட்டுகின்ற வகையிலே ஒரு நாளைக்கு எந்தத் திரையரங்கமும் நடைபெறுவது இல்லை. எந்தவிதமான வரி ஏய்ப்பையும் யாரும் செய்வதில்லை. அப்படி வரி ஏய்ப்பு செய்கின்ற திரையரங்கங்களின் உரிமையாளர்கள்மீது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைய தினம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் திரையரங்கத்திற்கு எதற்காக இப்படிச் சலுகையை வழங்கி இருக்கிறார்கள் என்றால், ஒரு திரையரங்கம் மூடப்படுகிறது என்றால், அதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தத் திரையரங்கிலே இருக்கின்ற 2 Operator-கள், டீ கடை வைத்திருப்பவர், பீடாக் கடை வைத்திருப்பவர், அங்கே முறுக்கு விற்பவன், டீ விற்பவன், சோடா விற்பவன், சைக்கிளுக்கு டோக்கன் பாஸ் போடுபவன், டிக்கெட் கிழிப்பவன், இப்படி திரையரங்கு சம்பந்தப்பட்ட எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன என்பதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா



2004 நவம்பர் 18] [திரு. கே.பி. அன்பழகன்]

அவர்கள் திரையரங்கங்களுக்கு ஒரு புத்துயிர் அளிக்கின்ற வகையிலே இப்படிச் சலுகைகளையெல்லாம் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு) திரு. புகழேந்தி

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Entertainments Act-லே இப்பொழுது நான் கேட்டது, இவர்கள் புதுப் படத்திற்கு 15 சதவிகிதமும், பழைய படத்திற்கு 10 சதவிகிதமும் என்று கொடுத்திருக்கிறார்கள். அப்படியென்றால் ஒரு சட்டத்தை clear-ஆக போட வேண்டும். எப்படி இந்த 10 சதவிகிதத்தையும், 15 சதவிகிதத்தையும் நாம் அமல்படுத்தப் போகிறோம்? எது பழைய படம்? எது புதுப் படம் என்பதற்கான ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, கல்வி அமைச்சர் பேசப் போகிறார். பதில் சொல்லப் போகிறார். ஏன் அவசரப்படுகிறீர்கள்? நிரம்பப் பசிக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நசிந்து வருகின்ற அந்தத் திரைப்படத் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக தமிழ்த் திரைப்படத் துறையினர் ஒரு பேரணியை நடத்தி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் நசிந்து வருகின்ற எங்கள் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்ததன்பேரிலே, தமிழ்த் திரை உலகத்தை அழிவுப் பாதையிலிருந்து மீட்டு முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளையும், வரிச் சலுகைகளையும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதன்படி, தற்போது மாநகராட்சிப் பகுதிகளிலும், சிறப்பு நிலை நகராட்சிப் பகுதிகளிலும் புதிய திரைப்படங்களுக்கு வசூலிக்கப்படுகின்ற மொத்தத் தொகையில் 25 சதவிகிதமும், பழைய திரைப்படங்களுக்கு வசூலிக்கப்படுகின்ற தொகையில் 20 சதவிகிதமும் என்கின்ற அளவில் கேளிக்கை வரிகள் விதிக்கப்படுகின்றன. இது புதிய படங்களுக்கு 15 சதவிகிதமாகவும், பழைய படங்களுக்கு 10 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த வரி விகிதமானது இந்த உள்ளாட்சிப் பகுதிகளிலிருந்து 5 கிலோ மீட்டர்

[திரு. சி.வி. சண்முகம்] [2004 நவம்பர் 18

சுற்றளவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நிரந்தரமான மற்றும் ஓரளவு நிரந்தரமான திரையரங்களுக்குப் பொருந்தும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய படம், பழைய படம் என்று எவ்வாறு நீங்கள் தரம் பிரிக்கிறீர்கள் என்று கோரினார். அதற்கு சட்டம் தெளிவாக இல்லை என்று சொன்னார்கள். Cinematograph Act, 1952, Section 6(a)-ன் பிரகாரம், ஒரு படம், Certificate செய்யப்பட்ட தேதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குள்ளாக இருந்தால் அது புதிய படம், 10 ஆண்டுகளுக்கு மேல் இருந்தால் அது பழைய திரைப்படம் என்பதை நான் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, நசிந்து வருகின்ற, பல இலட்சம் தொழிலாளர்களை நம்பி இருக்கின்ற திரைப்படத் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இந்தக் கேளிக்கை வரியை அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 16 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 16 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2004 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2004), மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒழுங்குப் பிரச்சினை, முக்கியமான பிரச்சினையைச் சொல்கிறேன். தமிழ்நாடு வரி விதிப்புத் தனித் தீர்ப்பாயச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று இந்தச் சட்டம் சொல்கிறது. எதற்காக என்றால், அங்கே தனித் தீர்ப்பாயம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எஸ்.ஆர்.பி. நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நோக்க காரண விளக்க உரை என்று இருக்கிறது. ஒவ்வொரு சட்டமுன்வடிவையும் எடுத்துப் பாருங்கள். தெளிவாக இருக்கும். இந்த ஒரு சட்டமுன்வடிவிலே மூன்றே மூன்று வரிகள், வேறு ஒன்றுமே இல்லை. எதற்காக அதை நீக்க வேண்டும், ஒன்று. எதற்காக தனித் தீர்ப்பாயத்தை ஒழிக்க வேண்டும் என்று தெளிவுபடுத்த வேண்டும். ஒரு நல்ல காரணத்திற்காக இந்தத் தனித் தீர்ப்பாயச் சட்டம் கொண்டு வரப்பட்டது; தனித் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட தனித் தீர்ப்பாயத்தை வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். வேண்டாம் என்று சொன்னால், அது ஏன்? அப்படியே வேண்டாம் என்று சொன்னால்கூட, தனித் தீர்ப்பாயச் சட்டத்தையே ஏன் நீக்க வேண்டும் என்று தெளிவுபடுத்த வேண்டும். அந்தச் சட்டம் ஒரு அதிகாரம்; அரசுக்குத் தரப்பட்டிருக்கிற ஒரு அதிகாரம். அந்த அதிகாரமே எங்களுக்கு வேண்டாம், அந்த ஆயுதமே எங்களுக்கு வேண்டாம் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்று சொல்ல வேண்டும். அதை முதலில் விளக்கிய பிறகு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம், அதில் தவறில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினைக்குப் பதில் வராவிட்டாலும்கூட, ஒழுங்குப் பிரச்சினைக்கு முறையாக பதில் சொல்லுங்கள். ஏனென்றால், நேற்று சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகின்ற நேரத்தில் நிகழ்ச்சி-நிரலிலேகூட இல்லை.

---

@ 17-11-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்று உள்ளது.



'சட்டமுன்வடிவு இன்றையதினம் அறிமுகப்படுத்தப்படுகிறது, அறிமுகப்படுத்த அனுமதி கோரப்போகிறார்' என்று நிகழ்ச்சிநிரலிலே இல்லை. நிகழ்ச்சிநிரலிலே இல்லாத ஒரு சட்டமுன்வடிவு நேற்றையதினம் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகவே, சட்டமுன்வடிவில் என்ன இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. நேற்று மதியத்திற்குப் பிறகுதான், நாங்கள் அதை வாங்கிப் பார்த்த பிறகு, சட்டமுன்வடிவிலே என்ன இருக்கிறது என்று தெரிந்துகொண்டோம். ஆகவே, சட்டமுன்வடிவில் இந்தத் தனித் தீர்ப்பாயம் தேவையில்லை, அதை நாங்கள் ஒழிக்கப் போகிறோம், we are going to abolish சரி. அதை ஒழிக்கப் போவதாக இருந்தாலும்கூட தனித் தீர்ப்பாயமே வேண்டாம் என்று சொல்வதற்கு என்ன காரணம்? இந்தச் சட்டமே வேண்டாம்; நீக்க வேண்டும் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்பதை விளக்கியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நேற்று அறிமுகப்படுத்திவிட்டோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அறிமுகப்படுத்தினாலும் நோக்க விளக்க உரை எங்களுக்குத் தெரியாமல் எப்படி அறிமுகப்படுத்த முடியும்? (குறுக்கீடு) சரி. பேசிவிடுகிறேன். அதில் விளக்கமே இல்லை. விளக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். அதில் என்ன தவறு? அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட காரணங்களுக்காகத்தான் இந்தச் சட்டம் அன்றையதினம் கொண்டுவரப்பட்டது. உயர் நீதிமன்றத்தில் வணிக வரி தொடர்பான வழக்குகள், நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதாலும், வரி வருவாய் வழக்குகள் பெருமளவுக்குத் தடைபட்டு இருப்பதாலும், அவற்றுக்கு முடிவுகட்டும் பொருட்டு, அந்தத் தனித் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டது. இப்போது வரி வருவாய் சீரடைந்து வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்று. அது தொடர்ந்து வரவேண்டும். பல இடங்களில் இன்னும் வரி ஏய்ப்பு இருக்கிறது. பல இடங்களில், பல வழிகளில் இன்றும் வரி ஏய்ப்பு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதிகாரிகளே அதற்குத் துணைபுரிந்து வருவதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று வந்தது. சேலத்திலே இத்தகைய வரி ஏய்ப்பு நடப்பதாக அதிர்ச்சியூட்டும் செய்தி ஒன்று வந்தது. அதேபோன்று மதுரை, சென்னை போன்ற இடங்களிலும் நடைபெற்று வருவதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, ஊழல் ஒழிப்புத் துறையினர்

வழக்குகள் தொடர்ந்திருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. நேற்றைய முன்தினம் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

அதேபோன்று, நேற்றைக்கு முன்தினம் நிதி அமைச்சரும், நம்முடைய கல்வி அமைச்சரும், இரண்டு பேரும் கலந்துகொண்ட கூட்டத்திலேகூட நிதி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஆடிட்டர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதிலே என்ன கஷ்டம் என்றால், அதிகாரிகளைப் போலவே சில ஆடிட்டர்கள்கூட இந்த வரி ஏய்ப்புக்கு உதவி வருகிறார்கள். ஆனால், அவர்கள்தான் பாலமாக இருக்க வேண்டுமென்று அமைச்சர் பேசியிருக்கிறார். எதற்காக பாலமாக இருக்க வேண்டுமென்று சொன்னார் என்று புரியவில்லை. அதையும் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பணிகளை அவர்களே எடுத்துக்கொண்டால் அமைச்சர்களுக்கு வேலையே இல்லை. அமைச்சர்கள்தான் மக்களுக்கும் அரசுக்கும் இடையில் பாலமாக இருக்கவேண்டும்; ஆடிட்டர்கள் அல்லர். நிச்சயமாக இருக்க வேண்டியது யார் என்றால், அமைச்சர்கள்தான் இருக்க வேண்டும். இதை ஏன் அவர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. போதாக் குறைக்குத் தனித் தீர்ப்பாயங்களை ஒழித்துவிட வேண்டுமென்று மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். தனித் தீர்ப்பாயம் இல்லை என்று சொன்னால் நீண்ட காலம் ஆகும். ஒரு வழக்கு நீதிமன்றத்திற்குப் போனால், உயர் நீதிமன்றத்திற்குப் போனால், குறைந்தபட்சம் 9 ஆண்டுகள் ஆகும் என்று சொல்லுகிறார்கள். ஆக, 9 ஆண்டுகள் தனி நபர் மட்டும் காத்திருக்க வேண்டும் என்பதல்ல. அரசும் காத்திருக்க வேண்டும் வரி வருவாய் வருவதற்கு. சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு, வரி வருவாய் நல்ல முறையில் அமைந்தது என்று சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அமைந்தது. ஏனென்றால் நான் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக இருந்த முறையிலே சென்ற இடங்களில் எல்லாம் நாங்கள் பார்த்தோம். அதை நாங்கள் வலியுறுத்தினோம். வலியுறுத்தியதன் விளைவாக இன்றைய தினம் நல்ல வரி வருவாய் வந்திருக்கிறது. அது தொடர வேண்டும். அது தொடர வேண்டுமென்றால், இந்தத் தனித் தீர்ப்பாயம் அவசியம் வேண்டும். அதை நீக்கக் கூடாது.

**இது முறையல்ல. இதைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"



என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது என்று எச்சரிக்கையாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, புரட்சித் தலைவருடைய ஒரு படத்திலே வந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுடைய பாட்டு எனக்கு நினைவுக்கு வருகிறது.

"திட்டம் போட்டு திருடுற கூட்டம்
திருடிக் கொண்டே இருக்குது;
அதைச் சட்டம் போட்டு தடுக்கற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்குது"

என்று ஒரு பாட்டு வரும்.

*பிற்பகல் 1-50*

அதுதான் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, திட்டம் போட்டுத் திருடுகிறவர்களைப் பிடிக்க வேண்டுமென்று சொன்னால், உடனடியாக வரி வசூலிக்க வேண்டுமென்று சொன்னால், இதைப்போன்ற தனித் தீர்ப்பாயங்கள் அவசியம் வேண்டும். தனித் தீர்ப்பாயம் இப்போதைக்கு வேண்டாமென்று சொன்னாலும்கூட, இந்தச் சட்டத்தை, உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள் என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும். பாலுக்கும் காவலாக, பூனைக்கும் தோழனாக இருக்க முயல வேண்டாமென்று கேட்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். **

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது முன்பே அது உயர் நீதிமன்றத்திலேதான் இருந்தது. உயர் நீதிமன்றத்திலே வழக்குகள் வருவதற்கு நீண்டநாட்கள் ஆகின்றன என்ற காரணத்தினாலேதான் 1992 ஆம் ஆண்டு வரி வசூலைக் கெட்டியாகச் செய்ய வேண்டும்; விரைவாகச் செய்ய வேண்டும், காலதாமதம் ஆகக் கூடாது, அரசுக்கு வரவேண்டிய வரி வருவாய் வருவதில்லை; அதை வசூலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து தனித் தீர்ப்பாயத்தை உருவாக்கிவிட்டு,

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றையதினம் அந்தத் தனித் தீர்ப்பாயத்தை வேண்டாம் என்றும், ஒழித்துக் கட்ட வேண்டுமென்றும் சொல்கிறீர்கள்; You want to abolish it. ஒழித்துவிட வேண்டுமென்று சொல்கிறீர்கள். சரி. ஒழித்துவிடுவதோடு, அந்த அதிகாரமே எங்களுக்கு வேண்டாம், இந்தச் சட்டத்தையும் நீக்கிவிட வேண்டுமென்று சொல்கிறீர்களே, அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பாயம் என்று இருந்தாலும்கூட, அதுவும் நீதி நிர்வாகத்திற்கு உட்பட்டுதான் இருக்கிறது. That doesn't come under the executive control of the Government. அதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் அதனுடைய வேலைப் பளு அதிகமாக இருந்த காரணத்தினால்—since its writ jurisdiction was overloaded with too much of work in the past—அதற்காகத் தனியாகத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. தீர்ப்பாயம் எந்த முறையில் செயல்படுகிறது என்பதைக் கடந்த காலத்தில் ஆய்ந்ததில், தீர்ப்பாயத்தில் நிலுவை அதிகமாக இருந்தது. தீர்ப்பாயத்தினுடைய பணி, செயல்பாடு செம்மையாக நடைபெறவில்லை. இதன் காரணமாக உயர் நீதிமன்றமே இந்தப் பொறுப்பை மேற்கொள்கின்றபோது அந்தப் பணி இன்னும் செம்மையாக நடைபெற்று அரசுக்கு வரவேண்டிய வருவாயும் ஒழுங்காக வரும். விரைவிலே அந்தப் பணிகளும் முடிக்கப்படும் என்ற நோக்கோடுதான் தற்போது தீர்ப்பாயம் நீக்கப்பட்டு, உயர் நீதிமன்றம் அந்தப் பொறுப்பை மேற்கொள்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். Chartered Accountants - why they should act as a bridge என்று நான் கேட்டேன் என்று நான் பேசியதுபற்றிச் சொன்னார்கள். நான் அவ்வாறு கூறவில்லை. அரசைப் பொறுத்தவரைக்கும் சுதந்திரமடைந்த காலத்திற்கு முன்னால் bureaucrats were needed for revenue collections here. ஆனால், சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு நம் நாடு அடிமை நாடு அல்ல. நாம் விடுதலை அடைந்த நாடு. Development schemes, வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையிலே, வளர்ச்சித் திட்டங்களில், திட்டப் பணிகளில் ஞானம் உடைய technocrats, scientists, professionals and chartered accountants who are interacting with industries and trade — so field level ஞானம் உள்ளவர்களை எல்லாம் பயன்படுத்தி bureaucrats செய்கின்ற பணிகளை இவர்கள் மேற்கொள்கிறபோது கட்டாயமாக நாட்டினுடைய பொருளாதாரம் மேம்பாட்டுக்கு வரும்; வளர்ச்சித் திட்டங்கள் மேம்பாட்டுக்கு வரும்



என்ற கருத்தோடுதான் அதை நான் தெளிவுபடுத்தினேன் என அவைக்கு நான் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ** அந்தப் பதப் பிரயோகம் நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ** நான் சொல்லவே இல்லை. சொல்லவும் மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை நீங்கள் சொன்னீர்கள் என்று சொல்லவில்லை. அந்தப் பதப் பிரயோகம் நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் சொல்கிறார். அவர் சொன்னார். "திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக் கொண்டேயிருக்கிறது" என்றுதான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் சொல்லியிருந்தாலும், ** அந்தப் பதப் பிரயோகம் நீக்கப்படுகிறது. அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முழுவதுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முழுவதும் இல்லை. நான்தான் சொல்கிறேன் இல்லையா? ** அந்தப் பதப் பிரயோகம் நீக்கப்படுகிறது.

THIRU S.R. BALASUBRAMONIYAN: Last, correct, correct.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ** என்று சொன்னேன். தீர்ப்பாயமும் ஒரு நீதிமன்றம்தான்.

அடுத்து, தீர்ப்பாயத்தினுடைய பணிகள் தற்போது ஒப்படைக்கப்படுவது உயர் நீதிமன்றத்திடம். ** இரண்டையும் நீக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தொடர்பாகக் குறிப்பிடப்படக்கூடிய அந்தப் பதப் பிரயோகம் தொடர்பானது நீக்கப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிலே வரி விதிப்பு தனித் தீர்ப்பாயம் நீக்கப்படும், ஒழித்துக் கட்டப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக்குரிய நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னது மாதிரி இதை ஒழித்துக் கட்டுவதனாலே அரசாங்கத்திற்கு என்ன இலாபம்? இதுவரையிலும், பொதுவாக தொடர்ந்து எந்த ஆட்சியாளர்களாக இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பிலே வந்தவர்களெல்லாம் சொன்னதனுடைய நோக்கமே வரி செலுத்தப்படாமல், வசூலிக்கப்பட முடியாமல் தேங்கிக் கிடக்கிறது; அந்த கோடிக்கணக்கான ரூபாய்களை எல்லாம், வரிகளை எல்லாம் வசூலித்தால் அரசின் நிதிச் சுமை குறையும் என்று நாம் எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இப்படித் தேங்கிக் கிடக்கிற வரியை வசூலிப்பதற்காக இந்தத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பாயத்திலே யார் சென்றாலும் சரி, அது 6 மாதத்திற்கு மேலே செல்ல முடியாது. 6 மாதத்திற்குள்ளாக அந்தத் தீர்ப்பாயத்திலே வழக்கு முடிக்கப்பட்டு நமக்கு வர வேண்டிய வரி சுட்டாயம் வந்து சேர்ந்துவிடும். ஆகவே, இப்படித் தீர்ப்பாயம் வேண்டாம்; இவர்கள் உயர் நீதிமன்றத்திற்குத்தான் செல்ல வேண்டும் என்று சொன்னால், உயர் நீதிமன்றத்திலே வழக்கு விரைவிலே முடியாமல் 9 ஆண்டுக் காலம் நடக்கும் என்று சொன்னால் அரசாங்கத்திற்கு வரி வருவாய் எப்படி வந்து சேரும்? ஆகவே, இது காலந்தாழ்த்தக்கூடிய செயலாகுமே தவிர, இந்தத் தீர்ப்பாயத்தை ஒழித்துக் கட்டுவதினாலே அரசாங்கத்திற்குக் கூடிய விரைவிலே வரி வசூலிக்க முடியும் என்ற நிலைமை இல்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்கூட சொல்கின்ற நேரத்திலே இப்போது குறிப்பிட்டுச் சொன்னார், தீர்ப்பாயம் என்பதும் நீதிமன்றம்தான் என்று சொன்னார். ஆகவே, தீர்ப்பாயம் என்பதும் நீதிமன்றம் என்ற அடிப்படை இருக்கின்ற நேரத்திலே நாம் உயர் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை.

*முற்பகல் 1-55*

இன்னொன்று. இப்பொழுது உயர் நீதிமன்றத்திலே நிறைய வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அவையெல்லாம் முடிக்கப்படவில்லை. ஆகவே, விரைவு நீதிமன்றங்கள் என்று சொல்லி அந்த வழக்குகளை முடிப்பதற்காக அங்கே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, உயர் நீதிமன்றத்திலே, இன்னும் மற்ற நீதிமன்றங்களிலே இருக்கக்கூடிய, தேங்கிக் கிடக்கிற ஏராளமான வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று சொல்லி





விரைவு நீதிமன்றங்களை உருவாக்கி, வழக்குகளை முடிக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் தீர்ப்பாயத்தை ஒழித்துவிட்டு மீண்டும் நீதிமன்றத்திற்குச் செல்வதனாலே, வரி எப்படி வசூலாகும்? வழக்குகள் தேங்குமே தவிர, வரி வசூல் விரைவாக முடியாது என்ற அந்தக் கருத்தைச் சொல்லி, இந்தத் தீர்ப்பாயம் ஒழிக்கப்படுவதனாலே அரசாங்கத்திற்குப் பெருத்த ஏமாற்றம்தானே தவிர, வேறல்ல. வரியை ஏய்ப்பவர்களுக்கு இது மேலும் சாதகமாகும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்தைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பாயத்தின் மூலமாக அரசுக்கு வருகின்ற வரி வசூல் எவ்வளவு என்பதையும்-தீர்ப்பாயத்திற்கு வழக்கு செல்கிறது. அங்கிருந்து மீண்டும் the appeal goes only to the High Court. உயர் நீதிமன்றத்திற்குப் போகின்ற வழக்கு தீர்வு பெற்று அதன்மூலம் அரசுக்கு வருகின்ற வருவாய் அதிகமாக இருக்கின்றது. தீர்ப்பாயம் செயல்படாத நிலையிலே இருக்கிறது. அரசுக்கும் வருவாய் வராத நிலையிலே இருக்கிறது. அந்தப் பணியை உயர் நீதிமன்றமே மேற்கொள்கின்றபோது directly they can go to the High Court . Then an appeal facility will be available in the High Court itself. (குறுக்கீடு) First petition goes to the High Court, அதற்கு against ஆக it may go to the Bench. அந்த முறையிலே அரசுக்கு அதிக வருவாய் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றுதான் அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியே இருந்தாலுங்கூட தற்காலிகமாக தீர்ப்பாயத்தை மட்டும் எடுத்துவிட்டு, இந்தச் சட்டத்தைக் கையிலே வைத்துக் கொள்வதிலே என்ன சிரமம்? ஏன் சட்டத்தையே நீங்கள் நீக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள்? அதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் வழக்கறிஞராக இருக்கிறார். அவருக்கு நன்றாகத் தெரியும். ஒரு Tribunal-லே ஒரு தீர்ப்பு வந்தவுடனே அதற்கு அடுத்ததாக appeal உயர் நீதிமன்றம். இந்தக் காலக்கெடு, கிட்டத்தட்ட உயர் நீதிமன்றத்திலே வரும்போது 6

வருடத்திற்கு மேலே ஆகும். ஆகவேதான், இதுபோன்ற தீர்ப்பாயத்தினுடைய தீர்ப்புகள் delay ஆகின்ற காரணத்தினால், இதற்காக வேண்டி நேரடியாக உயர் நீதிமன்றத்திற்குக் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) Tribunal-லிருந்து உயர் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். அப்போது டைரக்டாக (குறுக்கீடு) முடியாது. அடுத்த alternate remedy, they will go to the High Court.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனித் தீர்ப்பாயத்தை முற்றிலுமாக நீக்க வேண்டும் என்ற இந்தச் சட்டத்திலே -- ஏற்கெனவே பல வழக்குகளில் உயர் நீதிமன்றத்திலே பல பெரிய நிறுவனங்கள் வழக்குத் தொடுத்து பல கோடி ரூபாய் அரசுக்கு வர வேண்டிய வருமானம் மிக நீண்டகாலம் தேக்கமுற்ற நிலையிலே இருக்கிறது என்ற அந்த நிலையில் தனித் தீர்ப்பாயத்திலே பல வழக்குகள் உடனடியாக முடிக்கப்பட்டு அரசுக்கு வருமானம் வந்து கொண்டு இருந்தது. ஆகவே, மீண்டும் உயர் நீதிமன்றத்திற்கே இதனுடைய அதிகாரத்தைக் கொண்டு சென்றால் பெரிய நிறுவனங்கள் பல பேர் வழக்குகளைத் தொடர்ந்துவிட்டு அதனால் வரி வருவாய் அரசாங்கத்திற்கு வர முடியாமல் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலைதான் உருவாகும். எனவே, சாதாரண சிறிய வியாபாரிகளும் பயன் பெறுகின்ற வகையிலே இந்தத் தனித் தீர்ப்பாயம் இருந்தால் பல வழக்குகள் உடனுக்குடன் முடியும் என்கின்ற அந்த நிலையிலே அரசுக்கு வருவாய் வருகின்றவகையில் இருக்கின்ற காரணத்தால், இந்தத் தனித் தீர்ப்பாயத்தை நீக்கக் கூடாது என்ற எங்கள் கருத்தைச் சொல்லி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசட்டும்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வரி விதிப்புத் தனித் தீர்ப்பாயம் நீக்கப்படுவது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டது நல்ல நோக்கத்தோடுதான். ஆனால், வர்த்தகர்கள் மத்தியில் கடந்த காலத்தில் அதனுடைய செயல்பாடுகள் குறித்து அதிருப்தி நிலவுகிறது. எனவே, அறவே நீக்குவது என்பதற்குப் பதிலாக



பொருத்தமான முறையில் செயல்படச் செய்கிற ஒரு சூழலை உருவாக்க வேண்டுமென்றும் அதுகுறித்து பரிசீலிக்க வேண்டுமென்றும் கருத்தைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி விதிப்பு தனித் தீர்ப்பாயத்தை நீக்கம் செய்வதற்காக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன். காரணம், இந்தத் தீர்ப்பாயம் என்பது மக்களுக்கு இலகுவாகப் பயன்படுகிற முறையில் இருக்கும். இதை நீக்கிவிட்டு, நீதிமன்றம் செல்வது என்பது காலதாமதத்தை ஏற்படுத்தும். ஆனால், தீர்ப்பாயத்தினால் காலதாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை, இல்லை. தீர்ப்பாயத்திலே தீர்ப்பு வந்தால்கூட அதற்கு மேல் appeal போவதற்குக் குறைந்தது -- High Court-லே போய் stay வாங்குவதற்கு அது ஒரு 6 வருடங்கள் நிற்கும். ஆகவேதான், நேரடியாக உயர் நீதிமன்றத்திற்கு வருகிறது. தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். Quick-ஆக முடித்துவிடலாம். High Court-க்கு போய்விட்டால் quick--ஆக முடித்துவிடலாம். அடுத்த appellate remedy வந்து (குறுக்கீடு) ...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** Stamp duty-யைப் பொறுத்த வரையில் (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் விளக்கம் கொடுக்கிறேன். (குறுக்கீடு) ஏழையெளிய மக்கள் என்று கிடையாது. நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு ஏழையெளிய மக்கள் என்று கிடையாது இதிலே. (குறுக்கீடு) எதிலே. எங்கே இருக்கிறார்கள்? (குறுக்கீடு) Stamp எல்லோருக்கும் ஒன்றுதான். (குறுக்கீடுகள்)

**திரு. என். நன்மாறன்:** சிறு வர்த்தகர்கள் பாதிக்கப்படுவார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஏழைகள் பாதிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** யார் நீதிமன்றத்திற்குச் சென்றாலும், நீதிமன்றக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். அதிலே ஏழை, பாழை என்று கிடையாது.

[2004 நவம்பர் 18

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் சிவபுண்ணியம் தோழர்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள். கன்னியாகுமரிக்காரர்கள், அவர்களுக்குள்ளே உரையாடக் கூடாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, வியாபாரிகளை, நீதிமன்றங்களுக்குச் சென்று வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும், குறைக்க வேண்டும் என்று கூறுகிற வியாபாரிகளையெல்லாம் ஏழைகள் என்று கருதி அவர்கள் கொள்கை மாற்றம் செய்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒன்று என்றே நான் கருதுகின்றேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா பெரிய வியாபாரிகளும் செய்வதில்லை. சிறு வியாபாரிகளும் இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சிவபுண்ணியம்.

**திரு. என். நன்மாறன்:** சிறு வணிகர்களும்....

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல அல்ல. சிறு வியாபாரிகள் அதிகமாகவே இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்காக ஆதரவு சொல்லக் கூடாதா? அதனால் திசை திருப்புகிற நோக்கத்திலே இந்தக் கருத்தைச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சிறு வியாபாரிகளுக்கெல்லாம் tax exemption கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பாயத்திலேயும் தீர்ப்பு வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, அது தாமதமாகும் என்று சொல்வது பொருத்தமானது அல்ல. ஆகவே, இந்தச் சட்டத்தை மாற்றுவது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன். இது மக்களைப் பாதிக்கும்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவபுண்ணியம் அவர்களும் மற்ற உறுப்பினர்கள் எல்லாம் கூறுகிறபோது, ஒரு உண்மையைக் கருத்தில்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். தற்போது 5,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருக்கின்றன. இதனால், அரசினுடைய பணம், அரசுக்கு வர வேண்டிய பணம் பெருமளவில் முடக்கப்பட்டிருக்கிறது. அதைவிட உச்ச நீதிமன்றம் கூறியிருக்கின்ற ஒரு தீர்ப்பின் அடிப்படையில் தீர்ப்பாயம் எந்தத் தீர்ப்பைத் தந்தாலும், Tribunal எந்த ஒரு தீர்ப்பைத் தந்தாலும் அதற்குமேல் உயர் நீதிமன்றத்திற்கு appeal செய்வதற்கு வழிவகை உண்டு என்று ஆணித்தரமாகக் கூறிவிட்டது. அந்த 5,000-க்கும் மேற்பட்ட வழக்குகளில் தீர்ப்பாயங்களில் ஏதேனும் சில தீர்ப்புகள் வருகின்றபோதும், உடனடியாக appeal-க்குச் சென்று விடுகிறார்கள். உயர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். எனவேதான், மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, தீர்ப்பாயத்தில் 6 மாதங்கள், 1 வருடம், 2 வருடங்கள் என்று 5,000 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என்று சொன்னால், முடிவதற்கு 10, 15 ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. நேரடியாக உயர் நீதிமன்றத்திற்குச் செல்கின்றபோது, இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க முடிகிறது. விரைவிலே தீர்ப்பு வந்துவிடும். அரசினுடைய பணம் ஆங்காங்கு முடக்கப்படுகின்ற நிலை தவிர்க்கப்பட்டுவிடும். இதுதான் நோக்கம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன்னால் இங்கிருந்து தீர்ப்பு வந்தாலும் இந்தத் தீர்ப்பு கிடைத்து, பின்பு மீண்டும் ஒரு 5 ஆண்டுக் காலம் அல்லது 10 ஆண்டுக் காலம் நாம் காத்துக் கொண்டு இருக்கவேண்டி வரும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் உயர் நீதிமன்றத்திற்கு நேரடியாக எடுத்துச் செல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்புத் தனித் தீர்ப்பாயத்தை நீக்குவதற்குக் கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவை பாரதிய ஜனதா கட்சி தேவையற்றது என்று நாங்கள் எதிர்க்கின்றோம். காரணம், தீர்ப்பாயம் மூலமாக வரி வசூல் குறைவாக இருக்கிறது என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு, மூன்று நாட்களாக ஒரு மாதிரியாகவே இருக்கிறார்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** அது சரியான முறையிலே இயங்கக்கூடிய வகையிலே அதைச் சரிப்படுத்த வேண்டுமேயொழிய அது இருக்கக் கூடாது என்று நீக்கக் கோருவது, நீக்கச் சொல்வது சரியல்ல. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தீர்ப்பாயத்திலே ஒரு முடிவு வந்தாலும், தீர்ப்பு வந்தாலும், மீண்டும் அப்பீல் செய்வதற்கு வழிவகை இருக்கிறது என்று. ஆகையால், இந்தத் தீர்ப்பாயத்தை ஒழித்து விடலாமென்று நினைக்கிறார்கள். மாவட்ட நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு அளித்தால் அப்பீல் செய்வதற்கு உயர் நீதிமன்றம் இருக்கிறது. அங்கேயும் சரியில்லை என்று சொன்னால் உச்ச நீதிமன்றத்திற்கும் போகலாம். அது 20 வருடங்கள் கூட ஆகலாம். ஆகையால் உச்ச நீதிமன்றத்திற்கு நேராகப் போகிறோம்; உயர் நீதிமன்றமே வேண்டாமென்று சொல்வதுபோல் இது இருக்கிறது. ஆகவே, தனித் தீர்ப்பாயத்தை நீக்க வேண்டுமென்ற இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறோம்.

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தத் தனித் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டபோது அந்தத் தனித் தீர்ப்பாயத்திலே கொடுக்கப்படுகின்ற தீர்ப்பின்பேரில் உச்ச நீதிமன்றத்தில்தான் மேல்முறையீடு செய்யப்படவேண்டுமென்று அன்றைக்குக் கூறப்பட்டது. ஆனால், உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கின் தீர்ப்பிலே, தனித் தீர்ப்பாயத்தில் கொடுக்கப்படுகின்ற தீர்ப்பிற்கு, நீங்கள் உயர் நீதிமன்றத்தில்தான் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்று கூறிவிட்டதால் நாம் எந்த நோக்கத்திற்காக இந்தத் தீர்ப்பாயம் எடுத்து வந்தோமோ அந்த நோக்கம் அடிபட்டுவிட்டது. அதாவது வரிகளை உடனடியாக வணிகர்களிடமிருந்து பெற வேண்டுமென்ற நோக்கத்தில்தான் அந்தத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது ஆனால், உச்ச நீதிமன்றம் கொடுத்த அந்தத் தீர்ப்பினாலே இரண்டு முறை அவர்கள் அப்பீல் செய்வதற்கு, வணிகர்கள் அரசாங்கத்தை வரி ஏய்ப்பு செய்கின்ற, வரியைக் காலம் தாழ்த்திக் கட்டுவதற்கு மீண்டும் அவர்கள் மேல்முறையீடு செய்வதற்கு இன்னொரு வாய்ப்பும் உயர் நீதிமன்றத்திலும் கிடைக்கின்றது. உயர் நீதிமன்றத்தில் தடை பெறுகின்றார்கள். அங்கே தீர்ப்புப்



பெறுகின்றார்கள். மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கின்றார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில்தான் இந்த முறையில் வரியை வசூலிக்க வேண்டும். இன்றைக்கு 5,620 வழக்குகள் தீர்ப்பாயத்திலே நிலுவையில் இருக்கின்றன. இன்றைக்கு நீங்கள் எடுத்துக்கொண்டால் தீர்ப்பாயத்திலே கொடுக்கப்படுகின்ற அத்தனை தீர்ப்புகளிலும் பெரும்பான்மையான தீர்ப்புகளில் உச்ச நீதிமன்றத்திலே அந்த வணிகர்கள் மேல்முறையீடு செய்து தடைகளைப் பெற்றிருக்கின்றார்கள். அந்த வரிகள் வசூலிக்கப்படாமலே உச்ச நீதிமன்றத் தடையாணையில் இன்றைக்கு இருக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவேதான், அந்த இரண்டு முறைகளைத் தடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இன்றைக்கு இந்தத் தீர்ப்பாயத்தைக் கலைக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் நேரடியாக உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்கிறார்கள். உயர் நீதிமன்றத்தில் அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்று சொன்னால் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். ஆகவே, தேவையில்லாமல் அந்தத் தீர்ப்பாயம் இருக்க வேண்டாமென்பதற்காகத் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தால் 25 சதவீதம் அவர்கள் கொடுக்கின்ற அந்த வரி மொத்த வரியிலே அவர்கள் இந்தப் பணத்தைக் கட்டினால்தான் உயர் நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்வதற்கு இன்றைக்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். அதன்மூலம் அரசாங்கத்திற்கும் அந்தப் பணம வருகின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவேதான் இந்தத் தீர்ப்பாயத்தை, தேவையில்லாமல் இருக்கின்ற ஒரு தீர்ப்பாயத்தைக் கலைப்பதற்கு அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்குத் தீர்ப்பாயத்திலே தலைவர் இல்லை. துணைத் தலைவர் இல்லை. உறுப்பினர்களும் இல்லாமல் அது செயல்படாத ஒரு அமைப்பாக இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு அமைப்பைக் கலைக்க வேண்டுமென்ற ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருக்கின்றது எனக் கூறிக்கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' 'என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2004). மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிறதே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிகிற வரைக்கும். அது இப்போதுதான் தெரிகிறது. என்ன செய்வது? சீக்கிரம் முடித்துவிடலாம்.

**•மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

---

@ 17—11—2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பட்டுள்ளது.

[2004 நவம்பர் 18

*பிற்பகல் 2-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமா? (குறுக்கீடு) ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தீர்மானம்

## விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ராஜ் சட்டம் மாதிரி வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. சட்டமுன்வடிவு அறிமுகம்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2004) மற்றும் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு

[திரு. சி. பொன்னையன்] [2004 நவம்பர் 18

*ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2004) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

### மற்றும்

### (எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2004) மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

*@ 18—11—2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.*



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2004) மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரண்டு சட்டமுன்வடிவுகளும் ஒரே பொருள் உடையவையாக இருப்பதால், பேசுகிறவர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகள்மீதும் ஒன்றாகச் சேர்த்துப் பேசலாம். திரு. சி. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *இரண்டிலும் சேர்த்துப் பேசிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பஞ்சாயத்துகளுக்கு இன்னும் தேர்தலே நடத்தமுடியாமல் இருந்துகொண்டிருக்கக்கூடிய நிலை இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அரசு பல முயற்சிகளை எடுத்துநடத்துவதாகச் சொல்லியும்கூட, இன்னும் சில பஞ்சாயத்துகளுக்குத் தலைவர்களையே தேர்ந்தெடுக்க முடியாதது என்பது ஜனநாயகத்திற்கு விடப்பட்டிருக்கிற ஒரு சவால். அதை எப்படியும் கூடியவிரைவிலே, அடுத்த முறை நீட்டிப்பு என்ற நிலைக்கு வராமல் உடனடியாக நீங்கள் தேர்தலை நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*அடுத்து, டவுன் பஞ்சாயத்தையெல்லாம் இப்போது நீங்கள் ஓரளவு நீக்கிவிட்டு அவற்றைச் சிறப்பு நிலைப் பஞ்சாயத்துகள் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். மத்திய அரசுமூலமாக வரக்கூடிய பணத்தைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு, நிதியொதுக்கீடு கிராமங்களுக்குத்தான் அதிகமாகக் கிடைக்கிறது, அதை டவுன் பஞ்சாயத்துக்குப் பயன்படுத்த முடியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக நாம் இதை இப்போது சிறப்புப் பஞ்சாயத்து என்று வைத்திருக்கிறோம். ஆனால், அப்படிச் சிறப்புப் பஞ்சாயத்து என்று வைத்துவிட்டு,* District Municipalities Act-*னுடைய விதிகள்தான் அதற்குப் பொருந்தும் என்று சொல்வது,*

*@ 18—11—2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.*

அது சரியான ஒரு அணுகுமுறையே அல்ல. காரணம், இப்போது பெரிய குழப்பமாக இருந்துகொண்டிருக்கிறது. சிறப்பு நிலைப் பஞ்சாயத்து என்று வைத்துவிட்டு அதற்கு Executive Officer, நிர்வாக அதிகாரிதான் அதை —ஏன் என்றால், பொதுவாக பஞ்சாயத்து என்று சொன்னால், Panchayat Raj Act பிரகாரம் உங்களுக்கு தலைவர்தான் சகல அதிகாரம் படைத்தவராக, எல்லா நிர்வாகத்திற்கும் பொறுப்பானவர் ஆகிறார். ஆனால், இங்கே சிறப்பு நிலைப் பஞ்சாயத்து என்று நீங்கள் வைத்துவிட்டு, அதற்கு செயல் அதிகாரிதான் அதிகாரியாக இருப்பார்; அவர்தான் எல்லாவற்றையும் கண்காணிப்பார் என்று சொல்வது பொருத்தமற்ற ஒன்று. பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கே நேர்முரணாக அமைந்திருக்கிறது.

இரண்டாவது, இப்போது நீங்கள் சிறப்புப் பஞ்சாயத்து என்று வைத்துவிட்டு, அதற்கு நாம் Town Planning Officer என்று போட்டு, பொதுவாக building approval போன்ற விஷயங்களிலேயெல்லாம் சரியான ஒரு அணுகுமுறையை எப்படி நாம் கடைப்பிடிக்கப் போகிறோம்? District Municipalities என்று வைக்கிறீர்கள். அதற்கு வைக்கக்கூடிய அந்தச் சட்டத்தை நீங்கள் போடுகிறபோது பல பிரச்சினைகள் இதிலே வரும். ஆகவே, நீங்கள் இதைத் தனியாக, நீங்கள் இதற்கு நிதி வருகிறது என்ற ஒரேயொரு காரணத்திற்காக மாற்றினாலும்கூட, குழப்பங்களைத் தவிர்த்து, எப்படியெல்லாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால், குழப்பம் இல்லாத ஒரு நிர்வாகத்தை நடத்தமுடியும் என்று நீங்கள் ஆய்வுசெய்து இதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

*பிற்பகல் 2-15*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் (குறுக்கீடுகள்—சிரிப்பு) சிரிப்பதற்கு இல்லை. அதற்காகத்தானே சட்டமுன்வடிவு; ஏன் சிரிக்கிறீர்கள்? (சிரிப்பு) இந்த நான்கு ஊராட்சிகளுக்கும் தனி அதிகாரி பதவிக் காலத்தை இன்னும் 6 மாதங்கள் நீட்டிக்கவேண்டுமென்ற சட்டமுன்வடிவை இங்கே கொடுத்திருக்கிறீர்கள். இதைத் தொடர்ந்து நீட்டித்துக் கொண்டே வருகிறோம். இந்த 4 சிற்றூராட்சிகள், இந்த ஊராட்சிகளிலே அரசாங்கம் நினைத்தால் தேர்தல் நடத்த முடியாதா? எத்தனை ஆண்டுக் காலம் இந்தத் தேர்தலை நடத்தாமல், இந்தப் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டு செல்வது?



ஆகவே, இந்தத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உள்நோக்கம் இருக்கிறதா? அல்லது உள்ளபடியே அரசாங்கத்தால் இந்த ஊராட்சிகளிலே தேர்தல் நடத்த இயலவில்லையா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அந்த நான்கு ஊராட்சிகளில் தேர்தல் நடத்தக் கூடாது என்ற எண்ணம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். தொடர்ந்து தேர்தலானது நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அங்கே யாரும் மனுத் தாக்கல் செய்வதில்லை. அப்படி மனுத் தாக்கல் செய்து வெற்றி பெற்றவுடன் அவர்கள் ராஜினாமா செய்து விடுகிறார்கள். இப்போது அவையின் நேரம் அதிகமாகி விட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு ஒரு குறிப்பைக் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறேன். நம்முடைய கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் மட்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மற்ற உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு, கடைசியாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிற நிலைமை மாறி மீண்டும் அங்கு மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றக்கூடியவகையிலே, பொது மக்களுடைய பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கக்கூடியவகையிலே, காலம் தாழ்த்தாமல் விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, இன்னொன்று-தமிழ்நாட்டிலே இருக்கிற 562 பேரூராட்சிகளைச் சிறப்பு ஊராட்சிகளாக அரசு இப்போது மாற்றியமைத்திருக்கிறது, உருவாக்கியிருக்கிறது. ஆகவே, இப்படி மாற்றி, மத்திய அரசாங்கத்தினுடைய நிதி ஊராட்சிகளுக்குத்தான் கூடுதலாக வழங்கப்படும் நிலை உருவாக்கப்பட்ட அதே வேளையில் இங்கே நான் வேண்டிக்கொள்ள விரும்புவது எல்லாம், அந்த ஊராட்சிகள் பேரூராட்சிகளாக இருந்த நேரத்திலே பணியாற்றியவர்கள், எந்தச் சூழ்நிலையிலும், எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படக் கூடாது. இப்போது பாதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் தொடர்ந்து அந்தப் பணியிலே நீடிப்பார்கள் என்று அறிவித்திருந்தாலும்கூட, இனி வரும் காலங்களில் எந்தச் சூழ்நிலையிலும், எக்காரணம் கொண்டும்

அவர்கள்மீது பணி நீக்கமோ அல்லது எந்தவகையான நடவடிக்கையோ இருக்கக் கூடாது. அவர்களுடைய பணி தொடரவும், பணிப் பாதுகாப்பிற்கும், எல்லாவற்றிற்கும் அரசு உறுதியாக இருக்கவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே சிற்றூராட்சிகள், இவை சிறப்பு ஊராட்சிகள் என்று அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு, இவை முனிசிபாலிட்டி அந்தஸ்தில், நகராட்சி அந்தஸ்திலே செயல்படக்கூடிய நிலை என்று சொல்வது வருத்தம் அளிக்கிறது, வேதனை அளிக்கிறது. அதையும் மாற்றியமைக்கவேண்டும். ஆகவே, சிற்றூராட்சி என்று சொன்னால், அங்கே ஊராட்சி மன்றத் தலைவருக்குக் கூடுதல் அதிகாரம். தலைவர் இருக்கின்றபோது, செயல் அலுவலர் முழு அதிகாரத்தையும் எடுத்துக்கொண்டு செயல்படுவது பொருத்தமாக இருக்காது. ஆகவே, செயல் அலுவலர் ஏதோ ஒரு குறிப்பிட்ட அலுவலராகப் பணியாற்றக்கூடிய நிலையிலே, முழு அதிகாரமும் தலைவருக்கே வழங்கக்கூடிய நிலையை இங்கே வழங்கவேண்டுமென்ற என்னுடைய கருத்தைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கி வாசிக்கிறேன். (சிரிப்பு) இந்த நான்கு ஊராட்சிகளுக்கான தேர்தலைத் தள்ளிப் போடுவது என்பது சரியல்ல. தொடர்ந்து இதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே நேரடியாக அங்கே சென்று ஆய்வுசெய்து, அதன்மீது தேர்தல் நடத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அது என்னவாயிற்று என்பதை இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது நமது மாநிலத்திலே ஒரு பொருத்தமான முறை அல்ல. ஆகவே, இதை நீட்டிக்க விடாமல், தேர்தல் நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நான்கு ஊராட்சிகளும் நமது தமிழகத்திலேதான் இருக்கின்றனவா அல்லது வேறு எங்காவது இருக்கின்றனவா? காஷ்மீர் மாநிலத்திலேயே தேர்தல் நடந்து விட்டது. ஏன் இங்கே நடத்த முடியவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. ஆகவே, தேர்தல் நடந்தாலும் அது, (குறுக்கீடு) இல்லை, ஏனெனில் இதில் உள்நோக்கம் இருக்கிறது. இன்னும் ரொம்ப அழுத்தமான கருத்தைச் சொல்ல வேண்டுமானால், இது நம்முடைய



தேர்தல் முறைகளுக்கும், நமது தமிழ்நாட்டிற்கும் ஒரு அவமானம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இதை முறைப்படுத்தி தேர்தலை நடத்துவதற்குரிய முயற்சியையும், அதை உறுதி செய்வதற்கான முயற்சியையும் தமிழ்நாடு அரசு எடுக்கவேண்டும் என்பது என்னுடைய அழுத்தமான கருத்து.

பேரூராட்சிகளுக்கான அந்த விதிமுறைகள் மாற்றப்பட்டு, சிறப்பு ஊராட்சிகள் என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்டிருப்பது என்பது, பாதிப்புக்குள்ளாகிற நிலைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நகராட்சிகளாக ஆக்கப்படும் என்று எதிர்பார்த்த நிலையிலிருந்து, அவை ஊராட்சிகள் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதையே அவர்கள் ஒரு தரக்குறைவாகக் கருதுகிறார்கள். ஆகவே, இதன்மீதும் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி.

பிற்பகல் 2-20

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி (குறுக்கீடு) இல்லை, இல்லை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவற்றினுடைய தேர்தலை அரசாங்கமே நடத்தி இருக்கிறது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். தலைவர்கள் தேர்தலிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மறுநாளே இராஜினாமா செய்கிறார்கள். அதனால் தேர்தல் ஆணையம் தமிழக அரசுக்கு ஓர் உத்தரவு வழங்கியிருக்கிறது. அதை நீங்கள் நிறைவேற்றி இருக்கிறீர்களா என்பது குறித்து உங்களிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன். அந்தத் தேர்தலில் செலவு செய்து போட்டியிடக் கூடியவர்கள் தேர்தலிலே நின்று அவர் வெற்றி பெற்ற பின்னால் இராஜினாமா செய்தால் அந்தச் செலவினை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஓர் உத்தரவை உங்களுக்கு வழங்கியிருக்கிறதே தேர்தல் ஆணையம், அதை இந்த அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிறதா? நான்கு தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. நான்கு தலைவர்கள் தேர்தல்களில் வெற்றிபெற்று அவர்கள் தங்களுடைய பதவியை இராஜினாமா செய்திருக்கிறார்கள். இந்த நான்கு தேர்தல்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இராஜினாமா செய்கிறபோது இந்த அரசு கைகட்டி இருப்பதற்கு என்ன காரணம்? ஏன் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்கிற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் இந்த

அவைக்கு அளிப்பாரா என்பதை நான் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Ordinance 1-10-2004-லே வெளியிடப்பட்டு அது அமலில் இருக்கிற நேரத்திலே அரசு 1-11-2004-லே ஒரு Committee நியமனம் செய்திருக்கிறது. அதாவது Member Secretary, Planning Commission Chairman-ஆகவும் Director of Special Village Panchayats, Secretary Member-ஆகவும் ஒரு Committee-யை நியமனம் செய்து அந்த Committee-யினுடைய Terms of Reference-லே என்ன பேசப்படுகிறது என்றால் the Committee shall be called as the Committee on grievances, on the reclassification of erstwhile Town Panchayats. The functions of the Committee is to examine the representations received on reclassification of erstwhile Town Panchayats into Special Village Panchayats or Third grade Municipalities and make its specific recommendations to the Government whether erstwhile Town Panchayats has to be again classified as Special Village Panchayats or Third Grade Municipalities. அப்படி ஒரு Committee-யை நியமனம் செய்து 60 நாட்களிலே, அந்தக் Committee terms of reference-ன்படி ஏறத்தாழ 12 issues அவர்களுக்கு terms of reference-ஆகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பஞ்சாயத்துகளிடம் ஒட்டுமொத்தமான நடைமுறையைப்பற்றி விவாதிப்பதற்கு, விவாதித்து அரசுக்கு ஒரு Report கொடுப்பதற்கு ஒரு Committee-யை நியமனம் செய்துவிட்டு, அவசர அவசரமாக இந்தச் சட்டத்தை இங்கே கொண்டுவந்து நிறைவேற்றுவது என்பது தேவைதானா?

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த ordinance 1-10-2004 லேதான் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆறுமாத காலம் இந்த Ordinance க்கு உயிர் இருக்கிறது. இந்தச் சட்டமன்றம் கூடியதன் காரணமாக இப்போது replace செய்வதற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி இருக்கக்கூடிய நேரத்திலே 1-11-2004-லே ஒரு Committee-யை நியமனம் செய்வது என்பது எதற்கு? நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, இந்தப் பஞ்சாயத்துகள் என்று சொல்வது மக்களுடைய நலனைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள் ஆட்சி நடத்துவது என்பதுதான்.



இந்தக் கிராமப் பஞ்சாயத்துகளைப் பொறுத்தளவிலே தலைவர்கள்தான் அவற்றிற்கு Executive Authorities. ஆனால், இன்றைக்கு, பல பஞ்சாயத்துக்களில் அந்த Executive Authorities - களே பல முறைகேடுகளைச் செய்வது என்பது ஒரு பக்கத்தில் இருந்தாலும்கூட, நம்முடைய அடிப்படையான நோக்கம், இந்த மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சி நடத்தவேண்டும் என்பது. இன்றைக்கு Special பஞ்சாயத்துகள் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, யார் ஆட்சி நடத்துகிறார்கள் என்றால் Executive Officers-தான் ஆட்சி நடத்துகிறார்கள். அப்படியென்றால் Village Panchayat-கள் என்பதனுடைய நோக்கமே அடிபட்டுப்போகிறது. இந்தக் கிராமப் பஞ்சாயத்துகள் உருவாக்கப்படுவது என்பதனுடைய பிரதானமான நோக்கமே Village Panchayats -இனுடைய அந்த Committee-தான் முடிவு எடுத்து நடத்துவது ஆகும். அந்தப் பஞ்சாயத்துக்களுடைய தலைவர்களும் உதவித் தலைவர்களும் சேர்ந்து cheque draw பண்ணுவதற்கும், issue பண்ணுவதற்குமான அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது சட்டத்திலே, அதாவது Constitution Amendment-லே வந்திருக்கிற ஒன்று. ஆனால், இந்த Special பஞ்சாயத்துகள் என்பது அந்த Constitution-இனுடைய நோக்கத்தையே மாறுபட்ட முறையிலே இன்றைக்கு அமைக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, இந்த Special Panchayat என்று சொல்வது, நடைமுறையிலே இதிலே குறிப்பிடப்படுகிறது. The Member Secretary of the Committee on Grievances of re-classification of Town Panchayats, என்ன சொல்கிறார் என்றால், இன்றைக்கும் நடைமுறையில் இந்த Special Panchayat -க்கும் Town Panchayat-க்கும் எந்த வேறுபாடும் இல்லை. என்று ஆகவே, இன்று யாரை ஏமாற்றுவதற்கு இந்த நடவடிக்கை என்பதை எங்களாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

அண்மையில் கிராமப் பஞ்சாயத்துகளாக 538 டவுன் பஞ்சாயத்துகள் மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், நடைமுறையில் அவை டவுன் பஞ்சாயத்துகளாகத்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவற்றை Village Panchayat -களாக மாற்றுவதற்கு, சிபாரிசை செய்வதற்கு ஒரு Committee-யை நியமனம் பண்ணியிருக்கிற பின்னணியில் இந்தச் சட்டம் தேவைதானா? அந்த Committee-யினுடைய Report-க்குப் பிறகு, இதுசம்பந்தமான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதுதான் உசிதமாக இருக்கும். நான் ஒன்றை அடிப்படையாகச் சுட்டிக்காட்ட விரும்புவது, மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சி நடத்துகிற பஞ்சாயத்துகளாக நம்முடைய கிராமப் பஞ்சாயத்துகள் அமைய வேண்டும். ஆனால், இன்று இந்தச் சட்டம் அதற்கு வகை செய்யவில்லை. ஆகவே, இந்தச்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2004 நவம்பர் 18

சட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கு, துரதிருஷ்டவசமாக, ஏற்றுக்கொள்வதற்கு முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 2-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி தேர்தலிலே, இங்கே பழனிசாமி அவர்கள் சொன்னதுபோல, அந்தத் தேர்தலிலே இராஜினாமா செய்தவர்களிடம் தேர்தல் ஆணையம், அதற்கான செலவுத் தொகையை வசூலிக்கின்ற அந்த நிலையை வைத்தால், அடுத்த தேர்தல் நடத்துகின்ற நேரத்திலேயாவது, ஒழுங்காக அதற்குத் தேர்தல் நடத்தி, முடிக்கப்படும் என்பதால், அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பேரூராட்சிகள் 20,000 மக்கள், 25,000 மக்கள் வசிக்கின்ற அவையெல்லாம் ஊராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்கான தெளிவான வழிமுறைகள் சொல்லப்படாத காரணத்தால், அதனுடைய நிர்வாகம் மிகவும் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. ஆகவே, அதை அதனுடைய தலைவர் நடத்துவதா அல்லது அதனுடைய செயல் அலுவலர் நடத்துவதா என்ற அந்தச் செயல்பாடுகளின் காரணமாக பல குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பொதுமக்கள் பாதிக்கப்படாத அளவிற்கு அந்தப் பேரூராட்சிகளை ஊராட்சிகளாக, சிறப்பு ஊராட்சிகளாக மாற்றியிருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஒரு சின்ன திருத்தத்திற்காக நான் இங்கே சொல்கிறேனே தவிர, வேறொன்றும் அல்ல. நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்பு சொல்கின்றபோது, Cinematograph Act-ல் சொல்லப்பட்டிருக்கிற பத்து வருடத்திற்கு முன்பு, பத்து வருடத்திற்குப் பின்பு என்கின்ற நிலையைச் சொன்னார்கள். ஆனால், சட்டப்பூர்வமாக ஒன்று முழுமை பெற வேண்டுமென்றால், இந்தச் சட்டத்தில் Entertainment Act-ல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, அதெல்லாம் முடிந்து விட்டது.



2004 நவம்பர் 18]

**திரு. இ. புகழேந்தி:** இல்லை, இல்லை. அதை consider பண்ண வேண்டும். ஏனென்றால், அது முழுமையாகவில்லை.. இந்தச் சட்டப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து வேறொரு நேரத்தில் பேசலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டுவிட்டது. அந்த நேரத்தில் சொல்லியிருந்தால் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அது பற்றி தனியாக ஆயப்படும்.

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகளுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்புதான் தேர்தல் நடத்தவில்லை என்ற தவறான குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். 1996-ல் இருந்து, ஐந்தாண்டுக் காலம் தி.மு.க. ஆட்சி இருந்த நேரத்திலே அந்த அரசாங்கம் எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்புதான், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல, நான்கு முறை தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. அதற்கு அமைச்சர்கள் அனைவரும் நேரடியாகச் சென்று இந்தத் தேர்தலை நடத்துவதற்குண்டான முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டது என்பது உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே இருக்கின்ற கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டத்திலே இருக்கின்ற கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சி மன்றங்களுக்குத் தொடர்ந்து தேர்தலில் அங்கே போட்டியிடாத சூழ்நிலை இருப்பதை உணர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னையும், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட நான்கு ஊராட்சிகளுக்கும் சென்றுவரப் பணித்தார்கள். அந்த அடிப்படையில் நானும், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட நான்கு ஊராட்சிகளுக்கும் நேரடியாகச் சென்று அங்கே இருக்கின்ற அனைத்துத்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 நவம்பர் 18

தரப்பு மக்களையும் சந்தித்து, அவர்களுடைய கருத்துகளையும் கேட்டு, வர இருக்கின்ற தேர்தலில் அவர்களும் உறுதியாக நாங்கள் எங்களுடைய பிரதிநிதிகளை நிறுத்துவோம் என்றுகூடச் சொன்னார்கள். குறிப்பாக, விருதுநகர் மாவட்டத்திலே இருக்கின்ற கொட்டக்கச்சியேந்தல் என்ற ஊராட்சிமன்றத்தில் அதிலே இருக்கின்ற மொத்த வாக்காளர்களில் 7 குடும்பங்கள்தான் ஆதிதிராவிடர் குடும்பங்களாக இருந்தார்கள். அதில் 14 வாக்காளர்கள் இருந்தார்கள். அவர்களும்கூட பக்கத்திலே இருக்கின்ற பகுதியில் வேலைவாய்ப்பிற்காக செங்கல் சூளைக்குச் சென்றிருந்தார்கள். நாங்கள் அங்கு சென்று அமர்ந்து, அங்கே பக்கத்திலே இருக்கின்ற ஊருக்கு எங்களுடைய வாகனத்தை அனுப்பி, அவர்களை அங்கே அழைத்து வந்து எங்களுடைய கருத்துகளைச் சொல்லி அவர்களும் இந்த முறை நாங்கள் உறுதியாக தேர்தலில் நிற்கின்றோம், மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் நாங்கள் அவர்களுக்கு ஆதரவு தருவோம் என்றுகூடச் சொன்னார்கள். அதற்குப் பின்னாலே வந்த தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அவர்கள் போட்டியிலிருந்து விலகிக்கொண்ட செய்திதான் வந்ததேயொழிய அரசின் சார்பாகச் செய்யவேண்டிய அத்தனை முயற்சிகளையும் நாங்கள் செய்து கொண்டுதான் இருக்கின்றோம் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இதற்கு எந்தவிதமான உள்ளர்த்தமும் இங்கே கற்பிக்க வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 2-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 611 பேரூராட்சிகள் 1994 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட நகராட்சிச் சட்டம் 1920-ன்கீழ் செயல்பட்டு வந்தன. எனவே, அவை நகர உள்ளாட்சிகளாகவே கருதப்பட்டு வந்தன. சில பேரூராட்சிகள் நகரத்தன்மை கொண்டவையாக இருந்தாலும், பல பேரூராட்சிகள் ஊரகத்தன்மை கொண்டதாகவே இருந்து வந்தன. மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் ஊராட்சிப் பகுதிகளில் மட்டுமே செயல்படுத்த இயலும் என்பதால் உண்மையிலே ஊரகத்தன்மைக் கொண்டிருந்த பல பேரூராட்சிகளில் மத்திய அரசின் நிதி உதவியோடு செயல்திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் போனது. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய அறிவுரையோடு



2004 நவம்பர் 18] [திரு. கே.பி. அன்பழகன்]

தொலைநோக்குப் பார்வையுடன் பலவகை மானியம் மற்றும் உதவிகளின் வாயிலாக மத்திய-மாநில அரசுகளிடமிருந்து அதிக நிதி பெறும் வகையிலே, 30 ஆயிரம் மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள 563 பேரூராட்சிகள் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் சிற்றூராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 48 பேரூராட்சிகள் மூன்றாம் நிலை நகராட்சிகளாக வகைமாற்றம் செய்யப்பட்டுள்ளன. அவை மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலே தொடரும்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க வகைமாற்றம் காரணமாக முன்னாள் பேரூராட்சிகளில் பணிபுரியும் அந்தப் பணியாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இந்த வகைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகள் நீண்டகாலமாகச் செயல்பட்டு வந்தாலும், 1994 முதல் நகராட்சிகள் சட்டத்தின்கீழ் இயங்கி வந்ததால், மற்ற ஊராட்சிகளைவிட கூடுதல் பொறுப்பும் கடமைகளும் கொண்ட தனித் தன்மை கொண்ட உள்ளாட்சி அமைப்புகளாகவே செயல்பட்டு வந்தன. எனவே, பேரூராட்சியாக செயல்பட்டபோது பொதுமக்கள் பெற்று வந்த எந்தச் சேவைகளிலும் குறைபாடு நேரக்கூடாது என்ற தொலைநோக்கு எண்ணத்திலும் எவ்விதப் பிரச்சினைகளுமின்றி இந்த அமைப்புகள் சீராகச் செயல்படவேண்டுமென்பதையும் கருத்தில்கொண்டு, 563 சிற்றூராட்சிகளின் தனித் தன்மையை முன்னிட்டு, அவற்றைத் தனியே அடையாளம் காட்டும் வகையில் தமிழ்நாடு அரசு சிற்றூராட்சிகளைச் சிறப்பு சிற்றூரூராட்சிகள் என வகைப்படுத்துவதற்கும் அத்தகைய சிறப்பு சிற்றூராட்சிகளைச் சட்ட மாற்றம், நிருவாகப் பொறுப்புடைமை, நிதிநிலை உறுதிப்பாடுகள் மற்றும் குடிமைகளுக்கு தற்போது இருந்து வருகின்ற குடிமைப் பணிகளின் நிலைப்பாடுகள் ஆகியவற்றை பேணிக் காத்து வருவதற்காக வழிமுறைகள் செய்வதற்கு, 21/1994 எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கென மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முடிவு செய்தது.

மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மூன்றாம் திருத்த அவசரச் சட்டமானது தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/2004 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு மேற்படி அவசரச் சட்டம் 2004 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் தேதி தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு சட்டம் 21/1994-ல்

14 ஜூன் திங்கள் 2004-க்குப் பிறகு நீக்கம் செய்யப்பட்ட மூன்றாம் நிலை நகராட்சி இச்சட்டத்திற்குள் அடங்கும். இச்சட்டமுன்வடிவு 9/2004 அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமையவும், மேற்சொல்லப்பட்ட முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்கவும் சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் அங்கே பேரூராட்சிகளிலே பணியாற்றுகின்றவர்கள் யாருக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்று அறிவுறுத்தினார். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஊராட்சித் தகுதியிலேயே கொண்டு வரவேண்டுமென்று கூறினார்கள்.

பிற்பகல் 2-35

இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டு உறுப்பினர்களையும் திருப்திபடுத்துவதற்காக, அந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் எவருக்கும், எந்தப் பாதிப்பும் ஏற்படாத நிலையிலே இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே, அவர்களை, அப்படியே இருக்கின்ற வகையிலே, சிறப்புச் சிற்றூராட்சி என்று வகைப்படுத்தி, அதன் அடிப்படையிலே, அந்தச் சிறப்புச் சிற்றூராட்சி மூலமாக, அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில், அவர்கள் அப்படியே பணியாற்றுவார்கள் என்றும், மேலும், மத்திய அரசிடமிருந்து நிதி பெற்று, அந்தப் பகுதியின் மேம்பாட்டிற்காக, வழிவகை செய்வதற்காக, சிறப்புச் சிற்றூராட்சி என்று அறிமுகப்படுத்தி, இந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சிப் பகுதிகளில், பொது மக்களுக்கு நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட வேண்டும்; ஆனால், பேரூராட்சிப் பகுதியில், நாளொன்றுக்கு, தனி நபர் ஒருவருக்கு தினசரி 70 லிட்டர் தண்ணீர் விடப்பட வேண்டும்; பொது விநியோகத் திட்டத்தின்கீழ், குடும்பம் ஒன்றுக்கு, ஊரகப் பகுதியில் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும்; ஆனால், பேரூராட்சிப் பகுதியில் 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும்; ஊரகப் பகுதியில், கிராம நிருவாக அலுவலர்களிடம் பிறப்பு, இறப்பு பதிவு செய்ய வேண்டும்; பேரூராட்சிப் பகுதியில் உள்ளூரில் நிருவாக அலுவலரிடமே பதிவு செய்து, உடனுக்குடன் சான்று பெற்றுக்கொள்ளலாம்; நிருவாக நலன் கருதி,





பேரூராட்சியாகச் செயல்பட்டபோது கிடைத்த வருவாயில் குறைவு ஏற்படக் கூடாது; தவிர, பேரூராட்சியின் பணியில், பொது மக்களின் அடிப்படை வசதிகளான, குடிநீர் வழங்கல், தெரு மின் விளக்குப் பராமரிப்பு மற்றும் பொதுச் சுகாதாரம் பேணுதல் முதலானவற்றிற்குத் தனிப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்; ஊராட்சி அமைப்பில் பணியாளர்கள் எண்ணிக்கை குறைவு; இப்போது இந்தப் பேரூராட்சிகள், ஊராட்சிகளாக மாற்றம் பெறுவதால், பணியாளர்கள் குறைந்தால், பொதுமக்கள் நலன் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது; எனவே, பேரூராட்சியாகச் செயல்பட்டபோது, பொதுமக்கள் பெற்றுவந்த எந்தச் சேவையிலும் குறைபாடு நேரக் கூடாது என்ற எண்ணத்திலும், ஊரக உள்ளாட்சியாக, பேரூராட்சிகள் மாற்றம் செய்யப்பட்டாலுங்கூட, அந்த அமைப்புகள் எவ்விதப் பிரச்சினைகளுமின்றி, சீராகச் செயல்பட வேண்டுமென்ற நோக்கத்திலும், அந்த ஊராட்சிகளது கடமைகளும், பொறுப்புகளும் தொடர வேண்டுமென்ற அடிப்படையிலும், பேரூராட்சிகளாகச் செயல்பட்ட உள்ளாட்சி அமைப்புகள், சிறப்புச் சிற்றூராட்சிகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், இங்கே பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலே உள்ள கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்படவில்லை என்பது பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கங்கள் கொடுத்தார்கள். அந்தப் பகுதிகளிலே, நான்கு ஊராட்சிகளுக்கு மட்டும் தேர்தல் நடத்தக்கூடாது என்று எந்தவிதமான உள்நோக்கமும் அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிய வேண்டும். காரணம், 12,618 ஊராட்சிகள், தமிழகத்திலே இருக்கின்ற வகையிலே, மலைச் சாதியினர், 93 ஊராட்சிகளுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆதிதிராவிட இனத்தவர், 2,959 ஊராட்சிகளுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். அந்த ஊராட்சிகளிலே, வார்டு உறுப்பினர்களாக, மலைச் சாதியினர் 821 பேர்கள் இருக்கிறார்கள். ஆதிதிராவிட இனத்தவர், பெண்கள், பொது—சேர்த்து 19,301 பேர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில், ஒன்றியக் குழு உறுப்பினர்களாக, மலைச் சாதியினர் பெண்கள், பொது-47 பேர்கள் இருக்கிறார்கள். ஆதிதிராவிடர்கள், 1,369 பேர்கள் இருக்கிறார்கள். ஒன்றியக் குழுத் தலைவர்களாக, மலைச் சாதியினர் ஒருவர் இருக்கிறார். ஆதிதிராவிடர்கள் 76 பேர்கள் இருக்கிறார்கள். இப்படி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், மலைச் சாதியினர் 3 பேர்கள் இருக்கிறார்கள். ஆதிதிராவிடர்கள் பெண்கள், பொது-139 பேர்கள் இருக்கிறார்கள். மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்கூட, ஆதிதிராவிடப் பெண்கள்

[திரு. கே.பி. அன்பழகன்] [2004 நவம்பர் 18

3 பேர்களும், பொதுவில் 4 பேர்களும், 7 பேர்கள் இருக்கிறார்கள். இப்படி, உள்ளாட்சி அமைப்புகளிலே, இவ்வளவு முக்கியத்துவத்தைக் கொடுத்து, தமிழகத்தில் இவ்வளவு தேர்தல்கள் நடைபெற்று, எல்லாவற்றிலும் ஆதிதிராவிட இனத்தவர்கள் இன்றையதினம் பொறுப்பிலே இருக்கின்ற நிலையிலே, அந்த நான்கு ஊராட்சிகளுக்கு மட்டும் அரசு ஏதோ உள்நோக்கத்தோடுதான் தேர்தல்களை நடத்தவில்லை என்று கூறுவது தவறு.

1996 ஆம் ஆண்டு, முந்தைய ஆட்சியில் நடைபெற்ற சாதாரண தேர்தலின்போது, மதுரை மாவட்டத்திலுள்ள பாப்பாபட்டி மற்றும் கீரிப்பட்டி கிராம ஊராட்சிகளுக்கும், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்கச்சியேந்தல் என்ற கிராம ஊராட்சிக்கும், யாரும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை. பின்னர் நடைபெற்ற அனைத்து இடைத் தேர்தல்களின்போதும், மேற்குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளுக்கு எவரும் வேட்பு மனுத் தாக்கல் செய்யாத காரணத்தினால், தனி அலுவலர்கள் மூலமாக நிர்வாகம் நடத்தப்பட்டுள்ளது. இப்போது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கூறியதுபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, முறையாக அந்த நான்கு ஊராட்சிகளுக்கும், வரிசைப்படுத்தித் தேர்தல் நடத்தப்பட்டது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரது தலைமையிலே ஒரு குழுவானது அமைக்கப்பட்டு, அந்தக் குழு மூலமாக, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையிலே, அந்தக் குழு, அந்தப் பகுதிகளுக்குச் சென்று, அந்த மக்களைச் சந்தித்துப் பேசியதை, அவர் இங்கே பேசும்போது எடுத்துச் சொன்னார். அப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே, தொடர்ந்து அங்கே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்திலே, அங்கு மக்கள் பிரதிநிதிகள் வரவேண்டும்; அந்த மக்கள் பிரதிநிதிகள் மூலமாக, அந்தப் பகுதிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

அந்தச் சூழ்நிலையிலே அங்கே தலைவராகப் போட்டியிடுவதற்கு யாரும் முன்வரவில்லையென்றாலும், அந்தப் பகுதி மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அங்கே தனி அலுவலர் நியமனம் செய்ய வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால், இங்கே இதை ஏற்றுக்கொண்டு மாமன்றத்திலே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



2004 நவம்பர் 18]

பிற்பகல் 2-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.



பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2004 நவம்பர் 18

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-11-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

24. 2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லரை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-9-2004-ஆம் நாளிட்ட 333-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

25. 2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-9-2004-ஆம் நாளிட்ட 334-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

26. 2002-2003-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை, (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

27. 2003-2004-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை, (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)



2004 நவம்பர் 18]

28. 2003-2004-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருப்பது ஒன்பதாவது ஆண்டறிக்கை, (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

11. 2004-2005-ஆம் ஆண்டுக்கான "கூடுதல் செலவுக்கான"மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

12. 2004-2005-ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ் ஆங்கிலம்)

13. 2004-2005-ஆம் ஆண்டின் இரண்டாவது துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்)

14. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை (2003-2005).

15. மனுக்கள் குழுவின் எழுபத்து எட்டாவது அறிக்கை (2003-2004)

16. மனுக்கள் குழுவின் எழுபத்து ஒன்பதாவது அறிக்கை (2003-2004)

17. மனுக்கள் குழுவின் எண்பதாவது அறிக்கை (2003-2004)

18. மனுக்கள் குழுவின் எண்பத்து ஒன்றாவது அறிக்கை (2003-2004)

19. மனுக்கள் குழுவின் எண்பத்து இரண்டாவது அறிக்கை (2003-2004)

20. மனுக்கள் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை (2003-2004)

21. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

22. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

23. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

24. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட[illegible] பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

226623
சென்னை-600 008